அங்காடி விளம்பர சிறப்பிதழ் உள்ளே

# உதயன்

யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 ■ கதிர்: 026 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 07, ஞாயிறு 22.12.2013

மப்பான வானிலை 29 C 24 C



பக்கம் 03

**இளவாலை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு மருத்துவர் இல்லை**



பக்கம் 23

**பாகிஸ்தானை வீழ்த்தி இலங்கை வெற்றி**

## திருக்கேதீஸ்வரத்தில் புதைகுழி நேற்றும் மனித எச்சங்கள் மீட்பு

*மன்னார் நீதிவான் முன்னிலையில் தோண்டும் பணி*

மன்னார், டிசெ.22
மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் நீர் விநியோகத்துக்காக வெட்டப்பட்ட குழியில் இருந்து நேற்றும் இரண்டு மண்டை ஓடுகளும் எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன.

2I ஆம் பக்கம் பார்க்க



## வரவு - செலவுத் திட்டத்துக்கு வடக்கு ஆளுநர் அங்கீகாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 22
வடக்கு மாகாண சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் நேற்று சனிக்கிழமை அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

இதனால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மேற்படி வரவு - செலவுத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கன்னி வரவு - செலவுத் திட்டம் கடந்த 10ஆம்,11ஆம்,12ஆம் திகதிகளில் நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதன் பின்னர் குறித்த வரவு-செலவுத் திட்டம் பேரவைச் செயலகத்தினால் பிரதம செயலா

2I ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் குறித்து இதுவரை 11000 முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 22
வடக்கு - கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் முப்படையினரிடமிருந்தும் 5 ஆயிரம் முறைப்பாடுகளும் பொதுமக்களிடமிருந்து 6 ஆயிரம் முறைப்பாடுகளுமாக 11 ஆயிரம் முறைப்பாடுகள் வரை ஜனாதி பதி ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

2I ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா சமரைச் சமாளிக்க கொழும்பில் ஐக்கிய மாநாடு

## மார்ச்சில் நடத்துவதற்கு இலங்கை புது வியூகம்

கொழும்பு, டிசெம்பர் 22
ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரை இலக்கு வைத்து எதிர்வரும் மார்ச் மாதத்தில் அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய மக்கள் மாநாடொன்றை நடத்துவதற்கான நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் பொறுப்பு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஐக்கியத்துக்கான மாநாடு என பெயரிடப்பட்டுள்ள குறித்த நிகழ்வில் சர்வமத தத் தலைவர்கள்,சிவில் அமைப்பினர்கள் என அனைத்து தரப்பினரையும் பங்கேற்க வைப்பதற்கான முயற்சியும் இடம்பெறுகின்றது.

இதற்குப் புறம்பாக வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் அழைப்பு விடுப்பதற்கு அரசு எதிர்ப்பார்த்துள்ளது என தெரியவந்தாலும் இதுதொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

இலங்கையில் அனைத்து இனமக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன என்பதை மனித உரிமைகள் சபைக்கும் உலகுக்கும் காட்டும் நோக்கிலேயே இந்த மாநாட்டை அரசு ஏற்பாடு செய்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

ஜெனிவாவில் இம்முறை ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான ஒரு பொறிமுறையே இந்த மாநாடு என்றும் விமர்சிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இதுதொடர்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒரு மைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் நேற்று வினவியபோது,

"இனங்களுக்குடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி தேசிய ஒற்றுமை யைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இந்தத் தேசிய

2I ஆம் பக்கம் பார்க்க

## மணலுக்குள் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22
கட்டடம் கட்டுவதற்காக கிளிநொச்சியிலிருந்து உடுப்பிட்டிக்கு ஏற்றிச் செல்லப்பட்ட மணலினுள் இருந்து கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்டுள்ளனர்.

குண்டு செயலிழக்கும் பிரிவினர் அந்தக் கைக்குண்டைச்

2I ஆம் பக்கம் பார்க்க

## கார்களை வாடகைக்கு அமர்த்தி அடகு வைக்கும் ஆசாமிகள்

*யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டோர் திரிசங்கு நிலையில்*

யாழ்ப்பாணம், டிசெ. 22
தென் பகுதியில் இருந்து சொகுசுக் கார்களை வாடகைக்கு அமர்த்தி அவற்றை யாழ்ப் பாணத்துக்கு கொண்டு வந்து அடகு வைக் கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இந்தக் கார்கள் யாழ்ப்பாணத்தில் அடகு வைக்கப்பட்டு சில நாள்களில் இங்கு வரும் தென்பகுதியைச் சேர்ந்த குறித்த கார்களின் உரிமையாளர்கள் என்று கூறுவோர் ஆயுத முனையில் கார்களைப் பறித்து செல்கின்றனர். பாதிக்கப்படுபவர்கள் இது குறித்து யாழ். பொலிஸாரிடம் முறையிடச் சென்றால் அது குறித்து முறைப்பாட்டைப் பதிவு செய்ய முடியாது எனப் பொலிஸார்

2I ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோரை தேடும் குழுவின் தலைவருக்குப் பொலிஸ் அச்சுறுத்தல்

*பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், டிசெ. 22
திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் தலைவர் சுந்தரம் மகேந்திரன், பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த 10 ஆம் திகதி திருகோணமலை நகரில் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவினரால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் போது அங்கு வந்த சில பெரும்பான்மையினக் குழப்பவாதிகள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதன்போது போராட்டத்தை ஒழுங்குபடுத்திய சுந்தரம் மகேந்திரன் காயமடைந்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்

2I ஆம் பக்கம் பார்க்க

## ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் குரலாக ஒலித்தவர் யாழ். ஆயர்

*நேற்றைய பொன்விழாவில் அவருக்குப் புகழாரம்*

யாழ்ப்பாணம்,டிசெ.22
வடக்கில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக வெளி நாடுகளில் இருந்து வருகை தரும் இராஜதந்திரிகளுக்கு மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறி உண்மை நிலையை வெளிக்காட்டியவர் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

2I ஆம் பக்கம் பார்க்க



## உதயன் செய்தியாளர் மீது நேற்று திடீர்த் தாக்குதல்

*யாழ்ப்பாணம், டிசெ. 22*
*உதயன் பத்திரிகையின் வன்னிப் பிராந்தியச் செய்தியாளர் ந.கிருஸ்ணகுமார் நேற்று மாலை 5.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து மூவரால் மோசமாகத் தாக்கப்பட்டார். தலையில் படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*செய்தியாளரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் செய்தியாளரை வீட்டுக்கு வெளியே வருமாறு அழைத்தனர். அவர் வாசலுக்கு வந்ததும் அவர் மீது கொட்டன்களால் சரமாரியாகத் தாக்கினர். செய்தியாளர் குக்கூரலிட்டு கத்தினார். தாக்கியவர்கள் அங்கிருந்து தப்பியோட முற்படுகையில் அயலவர்களால் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.*

2I ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்துவதை ஏற்க முடியாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

வசதி குறைந்த - கிராமப்புற மாணவர்கள், தமது உயர் கல்வியை பிரபல பாடசாலைகளில் தொடர்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை அமைகிறது. எனவே அந்தப் பரீட்சையை நிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

"ஏனைய பிற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பிரபல பாடசாலைகளுக்குச் செல்வ தற்கு இந்தப் பரீட்சையே உதவுகின்றது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளதாவது:-

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை 2016 ஆம் ஆண்டுடன் நடத்துவதில்லை என்று அரசு அறிவித்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பரீட்சை தொடர்ந்து நடைபெறுவது கட்டாய தேவையாகும்.

ஏனைய பிற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பிரபல பாடசாலைகளுக்குச் செல்வதற்கு இந்தப் பரீட்சையே உதவுகின்றது.

எனவே தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை தொடர்ந்து நடத்துதல் வேண்டும் என்றார். (த-4)

## வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா,டிசெ.22

வவுனியாவில் வயல்வெளிகளில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை காலை 8 மணியளவில் வவுனியா நெளுக்குளம் முருகன் கோவிலடியைச் சேர்ந்த எஸ்.சின்னையா (வயது 65) என்பவரது சடலமே அப்பகுதியில் உள்ள வயல்வெளி ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-402)

## பள்ளி வாசல் விவகாரம் பொலிஸ் தலையிடக் கூடாது

### பிரதமர் ஜயரட்ண உத்தரவு



கொழும்பு,டிசெ.22

பள்ளிவாசல்கள் விவகாரத்தில் பொலிஸார் தலையிடக் கூடாது புதிதாக அமைக்கப்படும் பள்ளிவாசல்கள் தொடர்பில் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தலாமே தவிர ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பள்ளிவாசல்களின் எத்தகைய நடவடிக்கைகளிலும் பொலிஸார் தலையிடக் கூடாது என பிரதமர் டி.எம்.ஜயரட்ன உத்தரவிட்டுள்ளார்.

தெஹிவளை பகுதியில் அமைந்துள்ள மூன்று பள்ளிவாசல்கள் தொடர்பில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் - முஸ்லிம் சமுகத்தவர் மீது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன்முறைகளுக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும் எனவும் பள்ளிவாசல்கள் விவகாரத்தில் அமைச்சின் செயலாளர் முடிவுகள் எடுப்பதை அனுமதிக்கக் கூடாது எனவும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் டி.எம். ஜயரட்ன,

பள்ளிவாசல்கள் விடயத்தில் பொலிஸாரை தலையிடக் கூடாது எனவும், பள்ளிசால்கள் தொடர்பில் எடுக்கப்படும் முடிவுகள் தன் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரே எடுக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் கூறினார்.

சிரேஷ்ட அமைச்சர் பி.எச்.எம் பௌஷி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் ஹக்கீம், அதாவுல்லா, ரிஷாட் பதியுதீன், பஷீர் சேகு தாவூத் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-10)

## கட்டுரைத் தொகுதிகள் வெளியீடு

வடமராட்சி,டிசெ.22

த.அஜந்தகுமாரின் 'படைப்பின் கதவுகள்', ந.மயூரரூபனின் "சொற்குறியம்" ஆகிய இரு கட்டுரைத் தொகுதிகளின் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வெளியீட்டுரையை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல் கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் நிகழ்த்துவார்.

ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் செல்வமனோகரனும், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும் ஆற்றுவார்கள்.

கரவெட்டிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் இவ்விரு கட்டுரைத் தொகுதி களும் வெளியிடப்படுகின்றன. (த-8)

## சுகாதாரத் தொண்டர் நேற்றும் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டம் மற்றும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வார இறுதி விடுமுறை நாள்கள் என்பதால் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைகளின் முன்பாக அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சங்கானை, தெல்லிப்பளை உட்பட சில சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளின் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றன.

நாளை திங்கட்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாகப் பேராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (த-4-17-36-86)

## ஆடு திருடிய இருவர் கைது

ஆடுகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்று இலாவகமாக ஆடு ஒன்றைப் பிடித்துக் கொண்டு சென்ற இரண்டு பேரை வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். அத்துடன் ஆட்டையும் மீட்டனர்.

தொண்டைமானாறு பகுதியில் கடந்த வியாழன் இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் ஆட்டின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து ஆடு திருடிச் சென்ற மாலுசந்தி அல்வாய் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு பேரைப் பொலிஸார் கைது செய்தனர். (த-4)

## பிரதமரை பதவி விலக்க ஒரு போதும் அனுமதியோம்

### ஐ.தே.க எம்.பி கூளுரை

கொழும்பு,டிசெ.22

பிரதமர் டி.எம். ஜயரத்னவைப் பதவியிலிருந்து வெளியேற்றி வேறொருவரை அந்தப் பதவியில் அமர்த்த நடக்கும் சதியிலிருந்து அவரைப் பாதுகாக்க எதிர்க்கட்சியினரான நாம் முன்னிற்போம் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதித் திட்ட அமைச்சின் மீதான வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சபை விவாதத்தில் உரையாற்றிய பெரும்பாலான அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபை மற்றும் கட்சியின் ஆட்சி நிலை குறித்தே பேசினார்கள். வரவு செலவுத் திட்ட சாதக, பாதகங்கள் பற்றிப் பேசவில்லை. ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்விமான்கள் நாம் தூஷணம் பேசுபவர்களை தேசிய பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆக்கவில்லை.

இலங்கையை விட விசாலமான நாடுகளில் 103 அமைச்சர்கள் உள்ள நிலையில் இங்கு 106 அமைச்சர்கள் உள்ளனர். இந் நிலையில் போதைவஸ்து காரப் பந்தயம், மதுப் பாவனை, கசினோ போன்றன நாட்டின் நிலையை குழப்புவதாக உள்ளன.

போதைவஸ்து விவகாரத்தில் சிக்கியுள்ள பிரதமரை பலமாக்க ஐ.தே.க நடவடிக்கை எடுக்கும் - என்றார். (த-10)

## இந்தியப் பாதுகாப்பு பிரதி ஆலோசகர் கோத்தாவுடன் கொழும்பில் சந்திப்பு

கொழும்பு,டிசெ.22



இந்திய தேசிய பாதுகாப்பு அமைச்சின் பிரதி ஆலோசகரான நேச்சல் சந்துவுக்கும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையே கொழும்பில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இரண்டு நாடுகளினதும் நலன்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது பேச்சு நடத்தியதாக இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் நேச்சல் சந்துவின் இந்தப் பயணத்தின் நோக்கம் குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சந்திப்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் யஷ்வந்த்குமார் சின்ஹாவும் பங்கேற்றிருந்தார்.

பிரதி ஆலோசகர் நேச்சல் சந்து, இங்கு இடம்பெறவுள்ள முத்தரப்பு கடல்சார் பாதுகாப்புத் தொடர்பான கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார் என்றே முன்னர் கூறப்பட்டது. ஆனால் அந்தக் கூட்டத்தில் நேச்சல் சந்து பங்கேற்றிருக்கவில்லை. இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந்த கடலோரக் காவல்படை அதிகாரிகளே இதில் கலந்து கொண்டுள்ளனர். (த-4)

## சிக்கினார் ஆசாமி

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் கொள்ளை, வழிப்பறி, திருட்டு போன்ற பதினைந்துக்கு மேற்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த திருமணம் செய்த 24 வயதுடைய வாலிபன் ஒருவன் பொலிஸார் விரித்த 'வலை'யில் வகையாக அகப்பட்டுக் கொண்டான்.

நெடு நாள்களாகப் பொலிஸாரின் 'வலை'யில் அகப்படாமல் மறைந்து திரிந்த வாலிபரைத் தந்திரமான முறையில் கைது செய்த பொலிஸார் வாலிபரிடமிருந்து 9 பவுண் தங்க நகைகள் உட்படப் பல பெறுமதியான பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி சந்தன தலைமையில் சென்ற பொலீஸ் உத்தியோகத்தர்கள் வசீபன், சுரவீர, குணசேன ஆகியோர் விரைந்து சென்று மறைந் திருந்து வாலிபரைக் கைது செய்து விசாரணைக் குட்படுத் தியபோது பல திடுக்கிடும் தகவல்கள் அம்பலத்துக்கு வந்தன.

குடாநாட்டில் நெடுநாள்களாக இடம்பெற்று வந்த கொள்ளை, வழிப்பறி, திருட்டுக்கள் போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட குற்றச் செயல்களில் மேற்படி வாலிபன் ஈடுபட்டிருந்தான் என்பதுதெரியவந்துள்ளது. (ஒ-15)

## மயிலிட்டி ஆலயங்கள் மீதெழுந்த இராகங்கள்

### வெளியீட்டு விழா இன்று

வடமராட்சி,டிசெ.22

மயிலிட்டி மீள் குடியேற்றக் குழு, மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மயிலிட்டி கிராமிய அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன், மயிலிட்டி ஆலயங்கள் மீதெழுந்த தெய்வீக ராகங்கள் பக்திப் பாடல்கள் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, வியாபாரி மூலையில் உள்ள மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ. இன்பதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத்துறை விரிவுரையாளர் மோ.யோகானந்தமும், கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், ஓய்வு நிலை நில அளவையாளர் நா. ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கவிஞர் பொன். சக்திவேல் மயிலிட்டியில் உள்ள மூன்று இந்து ஆலயங்கள், ஒரு கத்தோலிக்க தேவாலயம் ஆகியவற்றின் மீது எழுதிய பாடல்களை தென்னிந்தியக் கலைஞர்கள் பாடியுள்ளனர். புலம்பெயர் மயிலிட்டி உறவுகளின் அனுசரணையுடன் இந்த இறுவட்டு வெளியிடப்படுகின்றது. (த-8)

## கைதடி விக்னேஸ்வராவின் வைரவிழா நிகழ்வு இன்றும்

கைதடி,டிசெ.22

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வைர விழா நிகழ்வுகள் நேற்றுக் காலை சனிக்கிழமை 9.00 மணிக்கு மிகக் கோலாகலமாக நடைபெற்றன.

மேற்படி பாடசாலையின் அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் விழாவிலேயே வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ த.குருகுலராசா பிரதம விருந்தினராகவும், ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான நா.சத்தியநாதன், ஓய்வு நிலை இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளரும் பழைய மாணவருமான செ.கார்த்திக், பாடசாலையின் ஸ்தாபகர் குடும்பப் பிரதநிதி செ.உமாகாந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ள நிகழ்வுகள் ஆரம்பமாகின.

விருந்தினர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை முழுங்க விழா மேடைக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றப்பட்டு நிறுவுநர் படத்துக்கு மலர் தூவப்பட்டது. தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

பாடசாலை நிறுவுனரின் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ரதிராணி யோகேந்திரராஜா நிகழ்த்தினார்.

தொடர்ந்து வைர விழாவையொட்டிய நூல் வெளியீடு இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டு வைக்க சிறப்பு விருந்தினர். நா. சத்தியநாதன் முதற் பிரதியை பெற்றுக் கொண்டார்.

நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ். லலீசன் நிகழ்த்தினார்.

மேற்படி வைரவிழாவை முன்னிட்டு இதுவரை காலமும் இப் பாடசாலையில் அதிபர்களாக கடமைபுரிந்தவர்கள் நினைவுப் பரிசில் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டனர். அத்துடன் நீண்ட காலமாக இப் பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

தொடர்ந்து முதன்மை மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.

இப் பாடசாலையின் வைர விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர்களின் போராட்டம் தொடர்வதால் அங்குவரும் நோயாளிகளை விடுதிகளுக்குக் கொண்டு செல்வதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. நோயாளியுடன் வருபவர்களே சிரமத்தின் மத்தியில் நோயாளிகளை காவு வண்டியில் வைத்துத் தள்ளிச் செல்கின்றனர். (த-21)

## சிகை அலங்கரிப்பாளர்களும் சேமலாப நிதித் திட்டத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களையும் ஊழியர் சேமலாப நிதிதிட்டத்தில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாணப் பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போதே பிரதித் தொழில் ஆணையாளர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் எதிர்காலம் கருதி அவர்களை ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

“_”

**சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது.**

இந்த நடவடிக்கைக்கு சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது. அத்துடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்டுப் பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குவதில் எந்தவித மாற்றமும் இருக்காது-என்றார். (த-17)

## சனசமூக நிலையங்களுக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்க

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல சனசமூக நிலையங்களும் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவை எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதிக்கு முன் நடத்தி விவரங்களை மாநகர சபைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

புதிய நிர்வாக சபை உறுப்பினர்களின் விவரம், இறுதிக் கணக்கு விவரம், வங்கிக் கணக்கு இலக்கம், வங்கியின் பெயர், முகவரி, தலைவர், செயலாளர், பொருளாளர்களின் பெயர், தனிப்பட்ட முகவரி (வீட்டு முகவரி), கைத்தொலைபேசி, வீட்டுத் தொலைபேசி இலக்கங்கள், தற்போதைய பதிவு இலக்கம், வட்டாரம், கிராம அலுவலர் பிரிவு ஆகிய விவரங்கள் இதில் குறிப்பிடப்பட வேண்டும்என சனசமூகநிலைய உத்தியோகத்தர் ச.லோகசிவம் தெரிவித்தார். (த-7)

## இணையத்தின் நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக திருமதி சரோஜா சிவச்சந்திரன், உப தலைவராக வி.தியாகராஜா, செயலாளராக ஜே.ரமணதாஸ், உப செயலாளராக என். நகுலேந்திரன் பொருளாளராக ஆர்.எ.திலகரட்ணம் ஆகியோரும் அங்கத்தவர்களாக எஸ். செந்தூராஜா, பி.ஜமுனாதேவி, ஜெ.செல்வராஜா, எம்.பிரபோஸ் ஆகியோரும் உள்ளகக் கணக்காளராக திருமதி மி.சுமதி, பத்திராதிபராக ரி. தேவதாஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஒ-14)

## கலந்துரையாடல்

கைதடி, டிசெ. 22

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் விசேட கலந்துரையாடலொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு தலைவர் லயன் இ. கந்தசாமி தலைமையில் கைதடி வளர்மதி சனசமூக நிலைய கேட்போர் கூடத்திலே நடைபெறும்.

பல முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாட இருப்பதனால் அங்கத்தவர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் வே.சின்னத்தம்பி கேட்டுள்ளார். (ஒ-288)

## பௌத்த சங்கத் தொண்டர்களை வைத்தியசாலைக்கு நியமியுங்கள்

*பணிப்பாளரிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தமிழ் - பௌத்த சங்கம் தமது தொண்டர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்டகாலம் பணியாற்றிய தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி கடந்த ஒன்பது நாள்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலையின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில், தமிழ் - பௌத்த சங்கத்தின் தலைவர் அ.ரவிக்குமார், தமது சங்கத்தை யாழ்ப்பாணத்தில் தொண்டர்களுடனும் சமயப் பெரியவர்களுடனும் இணைந்து நீண்டகாலமாக வழிநடத்தி வருவதாகவும், தமது சங்கத்தில் மனிதாபிமானம் மிக்க தொண்டர்கள் இணைந்துள்ளமையினால், யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக அவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

“_”

**யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்டகாலம் பணியாற்றி வந்த தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி கடந்த ஒன்பது நாள்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.**

இருப்பினும் இதற்கு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் எதுவித பதிலும் வழங்கப்படவில்லை. (த-5)

# இளவாலை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு மருத்துவர் இல்லை

*பாதிக்கப்பட்டவர் மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு*



யாழ்ப்பாணம், டிசெ. 22

இளவாலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சென்ற ஒருவர், வைத்தியர் இல்லாமையினால் சிகிச்சை பெற முடியாமல் போனமைக்கு எதிராக அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய கிளையில் நேற்றுமுன்தினம் மதியம் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த அவர் தமது 4 வயது மகனது கை முறிந்தமைக்காகச் சிகிச்சை பெறுவதற்கு இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு தனது மகனைக் கூட்டிச் சென்றுள்ளார். அங்கு வைத்தியர் இல்லாத நிலையில் அங்கிருந்த தாதிய உத்தியோகத்தர் வைத்தியர் தினமும் 11 மணிக்குப் பின்னரே வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட குறித்த நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளைக்குத் தொலைபேசியூடாக முறைப்பாடு செய்துள்ளார். இதன் பின்னர் பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்குச் சென்று அங்கும் வைத்தியர் சுகவீன விடுமுறையில் இருப்பதாகக் கூறப்பட்டதால் சங்கானை வைத்தியசாலையில் சென்று மகனுக்குச் சிகிச்சை பெற்றுள்ளார்.

இதன் பின்னர் குறித்த நபர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில், வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாமைக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் உடனடியாகவே யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் இணைப்பாளர் த.கனகராஜ் விளக்கம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் இளவாலை வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் தொடர்பு கொண்டபோது, இளவாலை வைத்தியசாலைக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டுள்ளார். அவருக்கு 73 வயதாகி விட்டதால் அமைச்சு அவரை நிறுத்தியுள்ளது.

இதனால் எங்களுக்கு தற்போது வைத்தியர் இல்லாத நிலையே இருக்கின்றது. சங்கானை வைத்திய சாலையின் வைத்தியரே இளவாலை வைத்தியசாலையிலும் பதில் கடமையாற்றுகின்றார். இரு வைத்தியசாலைகளிலும் அரைவாசி நேரமே அவர் பணிபுரிகின்றார் என்று தெரிவித்தனர். (த-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி மலிவு விற்பனை

மங்களா

சகல தளபாடங்களுக்கும்
10% - 50% விலை குறைப்பு
தெரிவுக்கு முந்துங்கள்

இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 - 2228367, 0777 286069


## மரண அறிவித்தல்

### திருமதி கனகரஞ்சினி திருலோகசிங்கம்



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கைதடியை வதிவிடமாகவும், கொழும்பை தற் காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரஞ்சனி திருலோகசிங்கம் நேற்று முன்தினம் (20.12.2013) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகநாயகி தம்பதியரின் ஏக புதல்வியும் சபாரத்தினம் திருலோகசிங் கத்தின் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் திருவருட்செல்வன் (Accountant D.S. Office Keyts), வரதாம்பிகை (Asst. Accountant Colombo), வாலாம்பிகை (Charterad Accountant - Colombo), திவாகரன் (Canada), திருமாவளவன் (Enginner - London) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜானகி (ஆசிரியர் - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சரவண பவன் (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியும் கவினின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 23.12.2013 திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனத்துக்காக பொறளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை
T.P : 071 6113135, 071 7849717

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சிவமூர்த்தி



வண்ணார் பண்ணை அரசடி, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவமூர்த்தி நேற்று (21.12.2013) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம்- சாரதாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜாதேவியின் அன்புக் கணவரும், தசாயினி, மதீசன், மஞ்சுதன், கீதாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருக்குமரனின் மாமனும், ஆரணியின் அன்புப் பேரனும், கமலாதேவி, பத்மாதேவி, சிவகுமார், சிவநேசன், சிவராசா, கௌரிமனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜகோபால்.சந்திராதேவி, இரத்தின கோபால், ஞானகோபால் ஸ்ரீகோபால், இராகினிதேவி.சந்தானகோபால், ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1035, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1324

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினரும் **திரு. செந்தூரன்** அவர்களின் பெரியதந்தையும் **மதீசன், மஞ்சுதன்** ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய

### இரத்தினம் சிவமூர்த்தி

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்ரியன் லேன், கொக்குவில் கிழக்கு

வளர்மதி நண்பர்கள்
வளர்மதி முன்னேற்றக்கழகம்

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி நவரத்தினம்



நெல்லியடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நவரதத்தினம் நேற்று (21.12.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மூத்த புதல்வியும், காலஞ்சென்ற நாகரத்தினம்-நவரத்தினத்தின் அன்பு மனைவியும், பரமேஸ்வரியின் சகோதரியும், மைதிலி (அசிரியை, பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை), மயூரன் (மருதம், இரும்பகம் நெல்லியடி) ஆகியோரின் பெரியதாயும், சிறிகந்தசேகரம் (ஆசிரியர், யா/ அல்வாய் வடக்கு றோ.கா.த.க. பாடசாலை), கவிதா ஆகியோரின் அன்பு மாமியும், ஆரணன், அபிராம், கிசாந்த், ஆரபி, நவந்நாத், கவீஸ்நாத், தீபிஷா ஆகியோரின் அன் புப்பேர்த்தியும், காலஞ்சென்ற வல்லிபுரம், திரவியம், பாக்கியம், இராசமலர், சிவயோதி சிவநேசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22/12/2013) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 02.00 மணியளவில் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்துக்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்திய மகா வித்தியாலய வீதி,
கணிகோபிலடி, நெல்லியடி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா சின்னத்துரை



யாழ் சங்குவேலி தெற்கைபிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சின்னத்துரை நேற்று (21.12. 2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான சுப் பையா-செல்லாச்சி தம் பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான நடராசா செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதர னும், நேசமணி யின் அன்புக் கணவரும், தெய்வேந்திரன் (ஜேர் மனி), காலஞ்சென்ற காந்தரூபன் மற்றும் தயாபரன் (பிரான்ஸ்), சறோஜா, சுதாகரன், கரு ணாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குலேஸ்வரராஜன் (யாழ். பல்கலைக் கழகம்), திலக ராணி (ஜேர்மனி), செந்தில் நாயகி (பிரான்ஸ்), சுசிகலா (ஆசிரியை, யா/ மண்டை தீவு றோ.க. வித்தியாலயம்), பங்கயவதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12. 2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுபுதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்குவேலி. 077 3348263,
077 4652624

தகவல்:
குடும்பத்தினர்.


## சுதர்சனம் பாக் சென்ரர்
Suthashanam Bag Center

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

No.12.Grand Bazaar Road, Jaffna
T.P : 077 1324319

இல. 12 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். (மரக்கறி சந்தை அருகில்)

## தேவை

புத்தகம் கட்டுவதற்கு (பைண்டிங்) அனுபவமுள்ள பெண் ஊழியர்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:— 077 900 9541

## தேவை

Dialog Brodband Unlimeted
2Mb OR 1Mb Wimax
Conniction தேவை.
தொடர்புகளுக்கு:-
077 2184380, 0777 220055


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பல்கலைக் கழக பாதுகாப்பு திணைக்களத்தில் 06.09.1982 ஆம் ஆண்டு பதுகாப்பு உத்தியோகத்தராக இணைந்து பின் பாதுகாப்பு பரிசோதகராக (தரம் ஒன்று) பதவி உயர் வினை பெற்று பல்கலைக் கழகத்தில் 31 வருடங்கள் சேவை ஆற்றிஇன்று 22.12.2013 ஆம் திகதி ஓய்வுபெறும் எமது சங்க அங்கத்தவர் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவனும் சிறந்த விளையாட்டு வீரனு மாகிய

### திரு. கெக்ரர் கேமன் யோன்

அவர்களின் சேவையினை பாராட்டி வழ்த்துவதுடன் அவர் தமது ஓய்வுக காலத்தில் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாதுகாப்புத் திணைக்களம்,
யாழ்.பல்கலைக்கழகம்

வாழ்த்துவோர்
பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரிச் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
R.S. சந்திரகுமார் (சந்திரன்) அவர்களின் அன்புத் தாயார்

### சண்முகநாதன் கமலாதேவி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடை இலறவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(42968)

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### அந்தோனி சுவானி



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பா ணத்லைத வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி சுவானி கடந்த (18.012.2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியோகு - அந்தோனியான் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருளப்பு ஆனந்தத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரேசாவின் அன்புக் கணவரும், ஞானசீலன் (சுவிஸ்), தேவதாஸ், இமெல்டா (செல்வதி), சகாயராணி (தேவி), யோண் டி பிறிற்றோ (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லீலிமலர் (சுவிஸ்), பெனடிகற்றம்மா (பவா), அன்ரன், பாலதாஸ், கிறிஸ்ரியன், றாஜினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், கிளெமன்சியா (கனடா), கோட் வியா, றெரன்ஸ், நொபின்சியா, நொசாந், நெவின்ஸ்ராஜ், ஜனார்த்தன், டிறெஸ்சியா ஆகியோரின் அன்புப் பேரனும் எர்லினின் (கனடா) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. இறுதி ஆன்மசாந்தி வழிபாட்டைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.06, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 0214919384, 0772019149

(42946)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி




உடுவில் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு. சு. கிருஸ்ணலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கமலா சுப்பிர மணியம்

அவர்கள் நேற்று முன்தினம் (20.12.2013)வெள்ளிக்கிழமை காலமான தையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னா ரின் ஆத்மா சாநதி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம் , பிரதேச செயலகம், உடுவில். பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



(23.12.2013 திங்கட் கிழமை)

நிகழும் விஜய வருடம் கார்த்திகைத்திங்கள் 22 ஆம் நாள் (08.12.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத்தந்தையும் ஆவரங்கால் சிவன் தேவஸ்தான ஸ்தானிய குருவும் பிரதம குருவுமாகிய

### சிவஸ்ரீ வே. நடராஜ சிவாச்சாரியார்

அவர்களின் ஆத்ம சாந்தியை முன்னிட்டு ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் 23.12.2013 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளிவில் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் அஞ்சலியுரையும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் இந் நிகழ்வில் கலந்து அப்பாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோயிலடி ஆவரங்கால்
புத்தூர்

அன்னாரின் குடும்பத்தினரும்
சிவன் தேவஸ்தானமும்


## கடை வாடகைக்கு

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரம் பிரதான வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட 4 கடைகள் வாடகைக்குண்டு. (சிகை அலங்கரிப்பு கடை (Saloon) நடத்துவதற்குரிய சகல வசதிகளும் உண்டு.
தொடர்பு: 076 603 9334
(42884)(7.6.3)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொதிகள் சேவையில் முதலிடம் பதித்த இலங்கை நிறுவனம்

**G T V ENTERPRISES, MAHARAJAH FOOD PRODUCTS, VIJEYA ENTERPRISES**

### எமது வாடிக்கையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

இதுவரை காலமாக வடமாகாணத்தில் எமதுபிரதிநிதிகளாக செயற்பட்டு வந்த சில ஸ்தாபனங்களை இடைநிறுத்தி வைத்துள்ளோம். (எமது பிரதிநிதிகளாக செயற்பட்டு வந்த சிலர் தவறான முறையில் நிறையிலும் விலையிலும் மோசடிகள் செய்வதால் அவர்களை எமது நிறுவனத்துடன் இருந்து வந்த தொடர்பினை இடை நிறுத்தியுள்ளோம்) எனவே எமது வாடிக்கையாளர்கள் அனைவரும் வேறு பிரதிநிதிகளுக்கு பொதிகளை கொடுப்பதை தவிர்த்து இல. 225 கஸதூரியார் வீதியில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் நேரடியாகவே தொடர்பு கொண்டு பொதிகளை கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

★எமது கினளயில் கொடுக்கப்படும் பொதிகளுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாடிக்கை யாளர்களுக்கு 7000/= ரூபா பெறுமதியான சாறி ஒன்று பரிசாக வழங்கப்படும்.

★ FRANCE NORMAL பொதிகள் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஒரு கிலோவுக்கு 450/= ரூபா அறவிடப்படும் மற்றும் UK, SWISS, CANADA நாடுகளுக்கான NORMAL சேவைகள் வழமைபோல் நடைபெறும் மற்றும் லண்டனுக்கான (LONDON) கப்பல் மூலமான பொதிகள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதத்தில் பொதிகள் ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மாதத்திலும் 25 ஆம் திகதியில் கப்பல் புறப்படும். தொகையாகப் பொதிகள் அனுப்புவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். அதற்கேற்ப கிலோ ஒன்றிற்கு (1kg) ரூபா 150/= அறவிடப்படும்.

மேலதிக விவரங்களுக்கு கீழ் குறிக்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்பு கொள்ளவும் அவ்வாறு தொடர்பு கொள்ளும் போது முகவர்களின் விவரங்களும் விலைக் கழிவினையும் பெற்று கொள்ளலாம்.
அத்துடன் Western Union Money Transfer சேவையினை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

### வெளிநாட்டு நாணயமாற்று சேவை



எங்களிடம் உங்கள் வெளிநாட்டு நாணயங்களை நியாயமான விலைக்கு மாற்றிக்கொள்ளலாம்.
எம்மை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
077 7747299, 071 4353708

---

O/L மாணவர்களுக்கான

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்

**Learn IT + English**

சர்வதேச கணனி, ஆங்கில சான்றிதழ்களை பெறுவதற்கான ஒரு அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

**விசேட ஆங்கில வகுப்புக்கள்**

Spoken English / Basic English
**English For VISAS**
A1, B1, B2
மற்றும் விசேட IELTS வகுப்புக்கள்

Seasonal Greetings

**உலகத்தரம் வாய்ந்த கணினி கற்கைநெறிகள்**

- ICDL - International Computer Driving License
- Diploma in Web Design
- Diploma in ICT
- Diploma in Multimedia
- Diploma Hardware & Networking

**மேலும் முதன் முறையாக யாழ் மற்றும் கிளிநொச்சியில்**

**Professional Plus**
வேலைவாய்ப்பு பெறுவதற்கான விசேட பயிற்சி நெறி

- இப்பாடநெறி IT, English, Computerised Accounting, Office skills, Marketing & sales Business Management போன்ற பகுதிகளை உள்ளடக்கியது.
- வேலைவாய்ப்பினை இலகுவில் பெறுவதற்கான வழிகாட்டல்கள் செய்து தரப்படும்.

**Professional Courses**
Hotel Management / BBA / MBA

**SMS மூலம் தொடர்பு கொள்ள**
உங்கள் Name, Course name என்பவற்றை Type செய்து கீழ்வரும் எண்களுக்கு sms செய்யுங்கள்
யாழ்- 0775 052 643
கிளிநொச்சி- 0765 109 881

**LCBT London College of Business Technology**

யாழ் தொடர்புகளுக்கு..
120/6, Palaly Road,
kantharmadam, Jaffna.
0775 052 643 / 0212 217 105

கிளிநொச்சி தொடர்புகளுக்கு..
#330, Aanandapuram East, Kilinochchi.
(வலயக் கல்வி அலுவலகம் பின்புறம்)
0766 857 230
0773 013 620

---

## மாபெரும் பரிசளிப்பு விழா -A/L 2013

### வாழ்த்தி..... வரவேற்கின்றோம்

2013 A/L பரீட்சைப்பெறுபேறுகள் வெளியாகி இருக்கும் இந்த சூடான தருணத்தில் நல்லபெறுபேறுகளைப்பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்களை வாழ்த்தி பணப்பரிசில்கள் உள்ளடங்கலாக பல பரிசில்களை வழங்கி வாழ்த்தவிருக்கும் நாங்கள் அதிக பெறுபேறுகள் பெறத்தவறியவர்களையும் உயர்கல்விக்காக அன்பால் அரவணைக்கவுள்ளோம்.

**பரிசில் பெற எம்மைத்தொடர்புகொள்ளவேண்டியவர்களின் விபரம் வருமாறு**

- மாவட்ட மட்டத்தில் முதலிடங்களளைப்பெற்ற மாணவ மாணவியர்.
- மாவட்ட மட்டத்தில் இரண்டாம்இடங்களைப்பெற்ற மாணவ மாணவியர்.
- மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடங்களைப்பெற்ற மாணவ மாணவியர்.
- கணித, விஞ்ஞான, வர்த்தக, கலை பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் முதல் 100 இற்குள் நிலைகளைப் (Rank) பெற்ற மாணவ மாணவியர்.
- 3 A சித்திகளைப் பெற்றவர்கள்
- 2 A சித்திகளைப் பெற்றவர்கள்
- பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டிகளில் முதலிடம் பெற்றவர்
- பாடசாலையில் கிரிகெட், கால்பந்து, கூடைப்பந்து, மென்பந்து, பூப்பந்து(பற்மின்ரன்) போன்ற அணிகளில் பிரகாசித்தவர்கள்.

உங்கள் பெயர் விபரங்களை 31.12.2013 இற்கு முன்னதாக எங்களது நிறுவனத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசியூடாகவோ பதிவு செய்து கொள்ளுங்கள்

**பரிசளிப்பு விழாவிற்கான நாள் பின்னர்அறிவிக்கப்படும்**

## BEST INVESTMENT IN YOUR FUTURE WITH

# CIMA @ SPECTRA

அனுபவமும், ஆற்றலும், அர்ப்பணிப்பும் உள்ள விரிவுரையாளர்களுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**Full Time Foundation Batch - Starts on - 02 Jan 2014**
**Part Time Foundation Batch - Starts on - 05 Jan 2014**

அனுமதிக் கட்டணங்கள் இலவசம்

**Spectra Skills**
No: 19 STANLEY ROAD JAFFNA.
Tel: 021 222 1422, 021 320 2728

இன்றிலிருந்து உங்கள் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

உரும்பிராய் பலாலி பிரதான வீதியில் இந்துக்கல்லூரியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கப்படும். தரகர் தேவையில்லை.

தொ.பே: 077 325 4549

(42894)(3.6.4)

## உடனடியான தொழில்

கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற்சாலைகளான ரொபி/ஜாம்/கோடியல்/பிஸ்கற்//பிளாஸ்டிக் பை/கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு 18 - 55 வயது ஆண், பெண் இருபாலாரும் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/=, 25,000/=, 38,000/= சம்பளங்களுடன் உடனடி வேலைவாய்ப்பு.

தொடர்புகளுக்கு: 077 711 7661

(43558)
(7.6.3)

## சான்றிதழ் வழங்கல்

தென்மராட்சி.டிசெ.22

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் அரச உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட மொழித்திறன் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யாழ்.பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

சித்திபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு தனித்தனிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக திணைக் களத்தைச் சேர்ந்த ஜே.டி.சி. ஜயசிங்க அறிவித்துள்ளார். (ந-9)

## நத்தார் நிகழ்வுகள்

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன கிறிஸ்தவ கழகம் நடத்தும் வருடாந்த நத்தார் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் நடைபெறும். (ந)

◆◆◆

மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தின் ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமல மரித்தியாகிகள் குருமட உப அதிபர் அருட்பணி பி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக உசன் முருகன் ஆலய பிரதம குரு கேதீஸ்வர சர்மாவும் கலந்து கொள்வர். (ந-14)

◆◆◆

பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளையின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் கரோல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வங்கியில் நடைபெறவுள்ளது. (ஓ-14)

## மயிலிட்டி தெய்வீக ராகங்கள்

இசை இறுவட்டு வெளியீடு

**இசையமைப்பாளர் சிறிகுகனின்** இசையில் தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர்களும் ஈழத்து முன்னணிப் பாடகர்களும் பாடிய

மயிலிட்டி ஆலயங்கள் மீதெழுந்த தெய்வீகப் பக்திப்பாடல்கள்

பாடல் ஆசிரியர் **பொன்.சக்திவேல்**

இடம்: **மயிலிட்டி கடல் தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்**
தெனி அம்மன் கோயிலடி, வியாபாரி மூலை, பருத்தித்துறை

காலம்:- **இன்று (22.12.2013)** ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- **பிற்பகல் 2 மணி**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**- வெளியீட்டுக்குழு
மயிலிட்டி மக்கள்.**

(43014)(2.6.3)

## German Language

ஜேர்மன் சுவிஸ் செல்வோருக்காக டொச்மொழி வகுப்பு இங்கே நடை பெறுகிறது. ஜேர்மனியில் கல்வி கற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. எம்பசிப் பரீட்சைக்கு ஏற்ற வகுப்பும்- Spoken வகுப்பும்

இடம்: மாவிட்டபுரம் சந்தி, தொ.பே: 077 270 7121

(42896)(4.6.3)

**இப்போது கண்டி, வவுனியா, ஹட்டனிலும்**

**02 மாத முழுநேர - வதிவிட / வதிவிடமற்ற**

கணனி பயிற்சியுடன் கூடிய **ஆங்கில பாடநெறி**

தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி

# ENGLISH +IT
## & SKILLS TRAINING

பாடநெறி ஆரம்பம் **January 06**

**IT** - MS-OFFICE, HARDWARE, COMP-ACCOUNTING

-WITH GRAMMAR-
| Reading | Writing | | Listening | Speaking |

**Weekly 06 Days 9:00 to 4:00**

பாடநெறி முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் உட்பட **03 Diploma** சான்றிதழ்கள் வழங்கப்படும்

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதி

## Diploma in spoken English

| | |
|---|---|
| 3 மாதம் | Weekly 4 Days 9:00 to 12:30 / 12.30 to 4.00 |
| 4 மாதம் | Saturday / Sunday 9:00 to 2:00 |

**GOLDEN COLLEGE**
KANDY - 0777 222 529
HATTON - 0777 222 528
VAVUNIYA - 0777 222 527
548, Peradeniya Road, Kandy. 0812 20 55 44 , 0777 912 597.

க.பொ.த உயர்தரத்தில் A சித்தியைப்பெற்றுள்ளீர்களா, பின்வரும் கற்கைநெறிகளிற்கு 100% வரை புலமைப்பரிசில்கள்

**CIMA-UK, COMPUTER ENGINEERING USA**

(C/10622)

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடையவில்லையா? கவலையை விடுங்கள். வேலைவாய்பபு அதிகமுள்ள கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிகிறி, அமெரிக்க கணிப்பொறியியலாளர் கற்கை நெறிகள் உங்களை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும்.

புலமைப்பரிசிலிற்கு **<NAME> <Course><AL Result>** என்பவற்றை **type** செய்து 772 395 895க்கு **sms** செய்யவும்.மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள **MCS** வளாகத்தில்.

**IDM**

# Nations Campus
## Jaffna Branch #216, Navalar Road, Jaffna
**Managed by Aharam Solution (Pvt) Ltd**

**After O/L, What Next?** (பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் வரை காத்திருக்கத் தேவையில்லை. இன்றே விரையுங்கள் ஒரு சர்வதேச தரம் வாய்ந்த கற்கை நெறியினை எம்முடன் இணைந்து பூர்த்தியாக்கிடுங்கள்)

**#International Certificate in ICT - computing (4 months)**

**#International Certificate in Business Management(4 mon)**

2ம் மற்றும் 5ம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன


**#15% Discount applicable For All Cources**

**Tel : 021 222 9901 / Mobile : 0775632056**

**#Advanced Diploma in AutoCAD 2D&3D (5 months)**

(C/10621)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Learn from the Leader with world class Certifications**
and make your child an **IT Professional**

**Diploma in Microsoft Office**
Course Fee : 3,500/=
Course Contents in Brief:
- Introduction of Computer Science
- MS Word
- MS Excel
- MS Power Point
- MS Outlook
- MS Access
- Internet & E-mail

Course Duration: 48 Hours — Microsoft Office

**Diploma in Computer Science**
Course Fee : 3,500/=
Course Contents in Brief:
- Fundamentals of Information Technology
- Windows Operating System
- Microsoft Office Applications (Word/ Excel/ Power Point)
- Multimedia
- Internet & E-mail
- Introduction to Graphic Designing
- Corel DRAW & Photo Shop (Basic)
- Computer Type Setting

Course Duration: 48 Hours

**Graphic Designing & Type Setting**
Course Fee : 3,500/=
Course Contents in Brief:
- Introduction of Graphic Environment
- Adobe Page Maker 7
- Adobe Photo Shop CS
- Corel DRAW X3
- Scanning & Colour Separation
- Printing Techniques
- Sinhala/English Typing

Course Duration: 60 Hours

**Computer for KIDS**
Course Fee : 500/= (Monthly)
Course Contents in Brief:
- What is Computer & How its works
- Introduction to Windows & Computer Applications
- Key board Practice through Educational Games
- Painting with MS Paint
- Word Processing with MS Word
- Presentations with MS Power Point
- Drawing with Basic Corel DRAW
- Multimedia & Internet

Course Duration: 6 Months

## Get ICDL in 90 Hrs



*ICDL is the internaional standard in end - user computer skills. ICDL certification programme consist of modules which define the skills and competencies necessary to be a proficient user of a computer and common computer applications. Each ICDL module provides a practical programme of up-to-date skills and knowledge areas which are validated by a test.*
*The available modules are:*

- Module 1 - Basic Concepts of Information Technology (ICT)
- Module 2 - Using the Computer and Managing Files
- Module 3 - Word Processing
- Module 4 - Spreadsheets
- Module 5 - Databases
- Module 6 - Presentation
- Module 7 - Information and Communication

**Course Fee :**
~~10,500/=~~ **6,500/=**
**(Special Offer for O'Level Students)**

# GATEWAY

**347, Kasthuriyar Road, Jaffna. Ph : 0215675555**

GATEWAY Language Centre | GATEWAY School of Computing | IPICT International Pedagogical ICT Licence | ICDL | e-Citizen

## வீடும் காணியும் விற்பனைக்கு

இல.37/8, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடும், 2பரப்புக் காணியும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு:
071 482 1719/077 846 4104

## கடைகள் வாடகைக்கு

யாழ்.ஆறுகால் மடத்தடி - பழம் வீதி, இல.17A இல் புதிதாக அமைக்கப்பட்ட கடைகள் - (10'x20') வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 221 3292

## காணி விற்பனைக்கு

யாழ்.கச்சேரிக்கும், புங்கன்குளம் சந்திக்கும் இடையே A-9 பாதையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(42903) (7.6.3)
தொடர்பு :
077 921 0099, 071 359 3263

## நல்லூரில் காணி விற்பனைக்கு

நாவலர் வீதி, குறோசற் ஒழுங்கையில் (நல்லூர் கோயில் யாழ்.மாநகரசபைக்கு அண்மையில்) ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்பு:
077 803 8205

## காணி விற்பனைக்கு

பொற்பதி றோட், செம்பாட்டு ஒழுங்கையில் 2பரப்புக் காணி சுற்றுமதில், கிணறுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 725 4217/021 224 1665
011 252 8460/077 143 5875
பார்வையிடும் நேரம்: மு.ப.10.00 மணி முதல் பி.ப.3.00 மணிவரை. ஞாயிறு மட்டும்.

## ANNEX/அறைகள் வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழகம் அருகில் பலாலி வீதியில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பம்/பல்கலைக் கழக மாணவிகள்/உத்தியோகம் பார்க்கும் பெண்கள்/ தாதிகள் (NURSE)/கல்லூரி மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்குண்டு.
(42711)(7.6.3)
தொடர்பு : 021 222 7069, 077 930 0148

## உடன் தேவை

கிளிநொச்சியில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்ற கிறபிக் டிசைனர்கள் (ஆண், பெண்) மற்றும் கணக்கு இலிகிதர்கள் (பெண்) போன்றவர்கள் உடனடியாகத் தேவை. பயிற்சிபெற்று வேலைசெய்ய ஆர்வமுள்ள கணினி அறிவுள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். சம்பளமும் ஏனைய சலுகைகளும் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 186 6733

## பெயர் மாற்றம்

புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் மடத்துவெளியைச் சேர்ந்த நாகேஸ் சண்முகலிங்கம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை நாகேஸ் சண்முகராசா என்று பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத் தருகிறேன்.
நா.சண்முகராசா (42901) (7.6.3)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre

Spoken English with Grammar, சிங்களம், Short hand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் : இன்று 22.12.2013
ESOL, IELTS ஆகிய பரீட்சைகளுக்கும் தயார் செய்து விடப்படும். (42889) (7.6.3)
பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
அதிபர் : இ. ஜேம்ஸ் தொடர்பு : 077 677 9340

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1983 ரேவதி 3ஆம் பாதம், 5' 7", UK. Citizen, Biochemistry செய்து விட்டு international dept collection company இல் வேலைசெய்யும் மணமகனுக்கு 26 அல்லது அதற்குக் குறைந்த வயதுள்ள பொருத்தமான [illegible] நாடுகளில், கொழும்பில் ஆங்கில அறிவுள்ள மணமகளை தகப்பனார் தேடுகின்றார்.
தொடர்பு: 071 839 7499

## பாராட்டு வாழ்த்து



யாழ்.வீரமாகாளி அம்மன் தேவஸ்தான
பிரதமகுரு **கமல்ராஜ் குருக்கள்**
தம்பதியரின்
*செல்வப் புதல்வி*
**ஷஷ்டிகா** *அவர்கள்*

கடந்த 2013 இல் நடைபெற்ற **தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 167** புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளமையை மக்கள் வங்கியும், தேசிய சேமிப்பு வங்கியும் பதக்கம் அணிவித்துக் கௌரவித்துப் பாராட்டியுள்ளன. இவர் வீரமாகாளி அம்பாளின் அருளாசியுடன் மேலும் பல பரீட்சைகளிலும் உயர்வான சித்திகளைப் பெற்று உயர் தொழில் ஸ்தானத்தில் துலங்கி சிறப்புடன் வாழ உளங்கனிந்து வாழ்த்துவோர்

**SRT சண்முகநாதன் குடும்பத்தினர்.** — **செல்வரத்தினம் ரஜனிகாந் குடும்பத்தினர்.**
(C/10623)(2.6.3)

## கார் விற்பனைக்கு

நிசான் றேசிங் கார் றூறல் மொடல் விற்பனைக்குண்டு. (42767)(4.6.3)
தொடர்பு:077 500 0226, 077 605 9341

## காணி குத்தகைக்கு தேவை

களஞ்சியசாலை அமைப்பதற்கு இணுவில் மருதனார்மடச் சந்திக்கும், தாவடி சந்திக்கும் இடையில் கே.கே.எஸ் வீதிக்கு மிக அண்மையான காணி குத்தகைக்குத் தேவை.
தொடர்பு : 077 361 1271 (42892) (7.6.3)

## விற்பனைக்கு

DAIHATSU (TOYOTA) ROCKY. 1987, BRAND NEW,டீசல், 4வீல்,JAPAN, 32 - XXXX Jeep அத்துடன் CD 200, TV-8XXX மோட்டார் சைக்கிளும்.
தொடர்பு:
071 435 8578, சுண்டுக்குளி

## வாகனங்கள் விற்பனைக்கு

WP KL XXXX இலக்க,12500km ஓடிய Suzuki zen Estilo (1000cc) கார் விற்பனைக்குண்டு.
NP VX XXXX இலக்க,16000km ஓடிய Honda CB shine (125cc) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 654 4852

## விற்பனைக்கு

JOHNDEE ரக்டர் பெட்டியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 480 1734 (42794)(7.6)

## வீடு வாடகைக்கு

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் சந்தியில் இருந்து 50மீற்றர் தூரத்தில், 4படுக்கையறைகள், Kitchen, hall, சாப்பாட்டறை Sitting room, கராஜ் உடன் கூடிய வீடு வாடகைக்குண்டு
தொடர்பு: 077 977 5837

## கல் வீடு வாடகைக்கு

ஈச்சமோட்டை சுண்டுக்குளியில் 2 அறைகள், ஒரு கோல், ஒரு டைனிங் கோல், சமையலறை, மின்சாரவசதி, நல்ல தண்ணீர் சுவாத்தியமான வீடு வாடகைக்குண்டு. (42560)(7.6.3)
தொடர்பு:077 835 0478

## வீடும் வளவும் விற்பனைக்கு

இராசபாத வீதியில் முன்பு கிறேசர் இருந்த இடத்திற்கு அண்மையில் நல்ல சூழலில் வருமானமுள்ள 4¼ பரப்பு கல்வீடும் வளவும் விற்பனைக்குண்டு. (42793) (7.6.3)
தொடர்பு : 077 123 7063, 021 491 1206

## தேவை

மாத வாடகைக்கு Demo வாகனம் தேவை.
(படி வாகனம்)
தொடர்பு : 077 816 2892 (29716) (7.6.3)

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர், வைமன் வீதியில் 2¾ பரப்புடன் 5 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொ.பே. 077 347 7498 (சி/10336) (7.6.3)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 32, புனர்பூசம் 3ஆம் பாதம், உயரம் 168cm, கிரக பாவம் 10, செவ்வாய் குற்றமற்ற A/L Computer Diploma படித்த மணமகளுக்கு பொருத்தமான மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றனர். (வெளிநாடு மிகவும் விரும்பத்தக்கது)
தொடர்பு : 077 759 3858 (42882)(7.6.3)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெரு, நாவலர் வீதி சந்திக்கருகில் இல.64, மருதடி வீதியில் நிலப் பரப்பு 1.05 காணியில் அமைந்துள்ள விசாலமான வீடு விற்பனைக்குண்டு. 5 அறை, Kitchen, Attach Bathroom, வாகனத் தரிப்பிடம் (Car or van) (நல்லூர் 300மீற்றர், பொஸ்கோ பாடசாலை 400 மீற்றர்) பார்வையிடும் நேரம் 9.00am - 6.00pm
தொடர்பு: 077 602 8888

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் வீதியில் மூன்று கோயிலடி அம்மன் கோயில் வீதியில் பழைய மீன் சந்தைக்கு அருகில் இலக்கம் 5/8, 5/9, மூன்று பக்கமும் பாதை உள்ளது. 3 பரப்பில் 2 காணிகள் 2 பரப்பில் 2 காணிகள் அல்லது முழுமையாக 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பு 6 (ஆறு) லட்சத்துக்கு மேல். (42769)(4.6.3)
தொடர்பு:077 366 8286

## மணமகன் தேவை

லண்டன் பிரஜாவுரிமையுடைய 32 வயது MBA படித்த அழகிய பெண்ணுக்கு அவரது உறவினர்கள் படித்த நல்லொழுக்கமுள்ள மணமகனைத் தேடுகின்றனர்.
தொடர்பு: விளம்பர இல. 4480,
மே/பா, உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

12 ஏக்கரில் பப்பாசிச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட பொருள்கள் மரக்கறி, பழவகை, தெங்கு மற்றும் காட்டுப் பயிர்களை பயிரிடக் கூடியதான துளிநீர்த் திட்ட (Dip Irrigation) சப்மெசிபிள் பம்ப் (Subimmersible pump), சேகிற் (Circut), PVC பைப், கேற் வால்வ் (Gate Valve), அல்கதின் பைப், நொசில் (Noscl) என்பன உடன் விற்பனைக்குள்ளன.
தொடர்பு:077 784 3998 (சி/10360)(4.6.3)

## தேவை

யாழ். நகரில் உள்ள ஆங்கில மருந்தகத்திற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை.
சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல : 4481
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (42856) (7.6)


## வீடு வாடகைக்கு தேவை

நிறுவனம் ஒன்றுக்கு சுன்னாகம், அச்சுவேலி மற்றும் யாழ் நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மூன்று அறைகளுக்கு மேற்பட்ட வீடுகள் வாடகைக்குத் தேவை.
தொடர்பு : (42567) (7.6.3)
077 706 9148, 077 408 3656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி

3 ஆம் ஆண்டு..... 39 ஆம் ஆண்டு.....



அமரர்
**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**
மண்ணில் :- 03.05.1922
விண்ணில் :- 05.01.2010
**திதி:- அபரபட்ச பஞ்சமி**

அமரர்
**கனகாம்பிகை சபாரத்தினம்**
மண்ணில் :- 16.03.1927
விண்ணில் :- 22.12.1974
**திதி:- பூர்வபட்ச நவமி**

பாசத்துடன் பெற்றெடுத்து பரிவோடு எமை அணைத்து!
கல்வியும் கலைகளும் தந்து வாழ்க்கையில் உயர வைத்தீர்!
நேசமுடன் நாம் அறுவர் உங்கள் அரவணைப்பில்!
அந்த நாள்கள் நெஞ்சமதில் அழியாத பொக்கிஷங்கள்!!
நீங்களின்றி இத்தனை நாள் எப்படி வாழ்ந்தோமென
நினைக்கும் கணப்பொழுதில் எம் விழிகள் குளமாகும்!
தெய்வத்துள் வாழ்கின்ற எங்கள் அன்புப் பெற்றோரே!
எங்கள் உயிர் அக்காவும் அங்கே நலம்தானா?
திசைமாறிய பறவைகளாய் நாம் ஐவரும் நெடும் தொலைவில்
திமிறுகின்ற கடந்த கால நினைவுகளை மீட்டியபடி!
வாழ்க்கைப் பெருங்கடலை நீந்திக் கடக்கின்றோம்
உங்கள் நினைவுகள் படகாகி எமைக் கரைசேர்க்கும்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"திலக வாசம்",
தபாலக வீதி, சாவகச்சேரி. (C/7612)(2.6.3)

**- குடும்பத்தினர்.**
இல. 5, கல்லடி வீதி, சாவகச்சேரி.

# செயற்குழு அமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
சுதேச வைத்தியத் துறை அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கில் செயற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் வீதியில் உள்ள வடமாகாண சுதேச வைத்திய சபைக் கட்டடத்தில் டாக்டர் ஜே.ஜெயலன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் சுதேச வைத்திய அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை வகுப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் செயற்பாட்டுக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் வட இலங்கை சுதேச வைத்திய சங்கம், அரச சித்த ஆயுள்வேத வைத்தியர் சங்கம், கூட்டுறவு சித்த மருந்து உற்பத்தி நிறுவனம், ஸ்ரீலங்கா பாரம்பரிய வைத்தியர்கள் இணையம், தனியார் சித்த மாணவர் சங்கம் மற்றும் யாழ். கலாசார மையம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (ந-10)

# கண்ணீர் அஞ்சலி

## சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள்

(வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு)



எமது ஆலயத்துக்கு ஆன்மீக மாற்றத்தை நிறைவாகத் தந்தருளிய எம்மதிப்பிற்கும் வணக்கத்துக்கும் உரிய சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள் ஐயா அவர்கள் சிவபேறு அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைநகர்,
சித்தன்கேணி.
(சி/10399)(4.6.3)
காங்கேய முத்துமாரி அம்மன் கோயில் (சின்னம்மன்) பரிபாலனசபை.

# நன்றி நவிலலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



அமரர் **பத்மநாதன் கிரிதரன்**

தோற்றம்
05.05.1952

மறைவு
22.11.2013

கடந்த 22.11.2013 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த எமது ஆருயிர்த் தெய்வம் மறைந்த செய்தி கேட்டவுடன் ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மற்றும் தந்தி மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், அன்னார் நோயுற்று இருந்த வேளையில் சிகிச்சை அளித்த யாழ். பொது வைத்தியசாலையின் அனைத்து வைத்தியர்களுக்கும், வைத்தியசாலைச் சமூகத்திற்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் முன்னின்று உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

'ஶ்ரீ பிருந்தாவனம்'
37/1, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியலட்சுமி முத்துலிங்கம்



வேலணை கிழக்கு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 63, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி முத்துலிங்கம் 19.12.2013 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்- மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயமலர் (கொழும்பு), ஜெயரூபன் (லண்டன்), ஜெயகரன் (லண்டன்), ஜெயதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரன், சோபனா, சஜித்தா, சுதாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சகானா, கஜானா, ரேணுசா, கிருத்திகா, தேனுஜா, சோபியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற மீனாம்பிகை மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் அருளானந்த சிவலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், தங்கலிங்கம், காலஞ்சென்ற கைலாயபிள்ளை, சிவம், செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனுசம்மா, கமலாதேவி, தேவகி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் வேலணை சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(42912)(3.6.4)
தகவல்: **குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
16 ★ 01 ★ 1936



உதிர்வு
24 ★ 11 ★ 2013

அமரர் **நாகநாதன் நாகரத்தினம்**

[ஓய்வுபெற்ற மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளரும் தினக்குரல் விருந்தினர் இல்ல முன்னாள் முகாமையாளரும்]

*திதி:அபரபக்க சப்தமி*

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.12.2013)திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுகிருத்திய கிரியைகள் (24.12.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று(25.12.2013) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் **சொர்ணாம்பிகை மண்டபம் ரிசிரி** (TCT) Multi Trade Centre **(நாவலர் றோட், நல்லூர்)** இல் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] நாவலர் லேன்,
[illegible] வீதி, ஆனைப்பந்தி,
நல்லூர். T.P:021 222 3276 [42857][3.6.4]

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளும் பிறவிக் குறைபாட்டு இருதய நோய்களும் என்ற தலைப்பில் 08.12.2013 ஆம் திகதிய மருத்துவ மலரில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகிறது.

# குழந்தைகளும் இருதய நோய்களும்

தமிழ் சுகாதார இணையத் தளமான www.jaffnadiabeticcentre.org என்ற முகவரிக்கு சென்று உங்கள் உடலை அழகாகவும், ஆரோக்கியமாகவும் பேணும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

குழந்தைகளில் ஏற்படும் இருதய நோய்களைப் பிரதானமாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. Acyanotic Heart Disease (நீலநிறமற்ற இருதயநோய்)
2. Cyanotic Heart Disease (நீல நிறமாதலுடன் கூடிய இதயநோய்)


**Acyanotic Heart Diseases (நீலநிறமற்ற இருதய நோய்)**

பெரும்பாலான இந்த நோய்களை சத்திரசிகிச்சையின் மூலமோ அல்லது Cardiac Catheterization மூலமோ முற்றாகக் குணமாக்கலாம். சில நோய்கள் தானாகவே குணமடையும் தன்மை கொண்டவை.

பின்வரும் பிரதான இதய நோய்கள் இந்தப் பிரிவில் அடங்கும்

1. Patent Foramen Ovale (PFO)
2. Atrial Septal Defect (ASD) இதய சோணை அறைப்பிரிவு சுவர் துவாரம்.
3. Ventricular Septal Defect (VSD) இதயவறைப் பிரிசுவர் துவாரம்
4. Patent Ductus Arterisous (PDA)

1. Patent Foramen Ovale





இது இதயத்தின் சோணை அறைப் பிரிசுவரில் காணப்படும் சிறிய துவாரம் அல்லது வால்பு ஆகும். தாயின் வயிற்றில் சிசு வளரும்போது அதன் குருதிச் சுற்றோட்டத்துக்கு இந்தத் துவாரம் அல்லது வால்பு இன்றியமையாததாகும். குழந்தை பிறந்த சில நேரத்தில் அதன் குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும் மாற்றங்களினால் இது தானாகவே அடைபட்டுவிடும்.

ஆயினும் 25 முதல் 30 சதவீதமானவர்களில் இந்தத் துவாரம் நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கலாம். இருப்பினும் மேலதிக சிகிச்சை பெரும்பாலானவர்களுக்குத் தேவைப்படாது.

இதனால் குழந்தைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

2. Atrial Septal Defect (ASD) (இதய சோணை அறைப்பிரிசுவர் துவாரம்)



-இது இதயத்தில் ஏற்படும் பிறவிக் குறைபாடுகளில் அதிகமாக ஏற்படும் நோயாகும்.

-இந்தத் துவாரத்தினால் மேலதிக இரத்தம் இடது சோணை அறையில் இருந்து ($O_2$ ஏற்றப்பட்ட குருதி) வலது சோணை அறைக்குச் செல்கின்றது. இதனால் அதிகளவு இரத்தம் நுரையீரலுக்குச் செல்கின்றது.

-இந்தத் துவாரம் ஒரு சில மில்லி மீற்றர் (mm) அளவிலிருந்து சில சென்ரிமீற்றர் (cm) அளவு வரைக்கும் பெரிதாக இருக்கலாம்.

-பெரிய துவாரங்கள் சரியான நேரத்தில் குணமாக்கப்படாவிடின் இருபது அல்லது முப்பது வருடங்களின் பின் அதிகரித்த சுவாசப்பை இரத்த அழுத்தத்தினால்(Pulmonary Hypertension) சிகிச்சை அளிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படும்.

**இதன் அறிகுறிகள் என்ன?**

- மீண்டும் மீண்டும் சுவாசத் தொற்று நோய் ஏற்படுதல்.
- உடல் நிறை அதிகரிக்காமை (Failure to thrive)
- இதய ஒலியில் வித்தியாசம் இருத்தல்.(Murmur)

**ASD எவ்வாறு குணமாக்கப்படுகின்றது?**

- சிறிய துவாரங்கள் தானாகவே மறையும் தன்மை கொண்டவை. இந்தத் துவாரங்கள் பெரிதாக இருப்பின் குழந்தை 4-5 வயது அடையும் பொழுது Cardia Catheterization (ASD Devicing) மூலமாகவோ அல்லது சத்திரசிகிச்சை மூலமாகவோ (Open Heart Surgery) குணப்படுத்தல் வேண்டும்.

- இருப்பினும் சில வேளைகளில் இந்தத் துவாரம் முதன் முதலாக முப்பது தொடக்கம் ஐம்பது வயதுகளிலேயே கண்டறியப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பங்களில் சில மேலதிக பரிசோதனைகளின் பின்னர் சத்திரசிகிச்சை அல்லது Cardia Catheterization மூலம் குணமாக்கலாம்.

- இந்தத் துவாரம் குணமாக்கப்பட்ட பின்பும் இருதயவியல் நிபுணர்களின் அவதானத்தில் தொடர்ந்து இருப்பது அவசியம்.

**சத்திரசிகிச்சைக்கும் Cardia Catheterization க்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**

சத்திரசிகிச்சை

- சத்திரசிகிச்சையின் போது இந்தத் துவாரம் இதயத்தின் ஒரு பகுதியைப் பயன்படுத்தி (Pericardium) அல்லது ஒரு வகையான செயற்கை இழையத்தினால் மூடப்படும்.

- சத்திர சிகிச்சையின் பின்னர் சில நாள்கள் தொடக்கம் கிழமைகள் வரை வைத்தியசாலையில் இருக்க வேண்டும்.

**Cardia Catheterization (ASD Devicing)**

- இது ஓர் எளிமையானதும், இலகுவானதும் ஓரிரு மணித்தியாலங்களில் செய்யக்கூடிய முறையாகும். இந்த முறை மூலம் குணமாக்குவதற்கு துவாரத்தின் அமைப்பு இந்த முறைக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

- இந்த முறை மூலம் துவாரம் மூடப்படின் அடுத்த 24-48 மணித்தியாலங்களுக்குள் வீட்டுக்குச் செல்ல முடியும்.

3. இதயவறைப் பிரிசுவர் துவாரம் (Ventricular Septal Defect VSD)



- இது இதய வறைகளைப் பிரிக்கின்ற சுவரில் காணப்படும் துவாரம் ஆகும்.

-இந்தத் துவாரம் சிறிதாகவோ, பெரிதாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதாகவோ காணப்படலாம்.

- அநேகமான சிறிய துவாரங்கள் குழந்தை வளரும்போது தானாகவே மறையும் தன்மை கொண்டன. இதனால் இதற்கு மேலதிக சிகிச்சை தேவைப்படாது. இருப்பினும் இருதயவியல் நிபுணர்களின் அவதானத்தில் இருப்பது அவசியம். ஏனெனில் சில வேளைகளில் இதனால் வேறு சில பிரச்சினைகள் உரு வாகக் கூடும்.

**Large Ventricular Septal Defect (பெரிய இதயவறைப் பிரிசுவர் துவாரம்)**

- இந்தத் துவாரத்தினால் இடது இதயவறையிலிருந்து குருதியின் ஒரு பகுதி உடல் உறுப்புகளுக்குச் சென்றடையாமல் வலது இதயவறையின் ஊடாக நுரையீரல்களைச் சென்றடைகிறது.

- இதன் காரணமாக சுவாசப் பெருநாடியிலும், நுரையீரல்களிலும் இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. (Pulmonary Hypertension)

- இந்த அதிகரித்த இரத்த அழுத்தம் நீண்டநாள் நிலைத்திருப்பின் நுரையீரல்களுக்கு நிரந்தர தாக்கத்தை உண்டு பண்ணுவதுடன் சத்திர சிகிச்சை செய்ய முடியாத நிலைக்கும் இட்டுச் செல்லும்.(Inoperable)

**இந்தத் துவாரத்தின் அறிகுறிகள் என்ன?**

- அநேகமான சந்தர்ப்பங்களில் பிறந்த ஆரம்ப காலத்தில் எந்தவிதமான அறிகுறிகளும் இல்லாமலிருக்கலாம். ஆயினும் துவாரம் பெரிதாகவிருக்குமிடத்து ஓரிரு மாதங்களில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படலாம்.

1. மூச்சுத் திணறல்.
2. உடல் நிறை அதிகரிக்காமை.
3. மீண்டும் மீண்டும் சுவாசத் தொற்றுக்குள்ளாதல்.

**எவ்வாறு VSD துவாரங்கள் குணப்படுத்தப்படுகின்றன?**


- குழந்தைக்கு மூச்சுத் திணறல் இருப்பின் மருந்துகள் மூலம் இதனைக் குறைக்கலாம். எனினும் VSD துவாரத்தை மூட முடியாது.

- VSD துவாரம் பெரிதாக இருப்பின் சத்திரசிகிச்சை மூலம் மூடுதல் வேண்டும். இதன்போது ஒரு வகை செயற்கை இழையத்தினால் இந்தத் துவாரம் மூடப்படும்.

- சத்திர சிகிச்சையின் பின்பும் வாழ்நாள் முழுவதும் இருதயவியல் நிபுணர்களின் அவதானிப்பில் இருத்தல் அவசியம்.

**4.Patent Ductus Arterisous (PDA)**

- இது தாயின் வயிற்றில் சிசு வளரும் போது அதன் குருதிச் சுற்றோட்டத்துக்கு அத்தியாவசியமான ஒரு இரத்தக் குழாய்த் தொடர்பாகும்.




- இது தொகுதிப் பெரு நாடியையும்(Aorta).
சுவாசப்பெருநாடியையும் (Pulmonary artery) இணைக்கின்ற குழாயாகும்.

-குழந்தை பிறந்த சில நாள்கள் தொடக்கம் சில கிழமைகளுக்குள் இது தானாகவே மூடும் தன்மை கொண்டது.

- சில குழந்தைகளில் இது தொடர்ச்சியாக நிலைத்திருக்கலாம். பிரதானமாக குறைமாதக் குழந்தைகளில் இது கூடிய காலம் நிலைத்திருக்கும்.

**இதன் அறிகுறிகள் என்ன?**

1. மூச்சுத்திணறல்.
2. உடல் நிறை அதிகரிக்காமை
3. பால் அருந்தாமை

**எவ்வாறு PDA குணமாக்கப்படுகின்றது?**

- குறை மாதக் குழந்தைகளுக்கு மருந்துகள் மூலம் இதனைக் குணமாக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இது பயனளியாதவிடத்து சத்திரசிகிச்சை மூலமாகவே குணமாக்க வேண்டியிருக்கும்.

- வளர்ந்த குழந்தைகளில் இது Cardia Catheterization மூலம் இலகுவாக குணமாக்கக் கூடியதாக இருக்கும்.

**நீலநிறமாதலுடன் கூடிய இருதய நோய் Cyanotic Heart Disease**

இந்த நோய்கள் மிகவும் ஆபத்தானவை. சரியான சிகிச்சை சரியான வேளையில் வழங்கப்படாவிடின் குழந்தை இறக்க நேரிடலாம்.

*Dr.I.R. ரகுநாதன்*
*குழந்தை இருதயவியல் நிபுணர்*
*போதனா வைத்தியசாலை*
*யாழ்ப்பாணம்.*

# சுகாதாரமான புதிய உணவு வகைகளை

## சிறார்களுக்கு அறிமுகப்படுத்தும் போட்டி

யாழ். மருத்துவபீட மாணவர்களும், யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையமும் இணைந்து சுகதேகியாக வாழ்வதற்கு சிறுபராயத்திலிருந்து சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட நேர்த்தியான உணவு வகைகளை சிறார்களுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்த ஆராய்ச்சியில் பங்குபற்றி சுவையான, பாதுகாப்பான உணவு வகைகளை யாழ்ப்பாண சிறார்களுக்கு அறிமுகப்படுத்த சமையற் கலை நிபுணர்களையும், புதிய உணவுகளைச் சமைப்பதில் ஆர்வமுடையவர்களையும் அழைக்கின்றோம்.

சமையல் ஆர்வலர்களே!

நீங்கள் கண்டறியும் உணவை எங்கள் முன் சமர்ப்பிக்க மாபெரும் சமையல் போட்டி ஒன்றை நடத்தவுள்ளோம். போட்டி நடைபெறும் அன்று நீங்கள் தயாரித்த உணவை எங்கள் முன் காட்சிப்படுத்த வேண்டும்.

நீங்கள் தயாரித்த உணவானது ஆராய்ச்சி முறைகளுக்கு அமைவாகவும், சுவை யானதாகவும் இருத்தல் வேண்டும். எங்கள் தெரிவுக் குழு வெற்றி யாளர்களைத் தெரிவு செய்யும். முதல் மூன்று போட்டியாளர் களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும். போட்டி யில் பங்குபற்றும் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

முதல் இருபது இடங்களைப் பெறுவோரின் உணவு தயாரிக்கும் முறை புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்படும்.

**விதிமுறைகள்**

சிறார்களுக்கான காலை உணவு மற்றும் சிற்றுண்டிப் பதார்த்தங்கள் உங்களால் தயாரிக்கப்பட வேண்டும். சைவ, அசைவ உணவுகளைத் தயாரிக் கலாம்.

**சேர்க்கப்படக்கூடிய உணவுப் பதார்த்தங்கள்.**

1. பருப்பு வகை
2. பயறு
3. கௌபி
4. கொண்டைக் கடலை
5. உழுந்து வகை
6. சோளம்
7. மரக்கறி வகை- வெண்டிக்காய், கத்தரி, போஞ்சி, தக்காளி, வாழைக்காய், பயற்றங்காய், பூசணி, புடோல், கரட், பீற்றூட்
8. இலை வகை- வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தி, தவசி முருங்கை
9. பழவகை- அப்பிள், கொய்யா, வாழைப்பழம், தோடம்பழம், விளாம்பழம், ஜம்பு
10. சோயா அவரை
11. கோழி இறைச்சி
12. நல்லெண்ணெய்
13. மீன், இறால், சுறா, கருவாடு
14. நிறமூட்டிகள்
15. சுவையூட்டிகள்
16. உள்ளி, வெங்காயம், மிளகாய்
17. வெந்தயம், கடுகு, மிளகு, சீரகம்

**முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியவை**

1. சீனி, சர்க்கரை, பழப்பாகு, ரின் பால்
2. கிழங்கு வகைகள்
3. எண்ணெய் வகை (நல்லெண்ணெய் தவிர)
4. இறைச்சி வகை (கோழி இறைச்சி தவிர)
5. நண்டு, கணவாய்
6. அரிசிமா, ஆட்டாமா, கோதுமைமா
7. பட்டர்/மாஜரின், நெய்
8. பாண்
9. கச்சான்
10. பலாப்பழம், மாம்பழம், திராட்சை.

மேற்கூறப்பட்ட விதிமுறைகளுக்கமைய நீங்கள் புதிய உணவு வகைகளைக் கண்டு பிடித்தால் எம்மால் நடத்தப்படும் போட்டியில் பங்குபற்றுங்கள். பெயர், முகவரி, வயது, தொழில், தொலைபேசி எண் என்பவற்றுடன் நீங்கள் தயாரிக்கவிருக்கும் உணவு வகை பற்றிய விவரங்களுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி.**
**சமையல் போட்டி 2014,**
**நீரிழிவு சிகிச்சை நிலையம்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**விண்ணப்ப முடிவுத் திகதி:**
**06. 01. 2014**

நேரில் வருகைதந்து விண்ணப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையும், சனிக்கிழமை மதியம் 12 மணி வரையும் வந்து விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பான உங்கள் சந்தேகங்களுக்கு 021 222 0179, 075 279 2272 என்ற எமது தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

**இடபம்:** பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்று வாங்கவேண்டிவரும். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுதான் காரணம் என்பதை உணர்வீர்கள். வியாபாரத்தில் கணிசமாக இலாபம் வரும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் இலாபம் வரும்.

**கடகம்** : கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**சிங்கம்:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**நாளை**

மார்கழி-08 திங்கட்கிழமை 23.12.2013
திதி: ஷஷ்டி பி.இ.02.03 வரை
நட்சத்திரம்: மகம் பி.ப.01.18 வரை
சுபநேரம்: 12.25 - 01.55 வரை
இராகுகாலம்: 07.55 -09.25 வரை

**துலாம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.

**விருச்சிகம்:** கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு:** முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் பற்றுவரவு சுமார்தான்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம்.

**கும்பம்:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும்.

**மீனம்:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரத்தில் புது இடத்துக்கு கடையை மாற்றுவீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 7 | 8 | | |
| 3 | | 2 | 5 | | 1 | 6 | 7 | 9 |
| | | | | 6 | 9 | | | |
| | | | 4 | 8 | | 9 | | |
| 2 | | 5 | 7 | | 6 | 3 | | 8 |
| | | 1 | | 3 | 2 | | | |
| | | | 2 | 9 | | | | |
| 9 | 3 | 4 | 1 | | 8 | 2 | | 6 |
| | | 8 | 6 | | | | | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 4 | 1 | 3 | 7 | 8 | 6 | 5 |
| 7 | 3 | 5 | 6 | 4 | 8 | 2 | 9 | 1 |
| 6 | 1 | 8 | 2 | 5 | 9 | 3 | 7 | 4 |
| 9 | 7 | 6 | 5 | 2 | 1 | 4 | 8 | 3 |
| 5 | 4 | 3 | 7 | 8 | 6 | 1 | 2 | 9 |
| 8 | 2 | 1 | 4 | 9 | 3 | 7 | 5 | 6 |
| 1 | 8 | 7 | 3 | 6 | 5 | 9 | 4 | 2 |
| 4 | 5 | 9 | 8 | 1 | 2 | 6 | 3 | 7 |
| 3 | 6 | 2 | 9 | 7 | 4 | 5 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


தேவை நாடும் மகளிர்
நீங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்ணா?
அல்லது சிறுமியா?
அப்படியாயின்
உளவளத்துணை (மனநல ஆலோசனை)
சட்ட உதவி
எம்மால் இலவசமாக வழங்கப்படுகின்றன.
மௌனத்தைக் கலையுங்கள்!
வாழ்வில் வெற்றி கொள்ளுங்கள்!!
விபரங்களுக்கு:
தேவை நாடும் மகளிர் 'வின்'
அவசர தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமாக விஸ்தரிக்கப்பட்டு
2014 ஜனவரி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது
011 4718585
இல 35A, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
அலுவலக இல. 021 222 9671
இணையத்தளம்: www.winsl.net
Facebook - Women In Need (WIN)
(42638)

2014 இற்கான புதிய அனுமதிகள்
BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை
11 வது வருடத்தில்
வயது 2+ முதல் வயது 3+ வரை — Play Group
வயது 3+ முதல் வயது 4+ வரை — Montessori
வயது 4+ முதல் வயது 5+ வரை — Pre School
10 வருடங்களில் 7500 இற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90% மாணவர்கள் புலமைப்பரிசிலில் சித்தியடைந்துள்ளார்கள்.
கற்பித்தல் முறை:
★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
★ சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graducation Ceremony.
பாலர் பாடசாலை வளாகங்கள்
தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்: மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (ஓட்டுமடம் சந்தி அருகாமை)
நீர்வேலி: 1வது மைல் கல் இராச வீதி
கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி
சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை
மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி.
அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை
மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி)
சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி)
சுன்னாகம்: Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம்
வடமராட்சி: பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி.
(C/14357)
British Business College
BRITISH BUSINESS COLLEGE
64, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:077 362 7055, 021 222 4060, 021 222 5796, 077 6646357
British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.
Registered as an Education & Training Company with the Registrar of Companies- Sri Lanka. Reg. No: P 9718

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.எப்.எல் மீள்சுழற்சி கட்டமைப்புக்கு இரண்டு ஐ.எஸ்.ஓ தரச் சான்றுகள்

ஹோமாகம பிட்டிபன பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரெல் கோப்பரேஷன் நிறுவனத்துக்கு சொந்தமான சி.எப்.எல் மீள்சுழற்சி கட்டமைப்புக்கு சர்வதேச ஐ.எஸ்.ஓ (ISO) தரச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசியாவின் முதலாவது சி.எப்.எல் (CFL) மின்குமிழ் மீள் சுழற்சி கட்ட மைப்பு இதுவாகும். சி.எப்.எல் மின் குமிழ்களில் அடங்கியுள்ள பாதரசம் பாதுகாப்பான முறையில் அப்புறப் படுத்தப் படாவிடின் அதன்மூலம் சூழலுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனடிப்படையில் ஒரெல் கோப்பரேஷன் நிறுவனத்துக்கு சொந்தமான ஏஷியா ரீசைக்கிளிங் ஊடாகவே இம்மீள் சுழற்சி கட்டமைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், வருடத்துக்கு 30 மில்லியன் மின்குமிழ்களை மீள் சுழற்சி செய்யக் கூடிய வசதிகளையும் இது கொண்டுள்ளது. சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் எமது




நிறுவனம் சுவீடனைச் சேர்ந்த நோர்டிக் ரீசைக்கிளிங் ஏ.பி நிறுவனத்துடன் இணைந்து கொண்டது. இத்திட்டத்திற்காக ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. வருடந்தோறும் எமது நிறுவனத்தால் 30 மில்லியன் மின்குமிழ்களை மீள்சுழற்சி செய்ய முடியும். இலங்கையில் தற்போது பாவனையிலுள்ள சி.எப்.எல் மின் குமிழ்களை விட இது மும்மடங்காகும். பாவனை செய்யப்படும் மின்குமிழ்களில் 10 வீதமானவையே மீள்சுழற்சிக்கு வருகின்றன. எனவே வலயத்தில் ஏற்பட்டுள்ள பாதரச பிரச்சினையிலிருந்து மீள் எழுவதற்கு நாம் உதவத் தயார் என ஒரெல் கோப்பரேஷன் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குஷான் கொடிதுவக்கு தெரிவித்தார். சர்வதேச தரச் சான்று நிறுவனத்தை சேர்ந்த டீ.என்.ஏ நிறுவனமே சி.எப்.எல் மீள்சுழற்சி கட்டமைப்புக்கான ஐ.எஸ்.ஓ (ISO) 9001 மற்றும் ஐ.எஸ்.ஓ (ISO) 14001 ஆகிய சான்றுகளை வழங்கியுள்ளது. (த)




## விருது வழங்கும் விழாவில் பிரகாசித்த கொமர்ஷல் வங்கி

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த அறிக்கையிடல் விருது வழங்கும் விழாவில் கொமர்ஷல் வங்கி ஆதிக்கம் செலுத்தியிருந்தது. சகல பிரிவுகளுக்குமான ஒட்டு மொத்த சிறந்த அறிக்கைக்கான அதிஉயர் விருதை வென்றுள்ளதோடு, மூன்று வகைப்படுத்தல் பிரிவுகளிலும் விருதுகளை வென்றுள்ளது. இவற்றின் மூலம் நிதி அறிக்கையிடல் மற்றும் கூட்டாண்மை விவர வெளியீடு ஆகிய துறைகளில் வங்கி தனது மேலாதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியின் 2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த விருது நிதித் துறை அறிக்கையிடலுக்கான ஒட்டு மொத்தப் பிரிவில் சிறில் கார்டினர் ஞாபகார்த்த விருதை வென்றுள்ளது. வங்கித் துறை நிறுவனாங்களுக்கு இடையிலான சிறந்த வருடாந்த அறிக்கையிடல் பிரிவில் எட்மன்ட்.ஜே.குரே ஞாபகார்த்த விருதையும் வங்கி வென்றுள்ளது.


முகாமைத்துவக் குறிப்பிடல் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், கூட்டாண்மை ஆளுகை வெளி யீடுகள் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் இந்தக் கீர்த்திமிக்க விழாவில் வங்கி வென்றுள்ளது.

2001ஆம் ஆண்டுமுதல் கொமர்ஷல் வங்கியின் வருடாந்த அறிக்கை இலங்கையின் மிகச் சிறந்த வருடாந்த அறிக்கையாக ஏழு தடவைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் வங்கித் துறைக்கான வருடாந்த அறிக்கையிடலில் ஒன்பது தடவைகள் சிறந்த அறிக் கைக்கான விருதினை வென்றுள்ளது. பொதுத் துறைவர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் வருடாந்த அறிக்கை யானது மிகவும் முக்கியமான ஒருதனிப் பெரும் ஆவண மாகும்.

நாங்கள் இயல்பாகவே மீண்டும் ஒரு தடவை இலங்கையில் அதில் சிறந்தவர்களாக மிகவும் அதிகாரபூர்வமான ஒரு அமைப்பினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளோம் என்று கூறினார்.

வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி டயஸ். www.combank.lk என்ற இணையத் தளம் ஊடாகவும் கையடக்க தொலை பேசிகள் வழியாகவும் இதனைப் பார்வை யிடலாம். (த)




சர்வதேச நாடுகள் பலவற்றில் பாவனையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற K7முழுமையான வைரஸ் தடுப்பு (Antivirus) மென்பொருள் இலங்கையில் அண்மையில் அறிமுகமாகியுள்ளது. சந்தையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள ஏனைய வைரஸ் தடுப்பு மென்பொருள்களை விடவும் மேலும் பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்ட தரமிக்க இவ்வுற்பத்தியை வாடிக்கையாளர்கள் நியாய விலையில் கொள்வனவு செய்ய முடியும் என்று இலங்கைக்கான அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களான பார்டெக் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனம் தெரிவித்துள்ளது. நாம் பயன்படுத்துகின்ற தனி நபர் மேசைக் கணினிகள் மற்றும் மடிகணினிகள் அனைத்துமே கணினி வைரஸ்களின் தாக்குலுக்கு உள்ளாகின்றன. இணைய இணைப்பின் ஊடாகவும், வெளியில் இருந்து உட்செருகப்படும் USB கருவிகளின் மூலமும் கணினிகளுக்கு இடையிலான வலை யமைப்பின் வழியாகவும் இவ்வகை வைரஸ்கள் கணினிகளுக்கு தொற்றுவதற்கு வாய்ப்புள்ளது.

கணினி ஒன்றில் வைரஸ் தாக்கம் ஏற்பட்டால் அதனால் கணினி பாவனையாளருக்கு ஏற்படும் இழப்பு அளவிடமுடியாதது. குறிப்பாக - கணினியில் சேமித்து வைத்த கோப்புகள் காணாமல் போதல், கோப்புகள் மற்றும் போல்டர்களை திறக்க முடியாதிருத்தல், கணினி மென்பொருள்களின் குறிப்பிட்டதொரு பாகம் இயங்க மறுத்தல் என்பதில் தொடங்கி கணினி முற்றாக செயலிழந்து போதல் வரைக்கும் வைரஸ் தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

K7 ஆனது இணையவழி வைரஸ் பாதுகாப்பு கட்டமைப்பாகவும் அதேநேரம் கணினி வைரஸ் தடுப்பு மென்பொருளாகவும் இரட்டைச் செயற்பாடாற்றுவது இதிலுள்ள சிறப்பம்சங்களில் முதன்மையானதாகும். இதுதவிர - அன்ரி-மல்வயர், அன்ரி-ரூட்கிற், அன்ரி-ஸ்பேம், ஹோஸ்ட், Host intrusion தடுப்பு, இரட்டைவழி பயர்வோல், பரந்தளர வான கருவிக் கட்டுப்பாடு, பிள்ளைகளின் இணையப் பயன்பாட்டை மட்டுப்படுத்துதல், தனிப்பட்ட விவரங்கள் திருடப்படுவதிலிருந்து பாதுகாப்பு போன்ற வசதிகளையும் இது கொண்டுள்ளது. அதேபோன்று, ஒரு கருவி உட்செருகப்பட்டதும் அதனை உடனடியாக ஸ்கான் செய்வதுடன் அதற்குப் பின்னரும் அக்கருவியில் வைரஸ் [illegible] தன்மையையும் ஏற்படுத்தி விடுகின்றது. அதுமாத்திரமன்றி, [illegible] மாத்திரம் பயன்படுத்தக் கூடிய பதிப்பாக அன்றி, எக்காலத்திலும் கணினியில் பொருத்தி (ஒரு வருடத்திற்கு) பாவிக்கக் கூடிய Free தயாரிப்பாக இது காணப்படுகின்றது. (த)

## செலான் கிறிஸ்மஸ் திட்டம் கடனட்டைகளுக்கு வெகுமதி

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட பண்டிகைக் காலம் நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கின்ற நிலையில் செலான் வங்கி, தனது செலான் கிறிஸ்மஸ் திட்டத்தின் (Seylan Christmas Planner) ஓர் அங்கமாக நாடெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான கடனட்டை வாடிக்கையாளர்களுக்கு இதற்கு முன்னர் ஒருபோதும் அனுபவித்திராத ஒரு தொடரிலான சலுகைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அதிகளவான வெகுமதிகளை அளிப்பதற்கு தயாராகியுள்ளது.

ஆடைக் கொள்வனவு, சுப்பர் மார்க்கெட் பொருள் கொள்வனவு, எரிபொருள் நிரப்புதல் மற்றும் தங்கநகை கொள்வனவு போன்ற பலவற்றின் ஊடாக வெகுமதிகள் வழங்கப்படவுள்ளதால் டிசெம்பர் மாதத்தின் ஒவ்வொரு நாளும் மிகவும் மனமகிழ்ச்சி தரக்கூடியதாக தற்போது மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

அதன்மூலம் பணத்திற்கான மிகச் சிறந்த பெறுமதியோடு இணைந்ததாக விடுமுறைக் காலமனநிலையானது மேம்படுத்தப்படுகின்றது. அனைத்து மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கும் வெள்ளிக்கிழமை பிற்பகலானது ஒரு வரமாக அமையும். ஏனென்றால் அத்தினத்தில் அனைத்து லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பிற்பகல் 4 மணிமுதல் இரவு 8 மணி வரையும் நிரப்பப்படுகின்ற ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் ரூபா 10 மீளளிக்கப்படும். அதேநேரம், வார இறுதியின் இரு நாள்களிலும் பிற்பகல் 4 மணி முதல் இரவு 8 மணி வரைக்கும் சுப்பர் மார்க்கெட்டில் மேற்கொள்ளப்படும் பொருள் கொள்வனவின்போதும் மொத்த பட்டியல் தொகையில் 10 வீத தொகை மீள வழங்கப்படுவதால், அந்த அனுபவமானது களிப்பு நிறைந்ததாகவும் இலாபகரமானதாகவும் மாற்றமடைகின்றது. சுப்பர் மார்க்கெட்களில் வழங்கப்படும் வெகுமதிகளில் சுவாரஸ்யமான விடயம் என்னவெனில், ஒருவர் நாடெங்குமுள்ள தமக்கு விருப்பமான எந்தவொரு சுப்பர் மார்க்கெட் விற்பனையகத்திலும் பொருள் கொள்வனவை மேற்கொள்ளலாம் என்பதும் குறிப்பிட்ட ஒரு சுப்பர்மார்க்கெட் சங்கிலித்தொடருக்கு மாத்திரம் இவ் வெகுமதி மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுமாகும். கிறிஸ்மஸ் மற்றும் புது வருடத்திற்கு தயாராகிக் கொள்ளும் விதத்தில், செலான் வங்கியின் கடனட்டை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 20வீதம் தொடக்கம் அபாரமான 40 வீதம் வரையில் பல்வேறு விலைக் கழிவுகளை வழங்குவதற்காக முன்னணி விற்பனையகங்கள் மற்றும் முதன்னிலை வர்த்தக குறியீடுகள் அனைத்துமே ஒன்றாக கைகோர்த்துள்ளன. (த)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீண்டும் ஒருமுறை ஏமாறுவதற்கு தமிழ் மக்கள் தயாரா...?

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு, பிறநாடுகளில் தீர்வுகளைத் தேடுவதை விட, தேசிய நல்லிணக்கத்துக்கும் அபிவிருத்திக்கும் எமது நாட்டுக்கு உள்ளேயே உகந்த தீர்வைக் காண்பதற்கு அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறைகூவல் விடுத்துள்ளார், நாட்டின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் அரசாளும் மன்றமான, மக்கள் சபையான நாடாளுமன்றில் வைத்து, தமது ஆகப்பிந்திய அறைகூவலை அவர் விடுத்திருக்கிறார்.

வடக்கில் மாகாணசபை உருவாக்கப்பட்டு, அங்கு ஜனநாயகம் தோற்றுவிக்கப்பட்ட சூழ்நிலையிலேயே புதிய ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது-

வடக்கில் அரச சேவைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. விசேட சலுகைகள் அடிப்படையில் அரச சேவைகளுக்கு ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்தகைய ஒரு சூழமைவில், எங்கள் நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு, பிறதேசங்களில் தீர்வைத் தேடுவது பொருத்தமானது அல்ல-

ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியான வகையில், எமக்குள்ள பிரச்சினைகள் குறித்து நாமே பேசித் தீர்வு ஒன்றைக் காண வேண்டும்- என்று நாட்டின் அதிஉயர் அரசியல் தலைவர் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கும் உள்நாட்டிற்குள் தீர்வைக் காண்பதற்கு இந்த மன்றத்தில் உள்ள சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்-

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும்-

எம்மோடு கைகோர்த்துச் செயற்படுமாறு அழைப்பு விடுக்கிறேன்- என்று கனதியான முறையில் கருத்து வெளியிட்டுள்ளார் நாட்டின் அதி உயர் அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி அவர்கள்.

நாட்டின் அதிஉயர் அரச தலைவரின் மேற்கண்ட அழைப்பு, தமிழ் மக்களுக்கு உரிய, அவர்களிடம் இருந்து பிரித்து எடுக்க இயலாத, அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை வழங்குவதற்கான இதய சுத்தியுடனான அழைப்பா என்பது மிக ஆழமாக ஊடுருவி ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

காரணம், இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் தொட்டு, சிங்கள மக்களின் அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும், தமிழ் மக்களைக் கிள்ளுக் கீரைகளாகக் கருதியே செயற்பட்டு வந்திருக்கிறார்கள்; அரசியல் நடத்தி இருக்கிறார்கள் என்பது மறைக்க முடியாத, அழித்து எழுத முடியாத சரித்திரமாக உள்ளது.

டி.எஸ்.சேனநாயக்கா காலம் தொட்டு சகல கொழும்பு அரசுகளும், சிறுபான்மையினரிடமிருந்து பிரிக்க முடியாத, ஜனநாயக உரிமைகளை, அவர்களுக்குச் சேர வேண்டிய சம ஆட்சி உரிமைகளை புறந்தள்ளியே செயற்பட்டு வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அந்தப் பாதையில் நடந்து செல்கிறார் என்பதுடன், அது அவரது இப்போதைய இரண்டாவது ஆட்சிக் காலத்திலும் தொடர்கிறது.

ஜனாதிபதி மஹிந்த விடுத்துள்ள இப்போதைய அழைப்பும் அந்த வகை சார்ந்ததே என்று கொள்வது தப்பன்று.

இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துடன் பேசுவதற்கு தமது தரப்புத் தயார் என்றும்-

விடயங்களை ஒத்துமொத்தமாக ஆராயாமல், குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்துக் குழுக்களாகப் பேசி இணக்கம் காண்பதற்கு-

ஜனாதிபதியும், அரசாங்கமும் உடன்பட்டு இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் தலைவர் சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னரே.தெரிவித்திருந்தார்.

மீண்டும் அரச தரப்பில் பழைய பல்லவி பாடப்பட்டிருக்கிறது.

இந்த இடைவெளியில் இந்து ஆலயங்களும், இஸ்லாமிய மக்களின் வழிபாட்டு இடங்களான மசூதிகளும், கிறிஸ்தவ தேவாலங்களும் சேதமுறச் செய்யப்பட்டன.

அந்த வகையில், அனர்த்தங்கள் இன்னமும் முற்றாக ஓயவில்லை. அவற்றைத் தடுத்து நிறுத்தும் வல்லமை அரசிடம் இல்லை என்றே உணர, முடிவுசெய்ய வைக்கிறது. தமிழ் மக்களின் தானைத்தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன், எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கா செய்துகொண்ட ஒப்பந்தம், கால்வேக்காட்டோடு தூக்கி வீசப்பட்டது. இந்த அனுபவமும் அவலங்களும் முற்றாக ஒழிக்கப்படும் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் நம்பக் கூடும். ஆனால் தமிழ் மக்கள் அதனை நம்பமாட்டார்கள்.

காலத்துக்குக் காலம் தென்னிலங்கைத் தலைவர்களால் ஒப்பனை செய்து அரங்கேற்றப்படும் அரசியல் திருகுதாளங்கள், அவர்கள் மீது வெறுப்பையும் விரக்தியையுமே வளர்த்தன; இப்போதும் அதுவே மீண்டும் தலையெடுத்துள்ளது எனலாம்.

ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் பேரவை யில் இன்னும் மூன்று மாதங்களில், இலங்கை அரசு குறித்து சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் காரத்தைக் குறைப்பதற்கான முன் முயற்சிகளில் இதுவுமொன்று எனக் கருதுவது தப்பன்று.

### ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் விவாதம்

# மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகமான விசாரணை அவசியம்

ரம்யன்

(நேற்றைய தொடர்ச்சி)

500 வருடகாலம் இலங்கையில் ஐரோப்பிய நாகரிகம் செழிப்புற்றது. முதலில் போர்த் துக்கல் பிறகு ஒல்லாந்து அதன் பின் பிரிட்டிஷாரால். 28 ஐரோப்பிய உறுப்பு நாடுகளில் 19 நாடுகளைவிட 1928 ஆம் ஆண்டளவிலேயே சர்வஜன வாக்குரிமை பெற்ற ஜனநாயக நாடாக அது விளங்கியுள்ளது. இந்த நிலையில் தான் இந்த நாடுகள் அந்த நாட்டுக்கு ஜனநாயகம் பற்றி உப தேசம் புரியத் தொடங்கியுள்ளன.

இது சிரிப்புக்கிடமானது. இதில் சிரிப்பை வரவழைப்பது என்னவென் றால் அந்த நாட்டை இப்பொழுது இந்தச் சபை செய்தது போல், ஒரு காலத்தில் தாழ்வுபடுத்தி வைத்திருந்த நாடுகளே இன்று அதைச் செய், இதைச் செய் என்றும், அவ்வாறு செய்யாவிட்டால் பாரதூரமான தடைகள் வரும் என்றும் காலக் கெடுவிதிப்பதில் ஈடுபட்டுள்ளன என்பதுதான். இன்னமும் ஏகாதிபத்தியத்தை நாம் ஆதரிக்கிறோமா என்று கேட்கின் றேன். இது முற்றிலும் எதிர் விளைவுக் குரியதே. அத்துடன் இது இப்போதைய அந்த அரசை மேலும் பிரபலமாக்கு கின்றது. இவைகளுக்குப் பதிலாக நாம் அங்கு நிலையான அமை திக்கு வழிசெய்ய வேண்டும்.

**போல் மேர்பி:** திரு தேவா அரச வன்செயல்களுக்கும் அரசு சாராதவர்களின் வன் செயல்களுக்குமிடையில் ஒரு வேறுபாட்டை வெளிப்படுத்த முனைந்தார் என்று நினைக்கின் றேன். ஒரு நாடு ஒரு தொகை மக்களின் படுகொலையில் ஈடுபடுவதானது அவர் கருத்துப்படி சரியான காரியம் தானா என்று கேட்கின்றேன். மக்களை வலுக்கட்டாயமாகக் காணாமல் போகச் செய்வது ஏற்றுக்கொள் ளக்கூடியதுதானா? ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானா?. அரசு சாரா அமைப்புகள் வன் முறையில் ஈடுபடும்போது அதற்கு எதிராக அரசு வன்செயலில் ஈடுப டுமானால் அரசுக்கு அதனால் அதிக தாக்கம் ஏதும் ஏற்பட மாட்டாது என்று கருதலாமா?

**நிராஜ் தேவா:** திரு மேர்பி என் பேச்சைச் சரியாக கேட்டிருப்பாரானால் அரசு சார்ந்த வன்முறையினை நான் ஆதரிக்கவில்லை என்பதை உணர்ந் திருப்பார். சட்ட ஆட்சியை பாதுகாப்பதற்காக என்றே நான் கூறியிருந் தேன். 30 வருட காலமாக அரச அதிகாரிகள் சட்ட ஆட்சியை பாதுகாத்து வந்துள்ளார்கள். இந்தப் போர் எப்படி நடத்தப்பட்டது என்பதை கவனித்திருந்தால் இது தெரியும். 30 வருட காலம் அங்கே தென்பகுதி வடபகுதிக்கு உணவூட்டி வந்துள்ளது. தங்களை ஊதித்தள்ள முயன்று கொண் டிருந்த மக்களுக்கு அவர்கள் உணவூட்டினார்கள். அவர்களுக்கு உணவு அனுப்பினார்கள். ஒரு சிறு குழுவினரின் பயங்கரவாதமாக அது இருந் துள்ளது. அதற்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் எதுவித தொடர்பும் இருக்கவில்லை.

**இலங்கை மட்டுமல்ல ஐ.நாவும் பதில் கூற வேண்டும்**

**பீட்டர் ஸ்கின்னர்- ஐக்கியராஜ்யம்**
இந்தத் தீர்மானம் காலத்தால் மிக முக்கியமானது. இலங்கையில் முன்னேற்றம் மிக மெதுவாகவே இடம் பெற்று வருகிறது. இன்னமும் எவ்வளவோ செய்ய வேண்டியிருப்பதை ஆணையாளர் நவிப்பிள்ளையின் அறிக்கையைப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும். இன்னும் பல விடயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கின்றன. சில பிரச்சினைகள் உதவிப் பணியாளர்கள் தொடர்பா னவை. ஆயிரக் கணக்கானவர்கள் காணாமற் போயிருக்கிறார்கள். இலங்கை மட்டுமல்ல ஐ.நா.சபை மற்றும் சர்வதேச சமூக மும் இந்த விடயத்தில் நம்பகமாக என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு பதில் கூறியாக வேண்டும். இந்த விடயத்தில் உள்ளக அழுத்தங்களுடன் வெளியிலிருந்தும் அழுத்தங்கள் இல்லாதவிடத்து எந்தவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை என்பது என் கருத்து.

**மிட்ரோ றிப்போ, பின்லாந்து:-**
போரின்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதோடு மருத்துவமனைகளும் தாக்கப்பட்டிருந்துள்ளன. ஐ.நா. விசேட அதிகாரி இலங்கைக்கு சென்று முக்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். போர்க் குற்றங்களை நாம் மறந்துவிடலாகாது. குற்றங்களுக்கான தண்டனை விலக்களிப்பது நீடிக்க அனுமதிக்கலாகாது. சர்வதேச சமூகத் துடன் கலந்துரையாட இலங்கை விரும்புவதாகத் தெரிகிறது. தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதான செய்திகள் கவலையளிக்கின்றன. சமய சுதந்திரமானது மிக முக்கிய ஒரு கொள்கையாக இருக்க வேண்டும்.

> **2009 ஆம் ஆண்டு போர் முடிவுறுவதற்கு முந்திய மாதங்களில் இடம்பெற்றுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆழமான விசாரணை கள் நடத்தப்பட்டு அதன் விவரம் ஐ.நா. சபையிடம் சமர்ப்பிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். கால் நூற் றாண்டு கால நீடித்த போரின் பொறுப்புக் கூறலை நிவர்த்தி செய் வது இலகுவான விடயம் அல்ல. ஆனால் நல்லி ணக்கத்துக்காகவும் ஜன நாயகத்துக்காகவும் அது தேவைப்படவே செய்கின்றது.**

**ஐரோப்பிய ஒன்றியத்தின் விவசாயத்துக்கான ஆணையாளர் டேசியன் கியோலொஸ்:-**
இலங்கையில் மனித உரிமைகள் ஜனநாயகம் மற்றும் சட்ட ஆட்சி முதலியவற்றின் நிலைப்பாடு தொடர்பான இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதை நாம் வரவேற்கின்றோம். போர் முடிந்ததன் பின்னர் சர்வதேச உதவிகளுடன் இலங்கை அரசானது குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை, குறிப்பாக இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துதல், உள் கட்டமைப்புக் களை சீரமைத்தல், போன்றவற்றில் முன்னேற்றம் அடைந்திருப்பதை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரிக்கிறது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டமையையும் நாம் வரவேற்கின்றோம். புதிதாக தெரிவான மாகாண சபைக்கும் மத்திய அரசுக்குமிடையில் செயல்திறமான ஒத்துழைப்பு நிலவும் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வித ஆக்கரீதியான அம்சங்களுக்கிடையில் இலங்கையில் இன்னமும் சவால்கள் குறிப்பாக மனித உரிமைகளை பாதுகாத்தல், சமய மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாத்தல், நீதித்துறையைப் பாதுகாத்தல் போன்ற துறைகளில் நீடிக்கவே செய்கின்றன. போருக்குப் பின்னரான நிலைமையில் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கு கடந்துபோன குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். இதை அடைவதற்கு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை அரசை நாம் ஊக்கப்படுத்துவோம். அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகளை நடத்தும்படியும் இலங்கையை நாம் கோருவோம். ஏனைய சர்வதேச அமைப்புகளாலும் இம்மாதிரிக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு ஜெனிவாவில் அடுத்த மனித உரிமைகள் சபை மாநாட்டுக்கு முன்னர் இவைகளில் காணப்பட்டுள்ள முன்னேற்றங்களின் மதிப்பீடு கவனிக்கப்படும். இந்த நடைமுறையை ஐரோப்பிய ஒன்றியம் கவனமாக மதிப்பீடு செய்யும். காணாமமற்போனவர்கள் மற்றும் மனித உரிமை துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. காணாமற்போனவர்களின் உரிமைகள் தொடர்பாக ஐ.நா.விசேட பிரதிநிதி வெளியிட்டுள்ள அறிக்கையை நாம் வரவேற்கின்றோம். ஐ.நா.வின் ஏனைய விசேட தகைமையுடைய பிரதிநிதிகளும் இலங்கைக்கு வரு கைதரும் வகையில் இலங்கை அரசு அழைப்புகள் விட வேண்டும் என்று நாம் வற்புறுத்துகின்றோம். (முற்றும்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க இந்திய உறவு பாதிப்பு

## துணைத் தூதுவர் கைதின் எதிரொலி

ரெங்கன்

இந்தியாவுக்கும்- அமெரிக்காவுக்கும் இடையில் ராஜதந்திர மோதல் ஒன்று ஏற்பட்டு, அது இரு இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மிக மோசமாகப் பாதிக்கும் அளவுக்குப் போயிருக்கிறது.

இந்தியாவின் கம்யூனிஸ்ட் நாடுகளுடனான உறவுகளைக் கட்டுப்படுத்தி மேற்கு நாடுகளுடன் குறிப்பாக அமெரிக்காவுடனான உறவை மேம்படுத்துவதற்கு சமீப காலத்தில் அதிகமாக உழைத்தவர் தற்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஆவார். இந்தியாவின் தற்போதைய பிரதமர் மன்மோகன்சிங் மீது அவருக்கு அதிக மதிப்புண்டு. இந்த நிலையில் இப்பொழுது ஏற்பட்டுள்ள ராஜதந்திர மோதல்களால் ஒபாமாவுக்கே பெரிய மனச்சங்கடம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

இப்போது ஏற்பட்டுள்ள சங்கடமான நிலைமைக்கு வெளிநாட்டில் வாழ்கின்ற சில இந்தியர்களே காரணம் என்று இந்தியத் தரப்பில் நம்பப்படுகின்றது. அத்துடன் அமெரிக்காவின் பாரம்பரிய நட்பு நாடான பாகிஸ்தான் உளவாளிகளும் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் மோசமடைவதற்கு அமெரிக்காவில் இந்தியத் தூதரகத்தில் கடமை புரியும் உயர் நிலை ராஜதந்திரி ஒருவர் அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருப்பதே காரணம். இந்திய பிரதித் தூதுவராக இருக்கும் தேவயானி கேப்றாகாடே என்பவர் அண்மையில் அமெரிக்க அதிகாரிகளால் பொது இடம் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். ராஜதந்திர சலுகைகளுக்குரிய ஓர் அதிகாரியை வரன்முறையற்ற முறையில் அமெரிக்க அதிகாரிகள் கைது செய்திருப்பது இந்தியாவை சீற்றம் கொள்ளச் செய்துள்ளது. அமெரிக்க அதிகாரிகள் இதற்கு முன்னரும் இந்தியா உயர் ராஜதந்திரிகளை பொது இடங்களில் அவமதித்திருப்பதாகச் செய்திகள் உண்டு. குறிப்பாக முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அமெரிக்க விமான நிலையமொன்றில் வைத்து பரிசோதனைக் குட்படுத்தப்பட்டிருந்தமை சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. ஆனால் பிரதித் தூதுவர் தேவயானி கைது செய்யப்பட்ட விதமும் நடத்தப்பட்ட விதமும் ஏதோ பகைமைக்குரிய நாட்டவர்களை நடத்துவது போல் அமைந்திருந்ததாக இந்தியாவில் கருதப்படுகின்றது.

தேவயானி கொப்றாகாடே நியூயோர்க்நகரிலுள்ளஇந்தியத் துணைத் தூதரகத்தில் பிரதித் தூதுவராக கடமையாற்றுகிறார். விசா ஊழலில் சம்பந்தப்பட்டுள் ளார் என்றும், கொடுப்பனவுகள் தொடர்பாக பொய் கூறியுள்ளார் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் அமெரிக்க அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார். தாம் எவ்வாறு நடத்தப்பட்டார் என்பது பற்றி தேவ யானி கூறும்போது கைவிலங்கு போடப்பட்ட சமயத்தில் பல தடவையும் நான் அழுதேன். உடைகள் களையப்பட்டு உடலில் உள்ள மறைவான இடங்கள் சோதனையிடப்பட்டன.

பொதுவான மற்றும் போதைப் பொருள் பாவனை யாளர்களான குற்றவாளிகளுடன் வைத்து இவைகளைச் செய்தார்கள். ராஜதந்திரிகளுக்கான சலுகைகள் உண்டு என நான் தொடர்ந்து வலியுறுத்தியபோதும் இவ்வாறு செய்தார்கள். தேவயானி கைது செய்யப்பட்ட ஒரு வாரத்துக்குப் பின் இலத்திரனியல் அறிக்கையொன்றில் அவர் இதைக் கூறியுள்ளார். இந்திய அதிகாரிகளும், அமைச்சர்களும் அமெரிக்க அதிகாரிகளின் இந்த செயற்பாடு குறித்து கொதித்தெழுந்துள்ளனர். இந்திய நாடாளுமன்றத்திலும் அது எதிரொலித்தது. முற்றாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாத செயற்பாடு என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் குறிப்பிட்டார்.



### எதிர் நடவடிக்கைகள்

இந்திய ராஜதந்திரி ஒருவர் மிகக் கீழ்த்தரமாக நடத்தப்பட்டது தொடர்பாக இந்திய அரசு எதிர் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது. ஆரம்பச் செயற்பாடாக இந்தியா முழுவதும் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள ஆவணங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. அதே சமயம் அமெரிக்க தூதரகப் பகுதியில் வாகனக் கட்டுப்பாட்டுக்கு என வைத்திருந்த தடுப்புக்களை இந்தியப் பொலிஸார் அப்புறப்படுத்தி விட்டார்கள். அத்துடன் தீர்வையற்ற மதுபானம், உணவு வகைகளை இறக்குமதி செய்து கொள்ளும் சலுகைகளும் இரத்துச் செய்யப்பட்டன. அவை மட்டுமன்றி அமெரிக்கதுணைத்தூதரகங் களில் பணி புரியும் இந்திய பணி யாளர்களின் நிலைமைகள் சம்பள விவரங்களும் பரிசோதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு தனிப்பட்ட நபர் தொடர்பான விடயமல்ல. ஒரு நாடு என்று எமது உணர்வு உலகத்தில் எமது நாட்டுக்குரிய இடம் என்பன பற்றிய விடயம்என்றுகுர்ஷித் கூறியுள்ளார். முன்னராக இந்தியாவிலுள்ள அமெரிக்க ராஜதந்திரிகளை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரத்தியேக சலுகை அட்டைகளைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கப்பட்டதுடன் இந்தியாவுக்கு வருகை தந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை இந்தியத் தலைவர்கள் சந்திக்க மறுத்திருந்தனர். இந்திய மக்கள் சபை சபா நாயகர் மீராகுமார், காங்கிரஸ் உதவித் தலைவர் ராகுல் காந்தி, உள்நாட்டமைச்சர் சுசில் குமார் சின்டே ஆகியவர்களும் அவர்களைச் சந்திக்க மறுத்துவிட்டனர்.

தேவயானியின் வீட்டு வேலையாள் தொடர்பாக எழுந்த பிரச்சினையின் மீதே அவர் கைது செய்யப்படுவதற்கான நிலைமை ஏற்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. வேலையாளை இந்தியாவிலிருந்தே தேவயானி அழைத்து வந்திருந்துள்ளார். இந்திய ராஜதந்திர பிரமுகர் ஒருவர் நடத்தப்பட்டுள்ள விதம் வெறுக்கத் தக்கது. காட்டு மிராண்டித்தனமானது என்று கூறி இந்திய தேசிய ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை சந்திக்க மறுத்துவிட்டார். எனினும் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் அவர்களைச் சந்தித்து இவ்விடயத்தில் இந்தியாவின் அதிருப்தியை தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

தேவயானி தனது வீட்டு வேலையாளை விதிமுறைகளை மீறி அமெரிக்காவுக்கு அழைத்துக் கொண்டார் என்றும் வேலையாளைச் சரியாக நடத்தாமல் போதிய ஊதியம் வழங்காமல் இருந்தார் என்றும் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்ததாக தெரிகின்றது.

இந்தியாவில் பல்வேறு நகரங்களிலும் அமெரிக்கத் துணைத் தூதரகங்களுக்கு முன்னாள் ஆர்ப்பாட்டங்கள்நடத்தப்பட்டுவருகின்றன. தமிழ்நாட்டில் பாட்டாளிகள் கட்சியின் தலைவர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் அமெரிக்கா மீது இவ்விடயத்தில் சீறிப்பாயும் இந்திய அரசு ஆயிரக் கணக்கான தமிழர்களைக் கொன் றொழித்த இலங்கையுடன் கூடிக் குலாவுகின்றது என்று கண்டித்துள்ளார்.

> ராஜதந்திர சலுகைகளுக்குரிய ஓர் அதிகாரியை வரன்முறையற்ற முறையில் அமெரிக்க அதிகாரிகள் கைது செய்திருப்பது இந்தியாவை சீற்றம் கொள்ளச் செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளி விழாவில் இடம்பெற்ற 'விடியலைத் தேடி' நாடகத்தின் ஒரு காட்சி. (ஒ-135)



யாழ். செட்டித்தெரு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் மாணவரொருவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் காணலாம். (ஒ-14)





உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களது பெற்றோர் தின நிகழ்வு அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களது கலை நிகழ்வைக் காணலாம். (ஒ-86)



நல்லூர் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா. வசந்தகுமார் பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ-7)





கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் கைதடி எழுதிடல் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற மாணவர்களது கலைநிகழ்வின் ஒரு காட்சியைக் காணலாம். (ஒ-9)





குடத்தனை அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம். (ஒ-8)





காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் 98 பேரை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் ஆசிரியர்களையும் காணலாம். (ஒ-14-250)




நெல்லியடி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூ[illegible]இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர் எஸ். சேதுராஜா, ஜனாதிபதியின் சட்டத்தரணி சிற்றம்பலம் உட்பட விருந்தினர்கள் மேடைக்கு அழைத்து வரப்படுவதையும் நிகழ்வின் போது இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் காணலாம். (ஒ-14)



பருத்தித்துறை வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைக் காணலாம். (ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரியின் 2006 ஆம் வருட பழைய மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி செல்வா மஹாலில் நடைபெற்றது. அந்த வருடத்தில் கற்பித்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதையும், பங்குபற்றியவர்களையும் காணலாம். (ஒ-14)



இடைக்காடு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. சிவஸ்ரீ க.ஜெயராமக்குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள் தீட்சை பெறுவதைக் காணலாம். (ஒ-5)



தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.அ.ஸ்ரீகரன் மாண வர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (ஒ-8)



உடுவில் பிரதேச செயலகத்தின் நத்தார் தின நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற க்லை நிகழ்வையும் பங்கு பற்றியோரையும் காணலாம். (ஒ-86)



ஆவரங்கால் மத்திய முன்பள்ளியின் 39 ஆவது வருடாந்த மழலைகள் விழாவை அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவர் ரி.கமலநாதன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும். அருகில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் நிற்பதையும் காணலாம். (ஒ-8)



வடமராட்சி அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் பாடசாலை அதிபர் ஆ.சூசைநாதர் தலைமையில் நடைபெற்றது. (ஒ-14)



நல்லூர் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா கடந்த 20 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதேச செயலர் உரை நிகழ்த்துவதையும் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் காணலாம். (ஒ-7)



யாழ். செயலகத் துக்கு அண்மித்த பகுதியில் வேகமாக நிர்மாணிக் கப்பட்டு வரும் ரயில் பாதை. (ஒ-20)






[illegible] மலையாளங்காடு ஐயனார் ஆலயத்துக்கு புதிய தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கான விசேட பூசைகளை விஸ்வ பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் நிகழ்த்துவதைக் காணலாம். (ஒ-50)

நீண்ட காலமாகத் திருத்தப் படாமல் போக்குவரத்துக்கு இடையூறாக குன்றும் குழியு மாகக் காணப்பட்ட யாழ். கச்சேரியடி சோமசுந்தரம் வீதி தற்போது புனரமைக் கப்பட்டு வருகிறது. (ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுமார் 14 வருடங்களாக சமுர்த்தித் திட்டத்தின் வாழ்வாதாரப் பணிப்பாளராகப் பணியாற்றிய வரும், விசேட ஆலோசகருமான மா. நடராஜாவுக்கு கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழா கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றபோது... (க-421)



கலாநிதி அகளங்கன் எழுதிய 'கம்பனின் நான்' என்னும் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வின்போது நூலாசிரியருக்கு வாசீக கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (க-421)



நீண்ட காலமாகப் புனரமைப்பைக் காணாது மோசமான நிலையில் காணப்பட்ட ஈரப்பெரியகுளம் - மடுக்கந்தை வீதி, வீதிஅபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைக்கப்படுகின்றது. (க-421)



பரந்தன் நகரில் இரணைமடுக் குளத்திலிருந்து நீர் பாய்ந்து செல்லும் வாய்க்காலின் மீது பாலம் அமைக்கப்படாததால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் இடர்களை எதிர்கொள்கின்றனர். (க-18)



துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் நீர் நிறைந்து காணப்படுவதற்குப் பதிலாக நீர் வற்றிய நிலையில்... (க-18)




துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கிராம அமைப்புக்களின் ஒன்று கூடலின் போது... (க-18)



கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மாற்றுத் திறனாளிகள் செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆரம்பக் கூட்டம் நடைபெற்றபோது. தலைவராக ரி.டபிள்யு. ஜெயக்குமாரும், செயலாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.மைக்கல் தியாகராஜாவும் பொருளாளராக ச.திருச்செல்வமும், உபதலைவராக புதுக்குடியிருப்பு அருட் தந்தை சாள்ஸ் ஜஸ்ரீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (க-426)



போரின்போது சேதமாக்கப்பட்ட துணுக்காய் கோட்டைகட்டியகுளம் சிவன் ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (க-18)



ஒட்டுசுட்டானில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் கட்டவேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றது. (க-500)



ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள பண்டாரவன்னிக் கிராமத்தில் மக்கள் தினமும் பயன்படுத்தும் பிரதான வீதியும் அதிலமைந்துள்ள பாலமும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி சதாசிவம்

(பயிரிக்கூடல், காரைநகர்)



காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சதாசிவம் நேற்று (21.12.2013) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - மீனாட்சி தம்பதியினரின் அன்பு மகனும், ஈஸ்வரியின் அன்புக்கணவரும், கந்தசாமியின் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - கொழும்பு) அன்புத் தந்தையும், லீலாவதியின் அன்புத் தம்பியும், தயாநிதி, கணநாதன் (மாநகரசபை - கொழும்பு), கேதாரிநாதன் (ஆசிரியர், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர், பயிரிக்கூடல் இல்லத்தில் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
கந்தசாமி - மகன் 0773143618,
கணநாதன் - மருமகன் 0779522084,
கேதாரிநாதன் - மருமகன் 0774146125.

பயிரிக்கூடல்,
காரைநகர். (42927)(12.6.3)

## கணபதிப்பிள்ளை வரதராசா



யாழ்.நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வரதராசா நேற்று (21.12.2013) சனிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - அமிர்தம் தம்பதியரின் மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசதுரை - இராசரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், ரஞ்சன் (IRCON International), கேமா (ஓமான்), அருந்ததி (கனடா), ராகவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் (இந்தியா) அவர்களின் அன்புச் சகோதரரும், அம்பிகை தரிசினி (ஆசிரியை - வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), பிரபாகரன் (ஓமான்), தில்லை நடேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கேசனா, விவேகிதன் கேதுசன், ஆகாஸ், அர்ஜுன் ஆகியோரின் பேரனும், இராசேஸ்வரி, கணேசராசா, தவராசா, ஜெயராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரஞ்சன் (மகன்),
தவராசா பத்தர் (மைத்துனர்)
0776712906/0212219780

3/15, கேசாவில்,
முதலாம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை. (42908)(12.6.3)

# திருவள்ளுவர் மகா சபையின் 64 ஆவது மாநாடும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ.22

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 64 ஆவது வருடாந்த மாநாடும் கல்விசார் ஊக்குவிப்பும் இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஆனந்த வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

மகா சபைத் தலைவர் வீ.பீ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக மானிப்பாய் கிறீன் மெமோரியல் வைத்தியசாலை மருத்துவர் அ.யோகராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக மகாசபை முன்னாள் தலைவர் நா.கிருஸ்ணபிள்ளை, இ.போ.ச.யாழ்.சாலை ஓய்வு நிலை உள்ளக கணக்காய்வாளர் நா.பேரம்பலம் ஆகி யோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள், தபால் தந்தி அமைச்சின் விருது பெற்ற சாதனையாளர் நா.நவ ரத்தினம் ஆகியோருடன் மகாசபையின் மூத்த உறுப்பினர்களும்- கலாபூசணம் விருதுகள் பெற்ற ம.தைரியநாதன் (இசை நாடகம்), செ.பொன்னுத்துரை (எக்கோடியன்), க.இராசநாயகம் (இசைக்கருவி) ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று செயலாளர் ஆ.சிறிதரன் அறிவித்துள்ளார். (ஓ-9)

# திருவாசக விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,டிசெ.22

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் திருவாசக விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற வுள்ளன.

இந்து சமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி.அனந்தலட்சுமி மாணிக்கராஜசர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், சிறப்பு விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவும், கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ந-14)

### விதைப் பொதிகள் விநியோகம்

மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டுக்கான பெரும் போகத்துக்காக 14 இலட்சத்து ஆயிரத்து நூறு விதைப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாட்டின்பௌதிக அமைப்புக்கு ஏற்ப மூன்று வலயங்களாக பிரிக்கப்பட்டு அவற்றுக்குப் பொருத்தமான விதைப் பொதிகளே விநியோகிக் கப்பட்டுள்ளன.

தாழ்நில உலர் வலயத்துக்காக 5 இலட்சத்து 41ஆயிரத்து500விதைப் பொதிகளும், இடைநிலை ஈரவலயத்துக்காக 7 இலட்சத்து 59 ஆயிரத்து 600 விதைப் பொதிகளும் மலைநாட்டு வலயத்திற்காக ஒரு இலட்சம் விதைப் பொதிகளும் வழாங் கப்பட்டுள்ளன. (வ-40)

# கருத்தறியும் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

சங்கானையில் வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் நவீன மீன்சந்தை அமைப்பது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை அறியும் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும். பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் கூட்டம் இடம்பெறும்.

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சங்கானையில் நவீன மீன்சந்தை விரைவில் புதிய இடத்தில் அமைக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-50)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சிவபாதம் சிவரஞ்சன்

(முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர்)

தோற்றம் 16.04.1984 மறைவு 13.01.2012

ஆண்டுகள் இரண்டுகள் கடந்தாலும் உன் அழியா நினைவுடன்

குடும்பத்தினர்.
கைதடி,
நாவற்குழி.
(42900)(3.6.4)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சுப்பிரமணியம்

(மணியம்)



உச்சியோடை,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் (மணியம்) 21.12.2013 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கச்சியம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், ராசமணியின் அன்புக் கணவரும் சிவராஜ், ஜெயபரன் (C.T.B. கோண்டாவில்), ஜெயபாலன் (பிரான்ஸ்),ஜெயராசா(மக்கள் வங்கி- யாழ்ப்பாணம்), ஜெயக்குமார்,ஜெயரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதாரகௌரி, றஜினா ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபிதா, தனுசிகன்,கர்சயன், கவிமேனன் ஆகியோரின் பேரனும், தியாகேஸ்வரி, பாக்கியம், கமலாம்பிகை, விமலா, தேவராசா(சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், சிவபாக்கியம், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வரத் தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 490 2388

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (42905)(5.3.6)

# மரண அறிவித்தல்

## செல்லையா பொன்னுத்துரை



குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னுத்துரை 21.12.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லாச்சியின் அன்புக் கணவரும், நல்லையா,மகாலிங்கம், மகேஸ்வரி, இராசதுரை, பூரணம், புஸ்பராணி (லண்டன்), சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவறஞ்சனி, உதயறஞ்சினி (லண்டன்), உதய கலாறஞ்சனி, மகிலேஸ்வரன், வசந்தமாலறஞ்சனி, இதயறஞ்சினி, சுபாஸ்சந்திர போஸ், கதீஸ்வரன், விதுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவயோகராசா, நந்தகுமார் (மலேசியா), யோகநாதன் (லண்டன்), அனுராஜ் (டோகா), சத்யா (ஆசிரியர், யா/வரணி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், டிலக்சிகா, மதுசன், கரிதாஸ், கிசாந், ஹனியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் கொடிகாமம் வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடமியன், வரணி. (42951)(7.8.3) தகவல் : குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பராசக்தி நாகதீபன்


அன்னை மடியில் 08.10.1924 — ஆண்டவன் அடியில் 01.01.2013

காராடும் வானத்தில் நாம்
கண்டிருந்த ஒளிநிலவே
நீராடும் நீள் கடலில்
நாம் கண்டெடுத்த நித்திலமே
உறவாடும் உள்ளத்தில்
மலர்ந்து கொண்டிருந்த மரகதமே—நீங்கள்
வேரோடும் சாய்ந்ததென்ன எமையெல்லாம்
வெதும்பவிட்டுச் சென்றதென்ன.
பண்புடன் பாசத்தையும் சேர்த்தளித்து
பாதியில் நமைப் பிரிந்து
கடந்தது ஆண்டொன்று
ஆறாத்துயருடன்
தவிக்கின்றோம் அம்மாவே!!
மீண்டும் எம்... என எண்ணி
உங்கள் அன்பு முகம் தேடுகின்றோம்.

மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.
இலகடி,சங்கானை.

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சிவலிங்கம்



யாழ்.அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி, டியூஸ்பேர்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவலிங்கம் 17.12.2013 செவ்வாய்க் கிழமை டியூஸ்பேர்க்கில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- அன்னப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகனும், சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும், பிரகாஷ், பிரவீனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூலோகரம்பை, சரஸ்வதி, புவனேஸ்வரன், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வரட்ணம் (விசுப்பர்) மற்றும் சிவரத்தினம், சிவமூர்த்தி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜேர்மனியில் நாளை (23.12.2013) திங்கட்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வீரபத்திரர் கோயிலடி,
நீர்வேலி. - 0779616665

தகவல்:
க.சிவரத்தினம் (மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

Jaffna, சுண்டுக்குளி, 5 Bed Room, 3 Bath Room, Hall, Kitchen, Vehicle Parking (10) உள்ள கீழ்வீடு வாடகைக்கு விடப்படும். Guest House, Company Officers இற்கு மட்டும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 907 8325/077 050 9068

## டுபாய் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

| Job Category | Qty | Salary AED | Salary RS |
|---|---|---|---|
| கிளீனர் (ஆண்) | 20 | 1000 | 35,500/= |

நிபந்தனைகள் & சலுகைகள் : 1 AED = Rs. 35.50

- தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும். • வருவதற்கான விமானச் சீட்டு கம்பனியால் வழங்கப்படும்.
- வேலைநேரம் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் – ஒரு கிழமைக்கு 48 மணித்தியாலம்
- உணவு கொடுப்பனவு சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது
- எனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் டுபாய் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது

வீசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்

அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூ.95000.00 மாத்திரம் அறவிடப்படும்.

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY LL.No.: 2427 றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல. 287-1/2, ஹவ்லொக் றோட், கொழும்பு - 06. (மயூரா அம்மன் கோயில் எதிராக)

Tel : 0112552598|0773074744|0718126094 (C/10265)

max adz


## கற்கைநெறி தொடர்பான விளக்கம்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. கற்கை நெறிகள் தொடர்பான விரிவான விவரங்களை நாளை திங்கட் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கடற்கரை வீதியில் உள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் பெற முடியும். அன்றைய தினமே அனைவரும் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப் பிக்க முடியும் என்று உதவிப் பதிவாளர் எஸ்.சிவானந்தன் தெரி வித்துள்ளார். (ந)

## நூல் வெளியீடு

காரைநகர், டிசெ.22

வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் வெளியிடப்படும் கருட புராண நூலின் வெளி யீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக் னேஸ்வரன் தலைமை யில் நடைபெறும். காலை 6 மணி தொடக் கம் மகர ஜோதிப் பெருவிழா நடைபெற்று நூல்வெளியீட்டு விழா இடம் பெறும்.

(ஓ-250)


## ELECTRONICS ENGINEERING - (SHORT COURSE)

- A/L கல்வியை நிறைவு செய்துள்ள மாணவர்களே! மாணவிகளே!
- உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேலும் வெற்றிகரமானதாக்கிக் கொள்ள ஓர் அரிய வாய்ப்பு!
- நீங்களே எல்லா வகையான இலத்திரனியல் சுற்றுக்களை (ELECTRONICS CIRCUITS) உருவாக்கி சாதிக்க முடியும்!
- வீட்டில் இருந்தபடியே மாதவருமானம் ரூபா 50,000/= இற்கு மேல் பெறமுடியும்!

COURSE TITLE: "DESIGN & DEVELOP THE EMBEDDED SYSTEM'S CIRCUITS"

பயிற்சிக் காலம்: ஒரு மாதம் (உங்கள் வசதிக்கேற்ப வார நாள்களில் அல்லது வார இறுதி நாள்களில்)

பயிற்சியின் அளவு: 32 Hours

மேலதிக தொடர்புகளுக்கு:

HIONE (Research & Development Centre)
118, G.P.S. வீதி,கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
T.P: 021-222-7761, 071-872 873 8, 0777 36 4939
Email :info@hionejaffna.com
Web:www. hionejaffna.com

குறிப்பு:
★பயிற்சிகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும்.
★பயிற்சிக் கட்டணம்: ரூபா 10,000/=.
★விண்ணப்ப முடிவு திகதி 31st JAN 2014.
★செய்முறை பயிற்சியில் ... மாணவர்களே உருவாக்குவார்கள்.
★பதிவுகளை இலவசமாக மேற்கொள்ளலாம். (42893)(4.6.3)

## தரமான ஆசிரியர்களாவதற்கான பயிற்சி

DIPLOMA IN PRE-SCHOOL & SUB PRIMARY EDUCATION
CONDUCTED BY THE DEPARTMENT OF VOCATIONAL STUDIES, LADIES COLLEGE, COLOMBO.
(Train to be quality Teachers)

MODULES
- Early Childhood Education
- Child & Language Development
- Child Phychology
- Environmental Studies
- Art & Equipment Making
- Music & Rhythm
- Primary English/Sinhala/Tamil/Maths
- Practice Teaching in Local & International Schools.

Duration: One year (full time) - Monday to Friday 8.00a.m to 1.45 p.m

Mudium of instruction: English

Basic Requirement: General Certificate of Education - Ordinary Level (GCE O/L) with Passes in English and Maths.

Priority given to those who have completed the Advanced Level Examination.
Successfully Passing the DVS English placement Test.

Send Application to: Manager, CARM,
No.47, Uduvil Road, Manipay, Jaffna.
Email- joycedavid8346@gmail.com (42804)(12.3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Stream : Maths District Rank - 3
Island Rank - 6
School : J/Chavakachcheri Hindu College
A/L 2013 பரீட்சையில் சாதனை புரிந்த எமது CIMA Foundation Level (Certificate Level) மாணவனான



தங்கவடிவேல் சிவதாஸ்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவருக்கு 100% புலமைப்பரிசில் வழங்கியதில் பெருமிதம் அடைகின்றோம்.

WISDOM BUSINESS ACADEMY JAFFNA.
154, A/1, Navalar Road, Jaffna.
T.P. : 021 222 0727 / 021 720 0777 (42906)(7.6.3)

A/L பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் நன்மை கருதி புதிய Foundation பிரிவு 03.01.2014 அன்று ... 100% வரையிலான புலமைப் பரிசில்கள் வழங் ... நாளை 23.12.2013 முதல் பதிவுகள் ஆரம் ...

## காணி விற்பனைக்கு

கைதடி, நுணாவில் சாவகச்சேரியில் A9 க்கு அருகில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 0776 953 725

## வைத்தியம்

சுவாமி ஆயுள்வேத ஆஸ்பத்திரி Home & Hotel Visit வயிறு சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சனை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஓயில் மசாஜ் இந்தியா சிகிச்சை ஸ்பா ஆயுள்வேத மசாஜ் & ஸ்டீம் பாத் அர்சஸ் வியாதிகளுக்கும் @ மௌண்ட் லெவனியா.

பிரியா
0728 138 773
0777 204 921

## வாடகைக்கு

4 அறைகள் உடைய வீடு வாடகைக்கு உண்டு. பலாலி வீதி,திருநெல்வேலி பாம் பாடசாலைக்கு அருகில். ஜனவரி முதல் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:075 851 8345 / 011 258 7120 (சி/10275)(5.6.3)

## விற்பனைக்கு

Ashok Leyland 2011 பதிவு செய்யப்பட்ட ND-xxxx இலக்கம் கொண்ட 54 ஆசனம் கொண்ட Ruby Body இலக்கம் பஸ் விற்பனைக்கு உண்டு. விலை 37 இலட்சம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.

077 325 3831 (சி/10273)(5.6.3)

## வாடகைக்கு/விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள நான்கு பெரிய அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு. திங்கட்கிழமையன்று (23.12.2013) பார்வையிட முடியும். (சி/10271)(5.6.3)

தொடர்பு:077 336 6988 / 077 512 7811

## காணியும் வீடும் விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வீதியில் சிறிய வீட்டுடன் கூடிய நிலப்பரப்பு பதினேழு குழி பதினொன்று தசம் மூன்று விஸ்தீரணம் கொண்ட காணி உடனடியாக விற்பனைக்குள்ளது. (சி/10272)(5.6.3)

தொடர்பு: 077 302 0793

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம், தீவுப்பகுதி Roman Catholic 1973 January இல் பிறந்த Association of Business Executives (UK) Diploma in Business Administration தகைமையுடைய Jaipur காலில் நடமாடுகின்ற 5'7'' உயரமுடைய, சர்வதேச பாடசாலை மாணவர், தொழில்சார் கல்வி கற்போருக்கு (Professional) வியாபார முகாமைத்துவ பாடங்கள் கற்பிப்பவருக்கு படித்த தொழில் புரியும் மணமகள் தேவை. தொடர்பு: 077 611 0802 (சி/10274)(5.6.3)

## கட்டடம் வாடகைக்கு

யாழ்.மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய ஒவ்வொன்றும் 1600 சதுரஅடி கொண்ட 3 மாடிக்கட்டடம் வாட கைக்குண்டு.

(42999)(4.6) தொடர்பு: 077 714 9420

## தேவை

பேருவளையில் "கள்" சீவுவதற்கு /இறக்குவதற்கு ஆள்கள் தேவை. சாப்பாடும் தங்குமிட வசதியும் வழங்கப்படும்.

சம்பளம் ரூபா 50,000/=

30-45 வயதிற்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:072 902 6139 (சி/10262)(4.6.3)

## யாழ் நகரில் வீடு விற்பனைக்கு

யாழ். நகர் கடைத் தெருவுக்கு அண்மித்ததாகவும், சுமார் மூன்று பரப்பில், சுற்றிவர வளவுடன், அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு (C/10282)

0772 279 219

## கடை,வீடு,காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு,கீரிமலை வீதியில் நான்கு கடைத்தொகுதி உடன் கூடிய மேல்வீடும் மேலும் 10 பரப்பு வயல், 35 பரப்பு காணி கீரிமலை வீதியில் கிணற்றுடன் கூடிய நான்கு பரப்பு காணி,மற்றும் வல்வைச்சந்தை தீருவில் வீதியில் நான்கு அறை கொண்ட வீடும் விற்பனைக்குண்டு

தொடர்பு :
Shan - 077 027 8937 ( இலங்கை )
மரியநேசன் - 416 839 7896 ( கனடா ) (C/10264)
Email : GNANAM70@HOTMAIL.COM

max adz

## மலேசியா

மலேசியாவிலுள்ள கௌரவமான குடும்பத்திற்கு வீட்டுப்பணிப்பெண்கள் தேவை.

| வெற்றிடங்கள் | தொகை | மாத சம்பளம் (RM) |
|---|---|---|
| வீட்டுப்பணிப்பெண்கள் | 50 | 850 |

1 RM - 42 RS

பயணம் முற்றிலும் இலவசம், உணவு வழங்கப்படும்.

## டுபாய்

| வெற்றிடங்கள் | தொகை | மாத சம்பளம் (DHS) |
|---|---|---|
| உதவியாளர்கள் | 30 | 1450 |
| கிளீனர்ஸ் | 40 | 850 |

1 DHS - 36 RS

வெளிநாட்டு முகவர்களால் 09.01.2014 அன்று யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற உள்ளதால் உடனே எமது யாழ்ப்பாண முகவரை தொடர்பு கொள்ளவும்.

S. பார்த்தீபன், புன்னாலை கட்டுவான் தெற்கு, சுன்னாகம்.
தொ.பே.இல. : 0771471687

நிபந்தனைகளும் விதிகளும்
தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி இலவசம். உணவு கொடுப்பனவு சம்பளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.ஒப்பந்த காலம் இரண்டு வருடங்கள். ஒப்பந்த காலம் நீடிக்கப்படக்கூடியது. வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் கிழமைக்கு 6 நாட்கள் வேலை. விமானச் சீட்டு இலவசம். ஏனைய நிபந்தனைகளும் விதிகளும் டுபாய் நாட்டு சட்ட திட்டங்களுக்கமைவாக.

Hotline - 0770116117
அரசு அனுமதித்த கட்டணம் மாத்திரமே

## கெப்பிட்டல்

... ரூட் மன் ட் இன் டர் நெஷனல் (பி) லிமிடெட்
NO: 130 3/1. 3RD Floor, Grandpass Road, Colombo-14
Tel: 0112478319, 0112478320, Fax: 0112478321
E-mail: info@capitalrl.com capitalcolombo@gmail.com

LL No. 2248 (C/10266) AL/2248/19/13/AL/2248/20,21/13


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நுணாவில் சந்தி-கனகன் புளியடி வீதிக்கு எப்போது கிடைக்கும் விடிவு?

நுணாவில் சந்தியிலிருந்து கனகன் புளியடி சந்திக்குச் செல்லும் வீதியானது, பாதசாரிகள் கூட பயணித்துச் செல்ல இயலாத அளவுக்குக் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. அந்தப் பாதையால் ஒருமுறை பயணித்துச் சென்றால் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள், சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு மிக இலகுவான எட்டு போட்டுக் காட்டி விட முடியும். ஓட்டோக்கள் கூட வெட்டு போட்டுக் காட்டி விடலாம்.

ஏனைய வாகனங்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் பெறுதவற்குக் கூட இந்த பாதையால் ஒரு முறை போய் வருவது போதுமானதாகும். இந்த நிலையில் உள்ள அந்த வீதி மழைக்குப் பின்னர் வெகுவாகச் சிதைவடைந்து காணப்படுகிறது. பொது அமைப்புக்களும் தனிப்பட்டோரும் இந்தப் பாதையின் சீர்கேடுகள் பற்றி ஊடகங்கள் மூலமாக சுட்டிக்காட்டியிருந்த போதிலும் இன்று வரையிலும் குறைந்த பட்சமாக தற்காலிகமாக செப்பனிடல் நடவடிக்கைகள் தானும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்தி அந்த வீதியைப் போக்குவரத்துக்கு உகந்ததாக செப்பனிட்டுத் தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஒ-22)

## கிளிநொச்சி சந்தையில் தேங்காய் விலை வீழ்ச்சி

அக்கராயன். டிசெ.22

கிளிநொச்சி சந்தைப் பகுதியில் சூடு பிடித்திருந்த தேங்காய் தற்போது விலை குறைவடைந்துள்ளதால் தெங்குச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

35 ரூபா வரை கொள்வனவு செய்யப்பட்ட தேங்காய் தற்போது 22 ரூபா தொடக்கம் 25 ரூபா வரை குறைவடைந்துள்ளது.

ஆனால் தெங்குச் செய்கையாளர்களிடம் குறைந்த விலையில் தேங்காயைப் பெற்று இடைத் தரகு வியாபாரிகள் தேங்காயை அதிக விலையில் விற்பனை செய்வதாகவும் தெங்கு செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(வ-18)


**அவுஸ்திரேலியா 1 வருட Business விசா 7 நாட்களில் (15 லட்சம்)**

- Poland Work Permit விசா - (Welding, Sewing) - 10 லட்சம்
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ் (20 லட்சம்)
- துருக்கி விசா (3 லட்சம்), உக்ரேன், ரஷ்யா விசா (5 லட்சம்) Belarus (6 லட்சம்), றுமேனியா (8 லட்சம்) சீனா (75000) இந்தியா 6 மாத Business விசா (20,000)

**GCT** Temple Road, Mount Lavania.
Mobile : 0756 225 082
Email : info@gctproviders.com

**வீடு வாடகைக்கு**

இல.82, பிறவுண் றோட், நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒரு பெரிய அறை மேலும் இரண்டு அறைகள், பெரிய கோல், சாப்பாட்டு அறை, சமையல் அறை, கார் தரிப்பிடம் என்பவற்றுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. வியாபார தாபனங்களுக்கும் ஏற்றது.
தொடர்பு: 077 728 6155

**வீடு விற்பனைக்கு**

பருத்தித்துறை தும்பளை வீதியில் அம்புலி ஓடை ஒழுங்கையில் 4 பரப்பு 6 குழி நிலத்தில் 5 அறை, சமையல் அறை, கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
**0723 513 120**

**வீடு விற்பனைக்கு**

தெஹிவளை கடவத்த றோட், வீதி முகப்பாக 9 Perch காணியில் அமைக்கப்பட்ட முழுவதும் Tile பதிக்கப்பட்ட புத்தம் புதிய 3 மாடி வீடு சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு 4B/R (A/C) நான்கு Toilet Bathroom 4 வாகன தரிப்பிடம் Garden Open Balcony பெரிய Hallகள் Roller Gate.
**0774 545 701**

**வாடகைக்கு**

வெள்ளவத்தை ஸ்ரேசன் றோட், இல.8இல் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் அமைந்த அறைகளும் சாதாரண அறைகளும் நாள், கிழமை அடிப்படையில் குறைந்த விலையில் வாடகைக்குண்டு.
தொடர்பு:
077 183 2404/011 250 4281

**அரிசிஆலை வாடகைக்கு**

அரிசிஆலை கட்டடத்துடன் சுன்னாகத்தில் சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு.
தொடர்பு:077 491 4511,
(42909)(4.6.3)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

தென்பகுதியில் இருந்து தருவிக்கப்பட்ட 50 நாள்கள் நிரம்பிய BOXER ROTT WEELR நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
தொடர்பு:071 847 4675
(42910)(4.6.3)

**வாடகைக்கு/விற்பனைக்கு**

K.K.S றோட் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் 5 பரப்பில் மேல்மாடி வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு. நிறுவனங்கள், தனியார் வைத்திய நிலையங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 979 8181

**மாடி வீடு வாடகைக்கு**

நகர மத்தியிலிருந்து 1KM இற்குள் 10 அறைகள் கொண்ட வீடு 3500 சதுரஅடி விஸ்தீரணம். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 781 3646
(42907)(4.6.3)

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், அரசடி றோட், 286,இலக்கமுடைய 2¼ பரப்பு வீடு வளவு விற்பனைக்கு உண்டு. (கந்தர்மடம் சந்தியில் இருந்து 100 மீ தொலைவில்)
தொடர்பு: 077 344 1318
(42956)(5.6.3)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் புகையிரத வீதிக்கு அருகில் கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 051 7355/ 077 915 1247
(42957)(5.6.3)

**NEW PANASONIC VIDEO CAMERA விற்பனைக்கு உண்டு**

Model:- Panasonic AG - AC 90



(C10629)(2.6.3)

தொடர்பு:
077 772 5258, 077 387 6615

**வீடு வாடகைக்கு**

வவுனியா தோணிக்கல் அண்ணா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு :
077 758 5908
(43560)(7.6.3)

**STUDY MEDICINE IN RUSSIA**

KRUSK STATE MEDICAL UNIVERSITY மற்றும் TVER STATE MEDICAL UNIVERSITY

- SLMC, WHO, UNESCO, AMC, US MEDICAL COUNCIL ஆகியவற்றால் அங்கிகரிக்கப்பட்ட முதற்தர பல்கலைக்கழகங்கள்
- இலங்கையிலிருந்து 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர்
- முற்றிலுமான ஆங்கில மொழிமூல கற்கைநெறி
- வருடத்திற்கு 4000 USD + Hostel வசதி இலவசம்
- மிகக்குறைந்த ஆரம்பக்கட்டணம்
- விண்ணப்பித்து இரண்டு மாதங்களில் ரஷ்யா செல்லலாம்
- VISA 100% உத்தரவாதம்
- விடுமுறை காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று வரக்கூடிய வாய்ப்பு

Russian Education Centre Sri Lanka

தொடர்புகளுக்கு :
Dr.Sivaraman Sanjey
Mob: 0773460324
Tel: 0114377388/0112769833
Email: snsanjey@yahoo.com

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA

**2014 A/L DAY CLASS**
**MON - FRI, SAT- SUN**
ஆரம்பம் : 23.12.2013

COM.MATHS 7.00 } Mr.S.செந்தில்ராஜ், Mr.S.செந்தில்நாதன்
BIOLOGY-7.30 6.30 } வழமையான ஆசிரியர், Mr.T.கெங்காதரன்
CHEMISTRY 9.00 } Mr.K.சிவத்திரன், Mr.T.சுசாந்தன்
PHYSICS 11.00 } Mr.S.சோதிலிங்கம், Mr.G.பிரபா

(C/10632)(5.6.3)

**EVENING CLASS**
CHEMISTRY -Mr.G.BENO
SAT,SUN,MON,THU 2.30pm

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA

**2016 A/L**
*ENGLISH MEDIUM*
**MAT & BIO**

**PHYSICS**
MR.S.SOTHILINGAM
MR.K.SELVAN

**CHEMISTRY**
MR.N.MAHESWARAN
MR.G.BENO

**BIOLOGY**
MR.T.THAMBIRAJAH
OUR USUAL TEACHER

**COM.MATHS**
MR.S. SIVAKARAN

**COMMENCES ON:28.12.2013 8.30 A.M**

(சி/10631)(4.6.3)

**Save the Children**

**PROJECT COORDINATOR**
**MULLAITIVU**

Save the Children is seeking for an experienced Early Childhood Care & Development (ECCD) expert. The Japan International Cooperation Agency (JICA) ECCD Project will focus on bringing safe and child-friendly ECCD environment for children and quality ECCD management in Mullaitivu district in Northern Sri Lanka.

The ideal candidate will possess a degree in education. Should have minimum 05 years of experience in education sector with 02 years in management positions. Experience in formulating / managing ECCD programs will be an added advantage. He or She will be self-motivated, fluent in English, Tamil and preferably Sinhalese, computer literate and have a track record of success. Able to travel domestically up to 50% of the time.

Salary will commensurate with experience & qualification.

Please refer to our web site **www.savethechildren.lk** for the job profile.

Please send your CV's, with the names and contact details of two non-related referees, to the given address within 7 working days of this advertisement. Please state the position applied for on the top left corner of the envelope or as the subject of the e-mail.

**Save the Children International**
12, Amarasekara Mawatha, Colombo 5
E-mail: slhr@savethechildren.org
Only applicants selected for the interview will be contacted.

(சி/10283) SUCCESSADZ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சுரேஸ்குமார் (கண்ணன்)



யாழ். கட்டுவன் தண்ணீர் தாழ்வைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Lippstadt ஐ வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுரேஸ்குமார் (18-12-2013) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மாப்பாணர் நமசிவாயம் - நமசிவாயம் புவனேஸ்வரி(சுவிஸ்) தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமநாதன் - தேவவதி(இலங்கை) தம்பதிகளின் அன்பு மருமகனும், கலைமகள் அவர்களின் பாசமிகு கணவரும், சந்தியா, சரண், லக்ஷயா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குமார்(சுவிஸ்), ஜீவகுமார்(சுவிஸ்), ரஜனி(இந்தியா), ஜெயக்குமார்(ஜேர்மனி), நளினி(ஜேர்மனி), செந்தில்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோமதி(சுவிஸ்), குமுதினி(சுவிஸ்), பிரபாகரன்(இந்தியா), சுதர்ஷினி(ஜேர்மனி), செல்வ நிகேதன்(ஜேர்மனி), காஞ்சனா(ஜேர்மனி), பாமினி(பிரான்ஸ்), பிறேமினி(லண்டன்), காஞ்சனா(இலங்கை), துர்க்கா(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணாகரன்(பிரான்ஸ்), நகுலேஸ்வரன்(லண்டன்), நிமலன்(இலங்கை), வஜிந்திரன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும், பிரஜித், திலக்ஷி, சாருஷன், அனுஷன், நிவியன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்திகா, எழில், நீருபன், நிவேதா, சஜித், ஜீவித், சுஞ்சித், சயன், கஜனிகா, கனிஸ்கா, ஷானுயன், சௌமிகா, கிரிஷனா, கிரிஷன், கீர்த்தன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2013) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிர்காமநாதன் (மாமா),
1 ஆம் வட்டாரம், மண்டைதீவு.
வஜிந்திரன் (சகலன்)
0777- 274462

விராட் வில்வப் பிரம்மனே நமக!

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி சண்முகநாதன்



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சண்முகநாதன் நேற்று முன்தினம் (20.12.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் -வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும், சண்முகநாதன் அவர்களின் பிரியபத்தினியும், உதயகுமாரன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (லண்டன்), ஜெயக்குமார் (ஆசிரியர் -யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), இந்திரகுமார் (உரிமையாளர், அம்பாள் தளபாட நிலையம் - சுழிபுரம்), சந்திரகுமார் (ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி - யாழ்ப்பாணம்), சுரேஸ்குமார் (தொ.நு.உத்தியோகத்தர், UNHABITAT, புதுக்குடியிருப்பு), ஞானகுமார் (ஆசிரியர், க/இராஜவலை இந்து தேசிய கல்லூரி, திகன) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, முத்துலிங்கம், லோகேஸ்வரி, பத்மநாதன், ருக்மணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுரு, விஸ்வலிங்கம், செல்லப்பா பறுவதம், காலஞ் சென்றவர்களான அப்புத்துரை, தவமணி, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத் துனியும், தர்சினி, கௌசல்யா, சிவகௌரி, பங்கயற்செல்வி, இந்துமதி, உமாகௌரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிதுனா, வர்ணிகா, அஸ்வினி, ஹர்சனா, மோகிலன், மகிழ்ஜன், சகானா, பூர்விகா, பாவனா, தர்சனன், தினுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம். (42911)(12.6.3)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலா சுப்பிரமணியம்



உடுப்பிட்டி தெற்கு, 15ஆம் கட்டடையைச் சேர்ந்த திருமதி கமலா சுப்பிரமணியம் 20.12.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுகிர்தராணி, அன்னராணி, கிருஷ்ணலிங்கம் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நடராசா மற்றும் குணபாஸ்கரன், றோகினி (ஆசிரியை, யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), கிருஷ்ணபவன், கோணேஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீன், சுரஞ்சிதா, பவநிதா, அட்ஷயன், தபஸ்தி, சுலக்ஷி, தகவினி, காவியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
15ஆம் கட்டை, உடுப்பிட்டி. (43016)(7.6.3)
குடும்பத்தினர்.

# மினிபஸ் பயணிக்கு நேர்ந்த அவலம்

யாழ்ப்பாணம், டிசெ.22

பெண் பயணி ஒருவரை இடை நடுவில் இறக்கிவிட்ட மினிபஸ் நடத்துநர் மீதிப் பணத்தையும் கொடுக்கவில்லை.

இந்தச் சம்பவம் கடந்த 17 ஆம் திகதி யாழ்- கீரிமலை செல்லும் 788 இலக்க தனியார் பஸ்ஸில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்மணி திருமதி ம.நாகநந்தினி உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

கடந்த 17 ஆம் திகதி மாலை சீரணி நாகம்மாள் ஆலயத்துக்குச் சென்ற பின்னர் மாலை 5.45 மணியளவில் சீரணிசந்தியில் இருந்து தனியார் மினிபஸ் மூலம் பிரான்பற்றுக்கு மாலை 5.45 மணியளவில் பயணம் செய்தேன்.

சீரணிசந்தியில் இருந்து பிரான்பற்று கலைமகள் வரை இதற்கான கொடுப்பனவு ரூபா 10 ஆகும். ஆனால் 50 ரூபா செலுத்தி பயணத்தைத் தொடர்ந்த எனக்கு மினிபஸ் நடத்துநர் பிரயாணத்துக்கான கொடுப்பனவு தரவில்லையென பிரயாணிகளுக்கு முன்னால் சத்தமிட்டு கத்தினார்.

மிகுதி 40 ரூபாவும் தரவில்லை. அது மட்டுமன்றி இடைநடுவில் என்னை பலவந்தமாக இறக்கி விட்டார்.

இந்த பஸ் நடத்துநரின் ஒழுக்கம் தொடர்பாக நான் சண்டிலிப்பாய் சிற்றூர்தி சங்கத்தின் தலைவருக்கு யாழ். அரச அதிபருக்கும் கடிதம் எழுதியுள்ளேன் என்று பாதிக்கப்பட்டவர் கூறினார். (ஓ-50)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கார் சாரதி தேவை

தற்காலிக அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 500/= சம்பளம் வழங்கப்படும். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் நேரில் வரவும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 7904941

## கண்ணீர் காணிக்கை



மல்லாகம்.

எமது பாடசாலை அதிபர்

திருமதி றோசறி ஜெயநாயகி அந்தோனிமுத்து

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் கண்ணும் கருத்துமாக இருந்து அயராது பாடுபட்ட அன்னையே! மாணவரின் கல்வி உயர்வுக்காக கண்டிப்புடனும் அன்புடனும் சேவையாற்றி ஆசிரியர்களுடன் மதிப்புடனும் பரிவுடனும் பழகி பாடசாலையை நடத்திச் சென்ற அதிபர் அவர்களுக்கு எமது இதயம் கனிந்த கண்ணீர்க் காணிக்கைகள்

பாடசாலைச் சமூகம்,
யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்,

## ஊக்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான ஒரு மாத, இரண்டு மாத கோழிக்குஞ்சுகள் சாவகச்சேரியில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 021 7901833, 077 6556494

## காணி விற்பனைக்கு

1. கோண்டாவில் மேற்கு கலட்டி ஒழுங்கையில் வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

2. யாழ்ப்பாணம் நிராவியடியில் கடைச்சாமி வீதியில் 2பரப்பு வெறும் காணி கிணற்றுடனும் சுற்றுமதிலுடனும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 3164595

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய சூழலில் (2km) உள்ளடக்கிய சகல வசதிகள் கொண்ட வீடு தேவை. மாத வாடகை 30,000/= வழங்கப்படும். முற்பணமாக 1,00,000/= மட்டுமே வழங்கப் படும்.

தொடர்பு: 077 955 1617 (42952)(7.6.3)

## Personal Classes

இரசாயனவியல்
(Chemistry)
தமிழ், ஆங்கில மொழிமூலம்
தொடர்பு - 0776246865

## வாகனம் விற்பனைக்கு

ஐஸ்கிறீம் விற்பனைக்குரிய தரமான வாகனம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0778445445

## பஸ் விற்பனைக்கு

இசுஸ் ஜேனி L மொடல் 63-xxxx
இசுஸ் ஜேனி M மொடல் 30-xxxx
யாழில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (42953)(5.6.3)
077 015 7414/ 077 218 8701

## மரண அறிவித்தல்

### இளையதம்பி பூவிலிங்கம்



ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பாரதிபுரம் மத்தி, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பூவிலிங்கம் நேற்று முன்தினம் (20.12.2013) அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. [illegible]

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி செல்லையா



புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரத்தைப் பிறப்பிடமாகவும், புதிய செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி செல்லையா (19.12.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்வர்களான முருகேசு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், யசி, விசி (லண்டன்), கவிதா, அமுதா (பிரான்ஸ்), காலஞ்சென்ற முருகேசு, கந்தசாமி, புஸ்பமலர் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுரேஸ், விக்னேஸ்வரன் (லண்டன்), ராஜேந்திரன் (கொழும்பு), பற்குணம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தேனுகா, சியான், பிரசன்யா, பிரஸ்னா, திபிசன் பிரஷானி, ஜெஸ்மினா, கிஷான், அபிசேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.12.2013) ஞாயிறுக்கிழமை நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி:
0778087931
தகவல்: மா.சுரேஸ்
(மருமகன்)

## 90ஆம் நாள் கண்ணீர் நினைவுகள்

### அமரர் ராஜா துளசி



மலர்வு
12.11.1991

பறிப்பு
23.09.2013

அலரி விதையில் தொலைந்த - எம்
துளசி மலரே
ஆற முடியா வலிகள்
அனைத்தும் ஏனோ தந்தாய்?
கீற முடியா சுவராய்
இடிந்து போனோம் - உறவே
பிரிந்து போகும் போது
வருந்தி அழைத்தும் உந்தன்
வரவு கிடைக்கவில்லை...
வானரங்கள் உன்னை
வதைகள் செய்து தொலைத்தார் - அவரை
இறையோன் விழிகள் - கொல்லும்...

துணைக்காய் வீதி,
மாங்குளம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(43561)(7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான தீர்வுக்கு அரசுடன் பேச கூட்டமைப்பு எப்போதுமே தயார்

## *மஹிந்தவுக்கு சம்பந்தன் பதில்*

கொழும்பு, டிசெ. 22

"இலங்கையின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுடன் சேர்ந்து ஆக்கபூர்வமான - விசுவாசமான - நேர்மையான நல்லிணக்கத் தீர்வைக்காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தயாராகவே இருக்கின்றது. ஆனால், இந்த அரசுதான் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளுக் கேற்ப தீர்வுக்கான பிரேரணையை இதுவரை முன்வைக்கவில்லை."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த தீர்வுக்கான பிரேரணைக்கும் இந்த அரசு இன்னும் பதில் வழங்க வில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குப் பிறநாடுகளில் தீர்வைத் தேடுவதை விட தேசிய நல்லிணக்கத்துக்கு உள் நாட்டுக் குள்ளேயே தீர்வைக் காண்பதற்கு அரசுடன் கைகோர்க்குமாறு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நேற்று முன்தினம் நாடாளுமன்றில் அழைப்பு விடுத்திருந்தார் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ. ஜனாதிபதியின் இந்த அழைப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் சம்பந்தனிடம் நேற்று கேட்டபோது.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காண வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசுடன் சேர்ந்து ஆக்கபூர்வமான - விசு வாசமான - நேர்மையான நல்லிணக்கத் தீர்வைக் காண நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு எந்த வகையில் தீர்வு வேண்டும் என்ற பிரேரணையை இந்த அரசுடன் நாம் நடத்திய பேச்சுகளின்போது சமர்ப்பித்திருந்தோம். ஆனால், இதற்குரிய பதிலை அரசு இன்னும் எமக்கு வழங்கவில்லை.

அதுமட்டுமல்ல, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு, நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக பல சிபார்சுகளை முன்வைத்தது. ஆனால், இந்த நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபார்சுகளுக்கேற்ப தீர்வுக்கான பிரேரணையை அரசு இதுவரை முன்வைக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்" என்றார்.

(த-சி)

# திருமலை தாக்குதல் ஆதாரம் ஐ.நாவிடம் நாளை சமர்ப்பிப்பு

## *பான் கீ-மூன், நவிப்பிள்ளைக்கும் அனுப்பிவைப்பு*

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் திருகோணமலை நகரில் காணாமற் போனோரின் உறவுகள் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தின் மீது இராணுவப் புலனாய்வாளர்கள் மற்றும் காடையர்கள் குழு நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் குறித்த ஆவணம் ஐ.நாவிடம் நாளை திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்திடம் காணாமல்போனோரைத் தேடியறியும் குழு இந்த ஆவணத்தைக் கையளிக்கவுள்ளது.

இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் இந்த ஆவணம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

காணாமல்போனோரைத் தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் இந்தத் தகவலை நேற்று உறுதிப்படுத்தினார்.

இந்த ஆவணத்தில் திருமலைத் தாக்குதல் குறித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் காணாமற் போனோர் மற்றும் அவர்களைத் தேடும் உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத் தருமாறும், இலங்கையில் உள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருமலைத் தாக்குதலில் காணாமற் போனோரின் உறவுகள், காணாமற் போனோரைத் தேடியறியும் குழுவின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, திருமலையில் காணாமற் போனோரின் உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்தாது தாக்குதல் நடத்தியவர்களுக்கு ஒத்தாசை வழங்கிய திருகோணமலை தலைமையகப் பொலிஸாரின் செயல் குறித்து கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் முறையிடப்பட்டுள்ளதாக சுந்தரம் மகேந்திரன் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திருக்கேதீஸ்வர

நேற்று சனிக்கிழமை காலை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் முன்னிலையில் குறித்த இடத்தில் புதைகுழி தோண்டும் பணிகள் தொடங்கின. இதன்போதே இந்த எச்சங்கள் மீட்கப்பட்டன.

மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மாந்தை சந்தியில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு செல்லும் வீதியில் இருந்து சுமார் 75 மீற்றர் தொலைவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குடி தண்ணீர் விநியோகத்துக்காக குளாய்களை இணைப்பதற்காக வெட்டிய குழியில் இருந்து மனித மண்டை ஓடுகள் மற்றும் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டன.

சம்பவம் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. நேற்று முன்தினம் மூன்று மனித மண்டை ஓடுகளும் எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன.

இந்த நிலை யில் மன்னார் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக மன்னார் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டார்.

பின்னர் மன்னார் நீதிவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் மனித எச்சங்கள் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இதன் போது மேலும் சிதைவடைந்த நிலையில் துண்டு துண்டுகளாக மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு மண்டை ஓடுகள் முழுமையாக மீட்கப்பட்டதாக தெரிய வருகிறது.

தொடர்ந்தும் குறித்த பகுதியில் மீட்புப்பணிகள் இடம் பெற்று வருகின்றது.

மனித எச்சங்கள் மீட்கப்பட்டு வரும் இடத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி பிரிமூஸ் சிறாய்வா சென்று பார்வையிட்டார்.

குறித்த பகுதி தொல் பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கான இடம் என குறிப்பிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-12)

### ஜெனிவா

ஐக்கிய மாநாடு ஏற்பாடு செய்யப்படுகின்றது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள குறித்த மாநாட்டில் அனைத்து தரப்பினரும் பங்கேற்கவுள்ளனர்.

அரசியல் வாதிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், மாணவர் அமைப்பினர் என அனைத்துத் தரப்புக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்று அவர் பதிலளித்தார். அதே வேளை, எப்போது நடைபெறும் என வினவிய போது, மார்ச் மாதத்தில் நடைபெறும் - என்றார் அமைச்சர்.

(த-சி)

### காணாமற்போனோர்

1990 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை வடக்கு - கிழக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு நியமிக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, முதலில் ஒக்ரோபர் மாதத்துடன் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படுவதை நிறுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தது. பின்னர் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று அது அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் பொது மக்களால் 6 ஆயிரம் முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 5 ஆயிரம் முறைப்பாடுகள் முப்படையினர் மற்றும் பாதுகாப்புத்தரப்பு உத்தியோகத்தர்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

### மணலுக்குள்

செயலிழக்க வைத்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டி, இமையாணனில் உள்ள மைதானம் ஒன்றுக்கு அருகில் கட்டடம் கட்டுவதற்காக மணல் கொண்டு செல்லப்பட்டது. மணலைத் தேவைக்கு அள்ளிக்கொண்டிருக்கும் போதே குறித்த கைக்குண்டு இருந்தமை தெரியவந்தது.

அந்தக் கைக்குண்டு மணலுடன் சேர்த்து ஏற்றப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-4)

### வரவு

ளர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி வரவு-செலவுத் திட்டத்தை ஆளுநர் நேற்று அங்கீகரித்துள்ளார்.

(த-5)

### ஒடுக்கப்படும்

இவ்வாறு தெரிவித்தார் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட அதிபரும் யாழ். மாவட்ட நீதி சமாதான ஆணைக் குழுவின் தலைவருமான அருட்திரு. மங்களராஜா அடிகள்.

யாழ்.மறை மாவட்ட ஆயர் இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் குருத்துவப் பொன்விழா நிகழ்வு நேற்று யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மங்களராஜா அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை மன்னார் ஆயராக பணியாற்றிய காலம் தொடக்கம் யாழ்.மறை மாவட்ட ஆயராக கடமையாற்றும் தற்போதைய காலம் வரை மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் குரலாக ஒலித்தவர் மக்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு எடுத்துக் கூறி வருபவர்.

நடுநிலையான இவரது குருத்துவப் பணியால் வெளிநாடுகளில் இருந்து பிரச்சினைகளை ஆராய்வதற்கு வருகை தரும் இராஜதந்திரிகள் ஆயர் கூறுவதைச் செவிமடுத்து விட்டு திருப்தியுடன் திரும்பிச் செல்கின்றார்.

தொடர்ந்தும் இவரது பணி தமிழ் மக்களுக்கு நன்மையுடையதாக அமையும் என்றார்.

முன்னதாக யாழ் மரியன்னை பேராலயத்தில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பொன்விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஆயர் இல்லத்தில் இருந்து யாழ். ஆயர் நாதஸ்வர இசையுடன் ஏனைய ஆயர்கள் குருக்கள் புடை சூழ அழைத்து வரப்பட்டு பொன்விழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந் நிகழ்வுகளில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை, திருமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, அனுராதபுரம் ஆயர் மேதகு நோபேட்ட அன்ராடி ஆண்டகை, ஆகியோரும் கலந்து கொண்டு நன்றிக் கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், அரச அதிகாரிகள் ஏனைய திருச்சபைகளின் தலைவர்கள் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(த-14-135)

### காணாமற்போனோரை

பாடு பதிவு செய்யச் சென்ற வேளை, அனுமதி பெறாமல் ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பதாகவும், தமிழ் மக்களைத் திரட்டி இனவாதத்தைத் தூண்ட முயற்சிப்பதாகவும் தெரிவித்து நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்வேன் என்று திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தன்னை மிரட்டினார் எனச் சுந்தரம் மகேந்திரன் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தாக்குதல் நடத்தியவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும், தாக்குதல் நடத்தப்படும் போது அதனைத் தடுக்க முற்படவில்லை என்றும் பொலிஸ்மா அதிபரிடம் கையளித்துள்ள முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

(த-5)

### கார்களை

திருப்பி அனுப்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொலிஸாரின் உடந்தையுடனான இந்த மோசடிகள் இடம்பெறுகின்றனவா என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி யெழுப்பியுள்ளனர்.

இவ்வாறான சம்பவம் ஒன்று அண்மையில் பளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கேகாலை, யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி பாலகிருஷ்ண செட்டியார் என்பவரே இதன் பிரதான சூத்திரதாரி என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவருக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்னர் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த நபர் தென் பகுதியில் பலரிடம் சொகுசு கார்கள், ஹையஸ் வாகனங்கள், பிக்கப் வாகனங்கள் என சுமார் 30 மேற்பட்ட வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அவற்றை யாழ்ப் பாணத்துக்கு கொண்டு வந்து அடகு வைத்து பல இலட்சக் கணக்கான பணத்தைப் பெற்றுள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர் இவ்வாறு வாகனங்களை அடகு வைத்து சில நாள்களுக்குப்பின் யாழ்ப்பாணத்துக்கு வரும் அந்த வாகனங்களின் உரிமையாளர்கள், அவற்றை வைத்திருப்பவர்களை ஆயுத முனையில் அச்சுறுத்தி வாகனங்களை பறித்துச் செல்கின்றனர் என்று கூறப்படு கின்றது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவரே யாழ். பொலிஸில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். இதன் தொடர்ச்சியாக 17 கார்களை பொலிஸார் யாழ்ப்பாணத்தில் மீட்டு யாழ். நீதிமன்றில் பாரப்படுத்தியதுடன் அவற்றை மன்றின் அனுமதியுடன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் பாலகிருஷ்ண செட்டியார் என்ற நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

அந்த நபர் தற்போது மீண்டும் அதே மோசடியில் ஈடுபட்டு வருகிறார் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். தற்போது 10 க்கும் மேற்பட்ட சொகுசு வாகனங்களை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்த இவர் இங்குள்ள தனது உதவியாளர்கள் மூலம் அவற்றை அடகு வைத்து பணம் பெற்றுச்சென்றுள்ளார். அவர் சென்ற கையோடு இங்கு வந்த அவற்றின் உரிமையாளர்கள் குறித்த வாகனங்கள் வீதிகளில் பயணித்துக் கொண்டிருக்கும் போதே அவற்றை இடைமறித்து ஆயுத முனையில் அச்சுறுத்தி பறித்துச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அண்மையில் பளைப் பகுதியில் வைத்து கார் ஒன்றை இடைமறித்த அதன் உரிமையாளர் என்று கூறப்படுபவர் அதனை ஓட்டிச் சென்றவரின் கழுத்தில் கத்தியை வைத்து அவரை இறக்கி விட்டு வாகனத்தை பறித்துச் சென்றுள்ளார்.

இது குறித்து பொலிஸார் முறைப்பாட்டை பதிவு செய்ய மறுப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

இது குறித்து யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் டயஸிடம் கேட்ட போது, சொகுசுக் கார்களை எடுத்து வந்து அடகு வைப்பவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்ய முடியும் பொலிஸார் முறைப்பாட்டை பதிவு செய்ய வேண்டும். அவர்கள் அவ் வாறு பதிவு செய்ய மறுத்தால் எனது அலுவலகத்தில் முறையிட முடியும் என்றார்.

(த-4)

### உதயன்

மற்றையவர்கள் அங்கிருந்து தப்பியோடி விட்டனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர் நாதன் என்றும் அவரும் செய்தியாளரின் ஊரைச் சேர்ந்தவர் என்றும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

அரசியல் கட்சி ஒன்றின் நாடாளுமன்ற உறுப்பினரது தீவிர ஆதரவாளர்களில் ஒருவரான இவர் செய்தியாளர் மீது தாக்குதல் நடத்தியதன் பின்னணி குறித்தும் தாக்குதலின் பின்னால் உள்ள அரசியல் தொடர்பு குறித்தும் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(உ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வடதாரகை வெற்றி



வவுனியா. டிசெ.22
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் சாந்தன்.யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண் ணத்துக்காக மின்னொளியில் இடம்பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஏ.பி.சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட தாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வடதாரகை விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



யாழ்ப்பாணம், வவுனியா மேசைப் பந்தாட்டச் சங்கங்கள் அபான்ஸ், ஸ்ரக் இன்ரர் நஷனல் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும் அகில இலங்கை ரீதியான மேசைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்று சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் மோதும் வீராங்கனைகள். (த-23)

## சென்.மேரிஸ், டயமன்ஸ் அணிகள் மின்னொளி ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம். டிசெ.22
சுன்னாகம் சூராவத்தை நியூ வொரியஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் மின்னொளியிலான 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங் கள் நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி, வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில்நாவாந்துறைசென். மேரிஸ் 'ஏ' அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 4 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இதனையடுத்து இரு அணியினருக்கும் 5 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டது. இதன்போது இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் மேலும் 5 நிமிடங்கள் வழங்கப்பட்டது.

இதன்போது நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி ஒரு கோலைப் போட்டது.

இளவாலை யங்ஹென்றிஸ் அணியால் கோல் எதனையும் போட முடியவில்லை.

ஆட்டமுடிவில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 3 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இரு அணியினருக்கும் மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டது. இதன் போதும் கோல்கள் எதுவும் போடப்படாமையால் மேலும் 5 நிமிடங்கள் வழங்கப்பட்டது.

இதன்போது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி ஒரு கோலைப் போட்டது.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி யால் எதுவித கோல்களையும் பெற முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் வதிரி டய மன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்றது. (த-23)

## பொம்மர்ஸ் - நவஜீவன்ஸ் இறுதியாட்டத்தில் மோதும்

வடமராட்சி.டிசெ.22
வை.எம்.சி.ஏயினால் நடத்தப்பட்டு வரும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் தெரிவு செய்யப்பட்ட தரம் 'ஏ' அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு வதிரி பொம்மர்ஸ் அணியும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி யும் தெரிவு செய்யப்பட்டுள் ளன.

இதன் அரை இறுதியாட்டங்கள் கடந்த வியாழக் கிழமை கொற்றாவத்தை றேஞ் சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

முதல் அரை இறுதியாட்டத்தில் இமையாணன் மத்தி விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதி யது. இரு அணிகளும் சம பலத் துடன் மோதியதால் இடை வேளைக்கு முன்னர் இரு அணி களாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போதும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை விளையாட்டில் நிரூபித்துக் கொண்டிருந்தனர். இதனால் இடைவேளையின் பின்னரான ஆட்டமும் சமநிலையில் முடிவடைய சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பொம் மர்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதியாட்டத்தில் வல்வை அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில்முற்பாதியாட்டம்வல்வை அணிக்கே வாய்ப்பானதாக இருந்தபோதும் அவர்கள் அதனைச் சரியாகப் பயன் படுத்த தவறிவிட்டனர். ஆனால் 13 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி வீரர் உஷானந் தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி கோலாக்க இடைவேளைக்கு முன்னர் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது வல்வை அணியினர் ஆட்ட வியூகத்தை மாற்றத் தொடங்கினர். இதனால் 7 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் ரசிகாந் ஒரு கோலைப் போட்டு 1:1 எனக் கோல்களின் எண்ணிக் கையைச் சமப்படுத்தினார். இதனால் ஆட்டம் உச்சக் கட்டத்தை எட்டியது. அதன் பின்னர் 12 ஆவது நிமிடத்தில் நவஜீவன் அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. அதனை சரியாகப் பயன் படுத்திய அந்த அணி வீரர் உஷானந் மேலும் ஒரு கோலைப்போட்டார்.

அடுத்த 16 ஆவது நிமிடத்தில் அந்த அணி வீரர் பிரியா மேலும் ஒரு கோலைப் போட ஆட்டம் நிறைவுக்கு வந்தது. முடிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (த-422)


### கண்ணீர் அஞ்சலி



யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகததில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி கோமலா சிவசோதி அவர்களின் தந்தையார்

**பொன்னுத்துரை மகாதேவன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (42883) (7.6.3)
யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.

### மரண அறிவித்தல்

**திருமதி மல்லிகாதேவி பாலசிங்கம்**



தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மல்லிகாதேவி பாலசிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர் சீ.சீ.த.க. பாடசாலை) நேற்று (21.12.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசரட்ணம் (ஓய்வு பெற்ற அதிபர்), மீனாட்சியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் ச.வே பாலசிங்கம் (ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் முல்லைத்தீவு) அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சௌந்தரராசா, நேசராசதேவி (பவி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் நந்தினி தேவி, சிவராசா (ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர முல்லைத்தீவு) ஆகி யோரின் அன்பு மைத்துனியும் மிதுனா (லண்டன்), அபராஜதன் (லண்டன்), ஜெ சுஜீவன் (கால்நடை வைத்தியர் பூநகரி) ஆகியேபரின் பாசமிகு தாயும் சுரேஷ் (லண் டன்), சிவமாலா (லண்டன்), துஷாந்தி (போதனாசிரியர் வவுனியா வளாகம்), சஞ்சிவ் (கொமசல் வங்கி), திருநேசவேளாங்கன் (லண்டன்) அன்புமாமியும் சங்கவை (லண்டன்), சங்கையாணன் (வைத்தியர்) ஆகியோரின் பெரியதாயும் ஆதித்தியா, சாகித்தியா, அகளன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (23.12.2013)திங்கட்கிழமை [illegible] அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் [illegible]

தண்ணீரூற்று

தகவல்:
குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை சிவராமலிங்கம் (பிரபல சோதிடர்)**



திருநெல்வேலி, கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவராம லிங்கம் நேற்று (21.12.2013) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், சுவர்ணாம்பிகை( உமா) அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், முருகேசு ஆகியோரின் அன்புச் சகேதரனும், திருமதி நடராஜா அற்புத மணியின் மைத்துனரும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் பாஸ்கரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (22.12.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

[illegible] வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: சி.சுவர்ணாம்பிகை
(உமா - மகள்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தானை வீழ்த்தி இலங்கை வெற்றி

பாகிஸ்தானுக்கு எதிராக இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி இரண்டு இலக்குகளால் வெற்றி யீட்டியுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்புடன் களமிறங்கிய பாகிஸ்தான் சார்பில் அஹமட் சிகாட் அதிரடியாக ஆடி 124 ஓட்டங்களைக் குவித்தார். மேலும் மிஸ்பா உல் ஹக் 59 ஓட்டங்களையும், ஷகீட் அப்ரிடி 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்கமால் பெற்றனர். 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் நான்கு இலக்குகளை மட்டுமே இழந்த பாகிஸ்தான் அணி 284 ஓட்டங்களைக் குவித்தது.

இதன்படி 285 என்ற கடினமான இலக்கை நோக்கி, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி சார்பில் குமார் சங்கக்கார 58 ஓட்டங்களையும், அஞ்சலோ மத்தியூஸ் 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். முடிவில் 49.4 பந்துப்பரிமாற்றங்களில் எட்டு இலக்குகளை இழந்த நிலையில் 287 ஓட்டங்களை விளாசி இலங்கை வெற்றியீட்டியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார். ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில், முதலாவது போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்ற நிலையில், தொடர் 1-1 எனச் சமப்படுத்தப்பட்டுள்ளது. (கு)



# முதலிடத்தில் ஸ்பெயின்

உதைபந்தாட்ட அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில், உலக சம்பியன் ஸ்பெயின் அணி முதலிடத்தில் நீடிக்கிறது. உதைபந்தாட்ட அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை உலக உதைபந்தாட்ட சம்மேளனம் வெளியிட்டது. இதில் உலக சம்பியன் ஸ்பெயின் அணி 1507 புள்ளிகளுடன் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டது. அடுத்த 17 இடங்களில் ஜேர்மனி(1318 புள்ளி), ஆர்ஜென்ரீனா(1251), கொலம்பியா(1200), போர்த்துக்கல்(1172), உருகுவே(1132), இத்தாலி(1120), சுவிட்சர்லாந்து(1113), நெதர்லாந்து(1106), பிரேசில் (1102), பெல்ஜியம்(1098), கிரீஸ்(1055), இங்கிலாந்து(1041), அமெரிக்கா(1019), சிலி(1014), குரோஷியா(971), ஐவரிகோஸ்ட்(918), உக்ரைய்ன் (907) அணிகள் நீடிக்கின்றன. பிரான்ஸ்(20ஆவது இடம்), மெக்சிகோ(21ஆவது) அணிகள் தலா ஒரு இடம் பின்தள்ளப்பட்டன. போஸ்னியா அணி 19ஆவது இடத்துக்கு முன்னேறியது. இதில் இந்திய அணி 148ஆவது இடத்தில் இருந்து, 6 இடங்கள் பின்தள்ளி 154ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இந்தியா, மலேசியா, லீக்டன்ஸ்டைன், போர்ட்டோ ரிகோ அணிகள் தலா 141 புள்ளிகளுடன் 154ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன. (கு)



# புது வருடத்தில் இலங்கை அணிக்கு புதிய பயிற்சியாளர்

இலங்கை அணியின் புதிய பயிற்சியாளராக இங்கிலாந்தைச் சேர்ந்த முன்னாள் வீரர் போல் பப்பிரேஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள போல், ஜனவரி முதலாம் திகதி முதல் பயிற்சியாளராக செயல்படுவார் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்தை சேர்ந்த முன்னாள் வீரரான போல், ஏற்கனவே இலங்கை அணியின் துணைப் பயிற்சியாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



# உலக டெஸ்ட் சம்பியன்ஸிப் சந்தேகத்தில்



2017ஆம் ஆண்டு இடம்பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஸிப் தொடர் இடம்பெறுமா என்ற சந்தேகம் காணப்படுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தத் தொடருக்கான ஒளிபரப்பாளர்கள் தொடர் தொடர்பான முழுமையான ஆர்வத்தை வெளிப்படுத்தாமையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலக டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் 4 இடங்களிலுமுள்ள அணிகள் 2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வைத்து முதலாவது டெஸ்ட் சம்பியன்ஸிப் தொடரில் பங்குபற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. உலகக் கிண்ணத்துக்கு ஒப்பானதாக இந்தத் தொடர் கருதப்பட்டது. ஆனால் தற்போது இந்தத் தொடர் தொடர்பாக சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தத் தொடர் உலகத்தினர் அனைவரையும் ஈர்க்குமா என்ற சந்தேகம் ஒளிபரப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெற்றுவரும் ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி முழுமையான தடுமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ள நிலையில்,

அவ்வணி தொடர்ந்தும் தடுமாறுமாயின் முதல் 4 இடங்களை இழக்கும் என்பதோடு, அதன் காரணமாக போட்டியை நடாத்தும் நாடு அத்தொடரில் பங்குபற்ற முடியாது போகும் நிலை உருவாகும்.

இதன் காரணமாக இத்தொடருக்கான பார்வையாளர் வருகை மிகக் குறைவடையும் எனவும், அதன் காரணமாக அத்தொடருக்கான [illegible] குறைவடையும் எனவும் ஒளிபரப்பாளர்கள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (கு)

## சாதனை படைத்தார் சந்தர்போல்

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர்களின் பட்டியலில் மேற்கிந்திய தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர் சிவ்நரைன்சந்தர்போல் 6ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார். நியூசிலாந்து அணியுடனான போட்டியில் ஆட்டமிழக்காது 177 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அவர் இந்த இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவர் தற்போது 11 ஆயிரத்து 199 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவருக்கு முன்னால் உள்ள பிரைன் லாராவின் ஐந்தாம் இடத்தை பிடிப்பதற்கு, சந்தர்போலுக்கு இன்னும் 754 ஓட்டங்களே தேவையாக உள்ளது. (கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில் உயர்தரத்தில் இம்முறை சிறந்த பெறுபேற்றை பெற்ற ஒரே கல்வி நிறுவனம்

**A/L DAY CLASS** | ஆரம்பம் : 23.12.2013 (நாளை) திங்கள் 7.00 மணி

கலை, வர்த்தகப்பிரிவு

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் **NEC** மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் அருகில்)

**German Language Academy**

ஜேர்மன் மொழியும் இலகு வழியும்

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தும் A1பரீட்சைக்கு ஏற்றவாறு ஜேர்மனியில் பல வருடங்கள் வசித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. வேறு எங்கும் இல்லாதவாறு மிகக்குறைந்த கட்டணத்துடன் பரீட்சைகள் ஆரம்பமாகும்.

No.23, Palaly Road, Jaffna. 077 970 7322 (40784)(12.3.6)

**French Classes** பிரெஞ் வகுப்புகள்



af French மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் Alliance Francaise de Jaffna (AF) மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. முற்கூட்டியே (தொ.பேசி மூலமும்) அனுமதிகளைப் பெறுவது சிறந்தது.

மேலதிக விபரங்களுக்கு T.P.021.222.8093 / நேரில்

61, Kachcheri-Nallur Road, Jaffna

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

After O/L or A/L

It's the time to make a career development!

**aat SRI LANKA** 2014 July BATCH (I)

ஆரம்பம் 04.01.2014 சனிக்கிழமை மாலை 1.00 மணி



Level 1 : Sat 1.00pm

Level 2 : Sat 1.00pm

Final Level : Sat 1.00pm

உங்களது தொழில்சார் துறைக்கான முதற் படியினை எமது அனுபவம் மிக்க விரிவுரையாளர்களுடன் ஆரம்பியுங்கள்

Chief Management Committee,

**Wisdom Technical College,**

விஸ்டம்

No 475 K.K.S Road Jaffna, (Close to Sivan Kovil),

Hello: 021-3207315, 0777-243184,

Email: aatwtc@gmail.com,

Fb:www.facebook.com/aat.wtc.jaffna, Twitter: twitter.com/aat_wtc.

## CHEMISTRY 2014 A/L DIAS B.Sc (Hons) Splinche

## மாதாந்த தொடர் போட்டிப்பரீட்சை பெறுபேறுகள்

NEW SCIENCE WORLD NAVALAR ROAD JUNCTION, BROWN ROAD, JAFFNA. Victory Must

| | MEDIUM | NAME | SCHOOL | STREAM | MARKS | RANK |
|---|---|---|---|---|---|---|
| 1 | T | Shythaky Jeyarajah | V.G.H.S | Bio | 96 | 1 |
| 2 | T | Kirushnapillai Priyankan | J.H.C | Bio | 94 | 2 |
| 3 | T | Paralakanthan Prathees | J.H.C | Maths | 91 | 3 |
| 4 | E | Sivalingam Ampatishan | J.H.C | Maths | 91 | 3 |
| 5 | T | Thuraisingam Arunan | J.H.C | Maths | 90 | 5 |
| 6 | T | Kanagarajah Pavalayan | J.H.C | Maths | 90 | 5 |
| 7 | T | Cril Mahinthan | S.J.C | Bio | 90 | 5 |
| 8 | T | Robert Dean Jenifert | S.J.C | Bio | 90 | 5 |
| 9 | E | Pakiyarajah Darukeesan | J.H.C | Maths | 90 | 5 |
| 10 | T | Sivagamoorthy Anuraj | C.H.C | Maths | 90 | 5 |
| 11 | T | Abiramy Sothithasan | V.G.H.S | Bio | 89 | 11 |
| 12 | E | Kukanathan Kowsigan | J.H.C | Bio | 88 | 12 |
| 13 | T | Rathymohan Thenushan | C.H.C | Bio | 88 | 12 |
| 14 | T | Ramamoorthy Janath | Kn.C.C | Maths | 88 | 12 |
| 15 | E | Muhunthan Tharushihan | S.J.C | Bio | 87 | 15 |
| 16 | E | Peranantharajah Deneshan | J.H.C | Maths | 87 | 15 |
| 17 | T | Narmatha Thirugnanaselvan | V.G.H.S | Bio | 87 | 15 |
| 18 | T | Arumugathasan Majurakeerthan | J.H.C | Maths | 86 | 18 |
| 19 | T | Paramarajah Kalaban | J.H.C | Maths | 86 | 18 |
| 20 | T | Mahadevan Sheetharon | J.H.C | Bio | 85 | 20 |
| 21 | T | Ravichanthiran Mayoorethan | J.H.C | Bio | 85 | 20 |
| 22 | T | Saranga Sabhanayakam | V.G.H.S | Bio | 84 | 22 |
| 23 | T | Shanmugaratnam Sivakanthan | J.H.C | Maths | 84 | 22 |
| 24 | E | Sivanesan Achuthan | J.H.C | Maths | 84 | 22 |
| 25 | E | Thilakshi Chandrasekar | V.G.H.S | Bio | 84 | 22 |
| 26 | T | Peranavi Thiyagamoorthy | V.G.H.S | Bio | 83 | 26 |
| 27 | T | Balasubramanium Kingston | S.J.C | Maths | 82 | 27 |
| 28 | T | Mariyagunaratnam Anojan | J.H.C | Maths | 82 | 27 |
| 29 | E | Anosha Ignatius | V.G.H.S | Maths | 82 | 27 |
| 30 | T | Rajaratnam Panuvaran | J.H.C | Bio | 81 | 30 |
| 31 | E | Mohanathas Moganalakshan | J.H.C | Maths | 81 | 30 |
| 32 | T | Senthichelvan Aarunan | J.H.C | Maths | 81 | 30 |
| 33 | T | Tharshika Sathiyathasan | V.G.H.S | Bio | 80 | 33 |
| 34 | T | Visakaja Panchayuthan | V.G.H.S | Bio | 80 | 33 |
| 35 | T | Pararajasingam Sivaniruban | S.J.C | Maths | 80 | 33 |
| 36 | T | Kumararatnam Umasuthan | J.H.C | Maths | 80 | 33 |
| 37 | T | Kumaravelrajah Kabilan | C.H.C | Maths | 80 | 33 |
| 38 | E | Jeyarajah Sharmija | V.G.H.S | Bio | 80 | 33 |
| 39 | T | Ragavi Bakeerathan | V.G.H.S | Bio | 79 | 39 |
| 40 | T | Mathumai Thevamanoharan | V.G.H.S | Bio | 79 | 39 |
| 41 | T | Rishanthini Punniyarajah | V.G.H.S | Bio | 79 | 39 |
| 42 | T | Sivapathasuntharam Sajiththijan | J.H.C | Maths | 79 | 39 |
| 43 | T | Parameswaran Tharsan | C.H.C | Maths | 79 | 39 |
| 44 | T | Dhadchayini Rajahram | V.G.H.S | Bio | 78 | 45 |
| 45 | T | Jeyasiri Logapawan | J.H.C | Maths | 78 | 45 |
| 46 | T | Sachithananthan saravanan | Kn.P.C.C | Maths | 78 | 45 |
| 47 | E | Brihadiswaran Gunavaran | J.H.C | Maths | 78 | 45 |
| 48 | T | Thadsajiny Vigneswaran | J.K.H.C | Bio | 77 | 49 |
| 49 | T | Thushyanthiny Kavirajan | V.G.H.S | Bio | 77 | 49 |
| 50 | T | Mathiyalakan Sujikumar | J.H.C | Maths | 77 | 49 |
| 51 | T | Kathirkamanathan Niranjan | C.H.C | Maths | 77 | 49 |
| 52 | T | Jeyakanesan Jeyakeethan | C.H.C | Maths | 77 | 49 |
| 53 | T | Abivarshi Kanakarajah | V.G.H.S | Maths | 76 | 54 |
| 54 | T | Nagarajah Mohanashanth | J.H.C | Maths | 76 | 54 |
| 55 | T | Mithila Sivanathan | V.G.H.S | Bio | 76 | 54 |
| 56 | T | Amalaseeli Arulthaasan | J.K.H.C | Maths | 75 | 57 |
| 57 | T | Nivethika Baskaran | C.G.C | Bio | 75 | 57 |
| 58 | T | Vijayakumar Yathushan | S.J.C | Bio | 75 | 57 |
| 59 | E | Gengatharan Nisaharan | J.H.C | Maths | 75 | 57 |
| 60 | T | Premisha Premanathan | C.H.C | Maths | 75 | 57 |
| 61 | T | Vegneswaran Dinusigan | Kn.C.C | Maths | 75 | 57 |
| 62 | T | Sivapalan Sivashankar | J.H.C | Maths | 74 | 63 |
| 63 | T | Thamilchelvan Sainadaraj | J.H.C | Maths | 74 | 63 |
| 64 | T | Selvarasa Menaga | Kn.C.C | Bio | 74 | 63 |
| 65 | T | Mathugeerthana Varatharayam | Kn.C.C | Maths | 74 | 63 |
| 66 | T | Kirushika Kamalanathan | J.H.L.C | Bio | 74 | 63 |
| 67 | T | Renuka Balasingam | J.U.C | Bio | 73 | 68 |
| 68 | T | Kobika Parimalakanthan | V.G.H.S | Bio | 73 | 68 |
| 69 | T | Velautham Kokulan | J.H.C | Bio | 73 | 68 |
| 70 | E | Vijayaratnam Vahesan | J.H.C | Maths | 73 | 68 |
| 71 | T | Thavarasa Senthalan | C.H.C | Maths | 73 | 68 |
| 72 | T | Kaneshalingam Datsigan | J.H.C | Maths | 73 | 68 |
| 73 | T | Ravichanthiran Shaluja | V.G.H.S | Bio | 73 | 68 |
| 74 | T | Gowsalya Balasubramaniam | V.G.H.S | Bio | 72 | 75 |
| 75 | T | Veneka Logenthiran | J.K.H.C | Bio | 72 | 75 |
| 76 | E | Kulenthirarajah Kobishanth | J.H.C | Maths | 72 | 75 |
| 77 | T | Subithirah Sivasubramaniam | V.G.H.S | Bio | 71 | 78 |
| 78 | T | Vivekanantha Kajanantha | J.H.C | Maths | 71 | 78 |
| 79 | E | Mahenthiran Buveenthiran | J.H.C | Maths | 71 | 78 |
| 80 | T | Vaishnavi Thangarajah | V.G.H.S | Bio | 69 | 81 |
| 81 | T | Anoja Thayananthan | J.K.H.C | Bio | 69 | 81 |
| 82 | T | Nirvigha Senthinathan | J.H.L.C | Bio | 69 | 81 |
| 83 | T | Yathushna Arunakirivasan | V.G.H.S | Bio | 69 | 81 |
| 84 | T | Loganayagam Araharan | S.J.C | Maths | 69 | 81 |
| 85 | T | Sukumar Priyatharshan | J.H.C | Maths | 69 | 81 |
| 86 | E | Sivakumaran Sarangan | J.H.C | Maths | 69 | 81 |
| 87 | T | Sajeeva Jeyakumar | C.H.C | Bio | 69 | 81 |
| 88 | T | Ketheeswaranathan Sujananth | J.H.C | Maths | 68 | 89 |
| 89 | T | Mariyagunaratnam Anojan | J.H.C | Maths | 68 | 89 |
| 90 | T | Kanagalingam Sivanujan | J.H.C | Maths | 68 | 89 |
| 91 | T | Jane Madhusha Selvaraja | C.G.C | Bio | 68 | 89 |
| 92 | T | M.Mayuravani | V.G.H.S | Bio | 68 | 89 |
| 93 | T | Archchana Sivarajah | V.G.H.S | Bio | 67 | 95 |
| 94 | T | Tharmi Vijayakumaran | C.G.C | Bio | 67 | 95 |
| 95 | T | Selvarathinam Sivanujan | J.H.C | Maths | 67 | 95 |
| 96 | T | Sivarasa Rameswaran | J.V.H.C | Maths | 67 | 95 |
| 97 | T | Konewaran Anbu | Kn.C.C | Bio | 67 | 95 |
| 98 | E | Kanjana Senthinathan | V.G.H.S | Bio | 67 | 95 |
| 99 | T | Sinthuja Rasathurai | J.H.L.C | Bio | 66 | 101 |
| 100 | T | Sirimurugathas Thulasigavan | C.H.C | Maths | 66 | 101 |
| 101 | T | Shifa Ramees | V.G.H.S | Bio | 65 | 103 |
| 102 | T | Thivahari Ramanathan | V.G.H.S | Bio | 65 | 103 |
| 103 | T | Ashokumar Thiruventhan | J.H.C | Maths | 65 | 103 |
| 104 | T | Mahendraraja Miroshan | J.K.H.C | Maths | 65 | 103 |
| 105 | T | Thamarachchelvan Vithusan | C.H.C | Bio | 65 | 103 |

**German Institute**

German Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் Goethe Institute Exam க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. அடுத்த புதிய வகுப்புக்கள் 03.01.2014 அன்று ஆரம்பம்

தொடர்புகளுக்கு : T.P : 077 1604823

Priyanthan Kajenthini No. 10 Palaly Road, Jaffna. ஆரியகுளத்தடி

**TOWNACE**

விற்பனைக்கு (நிறுவன ஒட்டத்துடன்)

ஒரிஜினல் வளத்துடன் ஆங்கில இலக்க வான் மாத உழைப்பு ஒப்பந்தத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு :

✱ உ.வெ.ப 077 3618100 (Langotharan), 077 4548375 (Engineer)

NEW SCIENCE WORLD NAVALAR ROAD JUNCTION, BROWN ROAD, JAFFNA. Victory Must

**Victory Must**

Navalar Road Junction, Brown Road, Jaffna

Web : www. physicsocean.com

Email : info@physicsocean.com

For 2013 A/L.... Monday - Friday

**Day Classes**

Physics : R. Kugen
R. Kumaran

Chemistry : Dias
S.Sivakumar

Biology : S.Ponthivakaran
V.Umashankar

புதிய பிரிவு ஆரம்பம் : 23.12.2013 (திங்கள்) நேரம் : 7.30 A.M

**கடை வாடகைக்கு**

கஸ்தூரியார் வீதியில் 26அடி அகலமும், 70 அடி நீளமும் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறையுடன் சகலவசதிகளும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (நிதிநிறுவனங்கள், வங்கிகளுக்கு ஏற்றது)

தொடர்பு: 077 732 4648/077 732 4637

**LONDON METROPOLITAN COLLEGE**
**Computer Courses**

| | |
|---|---|
| Certifcate in MS Office 2013 | 2500 |
| Certifcate in JAVA,VB.Net, C#, ASP | 3500 |
| Internet & Email | 1500 |
| Diploma in Graphic Designing CS6 | 4500 |
| Diploma in Computer Studies | 4500 |
| Diploma in Computer Hardware | 2500 |
| Diploma in Computer Network | 4500 |
| Diploma in Web Development | 5500 |
| Diploma in Web Designing | 3500 |
| Diploma in Software Development | 5500 |
| Diploma in Computer Programing | 4500 |

**197, Arasady Road, Jaffna**
**Tel: 021 2227230 , 0217538395**

Christmas Offer from **DELL & HP Laptops**

Dell Inspiron 3521
I3-3rd Gen, 4GB, 500GB, Wi-Fi, Blue tooth, 15.5" with 2 Year Warranty-Free Caring Case
HP Pavilion 15
I3-3rd Gen, 4GB, 500GB, Wi-Fi, Blue tooth, 15.5" with 1 Year Warranty

**MEGA OFFER**
**Dell Laser Printer 9,400.00 Only**

STP Your Partner in IT Solution
# 49, 1st Cross Street (STP Junction), Jaffna
T.P:021 222 8147

**Personal Class-கணினி** TP:0779672038

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்
*Ms office, Internet & E-mail, DTP, Web Design,Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி. பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
ஆசிரியர்:KRC



**கபிலா** பாதணியகம்

13,நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

பாடசாலை மாணவர்களுக்கான Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள

பொறித்த விலையைவிடக் குறைவான விலையில்.... அசத்தலான தள்ளுபடி

**கபிலா** காலணியகம்

24, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சூரியகாந்தி

3

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எனப்படும் ஈபி.டி.பி. தனது வரலாற்றில் என்றுமில்லாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. வட மாகாண சபைத் தேர்தலில் அடைந்த படு தோல்வியைத் தொடர்ந்து நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்சியன் படுகொலை செய்யப்பட்டமை அது தொடர்பில் கட்சியில் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கைது செய்யப்பட்டமையும் இப்படியொரு கட்சியை இனியும் தொடர்ந்து நடத்த வேண்டுமா? என்று டக்ளஸ் தேவானந்தா சிந்திக்குமளவுக்கு நிலைமையை மோசமாக்கி இருக்கின்றன. எந்த முடிவையும் எடுக்கிறேன் என்று அமைச்சர் டக்ளஸ் தனது சக பாடிகளை மிரட்டுமளவுக்கு ஆடிப் போயிருக்கிறது கட்சியின் அடித்தளம்.



# ஆட்டம் குளோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 22 12 2013 ஞாயிற்றுக்கிழமை

# ரெக்சியன் கொலையின் உண்மைகளைத் தேடி...

புங்குடுதீவிலிருந்து அன்ரன், தில்லாலங்கடி

போருக்குப் பின்னரான சூழலில் நிகழ்ந்த முதலாவது அரசியல் கொலையும் ஈ.பி.டி.பியின் சகோதரப் படுகொலையும் என்று வர்ணிக்கப்படும், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியேல் ரெக்சியனின் படுகொலை பற்றிய விசாரணைகள் பல்வேறு திடீர் திருப்பங்களுடன் நகர்ந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக ஆளுங்கட்சியுடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத சூழ்நிலை தொடர்கையில் இந்தக் கொலையில் மாத்திரம் ஆளுங்கட்சியின் மாகாண சபை எதிரணித்தலைவர் அவசர அவசரமாகக் கைது செய்யப்பட்டிருப்பது பலரையும் ஆச்சரியப்படுத்தியிருக்கிறது. என்றாலும் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாகவே இதுவும் ஆளும் தரப்புக்கு அமைந்து விட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ரெக்சியனின் கொலைக்கு ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் எனப்படும் கந்தசாமி கமலேந்திரனுக்கும் ரெக்சியனின் மனைவிக்கும் இடையிலான தொடர்பே காரணம் என்று பொலிஸார் கதைகளைத் தெரிவித்தாலும் சாட்சியங்கள் இது கட்டுக்கதை என்று கூறுகின்றன. வழக்கு விசாரணையில் எதிர்காலத்தில் இந்த உண்மைகள் அம்பலப்படும் என்றும் ரெக்சியினின் மனைவியான அனித்தா தரப்பு அடித்துக்கூறுகின்றது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அது கூறுகின்றது.

அனித்தாவுக்கும் கமலுக்கும் தொடர்பில்லையென்பதை திட்டவட்டமாக மறுக்கும் அவரது தாயாரும், அனித்தாவின் பிள்ளைகளும், ஈ.பி.டி.பி. திட்டமிட்டு இந்தக் கொலையைச் செய்துவிட்டு தப்பிப்பதற்காக அனித்தாவை இதில் கோர்த்து விட்டது என்றே நம்புகின்றனர். எதுவானாலும் வழக்கு விசாரணையின்போது பல உண்மைகள் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

இந்தக் கொலையை அதிகாரிகள் உண்மையான விருப்புடனும் சுதந்திரமாகவும் அரசியல் பலத்துக்கு அடிபணியாமலும் விசாரிப்பார்களாக இருந்தால் அட்சய பாத்திரமாகப் பல உண்மைகள் வெளிவரும் என்று நம்பலாம். ஆனால் அதற்கான வாய்ப்பு எந்தளவுக்கு இருக்கின்றது என்ற கேள்விக்கு அப்பால் இந்தக் கொலையின் அரசியல் பின்புலம் பலமானதாக இருக்கும் என்று அச்சப்படுவதற்கான சாத்தியங்களைக் கொலை நடந்த இடத்தில் காண முடிகிறது.

கொலை செய்யப்பட்டபோது ரெக்சியன் வசித்தது அவரது மாமியாருக்குச் சொந்தமான வீட்டில். பிரதான வீதியில் இருந்து உள்ளே செல்லும் வீதியில் ஒதுக்கமாக அமைந்திருக்கிறது அந்த வீடு.

வீட்டுக்குள் நுழையும்போதே நாலைந்து நாய்கள் ஆள்களைப் பார்த்துக் குரைக்கின்றன. அவற்றை ரெக்சியனின் மாமியார் தனலட்சுமி மெல்ல அதட்டி அடக்குகிறார். "இதுகள் ஐஞ்சும் அண்டைக்கு அவனைக் கொலை செய்யேக்க பேசாமல் கிடந்துபோட்டு, இப்ப குலைக்குதுகள்" என்று கோபம் காட்டுகிறார்.

தனலட்சுமி திடமாகத் தெளிவாகப் பேசுகிறார். அவரது பேச்சில் ஈ.பி.டி.பியினர் மீதான கோபம் கொப்பளிக்கிறது. "அமைச்சர் பேசினார். பிள்ளைகளை யார் வளர்க்கப் போகிறீர்கள் என்றார். நான்தான் வளர்க்கப்போகிறேன் என்று சொன்னேன். தாங்கள் வழக்கம்போல் கொடுப்பனவு தருவார்கள் என்றார். எனக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அவனையே கொலை செய்து போட்டார்கள். இனி அவர்களின் காசு என்னத்துக்கு. எனக்குப் பிள்ளையளை வளர்க்கத் தெரியும்" என்று எடுத்தெறிகிறார்.

"இவர் (றெக்சியன்) நீண்டகாலமாக ஈ.பி.டி.பியில இருந்தவர். ஆனால் நாங்கள் அவைக்கு ஆதரவில்லை. நாங்கள் கூட்டமைப்புக்குத்தான் ஆதரவு" என்று தனது பின்னணியை விளக்கினார். தனது மகளை ரெக்சியன் தூக்கிச் சென்றே திருமணம் செய்தார் என்கிறார். முதலாவது மகள் பிறந்து மூன்று வருடங்களின் பின்னரே அவர்களுக்குத் தங்களுடன் மீண்டும் உறவு துளிர்த்தது என்கிறார்.

"அவர் இந்த வீட்டுக்குள்ள இருக்கிறேல்ல. பக்கத்தில கொட்டில் இருக்கு (சீற் போடப்பட்டு சீமெந்து நிலம் இழுக்கப்பட்ட அரை நிரந்தர கொட்டில் அது. மூன்று பக்க மறைப்பும் முன்பக்கம் திறந்தபடியும் இருக்கும்). அங்க கட்டில் போட்டிருக்கு. அதுதான் அவற்ற இடம். இந்த வீட்டுக்கு வந்ததில இருந்து அங்கதான் வாசம். கிட்டடியில் கரன்ட் குடுக்கேக்க அந்தக் கொட்டிலுக்கும் கரன்ட் எடுத்தவர். தன்ர அலுவலகம் மாதிரித்தான் அதை வைச்சிருந்தவர். வீட்டில உடுப்பு மற்ற ஏல்லாம் இருக்கு. தேவை எண்டா இங்க வருவார். சாப்பாட்டுக்கு இஞ்சதான் வாறவர். அவையள் (ஈ.பி.டி.பி.) வந்தால் அந்தப் பக்கக் கதவால அவற்ற இடத்துக்கு வந்திட்டு அப்பிடியே போயிடுவினம். வீட்டுக்க வரமாட்டினம்."

ரெக்சியன் வாழ்ந்த கொட்டிலுக்கும் வீட்டுக்கும் இடையில் நடுவே படலையுடன் கூடிய சாதாரணமான வேலி ஒன்றும் உண்டு.

"வீட்டில அவளுக்கும் அவருக்கும் சண்டை வரும். அதுக்குள்ள நான் போறேல்ல. சண்டைக்குப் பிறகு சிரிச்சுக் கதைப்பினம். அதால நான் அதுக்குள்ள போறேல்ல. சண்டையில் லாட்டி அது குடும்பமா என்ன? அதுக்காக கொலை செய்யிற அளவுக்கா போவார்கள்? அவர் மருந்தக் குடிச்சிருந்தா குடும்பப் பிரச்சினையில குடிச்சிட்டார் என்று சொல்லலாம். ஆனால், இவை திட்டம் போட்டுத்தான் கொலை செய்தவை" என்று முக்கிய திருப்பத்துக்குள் செல்கிறார் அவர்.

"யாரை நீங்கள் இவை என்று சொல்லுகின்றீர்கள்? ஈ.பி.டி.பியையா? டக்ளஸையா? கமலையா?" என்று கேள்வியைப் போட்டோம்.

"இவை எல்லாரும் சம்பந்தப்பட்டிருக்கினம். கமலின்ர மெய்ப் பாதுகாவலர் யாழ்ப்பாணத்தில் பிஸ்ரலுடன் பிடிபட்டதிலயிருந்து டக்ளஸுக்கு அவர் (கமல்) மேல வெறுப்பு. ஏனெண்டா மேலிடம் டக்ளஸை தட்டிக் கேட்டது. அதால டக்ளஸுக்கு கமல்ல கறள். கமலுக்கு இவர்ல கறள்" என்றார்.


கமலுக்கும், ரெக்சியனுக்கும் இடையில் கடந்த சில மாதங்களாகவே கட்சி விடயம் தொடர்பில் தொடர்ச்சியான முரண்பாடு இருந்து வந்தது என்கிறார் அவர்.

"கமல் மாகாண சபையில எதிர்கட்சித் தலைவர். இவர் அடுத்த எலக்சனுக்கு (நாடாளுமன்றத் தேர்தலுக்கு) போட்டிபோடக் கையெழுத்து வைச்சிட்டார். அத்தோட கச்சேரிக் கூட்டத்தில இஞ்ச (தீவகத்துக்கு) ஒதுக்கின காசுக்கு கணக்கு கேட்டிருக்கிறார். அந்தக் காசுக்கு என்ன அபிவிருத்தி செய்தனீங்கள் எண்டும் கேட்டிருக்கிறார். அதால அவைக்குக் கோபம் " என்று மாமியார் தனலட்சுமி சொல்லி முடிக்கும் போதே குறுக்கிட்டார், ரெக்சியனின் மகள். " அப்பா நாடாளுமன்ற தேர்தலுக்கு கையெழுத்து வைச்சதை எங்களிட்ட சொன்னவர். அதில அப்பா வென்றா அவருக்கு கீழ இவர் (கமல்) இருக்கிறது கஷ்டம்தானே. அதுதான் கமலுக்கு அப்பாவில கோபம்" என்றார்.

"சம்பவம் நடந்த அன்று நான் கொழும்பில் நின்றேன். கடைசி மகன் சுற்றுலா போறத்துக்காக அவ (அனித்தா – ரெக்சியனின் மனைவி) காசு எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு கையெழுத்து வைக்கப் போயிட்டார். இரண்டாவது மகன் பள்ளிக்கூடம் போயிட்டான். மூத்த மகள் இந்த முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுத்திறாள். அதால அவள் 'ஸ்ரடி லீவில' நிக்கிறாள். அவளை வீட்ட தனிய விடப் பயந்து முன்னுக்கிருக்கிற சொந்தக்காரர் வீட்டில விட்டிட்டுப் போயிற்றா

இவர் இஞ்ச இருக்கிற ஈ.பி.டி.பி பெடியனோட மீற்றிங் ஒன்றுக்குப் போனவர். அப்ப இஞ்ச ஒருத்தரும் இல்லையெண்ட விசயம் தெரிஞ்சிருக்கு.

அவர் மீற்றிங் முடிஞ்சு இஞ்ச வந்ததை மகள் கண்டிருக்கிறாள். வீட்ட வந்தவர் திரும்பி காம்புக்கு (ஈ.பி.டி.பி முகாமுக்கு) போயிருக்கிறார். அங்கயிருந்து அவர் திரும்பி வந்த கொஞ்ச நேரத்தில் மோட்டார் சைக்கிள்ள இரண்டு பேர் வந்ததை மகள் (ரெக்சியனின் மகள்) பார்த்திருக்கிறாள். முன்னுக்கிருக்கிற வீட்டில இருந்துதான் பார்த்திருக்கிறாள். [illegible] ஈ.பி.டி. பிக்காரரர் இப்பிடி [illegible] இவள் சந்தேகப்படவில்லை" மாமியார் தொடர்ந்து விவரிக்கிறார். "அவர்களைப் பார்த்தால் உங்களால் அடையாளம் காட்ட முடியுமா ?" என்று நாம் குறுக்கீடு செய்தோம்.



"விசாரணையில அந்த மோட்டச் சைக்கிள பொலிஸாரோடபோய் அடையாளம் காட்டினவள். அது கமலின்ர மோட்டச் சைக்கிள். அதில ஹெல்மட்டோடதான் வந்தவை. மோட்டச் சைக்கிள் ஓடி வந்ததை ஜசிந்தன் விசாரணையில் ஒத்துக் கொண்டவர்" என்று மகள் குறிப்பிட்டார்.

"பிறகு மகன் பாடசாலையால வீட்டுக்கு வந்து பார்த்துவிட்டு அப்பா மூக்காலயும் வாயாலயும் இரத்தம் வழியப் படுத்துக் கிடக்கிறார் என்று சொன்னதற்குப் பின்னாலதான் விசயம் மூற்றாக்களுக்குத் தெரிய வந்தது" மாமியார் தொடர்கிறார்.

"ரெக்சியன் கொலை செய்யப்பட்ட நிலையில் அவர் தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற செய்தியை ஏன் பரப்பினீர்கள்?"

"நாங்கள் அப்படிச் சொல்லேல்ல. அது ஊர்ச் சனம் ஒவ்வொன்று கதைச்சவை. அவையள் தான் (ஈ.பி.டி.பி.) தற்கொலை செய்தது என்று சொன்னவை."

இந்தச் சம்பவத்தை ஆரம்பத்திலிருந்தே ஈபிடிபியின் புங்குடுதீவுப் பொறுப்பாளர் தற்கொலை என்றும் நவம்பர் 26ஆம் திகதி நடந்தால் புலிகளால் செய்யப்பட்டிருக்கலாம் என்ற மாதிரியும் கதைத்தார் என்றும் தனலட்சுமி கூறுகிறார்.

"கம்பியால குத்தினது, போத்திலால குத்தினது எண்டு ஒவ்வொரு மாதிரி சனம் கதைச்சதுகள். நவம்தான் (புங்குடுதீவு ஈ.பி.டி.பி. அமைப்பாளர்) அப்பிடிக் கதைச்சார்.

பிறகு பிரேத பரிசோதனையில கொலைதான் என்று சொல்லியாச்சுது. அதுக்குப் பிறகு இங்க செத்தவீட்டுக்குக் கூடியிருந்த சனத்தைப் பார்த்து திரும்பி புலி வந்துட்டுடோ என்று கேக்கிறார். அவர்தான் உந்தக் கதையெல்லாம் பரப்பியது" என்றார் தனலட்சுமி.

"விசாரணையில பொலிஸார் யார் மீது சந்தேகம் என்று கேட்டார்கள். நான் சொன்னன் தலையிலயிருந்து சன்னம் எடுத்திருக்கு. அதை ஆய்வுக்கு குடுங்க. அப்ப அது யாற்ர என்று தெரியும். இது என்ர வேலையில்ல, அது உங்கட வேலை. அவை (பொலிஸ்) உடன சொல்லிச்சினம், அம்மா புலியின்ர பிஸ்டல் முழுக்க இப்ப அவங்கட கையில இருக்கு. சன்னத்தை ஆய்வுக்கு குடுத்தா அது புலியின்ர என்றுதான் வரும். இவங்கள பிடிக்கேலாது எண்டு. ஆரம்பத்திலேயே இந்தக் கொலையை யார் செய்தது என்று அவைக்கு அடையாளம் தெரிஞ்சிருக்கு." தனலட்சுமியின் குரல் உறுதியாக வருகிறது.

"விசாரணையில எனக்கு துவக்கு சூட்டுச் சத்தம் கேட்டது என்று பொலிஸிட்டச் சொல்ல, அது எப்படி உமக்கு துவக்குச் சூட்டுச் சத்தம் என்று தெரியும். அப்பிடிச் சொல்ல வேண்டாம் என்றார். தெரியாததை எல்லாம் சும்மா பொலிஸிட்டச் சொல்ல வேண்டாம் என்று கட்சிக்காரரர் சொல்லிச்சினம். ஆனால் நான் விசாரணையில சொன்னான்" என்கிறார் மகள்.

இந்தக் கொலையில் அனித்தா மீது சுமத்தப்பட்டுள்ள பழியை அவர், அவர்களின் மிரட்டல் காரணமாக மறுக்காமல் இருக்கக்கூடும் என்று அவரது தாயாரான தனலட்சுமி நம்புகிறார்.

"சம்பவம் நடந்ததுக்குப் பிறகு அவளைச் (மகள்) சுத்தி அவங்கள் முழு நேரமும் நிக்கிறாங்கள். பொடி ஆஸ்பத்திரியில் இருக்கேக்க நாங்கள் வாறம் என்று கேட்டனாங்கள். முதலில் ஓம் எண்டவள், திடீரென்று கொஞ்ச நேரத்தில வேண்டாம் எண்டிட்டாள். பொடி இஞ்ச வந்த பிறகு, கமல் இவளை(அனித்தாவை) அங்க கூட்டிக்கொண்டு போய்க் கதைக்கிறது. இங்கால கூட்டிக்கொண்டு போய் கதைக்கிறது என்று எப்பவும் நெருக்குவாரம்தான். அதுக்குப் பிறகு இங்க மூண்டு பேர் காவல். காவல் என்ற போர்வையில எங்கள மிரட்டுறதுக்கு ஈ.பி.டி.பி.க்காரர் மூன்று பேர் இரவு நிண்டவை. அதுக்கிடையில் உங்களோடை கொஞ்சம் கதைக்க வேணும் என்று சொல்லி என்னைத் தனிய கூட்டிக்கொண்டு போன கமல், பொலிஸ் வந்து கேட்டா குடும்பப் பிரச்சினையால நடந்தது எண்டு சொல்லுங்கோ என்றவர். கஜிந்தன் என்றவர் ரூமுக்க போய் கதைப்பம் என்றவர். நன் சொல்லிப் போட்டன் மாட்டன் என்று. எதைக் கதைக்கிறதென்றாலும் வெளியில வைச்சுக் கதைக்க வேண்டியதுதானே. பிள்ளையளையும் தனிய கூட்டிக் கொண்டு போய் க்கதைக்க வெளிக்கிட்டவை. நான் அதுக்கும் விடேல்ல. போய்ப் பக்கத்திலயே நின்று கொண்டன். என்ர பிள்ளையளோட அவைக்கு என்ன கதை வேண்டிக் கிடக்குது?" பொரிந்து தள்ளுகிறார் தனலட்சுமி.

"கொலைக்கு முன்னர் ரெக்சியன் எழுதிய கடிதத்தில் கமலின் பெயர் மட்டும் ஏன் குறிப்பிடப் பட்டிருக்கிறது?" என்று ரெக்சியன் சாவதற்கு முன்னர் எழுதி வைத்த கடிதம் தொடர்பில் கேட்டோம்.

"குடும்பத்தில சண்டை வரும். சண்டை வரேக்க இரண்டு பேரும் அடி படுவின. பேந்து சிரிச்சுக் கதைப்பினம். அவளை நம்பி நான் இதுக்குள்ள போறேல்ல. பெஞ்சாதியில இருந்த ஆத்திரத்தில அவர் அப்பிடியொரு கடிதம் எழுதி வைச்சிருக்கலாம்" என்றார் தனலட்சுமி.

ஆனால் மகள், "வீட்டில பிரச்சினை நடந்தது என்று அம்மா கட்சிக்கு போய் சொன்னவ. அமைச்சரிட்ட போய் கதைக்கேக்க, அவர் கமலுக்கு முன்னால வச்சுக் கொண்டு அப்பாவைக் கேள்வி கேட்டிருக்கிறார். அப்பாக்கு அது அவமானமாய் போய்ட்டுது. பிறகு அதுவே ஈகோ பிரச்சினையாய் மாறிட்டுது. அதை வச்சு அம்மாவோட அப்பா சண்டை பிடிக்கிறவர். அமைச்சருக்கு முன்னால, அவனுக்கு (கமல்) முன்னால கைகட்டி நிக்க வச்சனிதானே எண்டு அம்மவோட சண்டை பிடிக்கிறவர். அதால அவர் (அப்பா) அப்பிடி கடிதம் எழுதியிருக்க லாம்."

ஈ.பி.டி.பி.யினர் தன்னை கொலை செய்வார்கள் என்ற அச்சம் ரெக்சியனுக்கு நீண்ட நாள்களாகவே இருந்தது என்று அவரது பிள்ளைகள் சொல்கிறார்கள். அவரை கட்சியை விட்டு வெளியேற்றும் முயற்சியைக் கட்சி செய்யத் தொடங்க போதே அவர் இது பற்றி அதிகம் பயந்தார் என்றும் மகள் கூறுகிறார். "அப்ப கூட்டமைப்புக்குப்

(31ஆம் பக்கம் பார்க்க)

> "விசாரணையில எனக்கு துவக்கு சூட்டுச் சத் தம் கேட்டது என்று பொலிஸிட்டச் சொல்ல, அது எப்படி உமக்கு துவக்குச் சூட்டுச் சத்தம் என்று தெரியும். அப்பிடிச் சொல்ல வேண்டாம் என்றார். தெரியாததை எல்லாம் சும்மா பொலிஸிட்டச் சொல்ல வேண்டாம் என்று கட்சிக்காரரர் சொல்லிச்சினம். ஆனால் நான் விசாரணை யில சொன்னான்" என்கிறார் மகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றெக்சியன் படுகொலை உருவாக்கி விட்டுள்ள கள நிலைமைகளைத் தாண்டி ஈபிடிபி மீண்டு வருவது சாத்தியப்படானது இல்லை. கழுத்துக்கு மேலே தொங்கும் கத்தியாக வந்துள்ள றெக்சியனின் படுகொலைதான் ஈபிடிபியின் அரசி யலுக்கான முற்றுப்புள்ளியாகும்

# எழுதப்பட்டுவிட்டது ஈ.பி.டி.பியின் முடிவு

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி எனப்படும் ஈபிடிபியின் நீண்ட கால உறுப்பினரும் விசுவாசியும் மக்களால் நன்கு அறியப்பட்டவருமான நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்கிசியனின் கொலை, கட்சிக்கும் அதன் செயலாளர் நாயகமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பெரும் தலையிடியாக மாறியிருக்கிறது. கட்சியைக் கலைத்துவிடுவது பற்றி டக்ளஸ் கோபப்பட்டு ஆலோசிக்கும் அளவுக்கு நிலைமை போய்விட்டது. ஈபிடிபி கட்சியாலும் கட்சித் தலைமையாலும் பாதிக்கப்பட்ட பலருக்கும் ஈபிடிபி மீதான தங்கள் எதிர்ப்புணர்வை ஏற்றுக்கொள்ளத்தக்க விதத் தில் வெளிப்படுத்த ஓர் அருமையான வாய்ப்பாக றெக்சியனின் கொலை அமைந்திருக்கிறது. இலங்கையின் மிக முக்கியமான ஊடகங்கள் அனைத்தும் இக் கொலை தொடர்பிலும் கொலைக்கான காரணம் குறித்தும் விலாவாரியாக ஆராய்கின்றன.

ஈபிடிபியினர் மீது கொலைக்குற்றச் சாட்டுக்கள் விழுவது வழமையானதே. அப்போதெல்லாம் எதிர்த் தரப்பினரே அந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். ஆனால் இம்முறை நிலைமை வேறுபட்டுள்ளது. தனக்கு என்றும் ஒவ்வாத விருப்பற்ற செயல் என்றும் விடுதலைப் புலிகளே அதனை மோசமாகப் புரிந்தார்கள் என்றும் ஈபிடிபி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கூறிவந்த சகோதரப் படுகொலை என்ற வாசகம் இப்போது அவரை நோக்கித் திரும்பியிருக்கிறது. அவருடன் கூடவே இருந்த, திரிந்த ஒரு சகா அவரது நீண்ட நாள் தோழர் ஒருவரைப் போட்டுத் தள்ளியிருக்கிறார்.

கட்சியைச் சேர்ந்த எவராவது குற்றம் செய்தார்கள் என்று பொதுமக்களுக்குத் தெரியவந்துவிட்டால் அவர் கட்சியின் உறுப்பினர் இல்லை என்று அல்லது அவரைக் கட்சியை விட்டு விலக்கி விட்டோம் என்று அறிவிப்பது ஈபிடிபியினரின் வழமை. அதுபோன்றே இப்போது கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கமலையும் கட்சியைவிட்டு நீக்கியாகிவிட்டது என்று அமைச்சர் டக்ளஸ் அறிவித்துள்ளார்.

## தொடரும் குற்றச்சாட்டுக்கள்

ஈபிடிபி மீதான கொலைக் குற்றச்சாட்டுக்கள் ஏராளமுண்டு. ஊடகவியளாளர் நிமலராஜனின் கொலை; அதனோடு தொடர்புபட்டவராகச் சந்தேகிக்கப்பட்ட ஈபிடிபியின் தீவக அமைப்பாளராக இருந்த நெப்போலியன், சாவகச்சேரி சிறுவன் கமல்நாத் படுகொலை; அதனோடு தொடர்புபட்டவராகச் சந்தேகிக்கப்பட்ட சாவகச்சேரிப் பிரதேச அமைப்பாளர் சாள்ஸ், கொழும்பில் நடைபெற்ற அமைச்சர் மகேஸ்வரனின் படுகொலை; அதனோடு தொடர்புடைய வசந்தன் என்பவர் ஈபிடிபியின் உறுப்பினர் என்பதான குற்றச்சாட்டு, நெடுந்தீவில் நடந்த 8 வயதுச் சிறுமி மீதான பாலியல் வன்புணர்வுக் கொலை; அதனோடு தொடர்புடைய சந்தேகநபர் ஈபிடிபி உறுப்பினர் என்பதான சந்தேகம் என்பவை குறிப்பிடக்கூடிய குற்றச்சாட்டுக்கள். இது தவிரவும் பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இருப்பினும் இவை எல்லாவற்றிலும் துன்பியல் நிகழ்வு என்னவென்றால், கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதும் காணாமல்போய்விடுவதுதான். அவர்களில் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று கூறப்படுகிறது. நெடுந்தீவுச் சிறுமி பாலியல் கொலை மட்டுமே இது வரையில் அதற்கு விதிவிலக்காக இருந்து வருகிறது. இந்தக் கொலை வழக்குகளில் சாட்சிகள் மிரட்டப்பட்டமை, அவற்றை விசாரித்த நீதிபதிகள் மாற்றப்பட்டமை போன்றனவும் நடந்துள்ளன.

றெக்சியன் கொலையிலும்கூட குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கமலும் அவரது உதவியாளரும் பிணையில் வெளியே வந்து சுலபமாகத் தப்பி விடுவார்கள் என்று றெக்சியனின் பிள்ளைகளும் மாமியாரும் பலமாக நம்புகிறார்கள். எனினும் றெக்சியன் கொலை போருக்குப் பின்னர் நடந்த முதல் அரசியல் படுகொலை என்பதால் அமைச்சர் டக்ளஸ் பலத்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சவால்களைக் கண்டு அஞ்சாதவர் எனத் தன்னைத் தானே மார் தட்டிக்கொள்ளும் டக்ளஸ் றெக்சியன் கொலையும் அதனோடு தொடர்புபட்டு கமலின் கைதும் நடந்த பின்னர் ஆடிப்போய்விட்டார் என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அவரது பதற்றத்தை றெக்சியன் கொலைக்குப் பின்னர் ஈபிடிபி எடுத்து வரும் நடவடிக்கைகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது. தனது கட்சியின் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதற்காக டக்ளஸ் சில காரியங்களை ஆற்ற முன்வந்திருக்கிறார் என்றும் தெரிகிறது. அதன் முதற்கட்டமாக நெடுந்தீவில் இருந்த தமது அலுவலகத்தை ஈபிடிபி இழுத்து மூடியிருக்கிறது. இதற்கு மேலும் நீங்கள் இங்கே இருக்காதீர்கள் என்று நெடுந்தீவு மக்கள் கேட்டுக் கொண்டதன் பின்னரே இது நடைபெற்றதாகவும் ஒரு கதை இருக்கிறது. ஆனால், அது தமது கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதி என்று ஈபிடிபி கூறுகின்றது.

கட்சி என்னதான் சொன்னாலும் தீவகத்தில் ஊர்காவற்றுறை தவிர்ந்த அனைத்து அலுவலகங்களையும் ஈபிடிபி மூடி வருவதும் குறிப்பாக ஈபிடிபியின் கோட்டையாகக் கருதப்பட்ட நெடுந்தீவு அலுவலகத்தை 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக மூடியிருப்பதும் நிலைமையின் தீவிரத்தை விளக்குகின்றன.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் படு தோல்வி அடைந்த நிலையில் கட்சிக்குள் நடந்திருக்கக்கூடிய இந்த சகோதரப் படுகொலை தமிழ் மக்களின் முன்னால் தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமைக்குள் அமைச்சர் டக்ளஸையும் அவருடைய கட்சியினரையும் தள்ளிவிட்டுள்ளது. இதனால் தற்போது ஆங்காங்கே தமது கட்சி ஆதரவாளர்கள் என்று கருதப்படுவோரைக்கூட்டி எதிர்கால நடவடிக்கை குறித்துப் பேசிவருகின்றனர் கட்சியினர்.

ஈபிடிபிக்கு இனிமேலும் அரசியல் எதிர்காலம் என்று ஒன்று உண்டா என்று அதன் நிறுவுனத் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சமே இதற்கான காரணம். மறுசீரமைப்பு, மக்கள் சந்திப்பு என்ற தலைப்புகளின் கீழ் கட்சியைக் கலைப்பதா தொடர்வதா என்ற முடிவுக்கான ஆய்வையே டக்ளஸ் நடத்துகிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ஈபிடிபி முதல் தடவையாக 9 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனது அரசியலை ஆரம்பித்தது. அதன் பின்னர் அமைச்சுப் பதவி, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப்பதவி என்று அரசுடன் மிக நெருக்கமாக ஒட்டிக்கொண்டது. இப்போது கட்சி அதளபாதாளத்தை நோக்கித் திரும்பியிருக்கிறது. சந்திரிக்காவின் காலத்தில் வடக்கு கிழக்கின் ஏக அரச பிரதிநிதியாக புனர்வாழ்வு புனரமைப்பு மீள்கட்டுமானம் இந்து கலாசாரம் என பல துறைகளைக் கொண்ட அமைச்சராகவிருந்த டக்ளஸ் தேவானந்தா பின்னர் படிப்படியாக வலுக்குன்றி சமூகசேவைகளுக்குள் ஒதுங்கி தற்போது பாரம்பரிய சிறுகைத் தொழிலில் முடங்கியிருக்கிறார். இது அரசு பக்கமும் அவருக்குச் செல்வாக்குச் சரிந்து வருவதைத் தெளிவாக்குகிறது. யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்று எல்லாவற்றிலும் தனது கட்சிச் சின்னமான வீணையைத் தொலைத்துவிட்டு வெற்றிலைக்குப் பின்னால் ஓடவேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டமை இதற்கு மற்றொரு உதாணரம்.

இந்தச் சரிவில் இருந்து கட்சி மீண்டும் வரும் சாத்தியங்கள் எவையும் தற்போதைய அரசியல் சூழலில் காணப்படவில்லை. சாமிக்கும் பக்தனுக்கும் இடையே பூசாரி எதற்கு என்பதைப்போல ஈபிடிபியையும் டக்ளஸையும் தூக்கி எறிந்துவிட்டு சுதந்திரக் கட்சியே தமிழ் மக்களுடன் நேரடியாகத் தொடர்பைப் பேண முடியும் என்பதான சிந்தனையுடன் ஏற்கனவே பலர் களமிறங்கிவிட்டமையும் இதற்குக் காரணம். கடந்த மாகாண சபைத் தேர்தலில் இதன் தார்ப்பரியத்தை நேரில் காண முடிந்தது. வடமாகாணத்தில் ஈபிடிபியினரால் வெறும் மூன்று ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. அதிலும் யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு ஆசனம் மட்டுமே அதற்குக் கிடைத்தது. அதற்குச் சமமாக சுதந்திரக் கட்சிக்கும் இங்கு ஒரு ஆசனம் கிடைத்தது. எனவே எதிர்காலத்தில் சுதந்திரக் கட்சியின் முழுமையான ஆதிக்கத்திற்குள் ஈபிடிபி கரைந்துவிடுவதைத் தவிரவும் வேறு வழியில்லை. இந்த நிலையில் சகோதரப் படுகொலையும் ஈபிடிபி என்ற கட்சியையே அடியோடு அழித்திருக்கிறது.

ஈபிடிபி என்கிற கட்சியை மக்களிடம் ஆரம்பத்தில் நல்லமுறையில் கட்டி வளர்த்த, அப்போது யாழ். மாவட்ட மக்களுக்கு நன்கு அறிமுகமாகவிருந்த நிசாந்தன் - மணிபல்லவராஜன், ஜெகன், மதனராஜன், திரிலோகநாதன் போன்ற பலர் இப்போது ஈபிடிபியில் இல்லை. டக்ளஸ் எடுத்த மக்கள் விரோத செயல்களுக்கு உடன்பட மறுத்தே அவர்கள் வெளியேறிச் சென்றனர். அத்தகைய நேரத்தில்கூட கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பில் ஆராய மறுத்த டக்ளஸ் இப்போது அது பற்றிக் கடுமையாகச் சிந்திக்கிறார் என்றால் கட்சியின் அரசியல் அடித்தளம் எந்தளவுக்கு ஆடிப்போயிருக்கிறது என்பது தெரிகிறது.

கட்சியின் தற்போதைய மறுசீரமைப்பின்போது இந்த முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் கட்சிக்குள் உள்வாங்கப்படுவதற்கான சாத்தியங்கள் ஆராயப்படுகின்றன என்று கூறப்பட்டாலும் மானம் உள்ளவர்களான அவர்கள் மீண்டும் கட்சிக்குள் வந்து டக்ளஸின் ரத்தக் கறைகளைத் தங்கள் தோள்களில் பூசிக் கொள்ள மாட்டார்கள் என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அதுபோன்று சமூகப்பிரதிநிதிகளின் பங்களிப்பை கட்சி அரசியலுக்குள் கொண்டுவர ஈபிடிபி முயற்சிப்பதாகவும் அறியக் கிடைக்கின்றது. இருந்தும் தற்போதுள்ள நிலையில் அவ்வாறானவர்கள் ஈபிடிபியுடன் இணைந்து தங்கள் பெயர்களைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. றெக்சியன் படுகொலை உருவாக்கி விட்டுள்ள கள நிலைமைகளைத் தாண்டி ஈபிடிபி மீண்டு வருவது சாத்தியப்படானது இல்லை என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள். றெக்சியன் கொலைக்கு முன்னரும் ஈபிடிபி மீது சகோதரப் படுகொலைக் குற்றச்சாட்டு உண்டு. தினமுரசின் ஆசிரியராகவிருந்து அதன் வளரச்சிக்கு வித்திட்ட அற்புதனின் கொலை கட்சியின் உட்கொலை என்று குற்றச்சாட்டு உண்டு. ஆனால் விடுதலைப் புலிகள் மீது அந்தக் குற்றச்சாட்டைப் போட்டுவிட்டு சமாளித்தமை போன்று இம்முறை நடக்கும் சாத்தியங்கள் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

கழுத்துக்கு மேலே தொங்கும் கத்தியாக வந்துள்ள றெக்சியனின் படுகொலைதான் ஈபிடிபியின் அரசியலுக்கான முற்றுப்புள்ளியாகும் என அரசியல் அவதானிகள் பலரும் பேசுகிறார்கள். புதிய பாதைகளைத் திறக்க ஈபிடிபி முயலும் என்பதும் அது தவிர்க்க முடியாது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுந்தீவு வரை ஒரு திகிலூட்டும் கடத்தல்

மார்க்கண்டு சிறீஸ்கந்தராசாவுக்கு அன்றைய நாள் என்றும் போல்தான் விடிந்தது. அது டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி. வவுனியா குருக்கள் புதுக்குளத்தில் வசிக்கும் 56 வயது விவசாயியான அவர் ஒரு வருடத்துக்கு முன்னர்தான் இந்தியாவில் இருந்து திரும்பி வந்து சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்திருந்தார். மூன்று பிள்ளைகள். மூத்தவன் தர்சன் (27) பிரான்ஸில் வாழ்கின்றான். இளையவன் இன்னும் இந்தியாவிலேயே இருக்கின்றான். கடைசிப் பெண் பிள்ளை யாழ்ப்பாணத்தில் கல்வி கற்று வருகிறாள்.

டிசெம்பர் 14 சனிக்கிழமை காலையில் வழக்கமான வேலைகளை சிறீஸ்கந்தராசா முடித்துக் கொண்டிருக்கையில் அவரை அழைத்த கைப்பேசி வவுனியா நகரத்துக்கு வருமாறு கூறியது. தனது வாழ்க்கையில் திகிலூட்டும் நாடகம் ஒன்றின் தொடக்கம் அது என்று அப்போது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

கைப்பேசியில் பேசியவரை அவருக்குச் சில வாரங்களாகத் தெரியும். மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்கும் தொண்டு நிறுவனம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் சிறீஸ்கந்தராசாவுக்கு அறிமுகமாகி இருந்தார்கள். விவசாயத்துக்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரம், மருந்தடிக்கும் பம்பி மற்றும் சில விவசாயப் பொருள்கள் என்பவற்றைத் தருவதாக அவர்கள் வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் வீட்டுக்கு வந்து இது பற்றி அவர்கள் கலந்துரையாடியிருக்கிறார்கள் என்பதால் சசி என்ற பெயரில் அறிமுகமான நபரும் மற்றொருவரும் சிறிஸ்கந்தராசாவுக்கு நன்கு அறிமுகமானவர்கள். அந்த நம்பிக்கையில்தான் சனிக்கிழமை காலையில் அவர் வவுனியா நகருக்குப் புறப்பட்டார். உறவுக்கார இளவல் ஒருவரையும் அழைத்துக் கொண்டு. அவர்கள் கூறியபடி வவுனியா குருமண்காட்டுச் சந்தியடிக்குச் சென்றார்.

கடந்த இரு வாரங்களில் இவர்கள் அழைத்து குறைந்தது மூன்று தடவைகள் அவர் வவுனியா நகருக்குச் சென்று வந்திருக்கிறார். ஆனால் அந்தச் சந்திப்பு நடக்கவில்லை. அப்போதெல்லாம் தாங்கள் வேறு ஒரு இடத்தில் பணி நிமித்தம் நிற்கிறார்கள் என்று அவர்கள் மிகத் தன்மையாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்றொருமுறை வருமாறு மிக விநயமாகக் கேட்டிருக்கிறார்கள். அதனால் இந்த முறையும் அப்படி நடந்து விடலாமோ என்ற சந்தேகத்துடனேயே சிறீஸ்கந்தராசா குருமன்காட்டைச் சென்றடைந்தார். ஆனால் அவர்கள் வந்தார்கள்.

கைபேசியில் சொல்லப்பட்ட தகவல்படி 9 மணிக்கு அவர் அங்கு போய்ச் சேர்ந்தபோது யாரையும் காணவில்லை. 12 மணியளவில் ஒரு வான் அங்கு வந்து நின்றது. அதனை அணுகிய சிறீஸ்கந்தராசா சாரதியிடம் "நீங்கள் ஐகொன் (அதுதான் அவருக்குச் சொல்லப்பட்ட தொண்டு நிறுவனப் பெயர்) நிறுவனத்திலிருந்து வந்தவர்களா?" என்று வினவினார். சாரதி "இல்லை" என்று சொன்ன தருணத்தில், உள்ளே இருந்து ஒரு குரல் "ஐயா! அது நான்தான். வாங்கோ!" என்று வரவேற்றது.

ஆரம்ப அறிமுக சுகவிசாரிப்புகளுடன் வானில் இருந்தவர் விடயத்துக்கு வந்தார். சிறீஸ்கந்தராசாவுக்கு வழங்கப்பட வேண்டிய பொருள்களைத் தான் எடுத்து வரவில்லை என்றும் அவற்றை அலுவலகத்துக்குப் போய் எடுத்து வரலாம் என்றும் அவர் அழைத்தார். தான் அங்கேயே காத்திருக்க அவர்கள் பொருள்களை எடுத்து வரலாம் என்று சிறீஸ்கந்தராசா சொல்லிப் பார்த்தார். "உடனே போய்விட்டுத் திரும்பிவிடலாம்" என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். எனவே அவர்களுடன் செல்வதற்கு அவர் இணங்கினார். இதற்கு முன்னர் ஒரு தடவை அவர்கள் மாதுளை, தேக்கு, கமுகு போன்ற மரக்கன்றுகளை அவருக்கு இலவசமாக வழங்கியிருந்தார்கள் என்பதால் இவற்றையும் வழங்கக்கூடும் என்று அவர் நம்பினார்.

சிறிஸ்கந்தராசா எப்போதும் உசார் பேர்வழி என்பதால் தன்னுடன் கூட வந்த உறவுக்கார இளவலிடம், வானின் எண்ணைக் குறித்து வைத்துக்கொள்ளுமாறும் தான் திரும்பி வரவில்லை என்றால் அதனை பொலிஸாரிடம் கொடுத்து முறையிடுமாறும் தான் எங்கிருக்கிறார் என்ன நடக்கிறது என்ற விடயங்களை அவ்வப்போது கைப்பேசி வழியாகத் தான் அறியத் தருவார் என்றும் இரகசியமாகச் சொல்லி விட்டு வானில் ஏறினார்.

அதற்குக் காரணம் இருந்தது. பிரான்ஸில் இருக்கும் அவரது மூத்த மகனுடன் தொடர்புபட்ட பிரச்சினை ஒன்றில் தனக்கு அல்லது குடும்பத்தினருக்கு ஏதாவது நடக்கக்கூடும் என்று அவர் அஞ்சினார். ஆனாலும் ஏற்கனவே பல தடவைகள் அறிமுகமானவர்கள் என்ற அசட்டுத் துணிச்சலுடன் வானில் புறப்பட்டார்.

## பிரான்ஸ் பின்னணி

இதற்கிடையில் பிரான்ஸில் நடந்த ஒரு சம்பவம் பற்றிய பின்னணியைப் பார்த்து விடுவது முக்கியம். சிறீஸ்கந்தராசாவின் மூத்த மகன் 2008ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கு ஒரு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது அவர் விபத்துக்குள்ளானார். அதில் படுகாயமடைந்த அவர், தேறி வருவதற்குப் பல நாள்கள் எடுத்தன. விபத்துத் தொடர்பான வழக்கு விசாரணைகளின் பின்னர் அவனுக்கு அண்மையில் பெருந்தொகைப் பணம் இழப்பீடாகக் கிடைத்தது.

தர்சனின் மாமன் ஒருவரும் பிரான்ஸில் வசிக்கிறார். இந்த இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்கு அவரும் பிரெஞ் மொழிபெயர்ப்பு உள்ளிட்ட சில வழிகளில் தர்சனுக்கு உதவிகளைச் செய்துள்ளார். ஆனால் அதற்கு உள்நோக்கம் இருந்தது என்பது அப்போது தர்சனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இழப்பீட்டுத் தொகை கிடைத்த போது அதில் பெரும் பகுதியைத் தனக்குத் தரவேண்டும் என்று மாமனார் நிர்ப்பந்தித்ததை ஏற்றுக்கொள்ள தர்சன் தயாராக இல்லை. 10 ஆயிரம் யூரோ வரையில் அவருக்கு வழங்குவதற்கு தர்சன் தயாராக இருந்த போதும், இழப்பீட்டுத் தொகையை தர்சன் பெற தானே காரணமாக இருந்தார் என்று கூறி அதில் பெருந்தொகையை தனக்குத் தந்தே ஆக வேண்டும் என்று அவரது மாமன் நச்சரிக்க ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் இதனால் இருவருக்கும் இடையே வாய்த் தர்க்கம் முற்றியது. இது பற்றி தனது தந்தை சிறீஸ்கந்தராசாவிடம் தர்சன் எல்லா விவரங்களையும் அவ்வப்போது கூறிவந்துள்ளார்.

இதற்கிடையில் தர்சனின் உத்தியோகபூர்வ இருப்பிட விலாசத்தை அவரது சம்மதத்துடன் தனது வீட்டுக்கு மாமன் மாற்றியிருந்தார். இந்த நிலையில் தான் பெற்ற இழப்பீட்டுத்தொகையில் இருந்து 10 ஆயிரம் யூரோவை தந்தைக்கு அனுப்பும்படி தர்சன் தனது வங்கியிடம் கேட்டிருந்தார். இந்தக் கொடுக்கல் வாங்கல் பற்றிய கடிதம் மாமன் வீட்டுக்கு வந்தபோது பிரச்சினை வெடித்தது.

வேறு இடத்தில் வசித்து வந்த தர்சனை உடனே தனது வீட்டுக்கு வருமாறு மாமன் அழைத்திருக்கிறார். அது பற்றித் தனது தந்தைக்கு தர்சன் அறியத் தந்தார். கைப்பேசியில் தனக்கு அழைப்பு எடுத்து விட்டு மாமனுடன் பேச ஆரம்பிக்குமாறு சிறீஸ்கந்தராசா மகனுக்கு யோசனை கூறினார். அதன்படியே அவரும் செய்தார்.

வீட்டில் மாமன் தனக்குரிய பணத்தைக் கொடுக்காமல் வங்கியில் இருந்து ஒரு யூரோ பணத்தைக்கூட தர்சன் எடுக்க முடியாது என்று மிரட்டினார். அப்படிச் செய்யத் தான் ஒரு போதும் இடமளிக்கமாட்டார் என்றும் தனக்குத் தரப்பட வேண்டிய பணத்துக்கான 'செக்'கில் உடனடியாகக் கையெழுத்திட வேண்டும் என்றும் நெருக்கினார். இவ்வளவையும் வவுனியாவில் இருந்தபடி கைப்பேசி மூலம் சிறீஸ்கந்தராசா கேட்டுக்கொண்டே இருந்தார்.

பணத்தைத் தர முடியாது என்று வாதாடிய தர்சன் ஒரு கட்டத்தில் அந்த வீட்டிலிருந்து தப்பி வெளியேறி பஸ் பிடித்து தனது இருப்பிடத்தை நோக்கிச் சென்றுள்ளார். அப்போதும் காரில் தனது பஸ்ஸை மாமன் பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார் என்று தந்தையிடம் கூறியிருக்கிறார். எனினும் ஒருவாறு அவரிடம் இருந்து தப்பி இருப்பிடம் சேர்ந்து விட்டார். இதற்கிடையில் மாமனுக்கு அழைப்பெடுத்த சிறீஸ்கந்தராசா, அவரது செயலுக்காக அவரைத் தாறுமாறாகத் திட்டினார். அதன் பின்னரே தனக்கும் தர்சனுக்கும் இடையிலான உரையாடலை வவுனியாவில் இருந்தவர்கள் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறார்கள் என்ற விடயம் மாமனுக்குத் தெரிய வந்திருக்கிறது.

"மாமன்காரன் மிரட்டும்போது, எப்படி இந்தப் பணத்தை நீ எடுக்கப் போகிறாய் என்று பார்க்கிறேன். இந்தக் காசை நீங்கள் பயன்படுத்த விடமாட்டேன்" என்றெல்லாம் மிரட்டினார் என்கிறார் சிறீஸ்கந்தராசா. எனவே மாமனால் தனது மகனுக்கு அல்லது தனக்கும் குடும்பத்துக்கும் ஆபத்து வரலாம் என்கிற ஓர் அச்சம் சிறீஸ்கந்தராசாவிடம் உள்ளூர இருந்தது.

## கடத்தல் நாடகம் ஆரம்பம்

இந்தப் பின்னணியில்தான் தான் பயணப்பட்ட வானின் எண்ணை குறித்து வைத்துக்கொள்ளுமாறு சிறீஸ்கந்தராசா தனது உறவுக்காரப் பையனிடம் சொல்லியிருந்தார். அவர் அச்சப்பட்டது போன்றே நடக்க ஆரம்பித்தது. (3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடைபடும் கதவுகள்

**ஓடுகாலி**

அந்த நாயைக் கண்டாலே ஊரவர்களுக்கு குலை நடுங்கும். வாயில் நீர் வழிய நாக்கைத் தொங்கப்போட்டபடி 'யாரை இன்று கடிக்கலாம்?' என்று எதிர்பார்த்தபடியே அலைந்து கொண்டிருக்கும். வெறி நாயோடு வீண் மல்லுக்கட்ட யாருக்குத்தான் மனம் இருக்கும். பேசாமல் ஒதுங்கி ஓடுவதையே வழக்கமாக்கிக் கொண்டார்கள். 'அன்றைக்கும் வேட்டை தேடி புறப்பட்ட நாய் ஒரு பச்சிளம் பாலகனைக் கடித்துக் குதறிவிட்டது. பொறுத்துப்பார்த்த ஊரவர்களுக்கு அன்றைக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. இனியும் விட்டால் அது எல்லோரையும் கடித்துத் தின்று விடும் என்று நினைத்தவர்களாக அதனை அடித்துக்கொல்ல கைகளில் அகப்பட்ட கம்பு, தடிகளைக் கொண்டு துரத்தத் தொடங்கினார்கள்.

அதுவரை யாராலும் தட்டிக்கேட்க முடியாத சண்டப்பிரசண்டனாக ஓடித்திரிந்து கொண்டிருந்த வெறி நாய்க்கு இந்த எதிர்ப்பு பயத்தைக் கொடுத்துவிட்டது. ஒருவர் இருவர் என்றால் பாய்ந்து கடித்துவிட்டுப் பறந்துவிடலாம். ஆனால் ஒட்டுமொத்த ஊரே ஒன்றுதிரண்டு கொலை வெறியோடு துரத்தும்போது எப்படி எதிர்த்து நிற்க முடியும்?

ஆகவே தப்பிக்கும் வழியைத் தேடிக்கொண்டே அது தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. அதன் கண்ணில் ஒரு கட்டடம் தென்பட்டது. அதன் ஒரு குறுகலான பாதையை இனம் கண்டுகொண்ட நாய் அவசரமாக அதற்குள் நுழைந்து கொண்டது. ஆனால் நாயின் துரதிர்ஷ்டம் அதன் பின்னாலேயே துரத்திக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஏனென்றால் உள்ளே அந்த நாயைச் சுற்றிவர நூற்றுக்கணக்கான நாய்கள் நாவைத் தொங்கப்போட்டுக் கொண்டு நின்றன. வெறி நாய் சூழ உள்ள நாய்களைக் கண்டு வெருளத் தொடங்கிவிட்டது. அந்த வெருட்சியால் சுற்றிநின்ற நாய்களைப் பார்த்து குரைக்கத் தொடங்கியது.

அந்த நாய்களும் சொல்லி வைத்தாற் போல் வெறிநாயைப் பார்த்துக் குரைக்க இது வெலவெலத்துப் போய்விட்டது. வெறிநாய் குரைக்கும் வரை அந்த நாய்களும் குரைத்துக் கொண்டே இருந்தன. இது அமைதியாக அவையும் அமைதியாகின. இரவு முழுவதும் தன்னைக் காத்துக்கொள்வதற்காக சுற்றிவர நின்ற நாய்களைப் பார்த்துக் குரைத்துக் குரைத்தே அந்த நாய் விடிகாலையில் செத்துப்போய் இருந்தது. அதற்கிடையில் தன்னுடைய அவசரத் தனத்தை விடுத்து அந்த நாய் ஒரு விடயத்தை உற்றுப் பார்த்திருந்தால் இந்தக் கதி வந்திருக்காது. அது என்னவெனில் நாய் புகுந்த அறையைச் சுற்றிவர நூற்றுக் கணக்கான கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. தன் விம்பத்தைப் பார்த்தே கூட்டமாக வேட்டை நாய்கள் வந்துவிட்டதாக அது தவறாக நினைத்துவிட்டது. பயந்துபோய் அது எழுப்பிய ஒலி சுவரில் பட்டு எதிரொலிக்க விம்பங்களை உண்மை என்றே நம்பிவிட்டது. கடைசியில் நிதானத்தை இழந்து அது உயிரையும் விட்டுவிட்டது.

இலங்கை மீதான போர்க் குற்றச் சாட்டுக்கள் வெளிவரத் தொடங்கியதும் இலங்கையும் இதுபோன்றுதான் ஆத்திரத்தில் நிதானம் இழந்து வாய்க்கு வந்ததை எல்லாம் உளறத் தொடங்கியது. யாரை எப்படி அணுக வேண்டும், என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதுகூட அரசுக்குத் தெரிந்திருக்கவில்லை. அதிலும் குறிப்பாக தன்னுடைய வேட முகத்தை தோலுரித்துக் காட்டிய சனல்-4 முதலான ஊடகங்கள் மீதான அதன் பாய்ச்சல் வெறித்தனமாக இருந்தது. வெளிநாடொன்றில் நிகழ்ந்த கருத்தரங்கொன்றில் சனல்-4 ஊடகவியலாளரான கெலும் மக்ரேயை நோக்கி மிகக் கடினமான வார்த்தைகளைப் பிரயோகித்தார் முன்னாள் இராணுவ அதிகாரியான சவேந்திர சில்வா. இறுதிப் போர் நடைபெற்ற வேளையில் இடம்பெற்ற மிக மோசமான படுகொலைகளின் சூத்திரதாரி சவேந்திரசில்வா என்றுதான் சொல்லப்படுகின்றது. குறிப்பாக இசைப்பிரியா, புலிகளின் தலைவரின் இளைய மகன் பாலச்சந்திரன், வெள்ளைக்கொடி ஏந்தி வந்த நடேசன் முதலான புலி உறுப்பினர்கள் சவேந்திரசில்வாவின் உத்தரவுப்படியே ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டார்கள் என்று சனல்-4 ஊடகம் குற்றம் சாட்டுகிறது. இது குறித்து அவருடைய தரப்பு நியாயங்களைக் கேட்டபோதே சவேந்திரசில்வா கெலும் மக்ரே மீது சீறிப் பாய்ந்திருக்கிறார்.

"அப்படி எந்தப் படுகொலையையும் நாங்கள் செய்யவில்லை. புலிகளை மட்டுமே கொன்றோம். நீங்கள்தான் (சனல்-4) நாங்கள் போர்க்குற்றவாளிகள் என்று இல்லாததையும் பொல்லாததையும் கூறுகின்றீர்கள்" என்று சொல்லிவிட்டு நகர முனைந்தார். ஆனாலும் விடவில்லை மக்ரே. "ஆனால் நீங்கள் கட்டளையிட்டுத்தான் இந்தப் படுகொலைகள் நிகழ்ந்ததாக உங்களுடைய படைப் பிரிவில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் எமக்கு சாட்சியமளித்திருக்கிறாரே" என்று மக்ரே ஒரு குண்டைத் தூக்கிப்போட்டதும் சவேந்திரசில்வாவுக்கு வியர்த்து விறுவிறுத்தது. நாவில் இருந்து சொற்கள் வெளிவர மறுத்தன.

"அவருடைய பெயரை வெளியிட முடியுமா? அப்படி எவரும் இல்லை. நீங்கள் இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்ல வருகிறீர்கள்" என்றபடியே காரில் ஏறிப் பறந்துவிட்டார்.

இறுதிப் போர் முடிவுக்கு வந்தபின்னர் சவேந்திரசில்வாவின் இராணுவப் பணியை முடிவுறுத்தி அவசர அவசரமாக அவரை ஒரு ராஜதந்திரியாக இலங்கை ஒப்பனை செய்தது. ஏனெனில் அவர் சீருடை [illegible]திருக்கும் ஒவ்வொரு [illegible] போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கை இராணுவம் மீது நீட்டப்படுகின்ற சுட்டு விரல்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்லும். அத்தோடு இன்னமும் கொலைகாரப் படை என்ற பெயர் இராணுவத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கக் கூடும். எனவே கறைபடியாக் கரம் கொண்ட புனிதர்களைக் கொண்டது தமது படைகள் என்று காட்டிக் கொள்வதற்காக யார் யாருடைய பெயர்கள் எல்லாம் போர்க் குற்றவாளிகள் பட்டியலில் இருந்ததோ அவர்களை எல்லாம் இப்படி ராஜதந்திரிகளாக்கி ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்பிவிட்டது இலங்கை அரசு. இன்னும் சிலரும் மேலதிக பயிற்சிகள் என்ற போர்வையில் வேறு நாடுகளுக்கு பயிற்சிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

களையெடுப்பு முடிந்த பின்னர் உலக நாடுகள் பெரிதாக தம்முடைய படை மீதான குற்றம் சாட்டுதல்களை குறைத்துக்கொள்ளும் என்று இலங்கை நம்பியது. ஆனால் அதற்கு எதிர்மாறாக இன்னும் போர்க் குற்றச்சாட்டுக்களின் வலிமை கூடிக்கொண்டே போனது. ஜெனிவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமைகள் அமர்விலும் சிறுநீர் கழிக்காத நிலையாக இலங்கை அஞ்சி நடுங்கும் அளவுக்கு அடுக்கடுக்காய் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன.

ஆரம்பத்தில் அமெரிக்கா மட்டுமே இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வருவதில் முன்னின்று செயற்பட்டது. ஆனால் இப்போது கனடா, பிரிட்டன், மொறீசியஸ் போன்ற நாடுகளும் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளன. எனவே முன்னர் இருந்ததைக் காட்டிலும் நான்கு மடங்கு பலத்தோடு இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற [illegible] வெறும் பிரேரணைகள் எதனைச் சாதித்துவிடப் போகின்றன, அவை வெறும் காகித அம்புகள் தானே என்று பலர் நினைக்கக் கூடும். அதிலும் தவறில்லைத்தான். கடந்த கால வரலாறு நம்மை அப்படித்தான் சிந்திக்கத் தூண்டுகிறது. ஆயினும் சர்வதேச ரீதியில் இம்முறை அதிக தாக்கங்களை இலங்கை சந்தித்தே ஆகவேண்டிய நிலை ஏற்படப் போகின் றது என்பதை அண்மைக் காலச் சம்பவங்கள் சில சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.


இலங்கைக்கு வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அரசின் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு வடக்குக்கு வந்து போர் அழிவுகளைப் பார்வையிட்டுச் சென்றார். அத்தோடு "மார்ச் மாதத்துக்குள் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபை முன்வைத்த வந்த பரிந்துரைகளை இலங்கை நிறை வேற்றாவிட்டால் சர்வதேச விசார ணையை முன்னெடுக்க பிரிட்டன் கோரிக்கை விடுக்கும்" என்று அச்சுறுத்தவும் செய்தார்.

இதைவிட அடுத்தமுறை தனது நாட்டில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கான வாய்ப்பைப் பெற வேண்டுமானால் இம்முறை இலங்கைக்கு வரவேண்டிய அவசியம் மொறிசீயஸ் அதிபருக்கு ஏற்பட்டது. ஆனால் "பொதுநலவாய மாநாட்டை நடத்தும் வாய்ப்பை போர்க்குற்றவாளிகளின் கூடாரத்துக்கு சென்றுதான் பெறவேண்டுமானால் அது எமக்குத் தேவையில்லை" என்று வராமலேயே இருந்துவிட்டார் மொறிசீயஸ் அதிபர். கனடாவும் இதைப்போலவே போர்க்குற்றம் புரிந்த நாடொன்றில் தன்னுடைய பாதம் படுவது ஆகாது என்றெண்ணி வரமறுத்திருந்தது.

இவை எல்லாம் அந்த நாடுகள் எந்தளவு தூரம் இலங்கை மீது கடுப்பில் இருக்கின்றன என்பதற்கான சமிக்ஞைகளே. இலங்கை மீதான போர்க் குற்றங்களை சர்வதேச ரீதியில் விசாரணை செய்ய வேண்டும் என்று கோரி புலம்பெயர் மக்களும், தமிழக உறவுகளும் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த போராட்டங்களின் விளைவாகவே இவ்வாறு சர்வதேச நாடுகளின் அக்கறைப் பார்வை ஈழத் தமிழர்கள் மீது வீழ்ந்துள்ளது. அத்தோடு தன்மீது போர்க்குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டவுடன் அதனைப் பக்குவமாக அணுகாது வெறி நாய் போல இலங்கை நடந்து கொண்டது சர்வதேச நாடுகளுக்கு ஆத்திரத்தை ஊட்டிவிட்டது. இந்த ஆத்திரமும் சர்வதேச நாடுகளின் மாற்றத்துக்கு முக்கிய காரணம். அதனை வெளிப்படையாகவே சில நாடுகள் காட்டவும் தொடங்கிவிட்டன. பிரதான போர்க்குற்றவாளிகளில் ஒருவரான சவேந்திரசில்வா தனது நாட்டுக்குள் காலடி எடுத்து வைக்கக்கூடாது என்று கனடா கண்டிப்பாகச் சொல்லிவிட்டது. இதுநாள்வரை போர்க்குற்றம் சாட்டப்பட்ட இலங்கையைச் சேர்ந்த எவருக்கும் எந்த ஒரு நாடும் உள்நுழைவு அனுமதியை மறுத்தது கிடையாது. முதல் முறையாக கனடா அந்தப் பணியை ஆரம்பித்து வைத்திருக்கிறது. இனிவரும் நாள்களில் இதே செயற்பாட்டை இலங்கைக்கு எதிரான போக்குடைய ஏனைய மேற்கு நாடுகளும் பின்பற்றக்கூடும். எல்லாக் கதவுகளும் அடைபட சர்வதேச விசாரணை என்ற ஒற்றைக் கதவு மாத்திரமே திறக்கப்படும். உயிர்ப் பயத்தில் ஓடிய வெறிநாய் போல வேறுவழியின்றி இந்த ஒற்றைக் கதவினூடாகவே உள்நுழைய வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்படும். ஆனால் அப்படி நுழைந்து விட்டால் இப்போதிருப்பதை விடவும் இன்னும் சிக்கலான நிலைக்குள்ளேயே அது தள்ளப்பட வேண்டிய நிலை உருவாகலாம். அரசு இதுநாள் வரை சொன்னதைப் போன்று முள்ளிவாய்க்காலில் புலிகளின் கதைக்கு மாத்திரம் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. மாறாக இறுதிப் போரை ஈவிரக்கமின்றி நடத்திய பேரினவாதிகளின் கதைக்கும் முள்ளிவாய்க்காலில்தான் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைக் குடிக்கும் மது





**காரணங்களைக் கூறி நாம் விடும் தவறுகளில் இருந்து தப்பித்துக் கொள்வதை விடுத்து ஒட்டுமொத்தமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.**

வீகேளம்

நாகரீகப் பழக்கங்களில் ஒன்றாக இன்று மதுப்பாவனை முன்னிலை பெறுகிறது.

நுகர் இன்பங்களுக்காக ஆரம்பிக்கும் இந்த குடித்தல் ஒரு வீட்டு முற்றத்தில் இருந்து சமுதாயம் வரை சீர்கெட்டுச் செல்லும் அளவுக்கு மாறியிருக்கிறது. இளவயதினர் நாகரீக மோகத்தின் உந்துதல் காரணமாக தீய பழக்கங்களை கற்றுக் கொள்கின்றனர். அதற்கு அவர்களால் இயன்றளவு சமூக அந்தஸ்து வழங்கி மற்றவர்கள் இடத்தில் இருந்து தம்மை நாகரீகப்படுத்திக் கொள்கின்றனர். அதாவது. பிழைக்கு நியாயம் கற்பிப்பதால் அவர்களது அநாகரிகம் நாகரிகமாக மாற்றப்படுகிறது.

உண்டு கழிக்கும் இடைவெளிக்குள் நிகழ்ந்து போகும் மாற்றங்கள் வார்த்தையிலும் செயலிலும் எத்தனையோ விளைவுகளைகொண்டுவந்துவிடுகின்றன. இதுவே மது எமக்காக விட்டுவைக்கும் மீதி.

அது பரப்பும் கிளைகளும் ஊன்றும் வேர்களும் விசாலமானவை ஆளமானவை. ஏனோ அவற்றை எம்மிடம் இருந்து தறித்து அகற்றமுடியாத ஒரு உடல்சார் தேவையாக மாற்றி வைத்திருக்கிறோம்.

**பெற்றோர்களே!**

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு உண்மைச் சம்பவம் பழைய பொருட்கள் தேடிச் செல்லும் ஒருவர் மூலமாக வெளிவந்தது.

தனது மகன் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதற்காக அவன் விரும்பிக் கேட்ட ஊக்க பானத்தை தாயார் வேண்டிக் கொடுத்திருக்கிறார். அதை அருந்தினால் தூக்கம் வராது நன்றாகப் படிக்க முடியும் என்பது மட்டுமே தாயாருக்கு மகன் கூறிய உண்மை. பழைய பொருட்களைக் கொள்வனவு செய்யும் வியாபாரி அந்த வீட்டுக்குச் சென்று பழைய பொருள்களை சேகரித்தபோது ஒரு உரப்பை நிறைந்த வெற்று ரின்களை அந்த தாயார் அவரிடம் கொடுத்திருக்கிறார்.

அப்போது விழித்துக் கொண்ட வியாபாரி இதை யார் இங்கே அருந்துவது என்று கேட்டிருந்தார். அப்போது தான் உண்மை தெரிந்தது. தாயாருக்கும் அது 'பியர் ரின்' என்று அறியமுடிந்தது.

பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் இந்தக் காலத்தில் கொண்டிருக்க வேண்டிய அக்கறை இதுவல்ல. எனவே போதைப்பாவனை தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாடு பெற்றோருக்கு இருக்கிறது. தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் எப்படி வளர வேண்டும் எப்படியான பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் அக்கறை செலுத்த வேண்டியது பெற்றோர்களது பொறுப்பாகும்.

**பிள்ளைகளே!**

சமூக களிப்பாடல்களுக்காக இளம்பராயத்தினர் மது. போதைவஸ்து பாவனையை சரியென கொள்ள முற்படுகின்றனர். அதிலிருந்து விடுபடுபவர்களை எள்ளி நகையாடுதல் தம்மிடம் இருந்து ஒதுக்கிவைத் தல்போன்ற செயற்பாடுகள் காரணமாக மதுப்பா வனை இன்னும் வலுக்கட்டாயமாகத் தூண் டப்படுகின்றது. களவையும் கற்று மற என்று ஆரம்பித்து களவையே தொழிலாகக் கொள்வது போல சிலர் களிப்புக்காக குடிக்க ஆரம்பித்து குடியின்றி இயங்க முடியாத அளவுக்கு மாறிவிடுகின்றனர். அதிகாலையில் ஒரு 'தம்' அடித்தால்தான் காலைக் கடமை நிறைவேறுகிறதாம்.

இப்படி நாளின் ஒவ்வொரு சாதாரண நிகழ்வுகளுக்கும் குடித்தல். புகைத்தல் பொருள் படுகிறது.

**சமூகத்தவர்களே!**

நுகர் இன்பங்கள் சமூக நிகழ்வுகளில் இன்று முக்கிய இடம் பிடிக்கின்றன. ஆடம்பர நிகழ்வுகள் முதல் கொண்டு வீட்டுச் சடங்குகள் வரை பின்பக்க 'பார்ட்டி' தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. நண்பர்களுக்கு ஊற்றி அவர்களை மகிழ்விப்பதில் ஆரம்பிக்கும் கொண்டாட்டம் மண்டை உடைப்புக்களுடன் பொலிஸ் நிலையம்வரை சென்று நிற்கும். இதுவே இன்று சமூக ஒழுங்காகி விட்டது. இது சமூகத்தைப் பொறுத்தவரை தேவையற்ற ஒன்று. எனவே நாமே எம்மை அழித்துக் கொள்ளும் ஒன்றுக்காக எமது முழு உழைப்பையும் செலவிடுகிறோம் என்பதை சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

**மதுக்கடைகள்!**

இலாபம் ஈட்டும் தொழிலிடமாக இன்று மதுக்கடைகள் முன்னிலை பெறுகின்றன.

விடிகாலையில் இருந்து கடை திறக்கும் வரை காத்திருந்து 'குவாட்டர்' அடித்த பின்னரே மௌனம் கலைக்கும் விரதகாரர்களை இந்தக் கோயில்களிலேயே தினமும் காண்கிறோம்.

ஒரு விசேட தினத்தில் மதுக்கடை பூட்டியிருந்தால் அவர்கள் படும் பாடு குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டத்துடிக்கும் அவதியை விட வேகமானது.

சமூக நல நோக்குக் கருதி மதுக்கடைகளை அரி தாக்க அனைவரும் முன்வரவேண்டும். இல்லாமல் செய்வது என்பது சாத்தியமற்ற ஒன்றே.

**கள்ளச்சாராயம்!**

வரி விதிக்கப்பட்ட சாராயங்களுக்கு அப்பால் மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்க வல்ல எந்த பாதுகாப்பு நெறிமுறைகளுக்கும் உட்படாத தயாரிப்பாக இன்று பட்டி தொட்டியெல்லாம் கிடைக்கக் கூடியதாக கள்ளச்சாராயம் (கசிப்பு) மலிந்து கிடக்கிறது.

உயிராபத்தை விளைவிக்கக் கூடிய இந்த உற்பத்திப் பொருள்களை நாமே உற்பத்தி செய்து உயிரை மாய்ப்பதற்கு காரணமாகி இருக்கிறோம். வருமானம் ஈட்டுவதற்கான மாற்று வழி இது என்று கொள்ளும் சிலரால் சுற்றியிருப்பவர்கள் சீரழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

**திட்டமிட்ட சதி!**

இவை ஒருபுறம் இருக்க வட கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் அழிப்புப் பொறிமுறையொன்று பிரயோகிக்கப்படுவதாக கருதப்படுகிறது. அது குறிப்பாக தமிழ் இளைஞர் யுவதிகளை குறிவைத்து நடத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. பாடசாலை. தனியார் கல்வி நிலைய மாணவர்களுக்கு போதை ஊட்டும் பொருள்களை விநியோகித்து அவர்களை அதற்கு அடிமையாகச் செய்வதன் மூலம் தமிழ் மக்களது தனித்துவத்தை சீர்குலைக்க முடியுமென சிலர் கருதுகின்றனர்.

அடக்குமுறை அடக்கு முறையில் இருந்து கிளர்ந்தெழவும் உரிமைகளைத் தட்டிக் கேட்கவும் இளையோரிடத்திலே இருக்கும் மிடுக்கை இல்லாதொழித்து நாகரிக புரள் நிலையை உருவாக்க இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக சமூக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**தீர்மானிப்பது நாமே!**

போதைப்பொருள் பாவனை தொடர்பில் எத்தகைய கருத்துக்கள் தோற்றம் பெற்றாலும் அதற்கு முழுக் காரணம் அதனைப் பயன் படுத்துவோரே யார் சதித் திட்டம் தீட்டினாலும் அதற்குள் விழுவது. விழுந்தா லும் மீண்டெழுவது எமது கடமையே.

காரணங்களைக் கூறி நாம் விடும் தவறுகளில் இருந்து தப்பித்துக் கொள் வதை விடுத்து ஒட்டுமொத்தமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். இப்போது சொல்லுங்கள் காலைக் கடனுக்கு ஒரு 'தம்' தேவைதானா?

Cow & Gate

பொதுமக்களுக்கான அறிவித்தல்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துத் தொகுதி Cow & Gate தயாரிப்புகளும் DCD எனப்படும் இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதனை. இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனத்தினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு. உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறித்து இத்தால் சகல பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

எமது பண்டகசாலையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு Cow & Gate பைக்கற்றுகளும், (கீழே குறிப்பிட்டுள்ளது போல) DCD இரசாயனப்பொருள் உள்ளடங்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் முகமாக, சுகாதார அமைச்சினால் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர் ஒன்றினைத் தாங்கி வரும்.

இது 2013 செப்ரெம்பர் 4ஆம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட PA/EOH/FCAU/42/2013 இலக்க திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படுகின்றது.

டி.சி.டி. எனும் இரசாயனப் பொருள் அடங்கவில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
Batch No:

...ய மேலதிக விளக்கங்களுக்கு அழையுங்கள் 0773-290183 அல்லது 0773-290160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க.... சிந்திக்க.... சில வரிகள்

முத்துமணி



சிரிப்பு என்பது மனித குலத்துக்கே சொந்தமானது என்று பழம் பெரும் நகைச்சுவை நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் பாடி வைத்தார். சிரிப்பில் பலவகைச் சிரிப்பு சிரித்து எம்மை சிரிப்பில் மட்டுமல்லாது, சிந்திக்கவும் வைத்தவர் அந்தக் கலைவாணர். மனிதனின் உடல் உறுப்புகளின் செயற்பாட்டை உயிரியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டுபிடித்து நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எமது மூளையின் செயற்பாட்டைப் பூரணமாக ஆராய்ந்து அறிய இன்னமும் காலம் தேவைப்படுகிறது. சிரிக்கவும் சிந்திக்கவும் மூளையே காரணம். சந்தோஷத்தின் ஒருவகை வெளிப்பாடே சிரிப்பு எனலாம்.

வாழும் வகையில் சிரித்து வாழ வேண்டும்; பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே என ஒரு சினிமாக் கவிஞன் பாடி வைத்தான். நகைச்சுவை உணர்வு இல்லாதவன் வாழ்க்கையில் பற்று அற்றவன். வாய் விட்டுச் சிரிச்சால் நோய் விட் டுப் போகும் என் பார்கள்.

நகைச்சுவைத் தென்றல் லியோணி ஒரு பட்டிமன்றத்தில் இந்த வாய்விட்டுச் சிரிக்காத மனிதர் களை சிரிக்கவைக்க "கலியாண வீட்டில் காணாமல்போன செருப்பு கள் இந்த சிரிக்காத மனிதர்கள் வீட் டில்தான் இருக்கும்" என அழ காகச் சொல்லி எம்மை சிரிக்க வைத்தார்.

சிரிப்பு, சிரிப்பு என நான் உங்களுக்குச் சொல்லும்போது எனக்கு வந்த சிரிப்பையும் உங் களுக்கு சொன்னால் என்ன? ஒரு நாள் என்ரை கூட்டாளி ஒருவர் வீதியால் சோகமாக நடந்து வந்தார். என்ன மச்சான் முகம் வாடியிருக்கு எண்டன். "மச்சான் என்ரை கூட்டாளியைப் பார்த்து சிரிச்சது பிழையாய் போட்டுது" எண்டார் அவர். ஏன் மச்சான்? எண்டு கேட்டதுக்கு அவர் சொன்னார் "நான் சிரிச்சது கூட்டாளியைப் பாத்துத்தான். அவருக்குப் பின்னாலை வந்துகொண்டிருந்த பரம எதிரியைப் பாத்ததில்லை" எண்டார். நான் சொன் னேன் "கூட்டாளியுடன் சிரிப்பை ஓஃப் (Off) பண்ணியிருக்க வேணும்" எண்டு. அதற்கு அவர் சொன்னார் "ஓம் மச்சான் அது தான் நான்விட்ட பிழை" எண்டு.

பரம எதிரியையும் சிரிப்பால் வெல்ல முடியும். அது வாய்விட்டு சிரிக்காமல் புன்னகையாக இருக்கட்டும். வெற்றி உங்களுக்கே.

> "நகைச்சுவை உணர்வு இல்லாதவன் வாழ்க்கையில் பற்று அற்றவன். வாய் விட்டுச் சிரிச்சால் நோய் விட்டுப் போகும் என் பார்கள்.



# உணர்வுகளின் நிழல்

முழு நிலவில் - உன்
அழகு முகம் தேடினேன்
மலரின் இதழ்களில் - உன்
உதடுகளைத் தேடினேன்
மூங்கில் காட்டில் - உன்
இடையழகைத் தேடினேன்
அன்னத்தின் நடையில் - உன்
நடையழகைத் தேடினேன்
நீ வரைந்த காகிதத்தில் - உன்
புன்னகை தேடினேன்
தேனீயின் ரீங்காரத்தில் - உன்
மழலைப் பேச்சைத் தேடினேன்
வானவில்லில் - உன்
வதனம் தேடினேன்
மழையில் நனைந்து
உன்னுடனான இனிமையைத்
தேடினேன்
இயற்கைகள்
எதிலும் தேடினேன்
உயிர்ப்பில் எங்கும் இல்லை
அத்தனையும் நீ - உன்
உருவப் படத்தில்
புதைத்துவிட்டு
உணர்வுகளை நிழலாக்கி,
தூர விலகிவிட்டாய்
உணர்கிறேன் பின்னால்...




# இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

## பயிலுனர்களை இணைத்துக்கொள்ளல் 2014



தலைவர்
இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

## பொற் பாதையின் ஆரம்பம்

| இல | கற்கைநெறி | அங்கீகார மட்டம் | கற்கை நெறிக்காலம் (வெளிக்கள பயிற்சியுடன்) | பயிற்சி கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | அலுமினியம் பொருத்துனர்- தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 2 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (மேசன்)-தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 3 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (குழாய் பொருத்துதல்)-தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 4 | மின்னிணைப்பு தொழில்நுட்பவியலாளர் (வீட்டு)-தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 5 | [illegible] உற்பத்தி தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 6 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழ் | IV | 12 | 7,500.00 |
| 7 | அழகுக்கலையில் தேசிய சான்றிதழ் | IV | 6 | 7,000.00 |
| 8 | அழகுக்கலையில் தேசிய சான்றிதழ் | III | 6 | 3,000.00 |
| 9 | கேச அலங்கரிப்பதலில் தேசிய சான்றிதழ் | IV | 6 | 10,000.00 |
| 10 | கேச அலங்கரிப்பதலில் தேசிய சான்றிதழ் | III | 6 | 4,000.00 |
| 11 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் | IV | 12 | 7,500.00 |
| 12 | வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 13 | தையல் - தேசிய சான்றிதழ் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்) | IV | 12 | 1,500.00 |
| 14 | முச்சக்கரவண்டி திருத்துனர் -தேசிய சான்றிதழ் | III | 12 | 1,000.00 |
| 15 | ஓட்டுவேலை செய்பவர் -தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 16 | இயந்திரவியலாளர் (CNC மற்றும் Lathe )-தேசிய சான்றிதழ் | III | 12 | 8,000.00 |
| 17 | கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | IV | 12 | 7,500.00 |
| 18 | வீட்டு மின் உபகரண திருத்துனர்-தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 19 | கணினி கிராபிக்ஸ் -தேசிய சான்றிதழ் | IV | 12 | 10,000.00 |
| 20 | மோட்டார் வாகன திருத்துனர்-தேசிய சான்றிதழ் | III / IV | 12 | 1,000.00 |
| 21 | கணிய அளவையாளர் சான்றிதழ் பாடநெறி (QS) | Non | 12 | 25,000.00 |
| 22 | படவரைஞர் சான்றிதழ் பாடநெறி (Draftman) | Non | 24 | 5,000.00 |
| 23 | மின் மோட்டார் சுற்றி மின் சுற்றுபவர் - தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 24 | ஆடை தொழிற்சாலை [illegible] -தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 25 | அறை பராமரிப்பாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 3,500.00 |
| 26 | சமையலாளர் - தேசிய சான்றிதழ் | IV | 12 | 6,000.00 |
| 27 | உணவு பரிமாறுபவர் - தேசிய சான்றிதழ் | III / IV | 12 | 4,500.00 |
| 28 | மின்னிணைப்பு தொழில்நுட்பவியலாளர் (தொழிற்சாலை)-தேசிய சான்றிதழ் | III | 24 | 2,500.00 |
| 29 | தொலைக்காட்சி, வானொலி மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள் திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 24 | 3,000.00 |
| 30 | தன்னியக்க மோட்டார் வாகன மின்னிணைப்பாளர் - தேசிய சான்றிதழ் | III | 24 | 4,000.00 |
| 31 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா | V | 24 | 40,000.00 |
| 32 | செயலாண்மை பயிற்சி | Non | 15 | 5,500.00 |
| 33 | வெதுப்பக உற்பத்தியாளர் - தேசிய சான்றிதழ் | III | 12 | 3,000.00 |
| 34 | விவசாய உபகரண திருத்துனர் - தேசிய சான்றிதழ் | III | 24 | இலவசம் |
| 35 | சாரதி பயிற்சி (கனரக) வாகனம் | Non | 3 | 9,000.00 |
| 36 | சாரதி பயிற்சி (இலகு) வாகனம் | Non | 3 | 10,500.00 |
| 37 | தையல் - தேசிய சான்றிதழ் (ஆண்கள்) | III | 12 | 1,000.00 |
| 38 | மர பூ செதுக்குதல் | Non | 12 | இலவசம் |
| 39 | அதிவேக தையல் இயந்திர இயக்குனர் -தேசிய சான்றிதழ் | III | 9 | இலவசம் |
| 40 | தோற் பொருள் உற்பத்தியாளர் (பாதணி) தேசிய சான்றிதழ் | III | 12 | இலவசம் |
| 41 | குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துனர் -தேசிய சான்றிதழ் | III | 24 | 3,000.00 |
| 42 | தன்னியக்க மோட்டார் வாகன [illegible] | III | 24 | 3,000.00 |
| 43 | [illegible] | III | 24 | 3,500.00 |
| 44 | CISCO பாடநெறி | Non | 6 | 40,000.00 |

| மாவட்டம் | கற்கைநெறி இல |
|---|---|
| உதவிப் பணிப்பாளர், DVTC - அம்பாறை, நிந்தவூர், அம்பாறை, தொலைபேசி இல: 0672290196 | 01, 02, 03, 04, 05, 06, 07, 09, 11, 13, 15, 20, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 33, 35, 36, 37, 38, 39, 41, 42 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - வவுனியா, இல 108, [illegible] வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா / மன்னார், தொலைபேசி இல: 024-2221617 | வவுனியா : 02, 03, 04, 05, 06, 08, 10, 11, 13, 15, 17, 19, 20, 40, 41; மன்னார் : 04, 08, 10, 12, 13 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - திருகோணமலை, [illegible] வீதி, [illegible], தொலைபேசி இல: 0262234517 | 01, 02, 03, 04, 05, 06, 08, 10, 11, 13, 15, 20, 26, 27, 28, 34 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - முல்லைத்தீவு, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு, தொலைபேசி இல: 071-0318737 | 01, 02, 03, 04, 06, 08, 10, 12, 13, 17, 20, 33 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - கிளிநொச்சி, 155 ஆம் கட்டை, A 9 வீதி, கிளிநொச்சி, தொலைபேசி இல: 071-0318799 | 01, 03, 04, 05, 06, 08, 10, 13, 15, 34, 41 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - நுவரெலியா, [illegible] வீதி, [illegible] கட்டிடம், நுவரெலியா, தொலைபேசி இல: 0522223216 | 01, 04, 05, 06, 08, 10, 13, 17, 18, 20, 24, 25, 26, 27, 28, 29, 31, 32, 42, 43 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - யாழ்ப்பாணம், 1ம் மாடி, [illegible] மண்டபம், இல 12, KKS வீதி யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 0212227949 | 01, 02, 04, 05, 06, 08, 10, 11, 12, 13, 15, 17, 18, 19, 20, 23, 28, 34, 41, 42, 44 |
| உதவிப் பணிப்பாளர், DVTC - மட்டக்களப்பு, APC வீதி, [illegible] மட்டக்களப்பு, தொலைபேசி இல: [illegible] | 01, 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 11, 13, 15, 16, 20, 21, 28, 29, 31, 34, 37, 41, 42, 43 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புத் தாளம் போட்டு தப்பிக்கும் முயற்சி



விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடித்த பின்னர் போர்க் குற்றச்சாட்டு மனித உரிமை மீறல்கள் பற்றிப் பேசியபோதெல்லாம் "போரில் வென்றவர்கள் ஒருபோதும் தண்டிக்கப்பட்டதாக வரலாறில்லை" என்று இலங்கையின் ஆட்சியாளர்கள் வீர வசனம் பேசினார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததை விட வேகமாகக் காலம் அவர்களுக்கு எதிரானதாக மாறிவிட்டது. இப்போது அதே போர்க் குற்றச்சாட்டுக் களில் இருந்தும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் தப்பிப்பதற்கான வழிவகைகளைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் ராஜபக்ஷ சகோதரர்கள் சிக்கிக் கொண்டு விழிபிதுங்குகிறார்கள்.

**ஜெனிவா சவால்**

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் மீண்டும் நடக்க இருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு பலத்த சவால்களை எதிர்கொள்ளவுள்ளது. பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா என்பன இப்போதே இலங்கை மீதான மற்றொரு தீர்மானத்துக்கான ஆயத்தங்களில் இறங்கிவிட்டன. இந்தத் தீர்மானம் எவ்வளவு கடுமையாக இருக்கப் போகிறது என்பதிலேயே ராஜபக்ஷ சகோதரர்களின் எதிர்காலமும் தங்கியிருக்கிறது.

இந்த நிலையில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னாபிரிக்காவிடம் சென்று "எனக்கு உதவி செய்யுங்களேன்" (Please help me) என்று பரிதாபமாகக் கோரிக்கை முன்வைத்திருக்கிறார். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தாம் தயார் என்று தென்னாபிரிக்க அரசு விடுக்கும் அறிவிப்புகளின் பின்புலத்தில் இந்தக் கோரிக்கையே முதன்மைச் செயலூக்கமாக இருந்திருக்கிறது.

ஆனால் ஆட்சியாளர்கள் இன்னும் தமது மக்களுக்கு வீரவசனங்களைத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஜெனிவாவில் எந்தச் சவாலையும் எதிர்கொள்வதற்குத் தாங்கள் தயார் என்று முழங்குகிறார்கள். ஆனால் "உள்நாட்டில் சவால்களை விட்டுக்கொண்டிருந்தாலும் அரசின் உள்மனதில் ஏதேனும் செய்து சமாளித்துவிட வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு காணப்படுகின்றது" என்று கூறுகின்றார் அரசியல் விமர்சகரான ஜெகான் பெரேரா.

**கோத்தபாயவின் எதிர்பார்ப்பு**

தென்னாபிரிக்காவின் உதவியை கடந்த ஜூன் மாதத்துக்கு முன்னரே முதல் தடவையாக இலங்கை நாடியிருந்தது. ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவே முதலில் தென்னாபிரிக்காவுக்குச் சென்று இது தொடர்பில் பேசியிருந்தார்.


சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறியமை மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை பற்றிய குற்றச்சாட்டுக்கள் (இவற்றைத்தான் போர்க் குற்றச்சாட்டுக்கள் என்று வகைப்படுத்துகிறார்கள்) தொடர்பில் எந்தவித விசாரணைகளும் இன்றி எப்படி இந்த விவகாரத்தில் இருந்து வெளிவருவது என்பது தான் அவர் தென்னாபிரிக்கத் தலைவர்களிடம் கேட்ட விடயம் என்று ஜொகன்னஸ்பேர்க் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

போர் மற்றும் அதற்கு முன்னர் நடந்து முடிந்தவைகளைப் பற்றிப் பேசாமல் தமிழர்களுடன் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உள்ள சாத்தியங்கள் என்ன என்பதை ஆராய்வதற்குத் தென்னாபிரிக்காவால் உதவ முடியுமா என்பது அவர் கேட்டவற்றில் இரண்டாவது முக்கிய விடயம்.

சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு விசாரணையை நடத்தாமல் போர்க் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவது நடக்கக்கூடியதல்ல என்பதைத் தென்னாபிரிக்கத் தலைவர்கள் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு புரியவைத்திருக்கிறார்கள். அதேபோன்று நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அவ்வாறான செயற்பாடு ஒன்று மிக முக்கியமானது என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் இலங்கையில் அத்தகைய தேவை இல்லை என்று அதற்குப் பதிலளித்திருக்கிறார் கோத்தபாய. ஜே.வி.பி. கலவரத்தின்போது நடந்தவைகளையும் 1983 இனக்கலவரத்தின் பின்னர் நடந்தவைகளையும் அவர் உதாரணம் காட்டியிருக்கிறார். கடந்த காலங்களில் நடந்தவைகளைப் பற்றிக் கணக்கெடுக்காமல் அவற்றை அப்படியே விட்டுவிட்டு முன்னோக்கி நகர்வது தான் இலங்கையின் பாணி என்று அவர் தெரிவித்திருக்கிறார். [illegible] பட்ட எந்த நடவடிக்கை[illegible] மால் உதவ முடியாது என்பதை தென்னாபிரிக்கத் தலைவர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதேவேளை தென்னாபிரிக்காவில் இடம்பெற்றது போன்று உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளைத் தாங்கள் வழங்கலாம் என்று தென்னாபிரிக்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவை அனைத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ "எனக்கு உதவுவீர்களா?" என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமோவிடம் விடுத்த கோரிக்கைகளில் இருந்து தான் நகர ஆரம்பித்தன.



"போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவித விசார ணைகளும் இன்றி எப்படி இந்த விவகாரத்தில் இருந்து வெளிவரு வது என்பதுதான் அவர் தென்னா பிரிக்கத் தலைவர்களிடம் கேட்ட விடயம்.

**முதலில் கூட்டமைப்பு**

ஜனாதிபதி விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டபோதும் ஒரு விடயத்தில் தென்னாபிரிக்கத் தலைவர்கள் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேசிய பின்னர்தான் இந்த விடயத்தில் மேற்கொண்டு எந்த முடிவையும் எடுப்பது என்பது தான் அது.

[illegible] ஆட்சியில் இருந்த தென்னாபிரிக்கக் காங்கிரஸ் வெள்ளை நிறவெறி அரசுக்கு எதிராகப் போராடிய அமைப்பு. அதனால் அரசுகள் இனப் பிரச்சினையை எப்படிக் கையாளும் என்பதும் பாதிக்கப்படும் இனம் என்ன எதிர்பார்ப்புக்களுடன் இருக்கும் என்பதும் எப்படி நடக்கும் என்பதும் தென்னாபிரிக்கக் காங்கிரஸுக்கு அத்துப்படி.

இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தென்னாபிரிக்க அரசுப் பிரதிநிதிகள் கூட்டமைப்பினருடன் இது பற்றி முதலில் பேசுவது என்று முடிவெடுத்தனர். பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் இது உதவியாக இருக்கும் என்று அவர்கள் நம்பினர்.

இதன் அடிப்படையில் தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராகிம் இஸ்மாயில் ஜூன் மாதம் இலங்கை வந்து கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் இதுபற்றிப் பேசினார்.

**சம்பந்தன் இறுக்கம்**

நான்கு விடயங்களில் சம்பந்தன் இறுக்கமாக இருந்தார். போர்க் குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டே ஆகவேண்டும். வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருக்கிறது என்பதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போது அரசு மேற்கொண்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். அத்துடன் இந்த முயற்சி உண்மையானதாக நேர்மையானதாக இதய சுத்தியுடன் கூடியதாக இருக்க வேண்டும் என்பவற்றை அவர் வலியுறுத்தினார். அவ்வாறு இல்லாமல் ஜெனிவாவில் மஹிந்த ராஜபக்ஷவைப் பிணையெடுப்பதற்கானதாக இருந்தால் அதில் கூட்டமைப்பு ஒருபோதும் பங்கேற்காது என்பதையும் சம்பந்தன் இறுக்கமாகச் சொல்லி வைத்தார்.


அவரது கருத்துக்களை இஸ்மாயில் முழுமையாக ஏற்றுக் கொண்டார். தென்னாபிரிக்காவில் வெள்ளையின அரசுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் போது தங்களுக்கு இருந்த உணர்வுகள் எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் கூட்டமைப்பின் தேவைகளைப் புரிந்துகொள்வது கடினமானதல்ல என்று அவர் கூறினார். நீதியான நியாயமான நடவடிக்கை ஒன்றுக்கே தாங்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்றும் அரசு தான் நினைத்தவற்றை நடத்துவதற்கு தாங்கள் பங்காளிகளாக இருக்க மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

"தென்னா பிரிக்க அரசுப் பிரதிநிதிகள் கூட்ட மைப்பினருடன் இது பற்றி முதலில் பேசுவது என்று முடிவெடுத்தனர். பாதிக்கப் பட்ட மக்களின் பிரதிநிதிகளிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பு வதற்கும் இது உதவியாக இருக்கும் என்று அவர்கள் நம்பினர்.

**உண்மை நல்லிணக்க ஆணைக்குழு**

கூட்டமைப்பினருடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில்தான், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்குக் கொழும்புக்கு வந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார். கூட்டமைப்பினரின் எதிர்பார்ப்பு மற்றும் அரசின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கு இடையே செல்லக்கூடிய சாத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மான பாதை குறித்து அவர் ஜனாதிபதியுடன் விரிவாக ஆலோசித் திருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் தென்னாபிரிக்காவின் அனுசரணை தொடர்பில் அப்போது எந்த அறிவிப்பும் வெளி வந்திருக்க வில்லை. அதன் பின்னர் செய்தியா ளர்களிடம் பேசுகையில் தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு குறித்து இலங்கை ஆர்வம் கொண்டிருப்பதாக சூமா தெரிவித்தார்.

ஜெனிவாவில் இலங்கை அரசு மேலும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும் என்கிற நிலையில் இந்த உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவை அமைப்பது தொடர்பில் இப்போது அடிக்கடி செய்திகள் அடிபடுகின்றன. கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பேசிய அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, "தென்னாபிரிக்காவின் உண்மை நல்லிணக்க ஆணைக் குழு போன்ற ஒன்றை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் குறித்து நாம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றோம். இது குறித்து அரச மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. ஏற்கனவே உள்ள கட்டமைப்புக் களைக் கொண்டு அதனை எம்மால் உருவாக்க முடியும்" என்றார்.

அவரது கருத்து தென்னாபிரிக்காவின் அனுசரணையைத் தவிர்த்து அதன் பாணியிலான ஆணைக் குழு ஒன்றை இலங்கை அரசே ஏற்படுத்திக்கொள்ளும் என்பதைப் பறைசாற்றுவது போன்று இருக்கின்றது. ஆனால் "இலங்கையில் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளும் அரசுகளால் கிடப்பிலேயே போடப்பட்ட நிலையில் அரசு இப்போது ஏதும் ஆணைக் குழு பற்றிப் பிரேரித்தால் அதனை சர்வதேச சமூகம் எந்தளவுக்கு ஆதரிக்கப்போகின்றது? ஏற்கப் போகின்றது?" என்கிறார் அரசியல் விமர்சகர் கலாநிதி ஜெஹான் பெரேரா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் ஆதரவைப் பெற்ற ஓர் ஆணைக் குழுவாக இருந்தால் அது சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படும் என்பது அவரது கருத்து. ஆனால் சர்வதேசத்தின் பங்களிப்போ நேரடிக் கண்காணிப்போ இல்லாத எந்த வொரு ஆணைக்குழுவையும் ஏற்பதற்குக் கூட்டமைப்புத் தயாராக இல்லை.

# மாறுகிறது சீனா

தமிழில்: சாரி



குடும்பத்துக்கு ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக்கொள்ளக் கூடாது. தவறு செய்தால் அரசு விதிக்கும் தண்டனைகளுக் கேற்ப உடலுழைப்பு முகாமில் பணிபுரிய வேண்டும் என்ற இரு முக்கிய கொள்கைகளில் திருத்தம் செய்ய சீன கம்யூனிஸ்ட் கட்சி முடிவுசெய்துள்ளது. சீன மக்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதில் இவ்விரு அம்சங்களும் பெரும் பங்கு வகித்தன.

பொருளாதாரம் தொடர்பாகவும் மிக முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தைச் சீரமைக்க தனியார் நிதியளிப்புக்கும் அனுமதி தரப்படும். தனியார் முதலீடு செய்து வங்கிகளைத் தொடங்கலாம். முக்கியமான துறைகளில் சந்தைகளில் போட்டிக்கு அனுமதி தரப்படும். விவசாயிகளின் உடமைகளுக்கு அரசு தகுந்த பாதுகாப்பை வழங்கும். சுற்றுச்சூழலைக் கெடுப்பவர்கள் அதற்கான தண்டனையாக அரசு விதிக்கும் கூடுதல் வரியைச் செலுத்த வேண்டும். விவசாய நிலங்களை வேறு பயன்பாட்டுக்காக அரசு எடுத்துக்கொள்ள நேரிட்டால் அதற்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்ற முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு கூட்டம் தலைநகர் பெய்ஜிங்கில் நான்கு நாள்களாக நடைபெற்று செவ்வாய்க்கிழமை முடிவுற்றது. அதிர்ஷிசின்பிங்தலைமை வகித்தார். மொத்தம் 60 சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட ஒப்புதல் பெறப்பட்டது. இந்த முடிவுகள் பின்னர்தான் பத்திரிகைகளுக்குத் தெரிவிக்கப்பட்டன.

## அதிபரின் அறிவிப்பு

பொருளாதாரத்துக்குப் புத்துயிர் ஊட்டவும் சமூகத்தை மேம்படுத்தவும் நாட்டுப்பற்றோடு நாட்டைக் கட்டி எழுப்பவும் இந்த முக்கிய முடிவுகள் உதவும். இந்தப் பணிகள் அனைத்தும் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒரே அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று அதிபர் ஷி சின்பிங் அறிவித்தார். அவருடைய அறிவிப்பை சீன அரசின் பத்திரிகை நிறுவனம் சின்ஹுவா வெளியிட்டது.

ஒரே கட்சியின் ஆட்சியை வலுப்படுத்திய அதேவேளையில், சீன மக்களின் மனங்களில் மிகப்பெரிய நெருடலை ஏற்படுத்திவந்த இரு அம்சங்களை நீக்குவதென்ற முடிவையும் எடுத்திருக்கிறார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி எடுக்கப்போகும் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் என்னவாக இருக்கும் என்று அரசியல் நிபுணர்கள் கடந்த சில மாதங்களாகத் தங்களுடைய எதிர்பார்ப்பைப் பல்வேறு வடிவங்களிலும் தெரிவித்துவந்தனர். அவர்கள் எவருமே எதிர்பார்த்திராததுதான், குழந்தை பெறுவதற்கான கட்டுப்பாடு நீக்கமும், கட்டாய உடலுழைப்பு முகாம்கள் மூடல் பற்றிய முடிவும்.

அரசின் இந்த முடிவால் அதிபர் ஷி ஜின்பிங்கும் பிரதமர் லீகெகியாங்கும் அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிம்மதியாக ஆட்சி நடத்த முடியும்.

## இரண்டு வடிகால்கள்

சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் எந்த அரசும் மக்கள் எதிர்ப்பைச் சந்திக்க வாய்ப்புகள் அதிகம். அப்படியொரு நிலைமை ஏற்படாமலிருக்கவும், சித்தாந்தரீதியாக இறுக்கமான சூழல் நிலவாமல் தவிர்க்கவும், மக்களுடைய மனங்களை வெகுகாலமாக அரித்து வந்திருக்கும் இரண்டு முக்கிய அம்சங்களுக்கு வடிகால்களை ஏற்படுத்தி இருக்கிறது அரசு என்கிறார்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் தம்பதியர் ஒரு குழந்தைதான் பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றோர் இருவருமே அவரவர் பெற்றோருக்கு ஒற்றைக் குழந்தைகள்தான் என்றால் இன்னொரு குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற விதி விலக்கும் அளிக்கப்பட்டிருந்தது. தற்போதுதான் அது தெளிவாக அறிவிக்கப்பட்டிருப்பதாக மக்கள்தொகை குறித்த ஆய்வுகளை மேற்கொண்டுவரும்வாங்குவாங்ஷீ தெரிவிக்கிறார். "கிராமப்புறத் தம்பதியர் இரு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் கிராமங்களில் பலர் இரண்டுக்கும் மேலேகூட பெற்றுக்கொள்கிறார்கள்."

## குழந்தை பிறப்பு உயரும்

1970களிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடு முறையில் முதல்முறையாகச் சலுகை தரப்பட்டிருக்கிறது. இப்போது ஆண்டுக்கு சுமார் ஒன்றரைக்கோடி குழந்தைகள் பிறக்கின்றன. இனி இதில் மேலும் 10 லட்சம் முதல் 20 லட்சம் வரையில் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரிக்கும் என்கிறார் வாங் பெங். இவர் கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் ஷாங்காய் பல்கலைக்கழகத்திலும் மக்கள் தொகையியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

தம்பதியர் இரு குழந்தைகளைப் பெறவும், காலப்போக்கில் இந்த விடயத்தில் அரசின் கட்டுப்பாட்டை அறவே நீக்குவதற்குமான இடைநிலை நடவடிக்கையே இந்த முடிவு. இது வரவேற்கத்தக்கது. குழந்தைகளைப் பெறுவது என்பது அவரவருடைய அடிப்படை உரிமை. இந்த விவகாரத்தில் ஆட்சியாளர்களின் மனங்களை மாற்ற 10 ஆண்டுகளுக்கு மேல் பிடித்திருக்கிறது.

நாட்டின் அரிய வளங்கள் விரைவாகத் தீராமல் இருக்கவும் உணவு தானியங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்கவும்தான் ஒரு குடும்பத்துக்கு ஒரே குழந்தை என்ற விதி கடுமையாகப் பின்பற்றப்பட்டது. ஆனால் அது சீன மக்களிடம் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

சீனத்தில்தான் கருக்கலைப்பு அதிகமாகச் செய்யப்பட்டது என்று சர்வதேச அளவில் கடுமையான விமர்சனம் எழுந்தது. 2010 கணக்கெடுப்புப்படி சீன மக்கள்தொகை சுமார் 134 கோடி. அதிலும் வயதானவர்கள் எண்ணிக்கை அதிகம். வழமையான பொருளாதாரத்தில் நாடு காலூன்றுவதற்கு முன்னதாகவே நாட்டு மக்களில் பெரும்பாலானோர் கிழடுதட்டிப்போகிறார்களே என்ற கவலை பலருக்கு இருந்தது. குழந்தைகள் பிறப்பதற்குள்ள தடைகளை அகற்ற வேண்டும் என்று மக்கள் தொகை நிபுணர்கள் பலர் இதற்காகவே குரல் கொடுத்தனர்.

## உடலுழைப்பு முகாம்கள்

1950கள் முதலே சீனத்தில் உடலுழைப்பு முகாம்கள் நிர்வகிக்கப்படுகின்றன. அரசின் அல்லது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சட்ட திட்டங்களுக்கு உள்பட மறுக்கிறவர்கள், வேலை செய்ய மறுக்கிறவர்கள், சித்தாந்தங்களை எதிர்க்கிறவர்கள், சுதந்திர சிந்தனை உள்ளவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. வெறும் சிறைவாசமாக இல்லாமல் உடலுழைப்பை தண்டனையாக விதித்தனர். இரவு நேரங்களில் மட்டும் சிறைகளில் அடைத்துவைக்கப்படுவார்கள். பகலில் விவசாய நிலங்களிலோ, தொழிற்சாலைகளிலோ வேலைவாங்கப்பட்டனர். கைதிகளிடம் வேலை வாங்கவே பல தொழிற்சாலைகள் தனியாகவே நடத்தப்பட்டன. இதனால் அரசுக்கு உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைந்தது.

இந்த முகாம்கள் வதைக் கூடங்கள் என்றும் அரசு எதிர்ப்பாளர்களால் அழைக்கப்பட்டன. ஆனால் ஆட்சியாளர்களோ மறுகல்விக்கான உடலுழைப்பு முகாம் என்று அழைத்தனர். இந்த முகாம்களுக்கு ஆள்களை அனுப்பும் பணியைக் காவல் துறையினர்தான் நேரடியாகச் செய்தனர். அவர்கள் சுமத்தும் குற்றச்சாட்டை விசாரிக்கவோ, குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் சார்பாக வாதிடவோ வாய்ப்புகள் தரப்படவில்லை. முகாம்களுக்குப் போயும் அரசின் நிலையை ஏற்க மறுத்தவர்களுக்கு தண்டனை மேலும் கடுமையாக்கப்பட்டது.

இந்தநிலையில்இந்தமுறையை நீக்கும் சீர்திருத்த முடிவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்கிறார் நிகோலர் பெகுலின். இவர் சீனத்தில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்துவருகிறார். இதன் தலைமையகம் நியூயோர்க்கில் இருக்கிறது.

இந்தச் சீர்திருத்தம் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதாலேயே சீன அரசு எதிர்க் கருத்துகளை வரவேற்கிறது, எதிர்க் கருத்துகளைப் பேச அனுமதி தரப்படும் என்றெல்லாம் பொருள் கொள்ளக் கூடாது என்று பெகுலின் எச்சரிக்கிறார். மனித உரிமைகளைத் துச்சமாக மதிப்பதுடன் சட்டச் சீர்திருத்தங்களுக்கும் இந்த நடைமுறை பெரும் தடையாக இருந்ததால் இதை நீக்குவது சரியே என்கிறார் பெகுலின்.

## சாவுத் தண்டனைகள் அதிகம்

> அரசின் பல முடிவுகளுக்கு சீன அரசின் அமைச்சகங்களும் பெரிய அரசுத் துறை நிறுவனங்களும் உள்ளூராட்சி மன்ற அரசுகளுமே எதிர்ப்புத் தெரிவிக்கும்

ஒட்டுமொத்தமாக உலகின் பிற நாடுகளில் நிறைவேற்றப்படும் சாவுத் தண்டனைகளைவிட சீனத்தில் நிறைவேற்றப்படும் சாவுத்தண்டனைகளின் எண்ணிக்கை அதிகம். சாவுத் தண்டனைக்கு உள்ளானவர்கள் செய்யும் குற்றங்கள் என்ற பட்டியலில் உள்ள பலவற்றை அதிலிருந்து நீக்கிவிடுவதாகவும் அரசு இப்போது உறுதி அளித்திருக்கிறது. அப்படி எந்தக் குற்றங்கள் எல்லாம் நீக்கப்படும் என்று தெரிவிக்கவில்லை. ஆனால் சீர்திருத்தம் அந்தத் திசையிலும் இருக்கும் என்று கோடி காட்டப்பட்டிருக்கிறது.

## எதிர்ப்புகள் வலுக்கும்

சீன கம்யூனிஸ்ட் கட்சி இந்த முடிவுகளை எடுத்திருந்தாலும் இவற்றை நடைமுறைப்படுத்தும்போது எதிர்ப்புகள் இருக்கும் என்கிறார் ஹொங்காங் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியில் சீன ஆய்வுப் பிரிவுத் தலைவராக இருக்கும் ஸ்டீபன் கிரீன். அரசின் பல முடிவுகளுக்கு சீன அரசின் அமைச்சகங்களும் பெரிய அரசுத் துறை நிறுவனங்களும் உள்ளூராட்சிமன்ற அரசுகளுமே எதிர்ப்புத் தெரிவிக்கும் என்கிறார்.

"சந்தைப் பொருளாதாரத்தை முழுமையாக அனுமதித்த பிறகு விலைவாசி உயர்ந்தால் மக்களுமே அரசுக்கு எதிரான போராட்டத்தில் இறங்குவார்கள். சீர்திருத்தங்கள் எல்லாம் ஏட்டளவில் நன்றாக இருக்கின்றன, எப்படி நடைமுறைப்படுத்துகிறார்கள் என்று பார்ப்போம்" என்று கூறுகிறார்.

இதற்கு முன்னரும் இப்படிப் பல அறிவிப்புகள் வெளியாகி, அவை ஏட்டளவிலேயே நின்றுவிட்டதால் இந்த அறிவிப்புகள் உண்மையாக நடைமுறைப் படுத்தப்படுமா, அல்லது தாமதப் படுத்தப்படுமா என்று பார்க்க வேண்டும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

மூலம்: வோஷிங்ரன் ரைம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமைப் புரட்சியாகும்

# கட்டடக் கலை

**புதிதாக கட்டடம் கட்ட இருப்பவர்கள் பசுமைக் கட்டடங்களைக் கட்டி இந்த பூமியின் இயற்கை வளங் களைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள மனிதராக மாற முயற்சிக்கலாம்.**



ந.நந்தரூபன்
செட்டியார் வளவு
சுன்னாகம்

இறைவன் எமக்கு அளித்த வரம்தான் இயற்கை வளங்கள் . இதனால்தான் இந்த உலகம் இவ்வளவு காலமும் தன் இளமையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்து தான் வாழும் பூமியை வளமாக வைத்திருக்க வேண்டிய மனிதன் ; நாகரிகம் என்ற பெயரில் தன் சுயநலத்துக்காக இயற்கைக்கு எதிரான பல செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். இருப்பினும் தாம், தமது குடும்பம் என்று வாழ்ந்து வந்த மனிதர்கள் சற்று தமது பாதையை மாற்றி நாடு, உலகம்என்றுசிந்தித்து இயற்கையை காக்க முன் வந் துள்ளார்கள்.

அடர்ந்த காடுகளை அழித்து நகரமயமாக்கல் என்ற போர்வையில் கற்காரைக் காடுகளை (Concrete Jangles) உருவாக்கிய மனிதர்கள் அதனை பசுமையாக்கும் முயற்சியில் இன்று இறங்கியுள்ளனர். மனிதனால் அன்றாடம் பயன்படுத்தப்படும் சகல பொருள்களும் பசுமையோடு மீள் சுழற்சிக்கும் உட்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு மனித குலம் தள்ளப்பட்டிருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

அந்த வகையில் உலகின் மிகப் புராதன கலை என்ற வகையிலும் இன்றைய உலகின் முக்கியமான தொழில்துறை என்ற வகையிலும் கட்டடக் கலைக்கு பசுமை சேர்க்க வேண்டியது கட்டடக் கலைஞர்கள், கட்டடப் பொறியியலாளர்கள் மற்றும் அனைத்து பங்குடமையாளர்களுடைய கடமையாகும். மாறிவரும் புதிய பசுமை உலகுக்கு ஏற்ப கட்டடக் கலையிலும் தொழில்நுட்பத்தை புகுத்தி இயற்கையோடு இணைந்த வளங்களையும் சக்திகளையும் சேமிக்கக்கூடிய கட்டடங்களை உருவாக்கவேண்டிய அவசியம் இன்று உருவாகிவிட்டது.

### பசுமைக் கட்டடம் என்றால் என்ன?

இயற்கையோடுஇணைந்துநிலைத்து நிற்கக்கூடியதாக, சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாது சக்தியை, நீரை சேமிக்கத் தக்கதான கட்டடத்தை பசுமைக் கட்டடம் என வரையறுக்கலாம். இதை இன்னொரு விதத்தில் கூறுவதானால் இயற்கையின் ஐந்து கூறுகளையும், ஐம் பூதங்களையும் மனித வேலைக்காக அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாமல் வினைத்திறனாகப் பாவித்தல் எனவும் கூறலாம்.

அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேலைத்தேய நாடுகளில் பசுமைக் கட்டடம் குறித்த விழிப்புணர்வு பெருகிவரும் வேளையில், எமது நாட்டிலும் தற்போது இது பற்றிச் சிந்திக்கத் தொடங்கி ஒரு சில கட்டடங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் முதலாவது பசுமைக் கட்டடமாக HNB இன் புதிய கட்டடம் திகழ்கின்றது.

2009 ஆம் ஆண்டு இலங்கை பசுமைக் கட்டட அறிவுரையாகம் (Green Building Council Sri lanka) உருவாக்கப்பட்டு பசுமைக் கட்டடம் சம்பந்தமான விதிமுறைகளை உருவாக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். மேலும் பசுமைக் கட்டடங்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றனர். இந்த விதிமுறைகள் மேலைத்தேய நாடுகளில் பின்பற்றப்படும் பசுமைக் கட்டட விதிமுறைகளுடன் ஒத்துப் போனாலும் எமது நாட்டுக்கு ஏற்றவாறு சில விதிமுறைகள் மாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றன. காரணம் இன்று மேலைத்தேய நாடுகள் நடைமுறைப்படுத்தும் பசுமைக் கட்டடங்களுக்கான விதிமுற்றைகள் ஏற்கனவே நகரமயமாக்கப்பட்ட சூழல்களின் அடிப்படையில் உருவானவை. பெரும்பாலான மேலைநாடுகளில் கிராமங்களிலிருந்து நகரங்கள் நோக்கிய குடியேற்றங்கள் ஏற்கனவே நிகழ்ந்து விட்டன. அத்தோடு மட்டுமல்லாமல் இது போன்ற மேலைத்தேய நாடுகளின் தட்ப வெப்ப காலநிலை இலங்கையின் காலநிலையோடு ஒப்பிடும் போது மிக மிக வேறுபட்டவையாகவே இருக்கின்றன. மேலைநாடுகளில் கடும் குளிர், கடும் வெப்பத்தையும் சமாளிக்கும் விதமாக காற்றுப்பதனி (Air conditioner)களும் அறை வெப்ப மூட்டி (Room heators) களும் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. ஆனால், இலங்கையில் சகல பகுதிகளிலும் இத்தகைய கடுமையான குளிரோ, வெப்ப நிலைகளோ இல்லை. மேலை நாடுகளில் பின்பற்றப்படும் அதே விதி முறைகள் இங்கு தேவை என்ற நிலை இல்லை.

இவ்வாறு எமது தனித்தன்மைக்கேற்றவாறு அமைக்கப்பட்ட விதிமுறைகளின்படி ஒரு கட்டடம் பசுமைக் கட்டடச் சான்றிதழ் பெற வேண்டும் என்றால் எட்டு விதமான சுற்றுச் சூழல் வளர்ச்சியை பிரதான காரணிகளாகக் கொண்டு நோக்கப்படுகின்றது. முகாமைத்துவம், நிலைத்து நிற்கக் கூடிய இடம், நீர் வினைத்திறன், எரி சக்தி வினைத்திறன், பொருள்களும் வளங்களும், உட்புறச் சூழல் தரம், புதிய வடிவமைப்புகள், சமூக கலாச்சார விழிப்புணர்வு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படும் கட்டடங்களுக்கு புள்ளி வழங்கப்பட்டு பசுமைக் கட்டடச் சான்றிதழ் இலங்கை பசுமை கட்டட அறிவுரையகத்தால் வழங்கப்படுகின்றது.

எனவேபசுமைக்கட்டடம்ஒன்றைக்கட்ட வேண்டுமானால் மேற்கூறப்பட்ட விதிமுறைகளுக்கு அமைய முதலில் கட்டடம் அமையப் போகும் இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தில் உள்ள மண் வளத்தைக் காப்பது, குறுக்குவெட்டாக காற்றோட்டம் இருக்கும்படியான கட்டடங்களை வடிவமைப்பது, அமையும் திசையை தெரிவு செய்வது, வீட்டின் குழியலறை, சமையல் அறையில் பயன்படுத்தப்படும் நீரை மறு சுழற்சி செய்து செடிகளுக்கு மற்றும் வீட்டின் பிறதேவைகளுக்கு பயன்படுத்துவது, மழை நீர் சேகரிப்பதற்கான தொட்டிகளை அமைப்பது, மின்சாரப் பயன்பாட்டைக் குறைப்பது, சூரிய ஒளியைப் பயன்படுத்தி சக்தியைப் பெறுவது, வேதிகலவைகள் தவிர்ந்த சாந்து மூலம் சுவர்களைப் பூசுவது போன்ற விடயங்களை வீடு கட்டுவதற்கு முன்னரே திட்டமிட்டு செயற்படுத்துவதன் மூலம் பசுமைக் கட்டடத்துக்கான தரச்சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பசுமைக் கட்டடம் கட்டுவதற்கு அதிக செலவாகும் என்ற எண்ணம் எல்லோர் மனத்திலும் எழலாம். ஆனால் இதன் ஆரம்ப முதலீடாக 5 வீதம் - 10 வீதம் வரை அதிகமாக தேவைப்படும். ஆனால் அதன் பராமரிப்புச் செலவு என்று நோக்கு மிடத்து மின்சாரக் கட்டணம் 30-50 வீதம் வரையும் தண்ணீர்ச் செலவு 50 வீதம் வரையும் குறைக்க முடியும் என்பதால், கட்டடத்துக்கு அதிகமாகச் செலவிடப்படும் ஆரம்ப முதலீட்டை அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருப்பி எடுத்துவிட முடியும். எனவே, புதிதாகக் கட்டடம் கட்ட இருப்பவர்கள் பசுமைக் கட்டங்கள் கட்டி இந்த பூமியின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள மனிதராக மாற முயற்சிக்கலாமே!....

**அமெரிக்கா, ஐரோப்பா போன்ற மேலைத்தேய நாடுகளில் பசுமைக் கட்டடம் குறித்த விழிப்புணர்வு பெருகிவரும் வேளையில் எமது நாட்டிலும் தற்போது இது பற்றி சிந்திக்கத் தொடங்கி ஒரு சில கட்டடங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. யாழ்ப்பாணத்திலும் முதலாவது பசுமைக் கட்டடமாக HNB இன் புதிய கட்டடம் திகழ்கின்றது.**



## பெருமை சேர்க்க வேண்டும்

பிள்ளையாய் பிறந்துவிட்டால்
பெருமை சேர்க்க வேண்டுமம்மா
கள்ளமில்லா உள்ளம் வேண்டும்
கனிவான பேச்சும் வேண்டும்
வெண்மையான சொல்லும் வேண்டும்
வெண் சொல்லும் பொறுத்தல் வேண்டும்
தந்தை தாய் பேண வேண்டும்
தாரத்தை மதிக்க வேண்டும்
கதிரவன் போல் ஒளிர வேண்டும்
விண்மதியாய் குளிர வேண்டும்
உடன் பிறப்பை அணைத்தல் வேண்டும்
உதவுவோரை நினைத்தல் வேண்டும்
உள் ஒன்று வைத்து புறம் ஒன்று
பேசுவார் உறவு கலவாமை வேண்டும்
நிறைமதியாய் இருக்க வேண்டும்
நித்திலமாய் வாழ வேண்டும்
பிள்ளையாய் பிறந்துவிட்டால்
பெருமை சேர்க்க வேண்டுமம்மா



பாவரன், குட்டிநகர், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யதார்த்தம்

மிருசுவில் தமிழ்தாசன்

பரந்து விரிந்து காணப்பட்ட பச்சைப் பசேலெனும் வயல் வெளி. அதனையண்டி புழக்கம் குறைந்து காணப்பட்ட கிரவல் வீதி. குருட்டு வௌவால்கள் வாசம் செய்யும் பழங்காலத்து மதகு! பக்கத்தில் அடர்த்தியாக வளர்ந்து நிற்கும் ஆலவிருட்சம். மொத்தத்தில் சன சந்தடியற்ற ஒரு சூனியமான சூழல். முரளிக்கு இதுவே பொருத்தமாகப் பட்டதால் மூன்றாவது நாளாகவும் இதையே தெரிவு செய்திருந்தான். புத்தம் புதிய அந்தப் 'பல்சர்'ரக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு அதன் மீது இலேசாகச் சாய்ந்த படி அமர்ந்து கொண்டான். வசதியான குடும்பமென்று சொல்ல முடியாவிட்டாலும், கூடப் பிறந்தவர்களின் வெளிநாட்டு வருமானங்கள் அவ்வப் போது அவன் கைக்கும் கிடைத்து வருவதனால் அவனும் ஒரு குட்டிப் பணக்காரனாகவே இருந்தான். வேளா வேளைக்குச் சோறு! சற்றுத் தாமதித்தால், ஹோட்டலில் வாய்க்கு ருசியாய் வகை வகையாய் உணவு. நவநாகரிக உடைகள். ஓடித்திரிந்து உல்லாசமாய்ப் பொழுது போக்க மோட்டார் சைக்கிள். நண்பர்களுடன் சேர்ந்து அவ்வப்போது விதம் விதமான 'சந்தோஷங்கள்". சொல்லப் போனால் சுக சீவியம் தான். "சே! இவளையின்னும் காணயில்லையே! இண்டைக்கு ரியூசனுக்குப் போகயில்லையோ!"

மனத்துக்குள் முணுமுணுத்த படி கைக்கடி காரத்தைப் பார்த்தான். மாலை ஐந்தரை மணியாகிக் கொண்டிருந்தது. மதகிலிருந்து வௌவால்களின் எச்சங்கள் துர்நாற்றமெடுத்து மூக்கைத் துளைத்தெடுத்தன. சட்டைப் பையிலிருந்து எடுத்த சிகரெட்டுக்குத் தீ மூட்டிப் புகையின்பத்தில் ஆழ்ந்தபடி வழி மீது விழி வைத்து அவளின் வரவையே ஆவலுடன் எதிர்பார்த்த படி நின்றான். இனியும் பொறுமைகாக்க முடியவில்லை. மனத்தில் கறுவிக் கொண்டு அந்த வேகத்தில் மோட்டார் சைக்கிளுக்குப் பலமாக உதைகொடுக்க, அவ்விடத்தை விட்டு அசுர வேகத்தில் பறக்கத் தொடங்கியது. அது உயரம் கொஞ்சம் குறைவுதான். அதற்காக ஒரேயடியாக அவளைக் குள்ளமானவள் என்று யாரும் அர்த்தப்படுத்த முடியாது. பணக்காரியுமில்லை, ஏழையுமில்லை. சுமாரான வசதி படைத்தவள். ஏலவே தந்தையை இழந்திருந்தாலும் அவர் தேடி வைத்த சொத்துக்களுடன் தாயின் அபரிமிதமான அன்பும் அரவணைப்பும் வாழ்க்கையில் சலிப்பில்லாத களிப்பான வாழ்க்கையை அனுபவிக்கக் கூடியதாயிருந்தது. இத்தனை நிறைவுகளுடன் குறையென்றும் ஒன்றிருக்கத்தான் செய்தது. கூடப் பிறந்தவர்கள் என்று யாருமே இல்லாதது சற்றுக் கவலையைக் கொடுக்கத்தான் செய்தது. வயது ரீன் ஏஜ் தான். நளினமான உடல் வாகு. அதற்குப் பொருத்தமான பெயர். அவள் தான் நளினி. அவளுடைய வரவைத்தான் இத்தனை நேரமாக எதிர்பார்த்து வெறுவாய் சப்பிய படி ஏமாந்து போயிருக்கின்றான் முரளி.

வாரத்தில் மூன்று நாள்கள் இதே வழியாகத்தான் ரியூசனுக்குப் போய் வருவாள் நளினி. அவளைக் கண்ட நாள் முதல் அவள் மீது முரளிக்கொரு கண். அவளைத் தனது காதல் வலைக்குள் வீழ்த்த வேண்டுமென்பதில் முனைப்புடன் செயற்பட்டாலும் பழம் கனிவதாகத் தெரியவில்லை. திருவள்ளுவரின் திருக்குறள் தந்த கருத்துக்கள் மீது ஆழமாக நம்பிக்கை வைத்திருப்பானோ என்னவோ! முயற்சி திருவினையாக்கும் என்னும் தோரணையில் நளினியின் பின்னே சுற்றத் தொடங்கினான். கெஞ்சியும் பார்த்தான். அவள் மிஞ்சித்தான் நின்றாள். இருந்தும் அவளைப் பின் தொடர்வதை அவனால் நிறுத்த முடிய வில்லை. இதுவே நளினிக்கு மிகுந்த அவமானத்தையும், அசௌகரியத்தையும் கொடுத்தது. "நான் எப்பிடியும் தொடர்ந்து படிச்சுப் பாஸ் பண்ணிக் கம்பஸ்சுக்குப் போக வேணும். அதுக்கிடையிலை இந்தக் காதல் கீதல் எண்ட பேச்சுக்கே இடமில்லை" இதுவே நளினியின் துல்லியமான முடிவாயிருந்தது. இந்த விடயத்தில் முரளியை மட்டுமல்ல எந்த ஓர் ஆண் மகனின் வலைக்குள்ளும் சிக்காமலே வாழ்ந்து வருபவள். ஆஜானுபாகுவான தோற்றம். வயது இருபத்தைந்துக்குக் குறையாது. கன்னங்களில் வரிவரியாகக் கிருதாக்கள். கொண்டை கட்டி முடியலாம். ஆனால் அதற்குச் சற்றுப் போதாத தலைமுடி. முரட்டுத்தனமான பேச்சுக்கள். பழக்க வழக்கங்களும் அப்படியே! படித்திருந்தான். ஆனால் யாருமே நம்ப முடியாது. இதுவரை இவனுடைய காதல் வலைக்குள் எந்தக் கன்னிப் பெண்ணும் சிக்கிக் கொள்ளாததற்கு முக்கிய காரணிகள் இவைகள் தான் என்பதை இவனால் இன்னும் புரிந்து கொள்ள முடியாமலிருந்தது உண்மையில் அதிசயம்தான்.

"யோசிச்சுப் பார் மச்சான் முரளி! நீ விரும்புற பெம்பிளைப் பிள்ளையள் எல்லாரும் உன்னை விரும்ப வேணுமெண்டு நீ எப்பிடியெடா எதிர்ப்பார்ப்பாய்! இரண்டு மனங்களும் ஒண்டு சேர்ந்து காதலிக்கிறது தான் காதல். நீ என்னடா எண்டால் விருப்பமில்லாத அந்த நளினியை இப்பிடி 'ரோச்சர்' பண்ணக்கூடாது. பாவம்! தேப்பனில்லாத பிள்ளை! படிச்சு முன்னுக்குவர வேணுமெண்டு ஆசைப்படுகுது. இனியெண்டாலும் அதுக்குத் தொல்லை குடுக்காதை மச்சான். கொஞ்சம் மனிசத் தன்மையாய் யோசிச்சுப் பார் பாப்பம்" நண்பன் காந்தன் இப்படியாக அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தாலும் முரளி இவையொன்றையும் கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்து அனாயாசமாகப் புகையை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தான். "டேய் காந்தன்! உனக்குத் தான் என்னைப் பற்றி நல்லாய்த் தெரியுமே! நான் ஆசைப்பட்டதை அடையாமல் விடமாட்டேன். நீயும் பார்க்கத்தானே போறாய்" சேட் கொலரை உயர்த்தி



வீராப்பு வசனம் பேசி மகாதேவியில் வில்லன் வீரப் பாவாகத் தன்னை எண்ணிக் கொண்டான் போலும். தற்போதைய சினிமாக்களும் தொலைக்காட்சித் தொடர்களும் நம்மவர்களின் மனங்களிலும் எத்துணை இறுக்கமாகப் பற்றியிருக்கின்றது. வன்முறைகள், அடாவடிகள் அனைத்துமே ஒரு நாகரிக மாயையாகவே மாறிவிட்டதைக் காந்தனும் உணர்ந்து கொள்ளாமலில்லை. இனியும் முரளிக்குப் புத்தி சொல்வது இறந்தவனுக்கு ஊசி மருந்தேற்றுவதற்குச் சமன் என எண்ணிக் கொண்டான். நீண்டதொரு பெரு மூச்செறிந்தான். அது அவனுடைய இயலாமையின் வெளிப்பாடாகவே தெரிந்தது. அன்று வகுப்பாசிரியை சமுகமளிக்காத படியால் மாணவர்கள் அனைவருக்கும் கொண்டாட்டமாயிருந்தது. இந்த வேளையில் சாருமதியும் நளினியும் மனந்திறந்து பேசிக் குதூகலிப்பதற்குரிய நேரமாயமைந்திருந்தது. அருமையான சந்தர்ப்பம்! அளவளாவினர். கதை கதையாகப் பேசிக் கொண்டேயிருந்தார்கள். "டேய் முரளி! பாத்தியே உன்ரை ஆசைத் தங்கச்சியின்ரை கெட்டித்தனத்தை! ஒரேயொரு தங்கச்சியெண்டு பொத்திப் பொத்தி வளர்த்தமே! பாத்தியே இப்ப! படிக்கிற வயதிலை அவவுக்குக் காதல் கேட்குதாம் காதல்! கேளடா உவளை என்ன வெண்டு!" உருத்திர தாண்டவமாடினாள் முரளியின் தாய் செல்வமலர். அதிர்ச்சியில் உறைந்து போனான் முரளி. தாய் சொன்ன வார்த்தைகளை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. துடித்துப் போய் விட்டான். நான்கு அண்ணன்மாருக்கு ஒரேயொரு தங்கை. அவர்களால்தான் படித்துப் பயன்பெற முடியவில்லை. தங்கையை என்றாலும் நன்றாகப் படிக்க வைத்து ஒரு டொக்டராக்க வேண்டுமென்பதுதான் அவர்களெல்லோரின் இலக்காகவிருந்தது. சாருமதியின் உயர்ச்சியே அவர்களின் வளர்ச்சியாகக் கருதப்பட்டது.

"சாரு! என்னடி! அம்மா சொல்லுறது உண்மையே!" கேட்கும் போதே அட்வான்ஸ்சாக இரண்டு குத்துக்கள் விட்டான். கொஞ்சிக் கொஞ்சி வளர்த்த ஆசைத் தங்கையின் பூவுடலில் இத்தனை மூர்க்கத்தனமாகத் தாக்கியது. அவனுக்கும் பெருத்த வேதனையாகத்தானிருந்தது. இருந்தும் சாருமதி செய்திருக்கும் காரியம்தான் என்ன இலேசானதா!

"டேய்! அவளை என்ன கேக்கிறாய்! நான் சொல்லுறதைக் கேள்! லவ் லெட்டரை நெஞ்சிலை வச்சுப் படிச்ச படி அப்பிடியே நித்திரையாய் போயிற்றா. அது எப்பிடியோ என்ரை கண்ணிலை பட்டிட்டுது. இல்லாட்டில் இண்டைக்கும் இந்த விஷயம் தெரிய வந்திருக்காது. கள்ளி! படிக்கிறன் படிக்கிறன் எண்டு இவ்வளவு காலமும் நடிச்சிருக்கிறாள்" தாய் செல்வமலர் மீண்டும் உசுப்பேற்றிக் கொண்டிருக்க முரளியால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. ஆத்திரத்தைவிட ஏமாற்றமே விஞ்சி நின்றது.

"படிக்கச் சொல்லிப் பள்ளிக் கூடத்துக்கு விட உமக்கு இந்த வயதிலை காதல் கேட்குதோ! நாயே!" ஆக்ரோஷமாகக் கத்தியபடி தனது பலமெல்லாவற்றையும் சேர்த்து மீண்டும் இரண்டு குத்துக்கள் விட, அதில் ஒன்று அவுட். அவுட்டானால் பரவாயில்லை. அந்தக் குத்து தவறிப்போய் தாய் செல்வமலரின் மூஞ்சியைப் பதம் பார்க்க அவள் வேதனை தாங்க முடியாது வெறிநாய் ஊளையிட்டது போல் மல்லாக்காக வீழ்ந்து கிடந்து ஓவெனக் கதற, அவளின் பொய் மூக்குடைந்து முகமெல்லாம் சிவப்புச் சமாசாரம்! இங்கே மறுபுறம் வீல் வீலென வீறிட்டுக் கத்திக் கொண்டிருந்தாள் தங்கை சாருமதி. வீடே ரணகளமானது. இருந்தும் விட்டபாடில்லை. முரளி சுய உணர்வு மறந்த நிலையில்.

"ஆரடி அவன்! சொல்லடி! இண்டைக்கு இரண்டிலை ஒண்டு. இண்டைக்கு அவன்ரை குடலை உருவி மாலையாய்ப் போடாட்டில் நான் ஒரு தாய் தேப்பனுக்குப் பிறக்கயில்லை" மீண்டும் அடிப்பதற்குக் கையை ஓங்கினான்.

"அடியடா பாப்பம்! நான் சுமன் எண்டொரு "போயை" லவ்பண்ணுறன். அதுக்கென்ன இப்ப! அதைக் கேக்க உனக்கென்ன தகுதியிருக்கு! உன்னைப் போலை ஆம்பிளையள் இருந்தால் எந்த அப்பாவிப் பெண்ணுக்கும் இது தான் நிலைமை. இனியும் கதைக்காதை கதைச்சால் மரியாதை கெடும்" எங்கேயிருந்துதான் இத்தனை துணிச்சல் வந்ததோ சாருமதிக்கு. ஆயிரம் வால்ட்ஸ் மின்சாரம் பாய்ந்த அதிர்ச்சி முரளிக்குத் தாயும் மகனும் பேயறைந்தவர்களாக ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்த படி அதிர்ச்சியில் நின்றார்கள்.

"என்னடா ஒரு மாதிரி நிக்கிறாய்! என்ன நடந்தது! சொல்லடா முரளி!" சொல்லி வைத்தது போல காந்தன் வந்து நின்றான். நடந்த அனைத்தையும் நண்பன் என்ற உரிமையுடன் விலாவாரியாகச் சொல்லி முடித்தான் முரளி. "இப்ப விளங்குதே மச்சான்! உன்ரை தங்கச்சியை ஆரோ ஒருத்தன் விரும்புறான். அவளும் அவனைக் காதலிக்கிறாள். இதிலை பிரச்சினையில்லை. அவன் பலவந்தமாய்க் காதலிக்கயில்லை. உன்ரை தங்கச்சியை ரோச்சர் பண்ணயில்லை. ஆனால் நீ நளினியெண்ட இந்தத் தேப்பனைத் தின்னிப் பிள்ளையை - படிச்சுப் பட்டம் பெற வேண்டுமெண்டு ஆசைப்படுற பிள்ளையை துரத்தித் துரத்தி எவ்வளவு தொல்லை குடுக்கிறாய்! அந்தப் பிள்ளைக்கும் உன்னை மாதிரி ஒரு அண்ணன் தம்பி இருந்திருந்தால் உன்னை உயிரோடை விட்டிருப்பாங்களே! இப்பிடித்தான் மச்சான், உன்ரை தங்கச்சியிலை உனக்கு எவ்வளவு அக்கறை இருக்குதோ அடுத்தவன்ரை தங்கச்சியையும் அவளின்ரை அண்ணன் தம்பி அவ்வளவுக்கு அக்கறையாய்த் தான் பாப்பாங்கள். வலி என்கிறது எல்லாருக்கும் ஒரு மாதிரித்தான். நீ அடிச்சால் எனக்கு வலிக்கும். நான் அடிச்சால் உனக்கு வலிக்கும். இதுதான் யதார்த்தம். தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கென்னுமாம்" காந்தனின் அறிவுரைகள் என்றைக்குமில்லாத வகையில் முரளிக்கு உறைத்திருக்க வேண்டும். முகத்திலே விசித்திரமான உணர்வுகள் புதிதாக முளைத்திருந்தன. "சாருமதி! எனக்காக நல்லாய்த்தான் நாடகமாடியிருக்கிறாய். எப்பிடியெண்டாலும் உன்ரை அண்ணனை இவ்வளவு கெதியாய்த் திருத்திப் போட்டியே! என்னட்டை வந்து கும்பிட்டு மன்னிப்புக் கேக்கிறளவுக்கு மாத்திப் போட்டாய். உண்மையிலை 'யூ ஆர் கிறேற்டடி" நளினி மகிழ்ச்சிப் பெருக்கால் வார்த்தைகளை நீட்டிக் கொண்டிருந்தாள். "உண்மையிலை நான் லவ் பண்ணுறன் எண்டுதான் அம்மாவும் அண்ணையும் நினைச்சிட்டினம். இதுக்காக நான் வாங்கின அடி உதை...வலிக்குதெடி இப்பவும் நளினி! இனி என்ன அண்ணியெண்டு தான் கூப்பிடவேணும். எப்ப தன்ரை தவறை உணர்ந்தாரோ அப்பவே உன்ரை அண்ணையை நான் காதலிக்கத் துவங்கீட்டன். நளினி சொல்ல சாருமதி வாயடைத்துப் போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவு கொட்டடிகளை சாகடிப்போம்

க.திருநா

பெண் விடுதலை, சாதிய ஒழிப்பு உட்பட எல்லா முற்போக்கான விஷயங்களுமே மிகச் சிறுபான்மையினரின் கருத்தாகத்தான் ஆரம்பித்தது. அவை பெரும்பான்மையான மக்களால் ஏற்கப்படுவதற்கு நீண்ட காலம் பிடித்தது; பிடிக்கிறது. இதற்கு தூக்குத் தண்டனை ஒழிப்பு பற்றிய சிந்தனையும் விதிவிலக்கல்ல.

ஒருவர் எவ்வளவு பண்பாடு மிக்கவர் என்பதற்கான உரைகல், தான் வெறுக்கும் மனிதர்களை அவர் எப்படி நடத்துகிறார் என்பதுதான். அதைப் போலவே தனது எதிரிகளை, குற்றவாளிகளை நடத்தும் விதம்தான் ஓர் அரசு அல்லது சமூகம் எவ்வளவு நாகரிகமடைந்திருக்கிறது என்பதற்கான உரைகல்.

இலங்கையில் தூக்குத் தண்டனை கடந்த சில தசாப்தங்களாக நடைமுறையில் இருக்காதபோதும் அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வாதங்கள் இன்றும் அவ்வப்போது வெளிப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. பெரும் குற்றங்கள் -குறிப்பாகப் பாலியல் குற்றங்கள் அதிகரித்துவிட்டதனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கின்றன.

இந்தக் குரல்களின் அழுத்தம் காரணமாக தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் அலுவலக வேலைக்கு ஆள்களை எடுப்பதற்கும் அரசு விண்ணப்பங்கள் கோரி இருந்தது. ஆனால் சவூதியில் ரிஸானாவுக்கு இறப்புத் தண்டனை நிறைவேற்றப்பட்டபோது அதனை நாடு முழுவதும் எவருமே ஏற்றுக்கொள்ளவில்லை. ரிஸானா (கிழக்கிலங்கையைச் சேர்ந்த பணிப்பெண்ணான ரிஸானா தனது எஜமானன் வீட்டுக் குழந்தையை வேண்டுமென்றே கொன்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்) அப்பாவி என்றும் அவருக்கு நிறைவேற்றப்பட்ட தண்டனை முறையற்றது என்றும் மக்களும் அரசும் நினைத்தமையே அதற்குக் காரணம். இது தூக்குத் தண்டனை குறித்த இரட்டை மனநிலை இன்னும் இலங்கையர்கள் மத்தியில் நிலவுவதைத் தெட்டத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியது.

## முக்கியமான இரண்டு வாதங்கள்

சாவுத் தண்டனை கூடாது என்பதற்கான வாதங்களிலேயே மிக முக்கியமானவை என்று கருதப்படக் கூடியவை இரண்டு:

1. நமது பொலிஸ், நீதித்துறை மற்றும் புலனாய்வு முறை ஆகியவற்றில் மலிந்து கிடக்கும் குறைபாடுகளின் காரணமாகக் குற்றமற்றவர்கள் பலர் சாவுத் தண்டனைக்கு அனுப்பப்படுகிறார்கள். சில பல ஆண்டுகள் கழித்து உண்மை வெளியாகும்போது, மன்னிக்க முடியாத அந்த இமாலயத் தவறைச் சரிசெய்ய முடியாமல் போகிறது. குற்றமற்ற மனிதர்கள், சாதாரண தண்டனைக்கு உள்ளாவதையே ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலையில், அவர்கள் சாகடிக்கப்படுவதை முற்றிலும் தவிர்த்தாக வேண்டிய அவசியம் இருக்கிறது.

2. கண்ணுக்குக் கண் என்ற தண்டனை எப்படி கொடூரமானதோ அப்படியே கொலைக்குக் கொலை என்பதும். ஒரு காட்டுமிராண்டித்தனத்துக்குச் சட்ட அங்கீகாரத்தை வழங்குவதை எந்த ஒரு அரசும் செய்யக் கூடாது. அப்படி வழங்குமாயின் நாகரிக சமூகம் அதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

## குற்றவாளிகளுக்கு ஆதரவாக அல்ல

சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த கருத்துக்கணிப்பில் 40 சதவீத மக்கள் சாவுத் தண்டனைக்கு எதிராக இருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. இதுவே கடந்த 40 ஆண்டுகளில் சாவுத் தண்டனைக்கு எதிராகக் கிடைத்த ஆதரவின் உச்சம். 1990களின் மத்தியில் இது 20 சதவீதமாக இருந்தது. இன்று எமது நாட்டில் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டால், சாவுத் தண்டனைக்கு எதிரான ஆதரவு இதைவிடக் குறைவாகவே இருக்கும்.

பாலியல் வன்முறையுடன் கூடிய கொலைகளுக்கு என்று குறிப்பாகக் கேட்டால், அதிலும் பெண்களிடம் கேட்டால் சாவுத் தண்டனைக்கான ஆதரவு அநேகமாக 99 சதவீதமாக இருக்கும். இது ஆச்சரியத்துக்கு உரியது அல்ல. இத்தகைய கடுமையான தண்டனைகள் கொடுக்கப்படாவிட்டால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கக்கூட முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சாவுத் தண்டனைகளால் குற்றங்கள் குறைந்தனவா என்று சிந்தித்துப் பார்க்கத் தவறுவது அவர்களின் குற்றமன்று. ஏனெனில் அந்தளவுக்கு குற்றங்களின் எண்ணிக்கை பெருகி உள்ளன. கடுமையான தண்டனை அவற்றைக் குறைக்க உதவக்கூடும் என்று எண்ணுவதைவிட அவர்களுக்கு மாற்று வழி ஏதும் இப்போதைக்கு இல்லை. தண்டனை முற்றாக ஒழிக்கப்பட்டிருக்கும் சில ஐரோப்பிய நாடுகளில்கூட, கொடூரமான குற்றங்கள் சிலவற்றுக்கு சாகடிக்கும் தண்டனை தேவையே என 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் கருதுகின்றனர்.

சாவுத் தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து பெரும்பான்மை மக்களின் கருத்தாக மாற இன்னும் பல பத்தாண்டுகள் ஆக[illegible] நிலை உருவாக, சாவுத் தண்டனைக்கு எதிராகக் குர[illegible] காளர்கள் ஒன்றிணைவதும் ஒரு நாகரிகமான சமூகத்தை உருவாக்க[illegible] தாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்பதை மற்றவர்கள் நம்ப வைப்பதும் அவசியம்.



## மூன்று முக்கிய அம்சங்கள்

சாவுத் தண்டனையை முற்றாக ஒழித்திருக்கும் வளர்ந்த நாடுகள் பலவற்றில்கூட முதிரா பருவத்தினர் (பதின்ம வயதினர்) தொடர்பான வழக்குகளில் தண்டனை வழங்கும்போது குற்றத்தின் தன்மை முக்கியமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஆனால் இந்தியாவில், டெல்லி கும்பல் பாலியல் வன்முறை மற்றும் கொலையில் ஆக மோசமாக நடந்து கொண்ட சிறுவன் 18 வயதுக்கு மூன்று மாதங்கள் குறைவு என்பதால், இளம் சிறாருக்குரிய எளிய தண்டனையே வழங்கப்பட வேண்டும் என்று முற்போக்காளர்கள் வறட்டுத்தனமாக வாதிட்டமை, சாதாரண மக்களிடம் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியது. தண்டனைக் கோட்பாடுகளிலேயே தலையாயது ஒரு குற்றவாளி தனது குற்றத்துக்குப் பொருத்தமான சிறைத் தண்டனை பெற வேண்டும் என்பதுதான். இதற்கு அடுத்தபடியாக முக்கியமான மூன்று அம்சங்கள் தண்டனைகளின் பின்னால் இருக்கின்றன.

1. அதே குற்றவாளியால் மீண்டும் ஒரு நபர் பாதிக்கப்படுவதை முற்றாகத் தடுப்பது.
2. குற்றம்புரிவோரிடம் அச்சத்தை ஏற்படுத்தி, குற்றங்கள் மீண்டும் நடப்பதைத் தடுப்பது.
3. குற்றவாளியைச் சீர்திருத்துவது.

மிகக் கொடூரமான குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் ஆயுள் சிறை என்பது ஆயுள் முழுமைக்குமான சிறை என்பதை உறுதிப்படுத்துவது என்பது தூக்குத் தண்டனைக்கு எதிரான மனநிலையை மக்களிடம் உருவாக்குவதற்கு மிக அவசியம். ஒருவன் மனிதனாக வாழ மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கத் தவறுவது மனித குலத்தின் தவறாக அமையாதா என்ற கேள்வியும் ஒரு பக்கத்தில் இருக்கிறது. இருப்பினும் சாவுக் கொட்டடிகளுக் குச் சிலரைத் தள்ளுவதற்கான மாற்றாக இப்போதைக்கு இதுதான் இருக்கிறது.

## ஆயுள் சிறையின் நோக்கங்கள்

ஆயுள் சிறையின் தலையாய நோக்கங்கள் இரண்டு:

1. கொடூரமான குற்றத்தைப் புரிந்தவர் அதற்கு உரித்தான தண்டனையைப் பெற்றாக வேண்டும்.
2. இனியொரு அப்பாவி அவரால் பாதிக்கப்படும் நிலை நேரவே கூடாது.

ஒரு குற்றவாளி திருந்திவிட்டாரா இல்லையா என்பதை உறுதியாகத் தீர்மானிப்பது என்பது ஒரு சிறந்த உளவியல் நிபுணருக்கே சாத்தியமில்லை. ஆளுமைகளின் உருவாக்கத்தில் சுற்றுச்சூழலுக்கு முக்கியமான பங்கிருப்பதைப் போலவே மரபணுக்களுக்கும் முக்கிய பங்கிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மேலும், எமது சிறைச்சாலைகள் குற்றவாளிகள் திருந்துவதற்கான வாய்ப்புகளை அளிக்கும் இடம் என்று நம்புவதற்கு ஒருவர் சர்வ முட்டாளாக இருக்க வேண்டும். இந்நிலையில், எமது சிறைகளில் ஆயுள் தண்டனை பெற்ற ஒருவர் திருந்தி சமூகத்துடன் மீண்டும் இணைவதென்பது கேலிக்கூத்து. அண்மையில் நடந்த சிறைக் கலவரத்தின்போது இது வெளிச்சத்துக்கு வந்தது. சிறைக் காவலர்களைத் தாக்கி அவர்களது ஆயுதங்களைக் கைதிகள் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் ஆயுதங்களை பறித்தார்கள் என்பதற்காக அரசுப் படையினர் அவர்களைச் சுட்டுக்கொன்றார்கள் (இதில் உள்ளே இருந்த குற்றவாளிகளுக்கும் வெளியே இருந்த குற்றவாளிகளுக்கும் என்ன வித்தியாசம் என்பது தெரியவில்லை). எனவே எமது சிறைகளில் குற்றவாளிகள் திருத்தப்படுகிறார்கள் என்பதையோ சிறைச்சாலை வாசலில் எழுதப்பட்டிருப்பதைப் போன்று சிறைக்கைதிகளும் மனிதர்களே என்று நடத்தப்படுகிறார்கள் என்பதையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நிலையில் ஆயுள் தண்டனைக் கைதி ஒருவர் சிறையில் திருந்தி சமூகத்துடன் மீள இணைவது நடக்கக்கூடிய காரியம் அல்ல.

அதேவேளை குற்றமற்றவர் தண்டிக்கப்படுவது, குறிப்பாக சாவுத் தண்டனை பெறுவது, எப்பாடு பட்டேனும் எப்படித் தவிர்க்கப்பட வேண்டுமோ அதைப் போலவே ஒரு கொடூரமான குற்றவாளியால் மீண்டும் ஓர் அப்பாவி பாதிக்கப்படாதிருப்பதையும் உறுதிசெய்தாக வேண்டிய அவசியம் ஓர் அரசுக்கு இருக்கிறது.

தூக்குத் தண்டனையை ஒழிக்கக் குரலெழுப்புபவர்களில் பெரும்பாலானோர் கொடூரமான குற்றங்களுக்கான ஆயுள் சிறை ஆயுள் முழுமைக்குமான சிறையாக இருந்தாக வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதில்லை என்பதால், மனித உரிமைகளுக்காகப் போராடுகிற வர்கள் எல்லாம் குற்றவாளிகளுக்காகப் பரிந்து பேசுகிறவர் கள் என்று பொதுமக்கள் கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது. (இலங்கையில் மனித உரிமைகளுக்காகப் பேசுபவர்கள் எவராயினும் அவர்கள் குற்றவாளிகளாகப் பார்க்கப்படும் நிலைதான் இருக்கிறது) பெண்களையும் குழந்தைகளையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிக் கொல்பவர்கள், அரசு மீதான கோபத்தால் அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லுபவர்கள், பிற, கொடூரமான கொலைகாரர்கள் என அனைவரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவதுடன் அவர்களைத் திருத்துவதற்கான திட்டங்களும் விசேடமாக சிறைகளில் செயற்படுத்தப்படும் என்று அரசு மக்களை நம்ப வைக்கும் வரையில் சாவுக் கொட்டடிகளுக்கு மனிதர்கள் அனுப்பப்படுவதை எதிர்க்க மக்கள் ஆதரவு முழுமையாகக் கிடைப்பது கடினமானதுதான். இருப்பினும் இலங்கை போன்ற சாவுகளால் பெரும் அவலங்களைச் சந்தித்த நாடுகளில் சாவுத் தண்டனைகளை மீண்டும் உயிர்ப்பிப்பது தேவையற்றது. சாவுகளைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதே சிறந்தது.

> “நமது பொலிஸ், நீதித்துறை மற்றும் புலனாய்வு முறை ஆகியவற்றில் மலிந்து கிடக்கும் குறைபாடுகளின் காரணமாகக் குற்றமற்றவர்கள் பலர் சாவுத் தண்டனைக்கு அனுப்பப்படுகிறார்கள். சில பல ஆண்டுகள் கழித்து உண்மை வெளியாகும்போது, மன்னிக்க முடியாத அந்த இமா லயத் தவறைச் சரிசெய்ய முடியாமல் போகிறது.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
22 12 2013 ஞாயிற்றுக்கிழமை

# சித்தமருத்துவனும் சிவபக்தனுமாகிய இராவணன்



இராவணன் இராமாயணத்தில் உள்ள ஒரு தமிழ் வீரன். இலங்கையை ஆட்சி செய்த இராவணன் சிறந்த தமிழன், சிறந்த சிவபக்தன், சிறந்த மருத்துவனும் கூட. இவனது இயற்பெயர் சிவதாசன். இராமாயணத்தில் இராவணனை அரக்கனாகவும், காமுகனாகவும் ஆரிய வம்சத்தினர் குறிப்பிட்டுள்ளனர். இங்கு இராவணன் செய்தது சீதையை கவர்ந்தது மட்டுமே. தொட்டதும் இல்லை. அக்காலகட்டத்தில் அரசர்களுக்கிடையே இப்படியான பழக்கங்கள் இருந்துள்ளன. வரலாறுகள் உருவாக்கப்படுவது நாம் அறிந்ததே. இராவணனுடைய ஆட்சியின் போது இலங்கை வளம் நிறைந்து காணப்பட்டதாகவும், இராவணன் விமானம் ஒன்றை வைத்திருந்ததாகவும் இராமாயணம் கூறுகின்றது. "வாரிய பொல" என்பது ("வானோடும் கலம், இறங்குமிடம்" எனப் பொருள்படும்) போன்ற ஊர் பெயர்களும் இலங்கையில் உண்டு என்பது இங்கு குறிக்கத்தக்கது. இராவணன் பற்றிய நோக்குகள் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேறுபட்டு காணப்படுகின்றன. திருக்கோணேச்சரம் இலங்கையில் திருகோணமலையில் உள்ள திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலமாகும். உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகப் பழைமையான இந்த ஆலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்கராஜா என்ற மன்னன் கி.மு.1300 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டினான் என்று சான்றுகள் கூறுகின்றன. சிவபக்தனாகிய இராவணனால் இங்குள்ள சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் சான்றாக, திருக்கோணேச்சரத்தில் இராவணன் வெட்டு காணப்படுகின்றது.

## இராவணன் வெட்டு

இராவணனின் தாயார் தினமும் சிவலிங்கத்துக்கு பூசை செய்து வந்தார். ஒரு சமயம் பூசையின் போது தடங்கல் ஏற்பட்டதால் தாயார் மனமுடைந்து போக, அதனை நிவர்த்தி செய்வதற்காக தட்சிண கைலாயம் எனப்படும் திருக்கோணேச்சரத்துக்கு வந்து சிவலிங்கத்தினைப் பெற்று தாயாருக்குக் கொடுப்பதற்காக சிவ வழிபாடு செய்தான் இராவணன். சிவன் காட்சி கொடுக்காததால் கோபமடைந்து மலையை வெட்டியதாகவும், மலையைப் பெயர்த்து எடுக்க முயற்சிக்கும் போது மலையில் நசியுண்டு, தன் தவறை உணர்ந்து ஒரு தலையின்னை கொய்து, அதற்கு கை நரம்புகளை இணைத்து, சாமகாணம் இசைத்து சிவனை மகிழ்வித்ததாகவும் கூறப்படுகின்றது. மலையை வெட்டியபோது பிளவுண்ட பகுதியே இராவணன் வெட்டு எனப்படுகின்றது.

பின்னர், இராவணன் தனது தாய்க்கு பிதிர்க்கடன் செய்வதற்காக உருவாக்கிய ஏழு சுடுதண்ணீர் கிணறுகள் இன்றும் திருகோணலை, கன்னியா வில் உள்ளன. தற்போது இவை இராமருடன் தொடர்புபடுத்தப்பட்டு வருகின்றது.

## சிறந்த சித்த வைத்தியன்

இலங்கை அரசன் இராவணன் மிகச் சிறந்த வைத்தியனாக இருந்துள்ளான். சித்த மருத்துவத்தின் முழுப் பகுதியுமே அவனுக்கு தெரிந்திருக்கின்றது. ஏனெனில் இராவணனால் உருவாக்கப்பட்ட மருத்துவ நூல்கள் பல காணப்படுகின்றன. ஆனால் அவை அறியப்படாமலே போயுள்ளன.

இராவணனின் 'நாடிப் பரீட்சை" (Nadi pariksha). அர்க்கப் பிரகாசம் (Arka prakashata). 'ஒடிஷா சிகிட்ஷா (Uddisa chiktsaya). "ஒடியா சிகிட்ஷா"(Oddiya chiktsa)"குமார தந்த்ரயா (Kumara tantraya). "வாடின பிரகாரனயா (Vatina prakaranaya) என்னும் நூல்கள் சிங்கள மொழியில் இயற்றப்பட்டு பின்னர் சமஸ்கிருத மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டன.

## திரிவு படுத்தும் சிங்கள வரலாறு

தாஸிஸ் இராவணன் என்னும் பெயருடையவன் அரசனாக, இராவணன் 'அங்க வெட்டு' எனப்படும், வர்மக் கலை, மருத்துவக்கலை, இசைக் கலை போன்ற பல கலைகளிலும் சிறந்து விளங்கியவனாக விளங்கினான் என்று சிங்கள மொழியின் தொன்மை நூலாகிய "இராஜவலியா" மற்றும் "இராவண வலியா" என்னும் நூல்கள் புகழ்ந்துரைக்கின்றன. இராவணன் என்று பதினொரு பேர் இருந்துள்ளனர். அவர்களில் நள இராவணன், மனு இராவணன், புனு இராவணன், தாஸிஸ் இராவணன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் தாஸிஸ் இராவணன் என்பவன் பத்து வகையான ஆற்றல்களுடன் பத்து நாடுகளை ஆண்டான். அதனால் அவன் பத்துத் தலை இராவணன் என்று அழைக்கப்பட்டான் என்று குறிப்பிடுகிறது. மன்னன் தாஸிஸ் இராவணன் கி.மு.2554 - 2517 என்னும் காலப் பகுதிக்கு உரியவன். இவன் சிங்கள இனத்தின் பழங்குடி இனத்தவன். மண்டோதரியின் கணவன் என்று சிங்கள வரலாறு கூறுகிறது.

இந்திய - ஆரியர்களின் கலப்பினத்தவர்களான சிங்களவர்கள் வட இந்தியாவிலிருந்து (ஓரிசா) இலங்கைக்குக் குடிபெயர்ந்ததே கி.மு.6 ஆம் நூற்றாண்டில்தான். அவ்வாறிருக்கும் போது சுமார் 5000 ஆண்டுக்கு முன் வாழ்ந்ததாகக் கூறப்படும் இராவணன் சிங்களவன் என்றும் அவன் சிங்கள மொழியில் நூல் இயற்றினான் என்றும் சிங்கள இனத்தின் பழங்குடியைச் சார்ந்தவன் என்று கூறுகின்றது சிங்கள வரலாறு.

## ஆயுள் வேதத்தின் தந்தை

ஆரியர்களும் சிங்களவர்களும் இலங்கைக்குச் செல்லும் முன்பே ஆயுள்வேதம் இலங்கைக்கு எப்படி வந்தது? 5000 ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் இருந்த மருத்துவம் ஆயுள் வேதம். அதுவே தமிழ் மருத்துவத்தைக் குறிக்கும் பழஞ்சொல் என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்றாகிறது.

15 ஆம் நூற்றாண்டளவில் சிங்களத்தில் ஆக்கப்பட்ட "வைத்திய சிந்தாமணி பைசாஜ்ஜ சங்கிரகம்(Vaidya cintamini bhaisadya sangrahava) என்னும் சிங்கள மருத்துவ நூல், இராவணன் வைத்திய சிந்தாமணி என்னும் தமிழ் மருத்துவ நூலைத் தழுவி எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தியாவின் வடக்கிலுள்ள நாலந்தா பல்கலைக்கழகம், ஆயுள்வேதப் பல்கலைக் கழகம், சமஸ்கிருத கல்லூரிகள், கேரளாவில் உள்ள ஆயுள் வேதக் கல்லூரி ஆகியவற்றில் வழங்கி வருகின்ற மருத்துவ நூல்களில் செம்பாதி தமிழ் நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வட மொழியிலுள்ள இரச சாஸ்திரம், இராவணன் நூலகத்திலிருந்து கொண்டுவரப்பெற்ற நூலைப் பார்த்து எழுதியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கி.பி.10 ஆம் நூற்றாண்டளவில் குமரி, திருவனந்தபுரம் பகுதியில் வழங்கி வந்துள்ள 'சிந்தாமணி மருத்துவம்' என்னும் "இராவணன் மருத்துவ நூல்கள் அனைத்தும் திருவிதாங்கூர் மன்னரின் தூண்டுதலினால் திரட்டப்பட்டுள்ளன. அவற்றை நொய்யாற்றங்கரை என்னும் ஊரில் நிறுவப்பட்டிருந்த 'தமிழ் மருத்துவ ஆய்வு மையம்' என்னும் அமைப்பின் மருத்துவர்களும் வர்ம ஆசான்களும் அகத்தியர் பெயரில் மலையாள மொழியில் மொழி மாற்றம் செய்துள்ளனர். அந்த நூல்களின் உதவியினால் உருவாக்கப்பட்டதே 'ஆயுள் வேத மருத்துவம்' ஆகும்.



**இராவணன் இயற்றிய நூல்கள் என அறியப்பட்டுள்ள நூல்கள் விவரம் வருமாறு:**

1. உடற்கூறு நூல்
2. மலைவாகடம்
3. மாதர் மருத்துவம்
4. இராவணன் - 12000
5. நாடி எண் வகை பரிசோதனை நூல்
6. இராவணன் வைத்திய சிந்தாமணி
7. இராவணன் மருந்துகள் - 12000
8. இராவணன் நோய் நிதானம் - 72000
9. இராவணன் - கியாழங்கள் - 7000
10. இராவணன் வாலை வாகடம் - 40000
11. இராவணன் வர்ம ஆதி நூல்
12. வர்ம திறவுகோல் நூல்கள்
13. யாழ்ப்பாணம் - மூலிகை அகராதி
14. யாழ்ப்பாணம் - பொது அகராதி
15. பெரிய மாட்டு வாகடம்
16. நச்சு மருத்துவம்
17. அகால மரண நூல்
18. உடல் தொழில் நூல்
19. தத்துவ விளக்க நூல்
20. இராவணன் பொது மருத்துவம்
21. இராவணன் சுகாதார மருத்துவம்
22. இராவணன் திராவக தீநீர் நூல் - அர்க்க பிரகாசம்
23. இராவணன் அறுவை மருத்துவம் - 6000
24. இராவணன் பொருட்பண்பு நூல்
25. பாண்ட புதையல் முறைகள் - 600
26. இராவணன் வில்லை வாகடம்
27. இராவணன் மெழுகு வாகடம்

மேற்காணும் நூல்களில் பல சங்கரன் கோயில் அருகிலுள்ள "கரிவலம் வந்த நல்லூர்" என்னும் ஊரில் அமைந்துள்ள "பால் வண்ண நாதன்" திருக்கோயிலில் கருவூலமாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

*தகவல் மூலங்கள்:*
*தட்சிண கைலாயம் -*
*நூல், திருக்கோணேச்சர ஆலயம்.*

# தேசத்துக்காக....



துப்பர்க்கி மௌனித்த-எம்
தாய் தேசத்தில்
மீண்டும் பிண மாரி
பொழியாமல்
முழுதும் அருள் மாரி
பொழியட்டும்...

இளைஞனே
இடைவேளை விட்ட பின்பும்
என்ன தயக்கம்
பக்திச் செங்கோலை உன்
இதயத்தில் ஊன்றி விடு

ஒரு இயேசுவாக
ஒரு புத்தனாக
ஒரு நபியாக
உன்னைத் துறக்கச்
சொல்லவில்லை
சுயநலத்தை மட்டும்
துறந்தால் போதும்

வில்லெடுத்த பார்த்தீபன்
ஞானத்தையும் கடந்தே
சென்றான்....
தன் தேசத்துக்காக
என்பதை-நீ
ஒரு போதும் மறவாதே

வன்முறையை வரையறை
செய்து
உன் நடைமுறையை
புனிதமாக்கு
சிலிர்க்காத மொட்டுக்களும்
நாளை சிலிர்ப்பதற்கு....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடைபெற்றார் கிரிக்கெட் ஜாம்பவான்



எனது மனதின் அடித்தளத் திலிருந்து உங்கள் அனை வருக்கும் நன்றி கூறுகின்றேன். உங்கள் நினைவு எப்போதும் என்னோடிருக் கும். முக்கியமாக "சச்சின், சச்சின்" என்ற உங் கள் குரல் என் கடைசி மூச்சு இருக் கும் வரை மனதில் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

அசை போட ஒரு விடயம்
105

ரம்யன்

சச்சின் டெண்டுல்கர் தனது காலத்து தலைமுறையின் மிகப்பெரிய கிரிக்கெட் வீரர் என்று போற்றப்படுபவராவார். தமது 11 ஆவது வயதில் கிரிக்கெட் ஆடத் தொடங்கிய அவர் 16 வயதில் முதல் டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்டு பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடி னார். உள்நாட்டில் மும்பைக்கும், சர்வதேசத்தில் இந்தியாவுக்குமாக 24 ஆண்டுகள் விளையாடி 40 வய தில் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார். 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி மும்பாய் நிர்மல் தாதியர் விடுதி யில் பிறந்தார். அவர் தந்தை பிரபல மராத்தி நாவல் ஆசிரியர் ரமேஷ் டெண்டுல்கர். தாயார் ராஜ்னி காப்பு றுதித் துறையில் பணியாற்றினார்.

டெண்டுல்கருக்கு இரண்டு மூத்த சகோதரர்களும், ஒரு மூத்த சகோ தரியும் உள்ளனர். இவர்கள் தந்தையின் முதல் மனைவி மூலம் பிறந்தவர் கள். டெண்டுல்கர் சிறுவனாக இருந்த போது தன்னைவிட வயதில் குறைந்த சிறுவர்களை அச்சுறுத்துபவராகவும் பாடசாலைக்கு புதிதாக வருபவர்களு டன் சண்டை பிடிப்பவராகவும் இருந் துள்ளார். அதனால் இவரது இந்தக் குணங்களை மாற்றுவதற்காக சகோதரர் அஜித் 1984 ஆம் ஆண்டு டெண்டுல்கரை கிரிக்கெட் விளை யாட்டுக்கு அறிமுகப்படுத்தி விட்டார். அஜித், டெண்டுல்கரை விட பத்து வயது மூத்தவர். அவர் தனது வாழ்க் கையில் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியவர் என்று டெண்டுல் கரால் பாராட்டப்பட்டவர். 1987 ஆம் ஆண்டு 14 வயதாக இருக்கும் போது வேகப் பந்துவீச்சாளராகப் பயிற்சி பெறுவதற்காக சென்னைக்கு வந்தார். ஆனால் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான டெனிஸ் லில்லி, டெண் டுல்கரை பந்துவீச்சை விட துடுப் பாட்டத்தில் கவனம் செலுத்துமாறு யோசனை கூறியிருந்தார்.

டெண்டுல்கர் இரண்டு கைகளாலும் வேலை செய்யக்கூடியவர். வலது கையால் துடுப்பெடுத்தாடுவார், பந்து வீசுவார். இடது கையால்தான் எழுது வார். இடது கையால் பந்துவீசவும் பழகியிருந்தார். டெண்டுல்கர் தம் மைப்போல் பந்துவீசுவதாக சேர் டொனால்ட் பிராட்மன் தமது சுய வரலாற்றில் ஒரு குறிப்பு எழுதியுள்-ளார். ஒரு தினம் டெண்டுல்கர் துடுப்பாடுவதைக் கவனிக்கும்படி பிராட்மன் தமது மனைவியிடம் கூறியதாகவும் குறிப்பு இருக்கிறது. சுனில் கவாஸ்கர் 2008 ஆம் ஆண்டு எழுதிய கட்டுரையொன்றில் டெண்டுல்கரைப் பற்றி பின்வரு மாறு எழுதியிருந்தார்.

கிரிக்கெட் விளையாட்டின் வரலாற் றில் எந்த ஒரு வீரராவது இந்தச் சின்ன சம்பியன் செய்வது போல் மரபு வழியிலான நுட்பங்களில் இந்தக் காலத்துக்குரிய ஆக்கிரமிப்புக்களை இணைத்து விளையாடுபவர்களைப் பற்றி நினைத்துப் பார்க்கவும் முடிய வில்லை என்று.

டெண்டுல்கர் சாயிபாபா பக்தர். பல தடவைகள் புட்டபர்த்திக்குச் சென்று அவருடைய ஆசியைப் பெற்ற துண்டு. பாபா இறந்த போது அங்கு சென்று கண்ணீர் விட்டு அழுதார். தனது பிறந்தநாள் கொண்டாட்டங் களை இரத்துச் செய்தார். கணேச சதுர்த்தியையும் அவர் வீட்டில் கொண் டாடுவது வழக்கம்.

1995 மே மாதம் 22 அன்று குஜராத்தி தொழில் அதிபர் ஆன்மெத்தா என்ப வரின் மகளும், குழந்தை வைத்தி யருமான அஞ்சலியைத் திருமணம் முடித்தார். அவர்களுக்கு அர்ஜுன் மற்றும் சாரா என்ற இரு பிள்ளைகள் உள்ளனர். வருடம் தோறும் 200 வசதி குறைந்த பிள்ளைகளுக்கு அபனா லய என்ற நிறுவனம் ஊடாக ஆதர வளிக்கிறார். இந்த நிறுவனம் அவரது மாமியாரால் நடத்தப்படு கின்றது.

2012 ஆம் ஆண்டு ராஜ்யசபா உறுப்பினராக நியமிக்கப்பட்டார். விளையாட்டு மற்றும் கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு இந்தப் பதவி வழங்கப் பட்டமை அதுவே முதல் தடவை. இந்தப் பதவிக்காக வழங்கப்பட்ட பங்களாவை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். இது ஏழைகளின் பணம் வீணாக்கப்படுவதாக இருக் கும் என்று கூறிவிட்டார் சச்சின். டெண்டுல்கர் தனது 100 ஆவது சர்வ தேச 100 ஆவது சத சாதனையை 2012 மார்ச் 16 ஆம் திகதி ஆசியக் கிண்ணப் போட்டித் தொடரில் மிர்பூரில் பங்களாதேஸுற்கு எதிரான ஆட்டத் தில் நிகழ்த்தினார். 1994 இல் அர் ஜுனா விருது, 1997-98 ராஜுவ் காந்தி கேல்ரட்ண விருது, 1999 பத்மஶ்ரீ விருது, 2001 இல் மகா ராஷ்ரா பூஷன் விருது, 2008 பத்ம விபூஷன் விருது, இறுதி யில் 2013 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருது எனப் பல விருதுகள் டெண்டுல் கருக்கு வழங்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு அப்போது டெண் டுல்கருக்கு 14 வயது. அப்போதைய சிறந்த இந்திய துடுப்பாட்ட வீரரான சுனில் கவாஸ் கர் தான் வைத்தி ருந்த மிகவும் பாரம் குறைந்த இரு கால் காப்பு(udtra ligshtpads) மட்டை களை டெண் டுல்கருக்கு வழங்கி தைரியமூட்டினார்.

அந்த முறை மும்பை கிரிக்கெட் சங்கத்தின் திறமையான ஜூனியர் விருது கிடைக் காமைக் காகக் கவலைப்பட வேண்டாம் என்றும் தேற்றினார். 20 வருடங் களுக்குப் பிறகு சுனில் கவாஸ் கரின் 34 டெஸ்ட் சதச் சாதனையை முறியடித்த போது டெண்டுல்கர் அதனை நினைவு கூர்ந்தார். சுனிலுடைய வார்த்தை கள் எனக்கு மிகப் பெரிய ஊக்க சக்தியாக இருந்துள்ளன என்று டெண்டுல்கர் குறிப்பிட்டார்.

[illegible] எனது வாழ்வில் மிக முக்கியமான மனிதர் எனது தந்தையாவார். 1999 ஆம் ஆண்டு அவர் இறந்தபோது நான் அதனைப் பெரும் இழப்பாக உணர்ந் தேன். அவர் இல்லாதிருந்தால் இன்று இங்கு, நான் உங்கள் முன்னின்று பேசிக் கொண்டிருக்க முடியாது. அவர் எனது 11 வயதில் சுதந் திரத்தை வழங்கினார். அப்பொழுது சொன்னார், உன் கனவுகள் நன வாவதற்கு உழை, ஆனால் குறுக்கு வழிகளை ஒரு போதும் கடைப் பிடிக் காதே என்று.



பெற்றோர் மடியில் படுத்திருக்கும் சச்சின்



எனக்குத் தெரியவில்லை எனது தாயார், எவ்வாறு என்னைப் போன்ற குழப்படிகார பையனை சமாளித்தார் என்று. அது மிகக் கடின மாகவே இருந்திருக்கும். அவரும் மிக பொறுமைசாலியாக இருந்தி ருக்க வேண்டும். ஒரு தாய்க்கு தன் மகன் பத்திரமாகவும், சுகமாகவும் எதற்கும் தகுதியானவனாகவும் இருப்பது அவசியம். அதில்தான் அவர் கவனமாகவும், கவலை கொள்பவராகவும் இருந்துள்ளார்.

கடந்த 24 ஆண்டுகள் காலமாக நான் இந்தியாவுக்காக விளையாடிய போது எனது தாயார் என்னை கவனித்துக் கொண்டார். அதற்கு முன்னரும் எனக்காக அவர் பிரார்த்தனைகள் செய்து வந்துள்ளார். அவரது பிரார்த் தனைகள் தான் என்னை பலவா னாக இருக்க செய்தது என்று நினைக் கிறேன். அம்மா எனக்காக நீங்கள் செய்த தியாகங்களுக்காக பெரிதாக நன்றிகள் உரித்தாகட்டும். மூத்த சகோதரநிதின், அவருடைய குடும் பத்த வர்களும் எனக்கு எப்போதுமே ஊக்கமளித்து வந்துள்ளார்கள். மூத்த சகோதரர் அதிகம் பேச விரும்புவதில்லை. ஆனால் எனக்கு அவர் கூறியது எதைச் செய்தாலும் 100 வீதம் முக்கியத்துவம் கொடு. அந்த வகையில் உன்மீது எனக்கு நம்பிக்கையிருக்கிறது என்பதாகும். எனது மற்ற சகோதரர் அஜித் . அவரைப்பற்றி நான் என்ன கூறுவது. நாங்கள் இருவரும் இந்த கனவுவாழ்க் கையை ஒன்றாக நடத்தியிருக்கி றோம். எனது கிரிக்கெட்டுக்காக அவர் தனது வாழ்வை தியாகம் செய்தவர்.

எனக்குள் இருந்த பொறியை அவர் இனம் கண்டார். எனக்கு 11 வயது இருக்கும் போது என்னை ஆர்ச்ரெக் கர் சேரிடம் அவர் அழைத்துச் சென்றார். அவர்தான் எனது பயிற்சி யாளர். அங்கிருந்து எனது வாழ்க்கை மாற்றம் பெற்றது.

1990 ஆம் ஆண்டு மிக அழகான ஒரு சம்பவம் என் வாழ்வில் நடந்தது. அதுதான் நான் எனது மனைவி அஞ்சலியைச் சந்தித்த சம்பவம் . அவை மிக சிறப்பான ஆண்டுகள். அவை தொடர்ந்தன. இனிமேலும் தொடரும். ஒரு மருத்துவர் என்ற முறையில் அஞ்சலிக்கு நல்ல எதிர்காலம் காத்திருந்தது. நாங்கள் குடும் பம் நடத்துவதற்கு தீர்மானித்த போது அவர் பின் பக்கம் நகர்வ தற்கான முடிவெடுத்தார். நீங்கள் உங்கள் கிரிக் கெட்டைக் கொண்டு செல்லுங்கள் நான் எமது குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன் என்று அவர் கூறினார்.

அடுத்த எனது வாழ்வின் இரண்டு பெறுமதி மிக்க மாணிக்கங்கள் சாரா வும் அர்ஜுனும். அவர்கள் வளர்ந்து விட்டார்கள். மகளுக்கு 16 வயது. மக னுக்கு 14 ஆகிறது. அவர்களுடன் முக் கிய நாள்களை செலவழிக்கிறேன்.

நாங்கள் பெரிய திரைகளில் இவை களை பார்க்கிறோம். ராகுல், லக்ஸ் மன், சவுரவ் மற்றும் சுனில் மற்றும் என்முன் இருக்கும் எனது அணி உறுப்பினர்கள் நீங்கள் எல்லாரும் வீட்டுக்கு வெளியில் உள்ள எனது குடும்பத்தினர்கள். உங்களுடன் மிக ஆச்சரியமான நேரங்களை நான் கழித்திருக்கிறேன். அந்த விசேட நிமிடங்களை இனிமேலும் அனுப விக்க முடியாமல் இருக்கும் என்பது கடினமாகவே இருக்கப் போகின்றது. எனது பயிற்றுவிப்பாளர்கள் அவர் களின் வழிகாட்டல்கள் யாவும் எனக்கு விசேடமாக இருந்தன. அன்றைய தினம் காலையில் எம்.எஸ்.தோனி 200 ஆவது டெஸ்ட் போட்டிக்கான தொப் பியை வழங்கியபோது நாம் எல்லோ ரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்று உணர்கிறேன். இந்திய கிரிக்கெட் அணியின் உறுப்பினர்களாய் இருந்தே தேசத்துக்குப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு அதிர்ஷ்ட சாலிக ளாகவும் பெருமைக்குரியவர் களாகவும் இருக்கிறோம்.

எனக்குத் தெரியும். எனக்காக பலர் விரதம் இருந்துள்ளார்கள். பிரார்த் தனை செய்துள்ளார்கள். இன்னும் எத்தனையோ செய்திருக்கிறார்கள். அவை இல்லாதிருப்பின் எனது வாழ்க்கை இப்போதிருப்பது போல் இருந்தி ருக்காது. எனது மனதின் அடித்தளத் திலிருந்து உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின் றேன். உங்கள் நினைவு எப்போதும் என்னோடிருக் கும். முக்கியமாக "சச்சின், சச்சின்" என்ற உங்கள் குரல் என் கடைசி மூச்சு இருக்கும் வரை மனதில் எதிரொலித்துக் கொண்டி ருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக அளவில் இதேபோன்ற வசீகரத்தைக் கொண்டவராக இருந்தவர் மைக்கேல் ஜாக்ஸன். அவரைப் பார்த்த உடனேயே ரசிகர்கள் பரவசம் அடைந் தார்கள். ஆனந்த மிகுதியால் கண்ணீர் விட்டார்கள். அத்தகைய மைக்கேல் ஜாக்ஸனைவிட ஒரு விதத்தில் ரஜினி இன்னும் சிறந்து விளங்கினார்.**

தமிழ் அழகன்

# ரஜினி
## மாயங்களின் வித்தை



மார்லன் பிராண்டோ மறைந்தபோது, துயரம் தாங்காமல் ஒரு வாரத்துக்கு அழுதாராம் ஒரு ரசிகர். அவர் பிராண்டோவை ஒரு தடவைகூடப் பார்த்தில்லை. அவர் நடித்த ஒரு படத்தைக்கூட அவர் பார்த்தது இல்லை. ஆனாலும் பிரான்டோவுக்கு அவர் ரசிகர். அது எப்படிச் சாத்தியமாயிற்று? பிராண்டோவின் பேட்டி ஒன்றைப் பார்த்து அவருக்குத் தான் ரசிகரானார் என்று சொன்னார் அந்த நபர்.

"உங்கள் கதாபாத்திரத்துக்கான உடைகளை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள்?" என்று செய்தியாளர் கேட்டபோது, "அமெரிக்கச் செவ்விந்தியர்கள் எவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறார்கள்" என்று மணிக்கணக்கில் பதில் அளித்துச் செய்தியாளரை பிராண்டோ வெறுப்பேற்றிய பேட்டி அது.

ஒரு சினிமா நாயகனை மக்கள் ஏன் கொண்டாடுகிறார்கள் என்பதற்குப் பெரிய ஆராய்ச்சிகள் தேவை இல்லை. பிராண்டோ சொன்னது இது தான். "நல்லவனோ, கெட்டவனோ மக்களுக்குக் கொண்டாடுவதற்குக் கட்டாயம் ஒரு நாயகன் தேவை. அவனைப் பற்றிப் பேசுவதும் கொண்டாடுவதும் அவர்களுக்கு முக்கியம்". ஆனால், ஒரு நாயகன் கொண்டாடப்படும் பின்னணி முக்கியமானது. அது சமூகத்தின் மனநிலையையும் சேர்த்து ஆய்வாளர்கள் கணிக்க உதவுகிறது.

### எம்.ஜி.ஆர். - ரஜினி

இப்படித்தான் ரஜினி எனப்படுகிற ரஜினிகாந் எனப்படுகிற சிவாஜிராவும் மக்கள் நாயகனாகக் கடந்த இரண்டு தசாப்தங்களாகக் கொண்டாடப்படுகிறார். தனது 63ஆவது வயதைச் சில நாள்களுக்கு முன்னரே கடந்த ரஜினி தமிழ் ரசிகர்களிடம் ஏற்படுத்திய விம்பமும் பாதிப்பும் கொஞ்சநஞ்சமல்ல.

தமிழ்ப் படங்கள், நாடகங்கள் என்ற கட்டத்தைத் தாண்டிப் பயணிக்க ஆரம்பித்த காலங்களில் தங்களைத் துன்பப்படுத்திய பணக்காரர்களையும் பண்ணையாளர்களையும் திரைப்படங்களில் தட்டிக்கேட்ட நாயகர்களை மக்கள் ரசித்தார்கள். இந்த ஒரு காரணத்துக்காகவே (அவர்களுக்கு நடிக்கத் தெரிந்திருக்காதபோதும்) அந்த நாயகர்கள் புகழின் உச்சத்துக்குப் போனார்கள். திரையில் அறநெறிகளுடன் வாழ்ந்து காட்டிய நாயகர்களோ மக்கள் தலைவர்களாகப் பார்க்கப்பட்டார்கள். எம்.ஜி.ஆர். அப்படித்தான் வெற்றிபெற்றார். ஆனால் ரஜினி விஷயத்தில் நடந்ததோ தலைகீழ். இந்தியா கலாசாரப் பாய்ச்சலுக்குள்ளான காலகட்டம் அது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் மீறல் கனவுகளை, ஆழ்மன ஆசைகளைத் திரையில் அநாயசமாக நடத்திக் காட்டினார் ரஜினி. திரையில் அவர் ஒரு சாதாரண பொதுமகனாகவே இருந்தார். சாதாரண மக்களின் முரட்டுத்தனத்தையும் அப்பாவித்தனத்தையும் பிரதிபலித்தார். ஆனால் சாதாரணமான எந்தவொரு மனித னாலும் கற்பனைசெய்யக்கூட முடியாத அற்புதங்களையும் நிகழ்த்தினார். முக்கியமாக, சொந்த விஷயத்தில் தவறுகளோடும் ஒருவன் அடுத்தவர்களுக்கு நல்லவனாகவும் நாயகனாகவும் இருக்க முடியும் என்று காட்டினார். அவருடைய ஆரம்ப கால, பாசாங்கற்ற நடவடிக்கைகள் அவருடைய பிம்பத்துக்கு மேலும் வலுச்சேர்த்தன. ரஜினி கோலோச்சத் தொடங்கிய 1980களில் அவர் பற்றி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிசுகிசு.

ரஜினிக்குப் பெண் மோகம் அதிகம் என்று பத்திரிகைகள் எழுதியபோது, ரஜினி ஒரு பேட்டியில் சொன்னார். "ஆமாம், உண்மை தான். இதைச்சொல்லுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. நான் யாரையும் தேடிப் போக வில்லை. வற்புறுத்த வில்லை. கஷ்டப்படுத்த வில்லை. யாருக்கும் நான் சத்தியம் பண்ணிக் கொடுக்கவில்லை... யாரையும் ஏமாற்றவும் இல்லை... என்வரையில் நான் சரியாக இருக்கிறேன்" என்றார். அத்துடன் அவர் பற்றி கிசுகிசு எழுதுவதை நிறுத்தி விட்டார்கள். உண்மையை அவர் மறைக்காமல் விட்டதால் அவர் பற்றி தோண்டித் துருவி இல்லாததையும் பொல்லாததையும் சொல்வதற்கு முடியாமல் போயிற்று. ஆனால் திரையில் கதாநாயகனின் ஒழுக்க சீலத்தை மக்கள் நாடி நின்ற காலப்பகுதியில் சொந்த வாழ்க்கையில் தான் ஒழுங்கற்றவன் என்ற உண்மையைப் போட்டுடைத்த தன் மூலம் நல்லவன் என்கிற பிம்பத்தை ரஜினியால் ஏற்படுத்த முடிந்தது.

### உதை விழும்

ரஜினியின் திருமணம் இன்றைய தலைமுறையினர் பலருக்கு ஆச்சரியம் அளிக்கக் கூடியது. ரஜினி, லதா இருவரின் குடும்பங்களையும் சேர்ந்த சிலர் மட்டும் பங்கேற்ற நிகழ்ச்சி அது. திருப்பதி கோயிலில் நடந்தது. அதிகாலையில் திருமணத்தை முடித்தவர், காலை 10 மணிக்கு படப்பிடிப்புக்குப் போய் விட்டார்.

திருமணத்துக்கு முன் பத்திரிகையாளர்களை வீட்டுக்கு அழைத்திருந்தார் ரஜினி. முன்கூட்டியே எடுக்கப்பட்ட, அவரும் லதாவும் மாலையோடு இருக்கும் படம் ஒன்றை அவர்களிடம் கொடுத்து, குறிப்பிட்ட சிலரை மட்டும்தான் அழைத்து இருக்கிறேன் என்று சொன்னார். திருப்பதி கோயிலில் கல்யாணத்துக்கு சிறப்பு அனுமதி பெற்றிருக்கிறேன். கல்யாணம் முடிந்ததும் இந்தப் புகைப்படத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். தயவுசெய்து திருப்பதிக்கு யாரும் வராதீர்கள் என்றார். அப்போது, "வந்தால்?" என்றார் ஒரு பத்திரிகையாளர். "உதைப்பேன்" என்று சொன்னார் ரஜினி.

அருகில் இருந்த இன்னொரு பத்திரிகையாளரோ "இந்த மாதிரி வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தாதீர்கள்... அதை நாங்க வெளியிட்டால், பின்னர் அசிங்கமா போயிடும்" என்று சொன்னபோது, ரஜினி சொன்னார் "உங்களுடைய திறந்த அணுகுமுறை எனக்குப் பிடிச்சிருக்கு. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஆனால், மன்னிப்புக் கேட்டேன் என்பதற்காக கல்யாணத்துக்கு வந்துவிடாதீர்கள். அங்கே ஒளிப்படக்கருவியுடன் யாரையாவது பார்த்தால் உதைப்பதைத் தவிர எனக்கு வேற வழி இல்லை."

### மலராத முட்கள்

'முள்ளும் மலரும்' ரஜினிதான் ரஜினிக்கு எப்போதும் பிடித்தமானவர். இயக்குநர் மகேந்திரன் இயக்கிய படம் அது. தன்னை இயக்கியவர்களிலேயே ரஜினி பெரிதும் மதிப்பவர் மகேந்திரன். ஆனால், ஒரு கட்டத்தில், மாபெரும் பொழுதுபோக்குக்கலைஞனாக அவர் உருவெடுத்தபோது, தன்னுடைய படங்கள் முழுக்கப்பொழுது போக்குக்கானவை என்ற முடிவை அவர் எடுத்தார். தன்னுடைய படங்கள் குறித்துப் போலியான மதிப்பீடுகள் ரஜினியிடம் இல்லை. "ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கை இதில் இருக்கிறது. என்னை நம்பிப் பணம் போடுகிறவர்களுக்கு, எனக்குப் பணம் கொடுக்கிறவர்களுக்கு, திரும்ப நான் பணம் உழைத்துக் கொடுக்க வேண்டும். அவர்கள் நடிக்கவைக்கிறார்கள்; நான் நடிக்கிறேன். அவ்வளவு தான். இதில் எந்தக் குழப்பமும் இல்லை" என்றார்.

### மாபெரும் சுதந்திரம்

ஒரு பேட்டியில் மோகன்லாலிடம் கேட்டார்கள்: "ரஜினிகாந்தைப் போல வழுக்கைத் தலையோடும் நரைத்த முடியோடும் உங்களால் வெளியே வர முடியுமா?"

மோகன்லால் சொன்னார்: "ரஜினி எப்படி வேண்டுமானாலும் வரலாம்; என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவரை யாருடனும் ஒப்பிட முடியாது. ஏனென்றால், மக்கள் அவரை அப்படித்தான் எதிர்பார்க்கிறார்கள். அவருடைய தனித்துவமே அதுதான்."

உண்மைதான். சமூக வாழ்க்கை சார்ந்த எவ்வளவோ விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டும், திரையில் ரஜினியைப் பார்த்ததும் நாம் பரவசமாகி விடுகிறோம். 30 வயதுகளைத் தாண்டியவர்களுக்கு மட்டுமில்லை, இன்றைய இளைஞர்களுக்கும்கூட அப்படித்தான் இருக்கிறது. ஒவ்வொரு படத்திலும் ரஜினி நிகழ்த்தும் அற்புதங்கள் மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும் என்று விரும்பும் ரசிகர்கள்தான் தமிழ்கூறும் நல்லுலகச் சினிமாவில் அதிகம். அவருக்கு எவ்வளவு வயதானாலும், திரையில் இன்னும் இன்னும் இளமையாக அவரைப் பார்க்கவும் அவர் பறந்து பறந்து அடிப்பதையும் நாம் எதிர்பார்க்கிறோம். ஏனென்றால், ரஜினி என்றால், எதுவும் செய்யலாம் என்ற மாபெரும் சுதந்திரத்தை தமிழ் ரசிகர்கள் அவரிடம் கொடுத் திருக்கிறார்கள்.

### இயல்பே அழகு

ஏனென்றால், ரஜினியிடம் நாம் பார்ப்பது நமக்குள் இருக்கும் ரஜினியை. மற்ற நடிகர்களையும் ரஜினியையும் வேறுபடுத்திக் காட்டும் தன்மை என்னவென்றால், ரஜினியிடம் இருக்கும் ஒரு மின்காந்த வசீகரம். அதனால்தான் ஒரு சிறிய குழந்தைகூட ரஜினியைப் பார்த்தால் குதூகலம் அடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலக அளவில் இதேபோன்ற வசீகரத்தைக் கொண்டவராக இருந்தவர் மைக்கேல் ஜாக்ஸன். அவரைப் பார்த்த உடனேயே ரசிகர்கள் பரவசம் அடைந்தார்கள். ஆனந்த மிகுதியால் கண்ணீர் விட்டார்கள். அத்தகைய மைக்கேல் ஜாக்ஸனைவிட ஒரு விதத்தில் ரஜினி இன்னும் சிறந்து விளங்கினார். எப்படியென்றால், ஒரு தேவதூதனைப் போல் கொண்டாடப்பட்ட மைக்கேல் ஜாக்ஸன், தன்னுடைய கறுப்புத் தோலை மாற்றிக் கொள்வதற்காக என்னென்னவோ முயற்சிகளை மேற்கொண்டு, அதன் காரணமாகவே பலவித உடல் உபாதைகளுக்கு உட்பட்டு, கடைசியில் அதற்கே உயிரையும் காவு கொடுத்தார். அதுவும் 51 வயதில். ஆனால், ரஜினி வேறு எந்தப் பிரபலமும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்தார். வழுக்கைத் தலை, நரைத்த முடி, உதட்டில் சிகரெட் தழும்பு என்று தன் உண்மையான உருவத்துடனேயே தோற்றம் அளிப்பதில் அவர் எந்தக் கவலையும் அடையவில்லை. அதிலும் இன்று 50 வயதுக்கு மேற்பட்ட எந்தப் பிரமுகரையும் தலைச் சாயம் இல்லாமல் பார்க்க முடியவில்லை. தமிழர்களுக்கு மட்டும் தலைமுடி கறுக்காதோ என்று மற்றவர்கள் நினைக்கும் அளவுக்கு சாய வியாதி பரவியிருக்கும் இந்தக் காலத்தில் உடம்பையும் தோற்றத்தையும் மூலதனமாகக் கொள்ள வேண்டிய நடிப்புத் தொழிலில், தன் தோற்றம் குறித்த எந்தக் கவலையும் இல்லாமல் இருக்க, மிகப் பெரிய மனோபலம் வேண்டும். அது ரஜினியிடம் இருந்தது.

> நான் யாரையும் தேடிப் போகவில்லை. வற்புறுத்தவில்லை. யாருக்கும் கஷ்டப்படுத்தவில்லை. நான் சத்தியம் பண்ணிக் கொடுக்கவில்லை... யாரையும் ஏமாத்தவும் இல்லை...

இயற்கை கொடுத்த வசீகரத்தோடு, ரஜினியிடம் உள்ள அபாரமான நடிப்புத் திறமையும் சேர்ந்து அவரை 'சுப்பர் ஸ்டார்'ஆக ஆக்கியுள்ளன. 'நான் சிகப்பு மனிதன்' என்ற படத்தில் ஒரு கையில் நாளிதழை வைத்தபடி, இன்னொரு கையால் (ஒரே கையால்) வெகு அநாயாசமாக, சர்வசாதாரணமாக சிகரெட்டைப் பற்றவைப்பார் ரஜினி. இது 'க்ளிண்ட் ஈஸ்ட்வுட்' என்ற ஆங்கில நடிகர் ஏற்கெனவே ஒரு படத்தில் செய்துகாட்டியது தான். இதேபோல் சத்ருகன் சின்ஹா, அமிதாப் பச்சன் ஆகிய இருவரின் பாதிப்பும்கூட ரஜினியிடம் உண்டு. என்றாலும், ரஜினி இவர்கள் எல்லோரையும் தனக்குள் உள்வாங்கிக் கொண்டார். அந்தப் பாணியில் ரஜினி இந்தியாவின் தலைசிறந்த நடிகர்களில் ஒருவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. உதாரணம்: முள்ளும் மலரும், தளபதி.

> சமூக வாழ்க்கை சார்ந்த எவ்வளவோ விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டும், திரையில் ரஜினியைப் பார்த்ததும் நாம் பரவசமாகி விடுகிறோம். 30 வயதுகளைத் தாண்டியவர்களுக்கு மட்டுமில்லை இன்றைய இளைஞர்களுக்கும்கூட அப்படித்தான் இருக்கிறது. ஒவ்வொரு படத்திலும் ரஜினி நிகழ்த்தும் அற்புதங்கள் மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும் என்று விரும்பும் ரசிகர்கள்தான் தமிழ்கூறும் நல்லுலகச் சினிமாவில் அதிகம். அவருக்கு எவ்வளவு வயதானாலும், திரையில் இன்னும் இன்னும் இளமையாக அவரைப் பார்க்கவும் அவர் பறந்து பறந்து அடிப் பதையும் நாம் எதிர்பார்க்கிறோம். ஏனென்றால், ரஜினி என்றால், எதுவும் செய்யலாம் என்ற மாபெரும் சுதந்திரத்தை தமிழ் ரசிகர்கள் அவரிடம் கொடுத்திருக்கிறார்கள்.



## தன் பிம்பத்தின் சுமை

இருந்தாலும், ரஜினி கடந்த 20 ஆண்டுகளாக அவருடைய பழைய பிம்பத்தையே சுமந்துகொண்டு வாழ்பவராகவே தெரிகிறார். அமிதாப் பச்சன் அவருடைய 65ஆவது வயதில் 'ரிதுபரனோ கோஷ்' என்ற - அவ்வளவாக அறியப்படாத ஒரு வங்காள இயக்குநரின் படத்தில், 70 வயதுக்கு மேற்பட்ட ஒரு முதிய நாடக நடிகராக நடித்திருக்கிறார். 'தி லாஸ்ட் லியர்' என்ற அந்தப் படம், பல்வேறு சர்வதேசத் திரைப்பட விழாக்களில் பரிசு பெற்று அமிதாப்புக்கு உலகப் புகழைப் பெற்றுத் தந்தது. இந்தப் [illegible] நடிப்பிற்காக அவர் தன் [illegible] பத்தில் ஒரு பங்கையே பெற்றார். ஆனால், ரஜினியோ 'எந்திரன்' படத்தில் ஒரு ஹீரோயினோடு டூயட் பாடிக்கொண்டிருக்கிறார்.

'லாஸ்ட் லியர்' படத்தைவிட அற்புதமான படங்களை ரஜினியால் கொடுக்க முடியும். அவரால் அமிதாப் பச்சன் சென்ற உயரத்தை விட அதிக உயரத்துக்குச் செல்ல முடியும்.

அரசியலைப் புறக்கணித்த அதே [illegible] சினிமாவையும் புறக்கணிக்க இறைவன் அருள வேண்டும்.

# வேகமெடுத்தது நாச வேலை

கனிமொழி

ஊசி போல் குத்தும் குளிரோ, உறைய வைக்கும் குளிரோ அல்ல. உயிரைக் காவு வாங்கும் குளிர் நிலவும் பகுதி இது வடதுருவம். கடுங்குளிர் நிலவும் பனிக் கடலான ஆர்டிக் பெருங்கடலையும், கனடா, ரஷ்யா, அமெரிக்கா, டென்மாரக், நோர்வே, பின்லாந்து உள்ளிட்ட நாடுகளின் சில பகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசம் ஆர்ட்டிக். இதன் மையப்பகுதியே வட துருவம்.

இதனை மையமாக வைத்துத்தான் இப்போது புதுப் பிரச்சினைக்கு தொடக்கப் புள்ளியை வைத்துள்ளது கனடா. வட துருவம் உள்ளிட்ட ஆர்ட்டிக் பிரதேசத்தின் பெரும் பகுதி முற்றிலும் தங்கள் நாட்டுக்குச் சொந்தமானது என்று உரிமை கொண்டாடி, அதனை தாங்கள் மட்டுமே ஆளுகை செய்ய முடியும் என்று தீர்ப்புக் கூற வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபையிடம் மனுக் கொடுத்துள்ளது கனடா அரசு.

ஆர்ட்டிக் பிரதேசத்தின் பெரும் பகுதி இதுவரை எந்த நாடுகளுமே தங்களுக்கு என்று உரிமை கொண்டாடாத, அனைவருக்கும் உரிமையான பொதுஇடம். பல்வேறு நாடுகள் அங்கு ஆய்வுக் கூடங்களை அமைத்துள்ளன. ஆனால் இப்போது திடீரென கனடா ஆர்ட்டிக் பகுதியை சொந்தம் கொண்டாடக் காரணம்? இன்றைய உலகின் ஓட்டத்துக்கு இன்றியமையாத தேவையாகிவிட்ட பெற்றோலியமும், எரிவாயுவும் ஆர்ட்டிக் பிரதேசத்தின் சில பகுதிகளில் கொட்டிக்கிடக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளமை தான்.

உலகில் இதுவரை எடுக்கப்படாமல் உள்ள பெற்றோலிய வளத்தில் 30 சதவீதமும், இயற்கை எரிவாயுவில் 15 சதவீதமும் ஆர்ட்டிக் பிரதேசத்தில்தான் முழுமையாக மறைந்துள்ளது என்பது புவியியல் ஆய்வாளர்களின் மிக அண்மைய கண்டுபிடிப்பு. இவற்றை எடுப்பதில் எவ்வளவு பிரச்சினை இருந்தாலும், இப்போதைக்குக் கிடைக்கும் பகுதியை வளைத்துப் போட்டுவிட்டால் கிடைத்தவரைக்கும் லாபம் என்று இந்தப் போட்டியில் முந்திக் கொண்டுள்ளது கனடா.

ஐ.நா. விதிப்படி ஒரு நாடு தனது நிலப்பரப்பின் எல்லையில் இருந்து 200 கடல் மைல் தொலைவு வரை உரிமை கொண்டாட முடியும். இதற்கு மேலும் உள்ள கடல் பகுதியைச் சொந்தமாக்க அந்தக் கடல் படுகை தங்கள் நாட்டு எல்லைக்கு உட்பட்டது என்பதை அறிவியல்பூர்வமாக நிரூபிக்க வேண்டும். இதற்காக பணத்தைக் கொட்டித் தனது ஆய்வாளர்களையும், விஞ்ஞானிகளையும் ஆர்ட்டிக் பிரதேசத்தில் குவித்துள்ள கனடா, தனக்கான ஆதாரங்களை தயாரிக்கும் பணியில் முழுமூச்சில் ஈடுபட்டுள்ளது.

கனடாவின் திட்டத்தை உடனடியாகப் புரிந்து கொண்ட ரஷ்யா, ஆர்ட்டிக் பிரதேசத்தில் தனது பலத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளது. அப்பகுதியில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துமாறு தனது படையினருக்கு அதிபர் புடின் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார். சர்வதேச அளவில் பரப்பளவில் ரஷ்யா முதலிடத்திலும், கனடா இரண்டாவது இடத்திலும் உள்ளன என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியது.

இது விடயத்தில் தங்களின் நிலைப்பாடு என்ன என்பதை அமெரிக்கா விரைவில் அறிவிக்க இருக்கிறது. அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம் ஆர்ட்டிக் பிரதேசத்தில் வருவதால் அமெரிக்காவும் அங்கு பெரும் பகுதிக்குச் சொந்தம் கொண்டாடி களம் இறங்கும் என்பதில் சந்தேகமில்லை.

எண்ணெய் எடுப்பது ஒன்றும் எமக்குப் புதிதல்லவே. ஆர்ட்டிக் பிரதேசத்தில் எண்ணெய் எடுத்தால் மட்டும் என்ன என்று யோசிக்கிறீர்களா?

ஏற்கெனவே புவி வெப்பமயமாதல் சுற்றுச்சுழல் பிரச்சினைகளால் சுடேறி வரும் ஆர்ட்டிக் பிரதேசத்தில், எண்ணெய் அகழ்வும் தொடங்கிவிட்டால் அது கொதிப்பேறியே போய்விடும்.

எனினும் பேச்சு நடத்தி அனைத்து நாடுகளுமே அங்குள்ள பெற்றோலிய வளத்தை பங்கிட்டுக் கொள்ள வாய்ப்பு உள்ளது. இந்த ஆர்ட்டிக் ஆதிக்கப் போட்டியில் வெல்லப்போவது யாராக இருந்தாலும், அழியப் போவது இங்குள்ள சுற்றுச்சுழல்தான் என்பது 'கிறீன் பீஸ்' அமைப்பினரின் எதிர்ப்புக் கோஷம். ஆர்ட்டிக் பிரதேசத்தில் பெற்றோலியத்தைத் தோண்டி எடுப்பதால் இந்தப் பகுதியில் ஏற்படும் பெரும் சுற்றுச்சுழல் சீர்கேட்டையும், அதன் தொடர் விளைவுகளால் உலகுக்கு ஏற்படும் தீங்குகளையும் சுட்டிகாட்டி 'கிறீன் பீஸ்' போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

இதனை எந்த வல்லரசும், நல்லரசும் காதில் வாங்கிக் கொள்வதாக இல்லை. என்ன விலை கொடுத்தும் அங்குள்ள எண்ணெய் வளத்தை அடைந்தே தீருவது என்ற நோக்குடன் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. உயிரினங்கள் வாழத் தகுதியற்றதாக உலகை மாற்றும் நாசவேலை கூடுதல் வேகமெடுத்துள்ளது.என்பதில் மட்டும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை

# யாருமே இல்லை உள்ளே....

வேலை போய் மீள வீடு
படலையினைத் தள்ளும்போது
வாலதை ஆட்டித் தனது
மகிழ்வுதனைக் கூறி மேலும்
குரைப்பிலே சிரிப்பைக் காட்டி
குழைவினொடு இங்குமங்கும்
ஓடியும் பாய்ந்தும் மேலே
துள்ளவும் தெரிந்த எந்தன்
நாயது ஒன்றைத் தவிர
வாவென்று அன்பில் சொல்ல
யாருமே இல்லை உள்ளே...

வந்துவிட்டாயா வா
வந்தெனக்கு உடனே தேநீர்
ஆற்றிவா சுடட்டும் நன்கு
ஏகின்றாரினிதே கணவர்

வாசற்படி ஒதுக்கிச் செருப்பு
செல்ல உள்ளே மேலும்
கூட்டுமாறென்னைக் கூறும்
குப்பையாய்க் கிடக்கும் வீடு


தோய்க்குமாறுத் துணிகள்
சுருண்டு போயிருக்கும் மூலை
தேய்க்குமாறு சட்டி பானை
பேந்தென்ன தேய்த்துக் கழுவி
பச்சைமா அவித்துப் பிட்டு
இரவுக்கு சமைத்து மேசை
அடுக்கி நாம் அனைவரும்
உண்டவை போக மீது
குழைத்தூற்றி எல்லாம்
கொண்டு போய் நாயின் சட்டி
'உச்சு' 'உச்சு' என
ஓடிவர கொட்டிவிட்டு
கதவது தாழ்ப்பாளிட்டு
காக்கும் நாய் என்று தானே
நம்பி நாம் உறங்குகின்றோம்

வலிக்குது எந்தன் நெஞ்சம்
வாயில்லா சீவன் கூட
உண்டதன் எச்சசொச்சம்
தின்றதன் நன்றிதனை
வாசலில் காணும் போதே
வரவினை ஆதரித்து
வரவேற்கும் அழகில்
தோய்ந்து
ஏறிடும் எந்தன் வீட்டில்
வாவென்று அன்பில் சொல்ல
யாருமே இல்லை உள்ளே



சுபாஷினி.ஜெகநாதன்,
அச்சுவேலி.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 297



அனுப்புபவர் பெயர்:....................................................

விலாசம்:....................................................

....................................................

கையொப்பம்:....................................................

### இடமிருந்து வலம்

1. கம்பன் மகனின் மனம் கவர்ந்தவள்
5. இது வந்தால் பத்தும் பறந்திடுமாமே
7. பிழை அல்ல
8. இடையூறு
9. கோபம்
10. சக்தி
11. இந்தியா
13. ஒரு காட்டு மிருகம்
14. நஞ்சு
15. மரம்
17. கணவன்- மனைவி
19. தலைவன் மனம் கவர்ந்தவள்
20. அறுக்கும் கருவி
22. சந்திரன்
23. முதுகு வளைவால் வருவது.

### மேலிருந்து கீழ்

1. நடக்கக் கூடாத நிகழ்வு
2. இற
3. முகம்
4. உறுதி
5. திருவள்ளுவர் கூறும் கடவுள்
6. சக்கரம்
9. தில்லை
12. உணவுச் சமிபாட்டுக்காக உணவுடன் சேர்த்துக் கொள்ளுவது
13. காற்று
16. கவிதை யாப்பவன்
18. பூட்டான் தலைநகர்
21. வேண்டுதலுக்காக மேற்கொள்ளப்படுவது

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 295 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) விகடகவி (5) அது (7) வட (8) வியாபகம்
(10) சால்பு (12) திரும்பு (13) தக (15) பல்லவி
(17) சத (18) அருவி (19) சந்தடி (20) சக
(21) ஆம் (22) தில்லானா (23) பாம்பு

### மேலிருந்து கீழ்

(1) விவசாயி (2) கடல் (3) கவி (4) வியாதி
(5) அகம் (6) தும்புத்தடி (9) பருகு (11) புதல்வி
(14) கல (15) பருகல் (16) விசம்
(17) சதகம் (18) அசதி (21) ஆனா

★ **சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.**

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 297**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*[பிறைவேற்]லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (01.01.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.297 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 05.01.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 295 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
முருக நடராசன்
முதலாம் வட்டாரம், கைவேலி,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**2 ஆம் பரிசு**
கா. யனோபா,
ஆயத்தடி, மிருசுவில.

**3 ஆம் பரிசு**
ஆ.பால மதுஜா,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
திருமதி இ.சுமதி,
இல.165, அரச வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
சி.சதீஸ்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

**பாராட்டுப் பெறுவோர்**

கு.வேகாவனம்,
மூன்றாம் வட்டாரம், முள்ளியவளை.

சி.லாவண்யா,
'சிவபதி', இல 12/1, இரண்டாம் ஒழுங்கை,
ஓயார் சின்னக்குளம், வவுனியா.

திருமதி அ.சச்சிதானந்தன்,
இல. 289, மூன்றாம் ஒழுங்கை,
திருநாவற்குளம், வவுனியா.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபக்தி

## (இறையுணர்வுக் கதைகள்)



இறைவனிடத்தில் செய்த பாவம் குருவினிடத்தில் தீரும். குருவினிடத்துச் செய்த பாவம் எங்கும் தீராது. ஆகவே சிவபக்தியைக் காட்டிலும் குருபக்தி உன்னதமானது. அதனால் தான் அருணகிரிநாதர் 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்று பாடுகிறார். குருவாக வருபவர் சிவனன்றி வேறொருவர் அல்ல.

துன்பத்துக்குக் காரணம் அறியாமை. பேரின்பத்துக்கு காரணம் பேரறிவாகிய ஞானம். அறியாமை நம்மை இழுக்க இழுக்க துன்பம் இருக்கும். இத் துன்பம் நீங்க எமது அஞ்ஞானமாகிய இருளை நாம் போக்க வேண்டும். அப்படிப் போக்கும்போது ஞானமாகிய ஆதவன் நமது இதயத்தில் அருள் ஒளி பரப்பிடுவான்.

ஞானத்தை வழங்குபவர் குருநாதரைத் தவிர வேறொருவரும் இல்லை. பாஞ்சால நாட்டு இராஜகுமாரன் ஆருணி சிறந்த குருபக்திக்கு எடுத்துக் காட்டானவன்.

அயோததௌம்யர் என்ற குருநாதர் கங்கைக் கரையிலே குருகுலம் ஒன்றில் வாழ்ந்து வந்தார்.

அயம் என்றால் இரும்பு. இரும்பு போன்ற உறுதியான தசையை உடையவர் என்று பொருள். இவரின் முதல் சீடனின் பெயர் ஆருணி. பாஞ்சால நாட்டு இராஜகுமாரன். அவனுக்கு ஒருவேளைதான் உணவு. அயோத தௌம்யர் ஒரு நாள் காலையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது அந்த இராஜகுமாரனை அழைத்து "ஆருணி, எமது வயலில் மடை உடைபட்டு வெள்ளம் பாய்ந்தோடுகிறது. நீ போய் மடைய்ய அடைத்துவிட்டு வா" என்றார்.

> எம் தேசத்தையும் மக்களையும் காப்பாற்ற ஞானம் ஒன்றே ஒவ்வொரு இளம் சந்ததியினருக்கும் உறுதுணையாக நிற்கும். அந்த ஞானத்தாலேதான் அனைத்தையும் வெல்ல முடியும்

அவன் குருவின் கட்டளையின்படி மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்றான். மண்ணை வெட்டி வெட்டி மடையில் போட்டுக் கொண்டே இருந்தான். காலை முதல் மாலை வரை இவ்வாறு செய்தான். ஆனால் மடை அடைபட வில்லை உடைந்துகொண்டே இருந்தது. 'குருநாதரின் கட்டளையை நிறைவேற்றாமல் திரும்பிச் செல்லக் கூடாது' என்று மண்வெட்டியை மடையிலே போட்டுவிட்டு 'குருநாதா' என்று கூறிவிட்டு குறுக்கே படுத்துவிட்டான் ஆருணி. அங்கு பாய்ந்து வந்த நீர் அப்படியே தேங்கி நின்றது.

இரவில் குரு பாடம் கற்றுத் தரும்போது முதலாவதாக அமரும் ஆருணி அங்கு இல்லாததைக் கண்டு தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்று 'ஆருணி' என்றழைத்தார் குரு அயோததௌம்யர். "குருவே அடியேன் நீருக்குள் இருக்கின்றேன்" என்றான் சீடன். "ஏன்" என குரு வினவினார். "மடை அடைபடவில்லை. ஆதலால் மடையில் படுத்துவிட்டேன்" என்றான் ஆருணி.

அதற்குக் குரு "மகனே நீ உன்னையே தியாகம் செய்து விட்டாய். எழுந்து வா" என்றார். குரு'அவ்வாறு கூறியதும் ஆருணி மடையிலிருந்து எழுந்து நீரை விலக்கிக் கொண்டு வந்தான். அதனால் உத்தலாகன் என்ற பெயர் பெற்றான். அவன் சிரசில் குரு கை வைத்து. "உனக்கு எல்லா ஞானமும் உதிக்கும்" என்று ஆசீர்வதித்தார். குரு தொட்டாலே ஞானம் வந்து விடும். அப்படிப்பட்டவர்கள் தான் குருமார்கள்.

இது கற்பனைக் கதையல்ல. புராண காலங்களில் நடந்த சம்பவம். ஆருணி போல் குருவின் மனதை வென்றவர்களும் இன்றும் கூட இருக்கிறார்கள். இளம் சந்ததியினரே! உங்களுக்குள் உறைந்து போய் இருக்கும் தெய்வீகத்தை மலரச் செய்ய ஒரு குரு அவசியமே. எமது தேசத்தையும் மக்களையும் காப்பாற்ற ஞானம் ஒன்றே ஒவ்வொரு இளம் சந்ததியினருக்கும் உறுதுணையாக நிற்கும். அந்த ஞானத்தாலேதான் அனைத்தையும் வெல்ல முடியும் அர்ஜுனனைப்போல்.

சா. ரமேஸ்குமார்
மருதனார்மடம்

# இன்ரர்நெற் ப்ரௌஸர் யுத்தம்

# நெற்ஸ்கேப்

உலகப் பணக்காரன் உருவான கதை



அழகிய பாண்டியன்

1990 களில் இன்ரர்நெற் என்பது மக்களின் பயன்பாட்டுக்கு வரத்தொடங்கியது. அதற்கு முன்பு ஆராய்ச்சியாளர்களும் கணினி நிபுணர்களும்தான் இன்ரர்நெற்றைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்! கணினியைப் பயன்படுத்திக் கொண்டிருந்த மக்கள் இப்போது அத்துடன் இன்ரர்நெற் இணைப்பையும் பெறுவதில் ஆர்வம் காட்டினார்கள். இன்ரர்நெற் இணைப்பு இருந்தால் உலகின் எந்த மூலையிலும் இருக்கின்ற வேறொரு இன்ரர்நெற் இணைப்பு உள்ள கணினியோடு தொடர்பு கொள்ள முடியும். இணையத் தளத்திலிருந்து பல்வேறு தகவல்களையும் பெற முடியும்.

"இணையம் எனப்படுகின்ற இன்ரர்நெற்றைப் பயன்படுத்துவதற்குத் தேவையான ஒரு மென்பொருளே இணைய உலாவிகள்" எனப்படுகின்றன.

"இல்லினாய் யுனிவர்சிட்டியின் சுப்பர் கணினிப் பிரிவில் பயின்ற மார்க் ஆண்ட்ரீசன், எரிக்பினா என்ற இரு மாணவர்களும் சேர்ந்து "யூனிக்ஸ்" கணினிகளில் பயன்படுத்துவதற்குரிய "மொசாய்க்" என்கிற இணைய உலாவியைத் தயாரித்து வெளியிட்டனர்.

1993 இல் வெளியான இந்த உலாவியைத் தொடக்கத்தில் யாரும் கண்டுகொள்ளவில்லை. பின்பு கொஞ்சம் கொஞ்சமாக இந்த உலாவி சந்தையில் சூடு பிடிக்கத் தொடங்கியது. பல்கலைக்கழகப் படிப்பை முடித்த ஆண்ட்ரீசன் "மொசாய்க் கம்யூனிகேசன்ஸ் கோப்பரேசன்" என்ற நிறுவனத்தை ஆரம்பித்து "மொசாய்க்" உலாவியைப் பிரபலமாக்கும் முயற்சியை மேற்கொண்டார். பிறகு தமது நிறுவனத்துக்கு "நெட்ஸ்கேப் கம்யூனிகேஷன்ஸ் கோப்பரேசன்" என்ற புதிய பெயரைச் சூட்டி, "நெட்ஸ்கேப் நேவிகேட்டர்" என்ற புதிய உலாவியை வெளியிட்டார்.

இந்த உலாவியையும் மக்கள் திரும்பிப் பார்க்கத் தயாராக இல்லை. யோசித்த ஆண்ட்ரிசன், "இந்த உலாவி இலவசமாகவே கிடைக்கும்" என்று கூறி அப்படியே இலவச விநியோகம் செய்தார்.

ஓசியில் கிடைத்ததால் "எனக் கொண்டு, எங்க தாத்தாவுக்கு ஒண்டு" என்கிற ரீதியில் மக்கள் வாங்கிச் சென்றார்கள். அதைத் தனியாக வாங்குவதால் எந்தப் பயனும் இல்லை என்பது மக்களுக்குப் புரிந்தது.

கூடவே ஆண்ட்ரீசனின் "வெப்சர்வர்" என்னும் மென்பொருளை விலை கொடுத்து வாங்கினால்தான் இந்த 'ஓசி' யைப் பயன்படுத்த முடியுமென்று புரிந்து கொண்ட மக்கள் வேறு வழியின்றி காசு கொடுத்து அதை யும் வாங்கினார்கள்.

"ஒன்று எடுத்தால் ஒன்று இலவசம்" என்கிறபடி புத்திசாலித்தனமாக வியாபாரத்தைப் பெருக்கினார் ஆண்டரீசன். ஒரே ஆண்டுக்குள் அவரது 'நெட்ஸ்கேப்' நிறுவனம் யாரும் எதிர்பாராத அளவுக்குப் பிரமாண்டமான வளர்ச்சியை எட்டியிருந்தது. இணையச் சந்தையை 85 வீதம் இந்த நிறுவனமே ஆக்கிரமித்திருந்தது.

விண்டோஸ் கொடுத்த இமாலய வெற்றியால் மைக்ரோசொஃப்ட் நிறுவனம் இன்ரர்நெற்றை பெரிதாகக் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டது. 1995 இல் கொஞ்சம் திரும்பிப் பார்த்தால் "இன்ரர்நெற்றில் நான் தான் ராஜா" என்று நெட்ஸ்கேப் நிறுவனம் உச்சாணிக் கொம்பில் அமர்ந்திருந்தது.

"இன்ரர்நெற்றிலும் ஒரு வியாபாரம் இருப்பதைக் கண்டு கொள்ளாமல் இருந்திருக்கிறோமே" என்று வருத்தப்பட்ட மைக்ரோசொஃப்ட் உடனடியாக அங்கேயும் கால்பதிக்க விரும்பியது. 1995 இல் அவசர அவசரமாக "இன்ரர்நெற் எக்ஸ்ப்ளோரர்" என்கிற உலாவியை வெளியிட்டது.

'நெட்ஸ்கேப்' மயக்கத்தில் இருந்த இன்ரர்நெற் பிரியர்கள், மைக்ரோசொஃப்டின் உலாவியைக் கண்டு கொள்ளவே இல்லை. அதை வாங்கிப் பார்த்த சிலர் "இது ஒன்றுக்கும் உதவாது" என்று தூக்கி வீசினார்கள். "நெட்ஸ்கேப்" நிறுவனத்துடனான தொழில் போட்டியின் முதல் மோதலில் மைக்ரோசொஃப்ட் மண்ணைக் கவ்வியது.

அதன் பிறகு நிதானமாக யோசித்த மைக்ரோசொஃப்ட், "இந்த நெட்ஸ்கேப்பை வீழ்த்த வேண்டுமானால் நம்முடைய இன்ரர்நெற் எக்ஸ்ப்ளோரரில் புதிய வசதிகளை நிறையச் சேர்க்க வேண்டும்" என்று முடிவெடுத்து அதற்கான பணிகளில் அவசரமாக இறங்கியது.

விண்டோஸில் செய்த வசதிகளையும், மாயாஜாலங்களையும் இந்த எக்ஸ்ப்ளோரரில் நுழைத்து மறுபடியும் புத்தம் புதிய பிரிண்டாக வெளியிட்டுப் பார்த்ததில் 20 வீதம் சந்தை மட்டுமே மைக்ரோசொஃப்டுக்குக் கிடைத்தது. மீதி 80 வீதம் நெட்ஸ்கேப் வசம்.

மைக்ரோசொஃப்ட், மென்பொருள் துறையிலும், ஒபரேட்டிங் சிஸ்டத்திலும் பெரிய ஆளாக இருந்த போதிலும் இன்ரர்நெற்றில் சிறு குழந்தையாகவே காட்சியளித்தது. அங்கே 'நெட்ஸ்கேப்' பெரிய ஆளாக வீற்றிருப்பதை மைக்ரோசொஃப்டால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

மைக்ரோசாஃப்டுடன் ஒப்பிடும் போது இந்த நெட்ஸ்கேப் ரொம்ப ரொம்ப சிறிய நிறுவனம். அது யானை என்றால் இது கட்டெறும்பு கூட இல்லை. அதை விடச் சிறிய சிற்றெறும்பு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இன்ரர்நெற் என்று வந்து விட்டால் நெட்ஸ்கேப் தான் யானை. மைக்ரோசொஃப்டோ ஒரு சிற்றெறும்புதான்.

> விண்டோஸின் அடித்தளத்தில் தான் "நெட்ஸ் கேப்' தனது மாளிகையைக் கட்டி உயர்த்தி இருந்ததைப் புரிந்து கொண்ட மைக்ரோசொஃப்ட் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது.


இந்த நெட்ஸ்கேப்பை எப்படி வீழ்த்தலாம்?" என்று மைக்ரோசொப்ஃட் நிறுவனம் பூதக் கண்ணாடி போட்டுக் கொண்டு அதற்கான வழிகளைத் தேடிக் கொண்டிருந்தது. அப்போதுதான் அவர்களுக்கு ஓர் உண்மை புரிந்தது.

நெட்ஸ்கேப் உலாவியை மக்கள் பயன்படுத்தினாலும், கணினியில் அந்த நெட்ஸ்கேப்பை இயங்க வைப்பதே மைக்ரோசொஃப்டின் விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்டம்தான் என்பது புரிந்தது.

ஆக, விண்டோஸின் அடித்தளத்தில்தான் "நெட்ஸ்கேப்' தனது மாளிகையைக் கட்டி உயர்த்தி இருந்ததைப் புரிந்து கொண்ட மைக்ரோசொஃப்ட் சிலிர்த்துக் கொண்டு எழுந்தது.

"டேய், நெட்ஸ்கேப் மாப்பு... உனக்கு வைக்கப் போறேன்டா ஆப்பு" என்று சிரித்துக் கொண்டே அதற்கான பணிகளில் இறங்கியது. அதன் பிறகு தனது விண்டோஸ் ஒபரேட்டிங் சிஸ்டத்துடன் 'எக்ஸ்ப்ளோரர்' உலாவியையும் சேர்த்தே வெளியிடத்தொடங்கியது. இனி யாரெல்லாம் விண்டோஸ் வாங்கிகுறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த "இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரும் கிடைத்து விடும். அதைத் தனியாகத் தேடிச் சென்று வாங்க வேண்டிய அவசியமில்லை.

(வளரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை

# படமே ஒரு மாதிரித்தான்







சட்டக் கல்லூரி பிரச்சினையில் ஆரம்பிக்கிறது 'இவன் வேற மாதிரி' படம். இந்தப் பிரச்சினைக்குக் காரணகர்த்தா சட்ட அமைச்சர். சிறையில் இருக்கும் சட்ட அமைச்சரின் தம்பியான வம்சி ஓர் அரசியல் கொலை செய்ய 'நிபந்தனைப் பிணையில்' வெளியே வருகிறார். அவரை விக்ரம் பிரபு கடத்தி யாரும் இல்லாத இடத்தில் அடைத்துவிடுகிறார். சிறைக்குச் செல்ல வேண்டிய கெடு முடிகிறது.

பிரச்சினை பெரிதாக உருவெடுக்க சட்ட அமைச்சர் பதவி விலக வேண்டி வருகிறது. கடத்தி வைத்திருக்கும் தம்பியை விக்ரம் பிரபு விடுவிக்க, விக்ரம் பிரபுவை வம்சி பழிதீர்த்தாரா என்பதுதான் பரபரப்பான இரண்டாம் பாதி.

இடையில் காதல் அத்தியாயம் இல்லாமலா? அந்தக் 'கன்றாவி'யும் இருக்கிறது. இரண்டரை மணி நேரப் படத்தை ஆக்கிரமிப்பது சரவணனின் திரைக்கதையும் வசனங்களும்தான். ஒரு சிறிய துப்பை வைத்து கடத்தியது யார் என்று கண்டுபிடிக்கும் காட்சிகள் நன்றாக வந்திருக்கின்றன. "எனக்கு 22 வருச அனுபவம்", "இல்லை! நீங்க 22 வருச பழைய ஆள்", "நான் இன்னும் சாகல", "நாளைக்கு வா" என வசனங்களால் சரவணன் விளையாடி இருப்பது மட்டும் தான் படத்தில் ஆறுதல்.

முதல் பத்து நிமிடங்கள் அதிக வசனம் இல்லாமல் பின்னணி இசையில் மட்டுமே படம் பயணிக்கிறது. சட்டக் கல்லூரிக் கலவரத்தின் காட்சிகளைத் தொலைக்காட்சியில் பார்த்த படியே மீள்பதிவு செய்திருக்கிறார்.

ஒளிப்பதிவும், சண்டைக் காட்சிகளும் திரைக்கதையைக் கொஞ்சம் தூக்கி நிறுத்தியிருக்கின்றன. சண்டை - பரபரப்புப் படத்துக்கான பதற்றத்தையும் வேகத்தையும் படத்தில் கொஞ்சம் காணக் கிடைப்பது கொடுக்கும் பணத்துக்கு கொஞ்சமாவது நியாயம் செய்திருக்கிறார்கள் என்று எண்ண வைக்கிறது.

வலிந்து திணிக்கப்பட்ட காதல் காட்சிகளும் இருக்கின்றன. கைது செய்ய வரும் பொலீஸைக் கொலை செய்வதில் கொஞ்சமும் தர்க்க நியாயம் இல்லை. தமிழ்ப் படத்தில் அதெல்லாம் எதுக்கு என்று கேட்காதீர்கள். இந்தப் படமே அத்தகைய தர்க்க நியாயங்களால் தான் கட்டியமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த ஓட்டை பெரியது தான்.

கதை என்று பார்த்தால் புதிதாக எதுவும் இல்லை. (வழக்கமாகத் தமிழ்ப் படங்களில் நடப்பதுதானே!) உண்மையில் தமிழக சட்டக் கல்லூரியில் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த கலவரத்துக்குப் பின்னணியில் இருந்தது சாதி வெறி. இயக்குநர் அந்தக் கலவரத்தைத் தொட்டுக்கொள்கிறார். ஆனால் சாதியை விட்டுவிடுகிறார். தமிழ் சினிமாவின் நிரந்தர வில்லன்களில் ஒருவராக இருக்கும் கெட்ட அரசியல்வாதியை வைத்தே கதையை நகர்த்துகிறார். இத்தகைய குறைகளை மீறி இரண்டரை மணி நேரம் படம் பார்ப்பதற்கு உங்களுக்கு இருக்கும் பொறுமையை திறமையை இந்தப் படத்தில் பாராட்டலாம்.



கதை என்று பார்த்தால் புதிதாக எதுவும் இல்லை. (வழக்கமாகத் தமிழ்ப் படங்களில் நடப்பதுதானே!) உண்மையில் தமிழக சட்டக் கல்லூரியில் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த கலவரத்துக்குப் பின்னணியில் இருந் தது சாதி வெறி. இயக்குநர் அந்தக் கலவரத் தைத் தொட்டுக்கொள்கிறார். சாதியை விட்டுவிடுகிறார்.



# அழுத்தங்கள் தந்திடுவீர் ஆசான் குலவேந்தே

ஆசான் குல் மீட்சிக்காய் ஒரு
ஆபத்பாந்தவன் வருவானோ
என ஆவலோடு காத்திருந்தோம்
நானே உங்கள் மேய்ப்பர்
நானே உங்கள் மீட்பர்
நானே உங்கள் அநாதரட்சகர்
எனக் கூறி ஆயிரம் பேர் வந்தார்கள்
தங்கள் அரசியல் ஆதாயத்துக்காய்
எமக்கு அழுத்தங்கள் பல தந்தார்கள்.
"சொன்னதைச் செய்
இல்லையேல் போய்விடு கட்டாய
ஓய்வில்"
"அதைச் செய் இதைச் செய்
முடியாவிட்டால் போய்விடு
தண்ணியில்லாக் காட்டுக்கு"
"விளையாட்டுப் போட்டிக்கு அவரை
அழை பரிசளிப்புக்கு இவரை அழை
வன்னிக்குப் போ வரணிக்குப் போ"
என அழுத்தங்களுள் அழுந்திக் கிடந்தோம்
தொலைபேசி இடமாற்றங்களுள்
எங்கள் வாழ்க்கையைத்
தொலைத்து நின்றோம்
கல்விப் புலத்தின் காட்டுத் தர்பாருக்குள்
கதி கலங்கி நின்றோம்
நாம் செய்த பிறவிப் பயன்
நல்ல சமாரியனாய் (A GOOD
SAMARITAN)
வந்தான் ஒரு வேந்தன்
ஐயா, அமைச்சராய் அவதரித்த
ஆசான் குல வேந்தே
அழுத்தங்கள் தடுத்து - கல்விப் புலத்தின்
அமைதியை நிலைநாட்டுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைவரையும் வசீகரிக்க

## வலிமைமிக்க, நீடித்து நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

நிலாமகன்

நீங்கள் மிகச் சிறந்தவர் என்ற எண்ணம் உங்களுக்கே இல்லையென்றால் மற்றவர்களுக்கு மட்டும் ஏன் இருக்க வேண்டும்?" என்று புகழ்பெற்ற நகைச்சுவை நடிகை மேவெஸ்டு கேட்கிறார். நகைச்சுவையுடன் உடனுக்குடன் மறுமொழி கொடுக்கும் அவரது தன்னம்பிக்கை தானாகவே வந்துவிடவில்லை. அவர் அதற்காகப் பாடுபட்டுத்தான் அந்த நிலையை அடைந்தார்.

நம்பிக்கை, அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது; மக்களின் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தை ஆகியவற்றின் மீது அந்த அதிகாரம் செல்வாக்கைச் செலுத்தி பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதை வெளிப்படுத்துங்கள். அதை வெளிப்படுத்தாதபோது தன்னுறுதி இல்லாதவர் என்று மக்கள் நினைப்பதைவிட, அதை வெளிப்படுத்திய பிறகு நீங்கள் விரும்பிய தாக்கத்தை உங்களால் அதிக அளவில் ஏற்படுத்த முடியும்.

பொதுப்படையாக, நம்பிக்கை என்பதற்குச் சில சூழ்நிலைகளில் உங்களைப் பற்றி நீங்களே உறுதியாக இருப்பது என்று பொருள் கொள்ளலாம். ஆனால் எல்லாச் சூழ்நிலைகளிலும் அப்படி இல்லை. உங்களுக்கும் மற்றவருக்குமான கருத்துப் பரிமாற்றத்தில் உங்களுடைய சொற்கள், சொற்களற்ற நடவடிக்கையின் தாக்கம் மற்றும் வலிமையை நேரடியாகப் பாதிக்கும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அது முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனானப்பட்ட வின்ஸ்டன் சர்ச்சில் (பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர்) கூடத் தன்னைப் பற்றி எப்போதும் நம்பிக்கையுடன் இருந்ததில்லை. பிரதம மந்திரியாக இருந்தாலும் உலக அளவில் முக்கிய மனிதர்கள் மற்றும் குறிப்பிட்ட சிலரைக் கையாளும் போது, வலிமையான பாதிப்பை ஏற்படுத்தாமல் தன்னம்பிக்கையற்றுத் தாம் இருப்பதாகத் தன் மனைவி கிளாமன்டைனிடம் வெறுப்போடு அவர் சலித்துக் கொள்வதுண்டு. இவருடைய விடயத்தில் இவர் மிகவும் வலிமை வாய்ந்த மனிதர். அதனால் அவ்வப்போது அவர் தமது நம்பிக்கையை இழப்பதை இவருடைய கவர்ச்சி விளைவும் பார்வையாளரின் எதிர்பார்ப்பும் மறைத்துவிடுகின்றன.

அவ்வப்போது மனதில் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் பற்றுறுதிக்கும் வேற்றுமை உள்ளது. உதாரணத்துக்கு மிகச் சிறந்த நாடக நடிகர்களுக்கும் முக்கியமான பாத்திரங்களை ஏற்று நடிக்கும்போது உள்ளுக்குள் சந்தேகங்கள் ஏற்படும். தன்னம்பிக்கை இல்லாமல் போவதும் உண்டு என்று சில சமயங்களில் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் மேடையில் அவர்கள் தோன்றியபோது நிச்சயமில்லாமல் தயக்கத்தோடு அவர்கள் இருந்ததை உங்களால் கண்டுபிடிக்கவே முடியாது.

ஆனால் மனதுள் இருக்கும் உறுதிக்கும் தன்னம்பிக்கை என்று மற்றவர்கள் புரிந்துகொள்ளும் வெளியில் தெரியும் விளைவுகளுக்கும் இடையே ஒரு வலிமையான தொடர்பு உள்ளது. ஒரு வர்ணனையாளர் பின்வருமாறு வர்ணிக்கிறார். "உங்களுக்கு நம்பிக்கை இருப்பதாக நீங்கள் நினைத்தால் நீங்கள் செய்யுங்கள். உங்களிடம் இருந்த போதும் இல்லை என்று நீங்கள் நினைத்தால் உங்களிடம் அது இல்லை என்றாகிறது"



நிலைத்து நிற்கும் நம்பிக்கை பயிற்சி மூலம் மேலெழுகிறது. சில புதிய தகுதிகளைப் பெறச் செய்கிறது. நம்பிக்கை உடையவர் என்று உங்களையே மேலும் உறுதியுடையவராகச் செய்கிறது.

மென்மையான உடல் மொழிக் குறியீடுகள் போன்ற குறைவான அளவில் வெளிப்படுகின்ற உங்கள் நடவடிக்கை, நிற்பது, நடப்பது போன்ற தோற்ற அமைவு மூலம் நம்பிக்கையான நடவடிக்கை தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

1. இறுக்கமாக இல்லாமல் ஓய்வாக இருத்தல்
2. நெகிழ்வானவராக, பெரிய அளவில் குரல் வீச்சும், இயக்கமும் உடையவர்.
3 கட்டுப்பாட்டுக்குள் இருப்பவர்- தடுமாறுகிற, அசிங்கமான இயக்கங்கள் இல்லாதவர்.
4. தெளிவானகருத்துஉடையவர்.

இவை எல்லாவற்றையும் நீங்கள் பயிற்சி செய்யலாம். உங்கள் நோக்கங்களை மேலும் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் உடல் மொழியை மேலும் நன்றாக அறிந்து கொள்ளுங்கள்.

மற்றவர்களிடம் நம்பிக்கையை வேண்டுமென்றே விரும்பி வெளிப்படுத்துவதற்குக் கீழுள்ள முறைகளை முயற்சி செய்யவும்:

- கருத்து- நீங்கள் விரும்பும் விளைவை அடைவதும், முழுமையாக அது பற்றிய உணர்வுடன் இருக்கும் தெளிவான வலிமையான கருத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.
- ஓய்வாக/ தளர்வாக இருத்தல். எதற்கும் தயார் என்பதை வெளிப்படுத்த வெளிப்படையான தோற்ற அமைவை ஏற்படுத்திக் கொள்ளவும்.
- குரல்: அழுத்தமான உறுதியை வெளிப்படுத்துவதும் ஏற்ற இறக்கங்களோடு கூடியதுமான இனிமையான குரலை உண்டாக்கி கொள்ளுங்கள்.
- விளக்கமான பதிலைப் பெறும் கேள்விகள்: மற்றவர்களை கலந்து கொள்ளச் செய்வதற்கும், ஆம்/சரி என்கிற வரம்புக்குட்பட்ட பதில்களைத் தவிர்ப்பதற்கும் இவற்றைப் பயன்படுத்தவும். பின்னர் பொருத்தமான விமர்சனங்களோடு, மேலும் கேள்விகளுடனும் தொடரவும்.
- 'நீங்கள்' முறை: இது நேராக அடுத்தவரை நோக்கிச் சொல்லப்படுவது- குறைகூறும் முறையில் அல்லாமல், அடுத்தவர் மீது நேரடியாகத் தனிப்பட்ட முனைப்பை வெளிப்படுத்தும் விதமான சமிக்ஞைகளை அனுப்புதல். (உ-ம்) "நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?" "அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"
- வலிமையற்ற மொழியைத் தவிர்க்கவும்: நம்பாதிருத்தல், பாதிக்கப்பட்டவராக உங்களை வெளிப்படுத்திக் கொள்ளுதல் அல்லது தேவையில்லாமல் சுயவிமர்சனம் செய்தல் ஆகிய வாசகங்களிலிருந்து விலகி இருத்தல்.
- தானே தொடங்கி, சூழ்நிலையை உருவாக்கி தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல். உரையாடல் முறையைத் தொடங்குங்கள். மற்றவர்களும் பங்கேற்ற வழி செய்யும் வகையில் பிரச்சினைகளையும் கருத்துக்களையும் அறிமுகம் செய்யுங்கள்.

இவை எல்லாம் எளிதான நுட்பங்கள், இருந்தாலும் இவற்றைப் பயிற்சி செய்வதன் மூலம் இவை ஒரு நம்பிக்கையான தகவலை அனுப்புவதோடு உங்களுடைய உண்மையான நம்பிக்கையையும் வளர்க்கின்றன.

## சென்று வா மீண்டும் இப் புவிக்கே......



நெல்சல் மண்டேலா எனும் ஆபிரிக்க
கறுப்பு ரோஜாவே!
உலகின் கலங்கரை விளக்கொன்று
ஒளி இழந்ததுவோ?
தன் இனம் ஒன்றே வாழ்வில் மூச்சானதால்
உன் வாழ்வையே சிறை[illegible]?
கறுப்பின மக்களின் நிகரி[illegible]
உனை சிறையிட்டவரே ஜனாதிபதி ஆகிய
அதிசயமும் உலகில்தானே நடந்தது
மானிடர்க்காய் மரணம் வரை உழைத்திட்ட
கோமகனே உனக்குத்தான் உலகத்
தலைவரும் தலை வணங்குவர்
[illegible] மீண்டும்
திரும்பி வா இப் புவிக்கே..!

*ச.சு.இராசநாயகம், வவுனியா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி...?

22.12.2013 முதல் 28.12.2013 வரை

### மேடம்

கடந்த நாள்களில் விடுபட்ட நன்மைகளை புதிய முயற்சியால் பெறுவீர்கள். பேசுவதில் நிதானமும் சமயோசிதமும் பின்பற்ற வேண்டும். சுயகௌரவம் பேணுவதிலும் பணவரவு பெறுவதிலும் சம மனநிலை கொள்வீர்கள். இல்லறத்துணையின் யதார்த்த குணம் உணர்ந்து நடந்து கொள்வீர்கள். மாணவர்கள் பயிற்சிமுறையைத் தவறாமல் பின்பற்றித் திட்டமிட்ட தேர்ச்சியை அடைவர்.

### இடபம்

நீங்கள் ஆரம்பித்த செயல் எல்லாம் பொன்னாகத் துலங்கும். நண்பருடன் சுற்றுலா சென்று வருவீர்கள். எதிரி இடம் மாறிப்போவர். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதை மகிழ்விக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம், பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பதவி உயர்வு பிற சலுகை பெறுவர். மாணவர்கள் கல்வியில் பாராட்டுப் பெறுவர்.

### மிதுனம்

மனதில் உருவாகும் தாழ்மை உணர்வுகளை விலக்குவதால் பணி சிறந்து நல்ல பலனைத் தரும். குடும்ப உறுப்பினர்களின் கருத்துகளுக்கு, முக்கியத்துவம் தருவது ஒற்றுமை பலம் பெற உதவும். பணியாளர்கள் நிலுவைப் பணி நிறைவேற்றுவதில் கவனம் கொள்வீர்கள். மாணவர்கள் பாதுகாப்புக் குறைவான இடங்களில் செல்வதைத் தவிர்க்கவும்.

### கடகம்

எச்சரிக்கையாக இருக்க வேண்டிய வாரம். உங்களின் செயல்களில் விடாப்பிடியாக ஈடுபட வேண்டாம். பயணங்களால் அனுகூலம் உண்டாகாது. பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். உத்தியோகத்தர்கள் வேலைகளைச் சரியாகப் புரிந்து கொண்டு கச்சிதமாக முடிக்க முயற்சி செய்யவும். சக ஊழியர்களின் அன்பும் ஆதரவும் இருக்கும். மாணவர்கள் விளையாட்டில் கவனத்தைக் குறைத்துக்கொண்டால்படிப்பில்சிறந்தபுள்ளிகளைப் பெறலாம்.

### சிங்கம்

மனதில் தைரியமும் செயல்களில் புதிய உத்வேகமும் ஏற்படும். எல்லோரிடமும் சாதாரணமாகப் பழகுவீர்கள். எதிரியால் வரும் தொந்தரவைச் சரி செய்ய சில மாற்று ஏற்பாடு தேவைப்படும். இல்லறத் துணையின் கவனக்குறைவான செயல்களை பொறுத்துக் கொள்வீர்கள். பணியாளர்கள், சகபணியாளரின் உதவியால் மனம் மகிழ்வீர்கள். மாணவர்கள் அதிக விலை உள்ள பொருள்களைக் கவனத்துடன் பயன்படுத்தவும்.

### கன்னி

பணவரவு அதிகம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். ஒருமுகத்தன்மையுடன் பணிபுரிந்து நன்மை அடைவீர்கள். இல்லறத்துணையின் ஆலோசனை புதிய வழிகாட்டுதலை உருவாக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். அரசியல்வாதிகள் சமரச பேச்சில் நிதானத்தைப் பின்பற்ற வேண்டும். மாணவர்கள் ஆசிரியரின் நன்மதிப்பைப் பெறும் வகையில் நடந்து கொள்வர்.

### துலாம்

மன உறுதியுடன் நற்செயல்களை நிறைவேற்றுவீர்கள். அவமரியாதையுடன் உங்களைப் பேசியவர் தன்குறை உணர்ந்து அன்பு பாராட்டுவர். இல்லறத்துணையின் அன்பு, பாசம் பரிபூரணமாகக் கிடைக்கும். தொழில், வியாபாரம் நடைமுறையில் சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர் சலுகைப்பயன் பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

### விருச்சிகம்

எவரிடமும் நிதானித்துப் பேசுவதால் மட்டுமே சிரமம் ஏற்படாமல் தவிர்க்கலாம். சொந்தப் பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவதால் உரிய நன்மையும் மன அமைதியும் எளிதாகப் பெறலாம். வெளியூர்ப் பயணத்தில் மாற்றம் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகும் போட்டியை சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். மாணவர்கள் வெளியிடம் சுற்று வதை தவிர்ப்பதால் படிப்பில் கவனம் வளரும்.

### தனுசு

இனிய வார்த்தை பேசி நண்பரிடம் நல்ல மதிப்பு, மரியாதை பெறுவீர்கள். அலைச்சல் பயணம் தவிர்ப்பதால் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். இல்லறத்துணை உங்களின் அருமை, திறமை மிகுந்த பணிகளை பாராட்டுவர். தொழில்நுட்பப் பணியாளர்கள், புதிய நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள் அக்கறை யுடன் படித்து முன்னேற்றம் காண்பர்.

### மகரம்

பேச்சு, செயலில் நிதான குணம பின்பற்ற வேண்டும். செலவுகளில் சிக்கனம் மேற்கொள்வதால் பணக்கடன் பெறுகிற சூழ்நிலை வராமல் தவிர்க்கலாம். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் கொடுக்க வேண்டாம். தொழில், வியாபார நடைமுறையில் குளறுபடி வராமல் விழிப்புணர்வுடன் பணிபுரிய வேண்டும்.

### கும்பம்

மனதில் ஆன்மிக நம்பிக்கை அதிகரிக்கும். தன்னைச் சார்ந்தவர்களின் நலன் சிறக்க தேவையான உதவி, ஆலோசனை வழங்குவீர்கள். வழக்கு, விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவு கூடும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயரும் சலுகைப் பயன்களும் பெறுவர். மாணவர்கள் புதிய திறமைகளை வளர்த்துக் கொள்வர்.

### மீனம்

வாழ்வு சுபீட்சமாக அமைந்து மனதில் நம்பிக்கை உணர்வை வலுப்படுத்தும். பழகுபவர்களில் எதிர்மறை குணம் உள்ளவரிடம் விலகுவீர்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். அரசு [illegible] உதவி பெற அனுகூலம் உண்டு. பணியாளர்கள் பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் பெறுகின்ற முயற்சி கை கூடும்.

# கணம் புல்லுக்கு பதில் குடுமி

## (இறையுணர்வுக் கதை)

*'தொண்டர் நாங்களே*
*- சிவ*
*தொண்டர் நாங்களே*
*அண்டத்தில்*
*பிண்டத்தில்*
*ஆண்டவனைக்*
*காணும் - சிவ*
*தொண்டர் நாங்களே'*

என்ற சிவயோகரின் நற்சிந்தனை வரிகளை ஞாபகப்படுத்தும் விதமாக புராண காலத்தில் ஒரு சிவனடியார் மிகவும் பக்தி மயமாக மாபெரும் சிவ தொண்டாற்றி வந்தார். சோழ நாட்டில் இருக்கு வேளூர் செழுமையான செல்வவளம் பொருந்திய ஒரு ஊர். வட வெள்ளாற்றங்கரையில் பெரும் சோலைகள் சூழ அமைந்த ஊர். அங்கு சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு செல்வந்தர். அவர் அங்குள்ள பெருங்குடி மக்களின் தலைவராக விளங்கினார். தர்மச் செயல்களுக்கும் திருக்கோயில் பணிகளுக்கும் பணத்தைத் தாராளமாகச் செலவழிக்கும் நல்ல இதயம் படைத்தவர். அவர் சிவபெருமானின் திருவடிகளே மெய்ப்பொருள் என்றுணர்ந்து சிவபெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தார். சிவன் கோயிலுக்குத் திருவிளக்கு ஏற்றுவதையே பெருந்தொண்டாகக் கருதி கோயிலில் உள்ள விளக்குகளுக்கெல்லாம் தினமும் நெய் வார்த்து தீபம் எரியச் செய்து நம்பிரானை நாவாரத் துதித்து வழிபட்டு வந்தார். இதனால் நாளடைவில் அவருடைய செல்வம் குறைந்தது. வறுமை வந்தடைந்தது. கைப்பொருள் இழந்து சொந்த ஊரில் வாழ விரும்பாமல் தில்லையம்பதியான சிதம்பர நகருக்குச் சென்றார். அம்பலத்தில் திருநடனம் புரியும் நடராஜப் பெருமானைப் பேரன்புடன் வணங்கி வழிபட்டார். பின்பு அவர் அங்கேயே இருந்து சிவப்பணி செய்து வந்தார். அவர் தம்முடைய வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் விற்று அங்குள்ள திருப்புலீச்சரம் என்ற கோயிலில் திருவிளக்கேற்றும் தொண்டை ஆரம்பித்தார். இவ்வாறு செய்து வரும் நாளில் அவர் வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் தீர்ந்து விட்டன. கூலி வேலை செய்து பிழைக்கும் நிலைக்கு வந்த போதிலும் திரு விளக்கு ஏற்றும் தொண்டை மட்டும் அவர் விடவில்லை. வழக்கம் போல் தொடர்ந்தும் செய்து வந்தார். பிறரிடம் பிச்சையெடுத்துத் தமது திருத்தொண்டைச் செய்ய அவர் விரும்பவில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும் புல் அரியும் அரிவாளுடன் புறப்படுவார். வீட்டில் கூரை மேய்வதற்கு பயன்படும் கணம் என்கிற ஒரு வகைப் புல்லை மாலை வரை தம் உடல் முயற்சியால் அரிந்து கட்டித் தலைச் சுமையாகக் கொண்டு வருவார். இந்தப் புல் கட்டுக்களை விற்று அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நெய் வாங்கித் திரு விளக்கு ஏற்றுவார். இந்தச் செலவு போக ஏதேனும் பணம் மிஞ்சினால் அதைத் தமது உணவுக்குப் பயன்படுத்திக் கொள்வார். பணம் எதுவும் மிஞ்சாவிட்டால் அன்று பட்டினி கிடப்பார். கணம் புல்லை அரிந்து விற்று வாழ்க்கை நடத்தி வந்ததால் அவரை அனைவரும் 'கணம்புல்லர்' என்றழைத்தனர். ஒரு நாள் அவர் அரிந்து எடுத்து வந்த புல் கட்டுக்களை எவருமே வாங்கவில்லை. ஆயினும் திரு விளக்கு ஏற்றும் பணி தடைப்படக் கூடாதே என்ற எண்ணத்தினால் அந்தக் கணம் புற்களைச் சிறுசிறு கற்றைகளாகக் கட்டி திருவிளக்கில் இட்டு எரித்தார். ஆனால் அந்தப் புற்கட்டுக்கள் முதல் சாமம் வரைதான் கையிருப்பில் இருந்தன. புல் தீர்ந்து போனதைக் கண்ட கணம் புல்லர் திருவிளக்கு எரியாமல் இறைவன் சந்நிதியில் வெளிச்சம் தடைப்படப் போகிறதே என்று எண்ணி சற்றும் தயங்காமல் தம் குடுமியை அவிழ்த்து திருவிளக்கில் காட்டி எரிக்கத் தொடங்கினார். முடியை எரித்த தீ அவர் தலையையும் தீண்டத் தொடங்கியது. சிவனின் மீதுள்ள பேரன்பினால் தலையையே திருவிளக்காக எரிக்கத் துணிந்த கணம்புல்லரின் தீவிர பக்தியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவருக்கு திருக்காட்சியளித்து சிவலோகமுக்தி நிலையைத் தந்தருளினார். இந்தக் கதை பெரிய புராணத்தில் வரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரது கதை. இது புராண காலங்களில் நடந்த உண்மைச் சம்பவம். இப்படிப்பட்ட வரலாறுகளை இளம் சந்ததியினர் படித்து தங்களுக்குள் இருக்கும் பக்தியை வெளிக்கொணர்ந்து சைவநெறி செழித்தோங்க வழி செய்ய வேண்டும். இதுவே இன்றைய காலத்துக்குச் சாலச்சிறந்தது.



*சா.ரமேஸ்குமார்,*
*மருதனார் மடம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவும் உணர்வும்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் சாவகச்சேரியில் இடம்பெற்ற ஒரு விழாவின் போது உரையாற்றிய வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடி தண்ணீர் வழங்குவது தொடர்பாக எழுந்துள்ள எதிர்ப்புகள் பற்றிக் கருத்து வெளியிடும் போது நாம் எந்த ஒரு விடயத்தையும் உணர்வு பூர்வமாகப் பார்க்கக்கூடாது எனவும் அறிவு பூர்வமாக நோக்க வேண்டும் எனவும் யாழ்ப்பாணத்திற்கு இரணைமடு நீர் கொண்டு வரப்படுவது அவசியமான [illegible]வை எனவும் தெரிவித்திருந்தார்.

அவருடைய வார்த்தைகளின் அடிப்படையை நோக்கும் போது அறிவு பூர்வமான அணுகுமுறையும், உணர்வுபூர்வ அணுகுமுறையும் ஒன்றுடன் ஒன்று நேர் விரோதமானவை போன்ற ஒரு வெளிப்பாடு காணப்படுகிறது.

ஆனால் ஒரு பிரச்சினை அதன் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன திறந்த மனதுடன் ஆய்வு செய்யப்பட்டு அது ஒரு அறிவுபூர்வமான தளத்தை எட்டும் போது அது உணர்வு பூர்வமாக வெளிப்படும் போது இரண்டும் இரண்டறப் பின்னிப் பிணைவுற்றவையாகவும், ஒன்றிலிருந்து மற்றது உருவானது மாகவே விளங்குகின்றன.

யாழ்ப்பாணத்திற்கு இரணைமடு நீர் வழங்கப்படுவதற்கான விடயமும் கிளிநொச்சி விவசாயிகளின் நலன்கள் யாழ்ப்பாண மக்களின் நலன்கள் என்பன ஆழமான முறையில் பரிசீலிக்கப்பட்ட பின்பே அது தொடர்பான எதிர்ப்புகள் எழுந்துள்ளன. எனவே அந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மேலோட்டமான உணர்வு பூர்வமான மனப்பாங்கில் எழுந்தவையல்ல. அது ஒரு அறிவுபூர்வமான அணுகுமுறையில் உருவாகி உணர்வுபூர்வ நிலைக்கு வளர்ச்சி பெற்றதாகும்.


க.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையிலும் மிக பெரும்பான்மையான வாக்குகளால் மாகாண சபைக்கு தெரிவானவர் என்ற வகையிலும் அவரின் வார்த்தைகள் ஒட்டுமொத்த வட பகுதி மக்களின் குரலாகவே கருதப் படுகிறது. அவரின் ஒவ்வொரு சொல்லும் மிகப் பெறுமதி வாய்ந் தது. எனவே அவர் இப்படியான ஒரு கருத்தை அவசரமாக வெளி யிட்டிருப்பது மன வேதனையளிக்கும் ஒரு விடயமாகும்.

இரணைமடு குளம் ஆங்கில ஆட்சியாளர்களால் விவசாய தேவைக்காக இரு சிறு நீர்த் தேக்கங்களை இணைத்து உருவாக்கப்பட்டதாகும். பத்து அடியாக கட்டப்பட்ட இது அதிகரித்து வந்த விவசாய குடியேற்றங்கள் காரணமாக முறையே 24 அடி 28 அடி 32 அடி என உயர்த்தப்பட்டு தற்சமயம் 34 அடியாக உயர்த்தப் பட்டுள்ளது. இக் குளத்தை அடிப்படையாக கொண்டு 34 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர்ச் செய்கை காலபோகத்திலும் 17 ஆயிரம் ஏக்கர் சிறு போகத்திலும் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நெல் உற்பத்தி வடக்கில் பெருமளவு உணவு தேவையை பூர்த்தி செய்கிறது. போர்க் காலங்களில் கூட அரிசி விலை நிதானமாக இருந்தமையையும் வட பகுதி அரிசித் தட்டுப்பாட்டுக்கு உட்படாமைக்கு இருந்தமையையும் நாம் மறந்து விட முடியாது. இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விளை நிலங்களின் உற்பத்தி வீழ்ச்சியடையுமானால் கிளிநொச்சி விவசாயிகள் மட்டுமன்றி முழு வடபகுதியும் பாரிய நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி வரும். உணவு தேவைகளுக்காக தென் இலங்கையை நம்பியிருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டு விடும்.

## விவசாய உற்பத்தி வீழ்ச்சி

இரணைமடு நீரை யாழ்ப்பாணம் கொண்டு வரும் திட்டம் உருவாக்கப்பட்ட போது விவசாயிகளுடனோ மக்கள் பிரதிநிதிகளுடனோ கலந்து ஆலோசிக்கப்படவில்லை. அரச அதிகாரிகளே தங்கள் கையில் உள்ள காலாவதியான புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு திட்டத்தை வகுத்தனர். தற்சமயம் இரணைமடு குளத்தின் கீழ் 34 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர் செய்யப்பட்ட போது புதிய திட்டத்தின் படி 29 ஆயிரம் ஏக்கருக்கு நீர் வழங்க உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மிகுதி நிலம் கைவிடப்பட வேண்டிய நிலை உருவாகும். சிறு போகத்திலும் 17 ஆயிரம் ஏக்கருக்கு நீர் தேவை. ஆனால் அது கூட 10 ஆயிரம் ஏக்கராக குறைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமன்றி சிறு போகத்தில் உப உணவுக்கு மட்டுமே நீர் வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. நெல்லுக்கு நாலு ஏக்கர் நீர் தேவைப்படும் அதே நேரத்தில் உப உணவுக்கு ஒரு ஏக்கர் நீர் போதுமானது. இதன் மூலம் மிகுதிப்படுத்தப்படும் நீரையும் யாழ்ப்பாணம் அனுப்பப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் வயல் நிலங்களில் உப உணவு பயிரிடப்படுவதை எந்த ஒரு முட்டாளும் ஏற்றுக் கொள்ளமாட்டான் வயல் நிலங்களில் மண் வளம் நீர் தேங்கி நிற்கும் போது அவ்வளவு உப உணவு பயிர்களையும் அளித்து விடும். இது நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் விவசாயிகள் நட்டம் அடைந்து பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலையையும் ஏற்படுத்திவிடும். மேலும் இக் குடி தண்ணீர் தேவைக்காக குளம் மேலும் 2 அடி உயர்த்தப்படும் என கூறப்படுகிறது. அணைக் கட்டை வேண்டுமென்றால் உயர்த்தலாம். ஆனால் நீரை 34 அடி உயரம் உயர்த்தலாகாது. அப்படி தேக்க முயன்றால் இரணைமடு விமான நிலையம் நீரில் முழ்கும் நிலை உருவாகும். அதற்கு இராணுவம் இடமளிக்கப் போவதில்லை. கடந்த இரண்டு வருடங்களாக இராணுவத்தினர் 28 அடி மட்டத்திற்கு நீர் தேங்குவதை இது வரை அனுமதிக்கவில்லை என்ற விடயம் மறைக்கப்பட்டே வருகிறது. கடந்த காலங்களில் எதிர்பாராத விதமாக சில சமயங்களில் ஏற்பட்டது போல் வறட்சி ஏற்படுமானால் குளத்து தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு விநியோகிப்பதா விவசாயத்துக்கு பாவிப்பதா என்ற கேள்வி எழும். அப்போது குடிதண்ணீருக்கே முன்னுரிமை அளிக்கப்படும் அந் நிலையில் விவசாயத்திற்கு பெரும் வீழ்ச்சி ஏற்பட விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலையும் உருவாகலாம். தற்சமயம் கூட சிறுபோக காலத்தில் சில சமயங்களில் நீர் தட்டுப்பாடு ஏற்படுவதுண்டு. யாழ்ப்பாண நீர் விநியோகம் இடம்பெறும் போது இது மேலும் பல மடங்கு அதிகரிக்கும் இப்படியான நிலையில் யாழ்பபாணத்திற்கான குடி தண்ணீர் விநியோகம் என்பது கிளிநொச்சியின் விவசாய உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை உருவாக்கும். இது அங்கு வேலையில்லா திண்டாட்டம் வறுமை போன்ற சமூக பிரச்சினைகளை உருவாக்கி அந்த மாவட்டத்தையே அழிவை நோக்கி கொண்டு சென்று விடும். இது வடக்கின் பொருளாதார பலத்திலும் உணவு தன்நிறைவு பலத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமாகையால் வட மாகாண சபையும் கூட பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.



> “யாழ்ப்பாண மக்களின் நீர்ப்பாவனை தேவையை தீர்மானிக்கும் சக்தி அரசிடமே இருக்கும். இராணுவத்தினருக்கும், சுற்றுலா விருந்தினருக்கும் நீர் விநியோகம் செய்வதற்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்பதும் மக்களின் தேவை இரண்டாம் பட்சமாகவே கவனிக்கப்படும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பது இல்லை.

## யாழ்ப்பாணம் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

இப்போது யாழ்ப்பாணத்தில் மக்களில் பெரும்பாலானோர் கனிம உப்புக்கள் நிறைந்த குடிதண்ணீரையே பருகி வருகின்றனர். ஏனைய பகுதி மக்களும் குடி தண்ணீருக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டிய அளவுக்கு நிலைமை காணப்படவில்லை. எனினும் பல நன்னீர்ப் பகுதிகள் இராணுவ முகாம்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளமை நாம் கருத்தில்கொள்ள வேண்டும். இரணைமடுவுக்கு மாமடு குளத்தின் கழிவு நீர் சேமமடுக்குளம் ஊடாக ஏறக்குறைய 100 சிறு குளங்களை தாண்டி கனகராயன் குளத்துக்கு வந்து கனக ராயன் ஆறு ஊடாக நீர் வந்து சேர்கிறது. இக் குளங்களின் கீழ் பயிர் செய்யப்படும் வயல்களில் கழிவுநீர் இரசாயன உர பாவனை அதிக நைதரசனைக் கொண்டுள்ளது. காடுகளில் பாய்ந்து கலக்கும் நீர் காரணமாகவும் விலங்கு கழிவுகளால் உருவாகும் இரசாயனங்கள் நீரில் கலக்கின்றன. இந் நீரை குடி தண்ணீராகப் பயன்படுத்தும் போது சிறுநீரக நோய் உருவாகும் சாத்தியமுண்டு. இந்த இரசாயன உரங்கள் கலந்த நீர்ப் பாவனையால் அனுராத புர மாவட்டத்தில் ஒன்றரை இலட்சம் பேர் சிறு நீரக நோய்க்கு உட்படும் நிலை தோன்றியுள்ளது. எனவே இரணைமடு நீர்ப் பாவனையால் யாழ்ப்பாண மக்களுக்கு இத்தகைய பாதிப்பு ஏற்படாது என்று சொல்லி விட முடியாது. நீர் வளங்கள் காரணமாக சுலப மாக நீர் கிடைக்கும் போது இப்போது பாவனையில் உள்ள நன்நீர் கிளிநொச்சி வரை விடப்படலாம். இந் நிலையிலேயே குளோரின் கலந்த நீரை பயன்படுத்த விரும்பாத மக்கள் போத்தல் தண் ணீரிலேயே தங்கியிருக்க வேண்டி வரும். அது மட்டுமன்றி நீர்த் தேவைகளுக்கு நீர்வளச் சபையின் விநியோகத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிலையில் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். கிளிநொச்சியில் வறட்சி ஏற்படுமானால் முழு நீர் விநியோகமும் சிக்கலுக்கு உள்ளாகும். இந்தியாவில் காவிரி நீர் பிரச்சினையால் கன்னடத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையில் மோதல்களும் முரண்பாடுகளும் ஏற்படுவது போன்று பெரியாற்று பிரச்சினையால் கேரளாவுடன் மோதல்கள் ஏற்படுவது போன்று கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் மோதல் ஏற்படும் நிலை நிச்சயம் உருவாகும். யாழ்ப்பாண மக்களின் நீர்ப்பாவனை தேவையை தீர்மானிக்கும் சக்தி அரசிடமே இருக்கும். இராணுவத்தினருக்கும், சுற்றுலா விருந்தினருக்கும் நீர் விநியோகம் செய்வதற்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்பதும் மக்களின் தேவை இரண்டாம் பட்சமாகவே கவனிக்கப்படும் என் பதை சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பது இல்லை. இன் னொரு புறம் கிளிநொச்சியில் நெற்செய்கை பண்ணப்படும் பரப் பளவு குறைவால் அரிசி உற்பத்தி பாதிக்கப்படும். அதற்கும் அரசாங்கத்தையே நம்பியிருக்க வேண்டிய அவலம் ஏற்படும். ஒட்டு மொத்தத்தில் எமது உணவு நீர் ஆகியவற்றில் தற்சமயம் இருக்கும் சுயாதீன நிலை பறிக்கப்பட்டு பிறரை எதிர்பார்த்து இருக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்படும்.

## மாற்று வழிமுறைகள்

யாழ்.மாவட்டத்தில் உள்ள நீர் வளங்கள் முதலில் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என ஆசிய அபிவிருத்தி வங்கி ஆலோசனை வழங்கி இருந்தது. ஆனால் அது அலட்சியப் படுத்தப்பட்டு இரணைமடு திட்டத்திற்கே முன்னுரிமை அளிக் கப்படுகின்றது.

வடக்கில் ஒவ்வொரு கோயில்களிலும் கேணிகள், குளங்கள் உண்டு. அவற்றை சரியாக சீரமைப்பதன் மூலமும் வயல்களின் நடுவே உள்ள குளங்களை சீர் செய்வதன் மூலமும் மழை நீரை தேக்கி நிலக்கீழ் நீரை பாதுகாக்க முடியும். தொண்டமானாறு செம்மண் நன்நீரேற்றித் திட்டங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தொடக்கப்பட்ட போதும் அது கிடப்பில் போடப்பட்டு விட்டன. அவற்றை நிறைவேற்றப்படுவதன் மூலம் நிலக்கீழ் நீர் வளத்தை நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட முடியும். மழைக் காலங்களில் பெருமளவு இரணைமடு நீர் வான் பாய்வதன் மூலம் கடலைச் சென்று சேர்கிறது. அதை அணைக் கட்டி தொண்டமானாறு நீரேரியில் சேர்க்கும் முகமாக இயக்கச்சி மண்டலாயில் பெரும் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டது அது கூட முன்னாள் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் குமாரசுவாமி இறப்புடன் கைவிடப்பட்டுவிட்டது. இன்றும் அந்த வாய்க்கால் அழியாமல் உள்ளது. இப்படி வடக்கின் நீர் வளத்தை பெருக்கும் பல வழிமுறைகள் இருந்த போதும் இரணைமடு நீரை கொண்டு வருவதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதில் யாழ்ப்பாண மக்களின் நீர்த்தேவையை விட வேறு சில காரணங்கள் இருப்பதாக கருத வேண்டியுள்ளது.

## அடிப்படை உள் நோக்கங்கள்

யாழ்ப்பாண மக்களின் சுயாதீனமான வாழ்வு நிலையை சீர் குலைத்து முற்றிலும் அரசாங்கத்திலே தங்கியிருக்க அவற்றால் மீளவும் நமது உரிமைப் போராட்டம் முனைப்பு பெற்றால் பொருளாதார நீர்த்தடை மூலம் எம்மை பலவீனப்படுத்தி அடக்கி விட முடியும். பெரும்பெரும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது அதில் முதலில் பலன் பெறுபவர்கள் அரசியல்வாதிகள் உயர் அரச அதிகாரிகள் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரே. இங்கு அவர்களின் நலன்கள் முதன்மைபடுத்தப்படுகின்றன என்பதுஉலகறிந்த விடயமாகும். இராணுவத் தளங்கள் சுற்றுலா விடுதிகள் என்பவற்றிற்கும் பெருமளவு நீர் தேவை அது மக்களின் பேரால் நிறைவு செய்யப்படுகிறது. அதேவேளை காலப்போக்கில் போத்தல் நீர் உற்பத்தியாளர்களுக்கு பெரும் சந்தை கிடைக்கும். அவர்களும் கொள்ளை லாபம் சம்பாதிக்க முடியும்.

எனவே இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்தின் நீர் விநியோகம் செய்யவும் திட்டத்தை எதிர்ப்பது என்பது அறிவு பூர்வமாக பார்வையில் இருந்து உருவான உணர்வு வெளிப்பாடு ஆகும். இங்கு அறிவும் உணர்வும் முரண்படவில்லை. இது அறிவிலிருந்து பிறந்த உணர்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி உதயன் 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை


கு.சிந்துயா, தரம்-4பி
வவுனியா தமிழ் மத்திய ம.வி.


லோ.திருக்குமரன், தரம்-4
யா/ இணுவில் மத்திய கல்லூரி


ஆர்.பிரிந்தா, தரம்-2
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை


அ.பிரிந்தா, தரம்-4
யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்

## நடக்கும் மீன்



தரையில் நடக்கும் மீன்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
ஆம். 'மட் ஸ்கிப்பர்' என்னும் மீன் தரையில் நடக்கும். இவை வெப்பமண்டலப் பகுதிகளின் கடற்கரையோரமுள்ள நீர்க் குட்டைகளிலும், சேறு, சகதி நிறைந்த இடங்களிலும் காணப்படுகின்றன.
இந்த மீனுக்கு வலிமையான துடுப்புகளும், மார்புத் தசைகளும் உள்ளன. இவற்றைப் பயன் படுத்தி மட் ஸ்கிப்பர் மீன்கள் தண்ணீரில் இருந்து தரைக்கு வருகின்றன. எப்படிக் கடற் சிங்கங்களால் தரையில் நடக்க முடிகிறதோ, அதே போல் இவையும் நடக்கின்றன.
இந்த மீன் தரைக்கு நடந்து வரும்போது பருந்துகளுக்கு இரையாகி விடுவதும் உண்டு.

## குருதிக் கொடை



*சொல்லப் போவதை நல்லாக் கேளு*
*உடலும் உள்ளமும் உன்னதமாகும்!*
*நாளும் உணவில் கீரை சேரு*
*நன்றாய் நீயும் வளர்வாய் பாரு*
*பச்சைக் காய்கள் பலவும் சேரு*
*ஊட்டம் உடம்பில் சேரும் பாரு*
*அத்திப் பழம் உண்டு பழகு*
*ரத்தம் நன்கு ஊறும் பாரு!*
*உதிரம் குறைந்தால் சோகை வரும்*
*வாழ்வில் சோகம் கவிழ்ந்து விடும்*
*உதிரம் உறைந்தால் உயிர் போகும்*
*உறவினர் நிம்மதி பறி போகும்!*
*ரத்த தானம் கொடுத்துப் பாரு*
*பொங்கும் ஆனந்தம் பெறுவாய் பாரு*
*ரத்தம் இல்லையேல் வாழ்வு இல்லை*
*இரக்கம் இல்லையேல்*
*மனிதனே இல்லை!*

## கேட்காதே

முன்னொரு காலத்தில், திருடன் ஒருவன் இருந்தான். அவன் தனது மகன் மோகனுக்குத் திருட்டுத் தொழிலின் நுட்பங்களைச் சொல்லித் தந்தான்.
'மகனே! என்னைப் போல நீயும் திறமையான திருடனாக விளங்குவாய். பெரியவர்கள், ஞானியர்கள் பேசுவதைக் கேட்காதே. அப்படிக் கேட்க நேர்ந்தால், காதுகளைப் பொத்திக் கொள். அவர்கள் உன்னை நல்வழியில் திருப்பி விடுவர்', என்று அறிவுரை சொன்னான்.
ஆண்டுகள் சென்றன. தந்தைக்குப் பிறகு அவன் திருட்டுத் தொழிலைத் திறமையாகச் செய்து வந்தான். அந்த நகரத்துக்கு மகாவீரர் என்றொரு துறவி வருகை தந்தார். பெரிய மேடையில் அமர்ந்து மக்களுக்கு அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார். திருடிய பொருள்களுடன் மோகன் அந்த வழியாக வந்தான்.
பெரியவர்கள் பேச்சைக் கேட்காதே என்ற தந்தையின் அறிவுரை அப்போது அவன் நினைவுக்கு வந்தது. இரு காதுகளை யும் கைகளால் நன்றாகப் பொத்திக் கொண்டு நடந்தான். அப்போது முள் ஒன்று அவன் காலில் குத்தியது. அந்த முள்ளை எடுப்பதற்காக காதைப் பொத்தியிருந்த கையை எடுத்தான். 'தேவர்கள் திருவடி தரையில் படியாது. அவர்கள் கண்கள் இமைக்காது', என்று மகாவீரர் பேசியது அவன் காதில் விழுந்தது. விரைந்து முள்ளை எடுத்த அவன், மீண்டும் காதை பொத்திக் கொண்டு அங் கிருந்து நடந்தான்.
சில நாள்களில், அவன் காவலர்களிடம் சிக்கிக் கொண் டான். அவர்கள் அவனைக் கொடுமைப்படுத்தினர். திருடியதை அவன் ஒப்புக் கொள்ளவில்லை. உண் மையை வரவழைக்க நினைத்த அவர்கள் அவனுக்கு மயக்க மருந்து தந்தனர்.
மயங்கிய நிலையில் அவனை அழகிய பூஞ்சோலை ஒன்றில் கிடத்தினர். அவனைச் சூழ்ந்து அழகிகள் பலர் இருந்தனர்.
மயக்கம் தெளிந்த அவன் தன்னைச் சூழ்ந்து அழகிகள் இருப்பதைப் பார்த்தான். தான் பூஞ்சோலையில் இருப்பதையும் உணர்ந்தான்.
குழப்பம் அடைந்த அவன், 'அழகிகளே! நீங்கள் யார்? நான் எங்கே இருக்கிறேன்?' என்று கேட்டான்.
இது தேவ உலகம். நாங்கள் தேவ மகளிர். இங்கே உள்ள வர்கள் உண்மையே பேசுவார்கள். நீர் யார்? பூவுலகத்தில் என்ன செய்தீர்? என்று அவர்கள் இனிமையாக கேட்ட னர்.
அவர்கள் கால்கள் தரையில் படுவதையும், கண்கள் இமைப்பதையும் கவனித்தான் அவன்.
மகாவீரர் அவர்கள் பேசியது அவன் நினைவுக்கு வந்தது. இவர்கள் தேவ மகளிர் அல்லர். தன்னை ஏமாற்றச் சூழ்ச்சி செய்கின்றனர் என்பதைப் புரிந்துக் கொண்டான்.
தன்னை மறந்த அவன், 'மகா வீரர் அவர்கள் பேச்சைச் சிறிது நேரம் கேட்டேன். நீங்கள் தேவ மகளிர் அல்லர். பூவுலக மகளிர்தான் என்பதை அறிந்து கொண்டேன். அவர் அருளுரையைத் தொடர்ந்து கேட்டால் என்னென்ன நன்மைகள் விளையுமோ? எனக்கு மட்டும் விடுதலை கிடைத்தால் திருட்டுத் தொழிலை விட்டுவிடுவேன். மகாவீரர் அவர்களின் சீடனாகி வாழ் நாளைக் கழிப்பேன்', என்று உணர்ச்சி பொங்கச் சொன்னான்.
நடந்ததை அவர்கள் அரசனிடம் சொன்னார்கள். அவன் பேசியது உண்மை என்பதை அறிந்தான் அரசன். அவனை விடுதலை செய்தான்.
சொன்னது போலவே, அவன் மகாவீரரின் சீடன் ஆனான். எஞ்சிய காலத்தை அறவழியில் கழித்தான்.



## விடை தெரியுமா ? 242

### உங்களுக்கும் பரிசுகள்

1. கறுப்புச் சூரியன் என அழைக்கப்பட்டவர் யார்?
2. 'கோபி' பாலைவனம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?
3. 7 விஞ்ஞானிகளோடு வெடித்துச் சிதறிய அமெரிக்க விண்கலத்தின் பெயர் எது?
4. உலகில் சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு எது?
5. பெண்களுக்கு முதல் முதல் வாக்குரிமை வழங்கிய நாடு எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 240

1. ரஷ்யா
2. வெட்டுக்கிளி
3. ஓகஸ்ட் 15
4. தீக்கோழி
5. தொடை எலும்பு

### விடை தெரியுமா?


தெரிந்தால் 28.12.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (239)

♥சி.லக்சிகா, தரம்-5ஏ, நாகேஸ்வரி வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடற்படைத் தள விரிவாக்கம் என்ற போர்வையில் பாரம்பரிய தமிழ்க் கிராமமான முள்ளிக்குளம் என்ற பகுதியும், மரமுந்திரிகைச் செய்கை என்ற போர்வையில் கொண்டச்சி பகுதியும், சிங்களக் குடியேற்றம் என்ற போர்வையில் மடுரோட் மற்றும் நரிக்காடு பகுதியும் ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன.




# பறவைகளுக்கே இடம் தமிழர்களுக்கு மடம்

பேராசிரியர்
சூசை ஆனந்தன்

போர்க் காலங்களிலும் அதற்குப் பிற்பட்ட காலப் பகுதிகளிலும் மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட ரீதியில் பல்வேறு வடிவங்களில் நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இது தற்போது அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது. கடற்படைத் தள விரிவாக்கம் என்ற போர்வையில் பாரம்பரிய தமிழ்க் கிராமமான முள்ளிக்குளம் என்ற பகுதியும், மரமுந்திரிகைச் செய்கை என்ற போர்வையில் கொண்டச்சி பகுதியும், சிங்களக் குடியேற்றம் என்ற போர்வையில் மடுரோட் மற்றும் நரிக்காடு பகுதியும் ஏற்க னவே ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன.

**வர்த்தமானி அறிவிப்பு**

இவை தவிர பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் தள்ளாடி பெரும் படைத் தளத்தைச் சூழ்ந்துள்ள சுமார் ஐயாயிரம் ஹெட்ரேயர் (4838.95) நிலப்பகுதி வங்காலை பறவைகள் சரணாலயலம் (Vankalai Bird Sanctuary) என 2008 - செப்ரம்பரில் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. மடுப்பகுதியில் இறுதிக்காலப் போரின்போது ஒருபுறம் மக்கள் வீடுகளை விட்டு போக்கிடமின்றி அலறி ஒடிக்கொண்டிருக்க இன்னொரு புறத்தில் சத்தம் சந்தடியின்றிபறவைகளுக்குபுகழரண் தேடி இந்த சரணாலயம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின் றது. ஈரானிலுள்ளரம்சார் (Ramsar) என்ற இடத்தில் இடம்பெற்ற ஈரப்பதமான நிலங்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவை (Wet land of International Importance) என்ற பிரகடனத்தின் கீழ் இலங்கை பறவைகள் கழகமானது (Ceylon Bird Club) தாவர, விலங்கு பாதுகாப்பு பிரகடனத்தின் கீழ் (Flora and Fauna Protection ordinance) இது பிரகடனப்படுத்தப்பட்டு 2008 செப்ரம்பரில் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. தள்ளாடிப் பெருநிலப் பரப்பையும் - மன்னார் தீவையும் இணைக்கின்ற சதுப்பு நிலம் சார்ந்து இந்த சரணாலயம் இடவமைவு பெற்றுள்ளது. தள்ளாடிபெரும்படைத்தளத்தை மையமாகக் கொண்ட இந்தப் பிரதேசம் பெரும்பாலும் சதுப்பு நிலங்களையும், சதுப்பு நிலக் காடுகளையும்வற்றுப்பெருக்கு மேடுகளையும் கொண்டதாக விளங்குகின்றது.

வங்காலை, திருக்கேதீஸ்வரம், பள்ளிமுனை, சவுத்பாக் ஆகிய நிலையங்களை இணைக்கின்ற ஏறத்தாழ சதுர வடிவிலான இப்பகுதி, வங்காலை கிராம சேவையாளர் பிரிவின் 60 சதவீதமான நிலப்பகுதியையும் சிறுநாவற்குளம், முள்ளிப்பள்ளம் ஆகிய இடங்களின் கணிசமானபகுதிகளையும் விழுங்கி இருக்கின்றது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளதுடன், எதிர்கால குடியிருப்பு மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான நடவடிக்கைகளையும்மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிற்றளவு மீன்பிடி, கால்நடை மேய்ச்சல் நடவடிக்கைகள், நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக் கும் அச்சுறுத்தல் ஏற்பட் டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது.

**தள்ளாடி இராணுவ முகாம் விரிவாக்கம்**

குறித்தசரணாலயத்தின்மையப் பகுதியிலேயேதள்ளாடிபெரும் படைத்தளம் இடவமைவு பெற்றிருக்கின் றது. இத்தளம் இன்று விரி வாக்கப்பட்டு புதிய இடங் களில் முகாம்கள் அமைக்கப் பட்டுவிட்டன. திருக்கேதீஸ்வர வீதி சார்ந்தும், வங் காலை வீதி சார்ந்தும் புதிய படை முகாம்கள் இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தள்ளாடிச் சந்தியில் உல்லாச விடுதிகளும், தேனீர்ச் சாலைகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தள்ளாடி பெரும் படைத்தளத்தில் பௌத்த தூபி அமைக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. எதுவித கட்டுமானப் பணிகளும் சரணாலய எல்லைக்குள் மேற்கொள்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளபோதிலும் இப்பகுதியில் இராணுவ முகாம்கள் மட்டும் உருவாக்கப்படுவது இப்பகுதியானது பறவைகளுக்காக அல்ல முற்றிலும் இராணுவ முகாம் விரிவாக்கத்துக்காக மட்டுமே என்பதை வெளிப்படுத்துகிறது.

**சரணாலயத்தின் பொருத்தப்பாடு**

இந்தக் குறித்த பகுதி சதுப்பு நில நீர்த் தாவரங்களைக் கொண்டுள்ள பகுதியாகக் காணப்படுகின்றபோதிலும், குறித்த சில பகுதிகளில் மட்டுமே மாரி காலங்களில் இடம்பெயர்ந்துவரும் நீர்ப் பறவைகள் தங்குவது வழக்கம். தள்ளாடி - மன்னார் வீதியின் இரு மருங்கிலும் உள்ள வற்றுப்பெருக்கு மேடுகளிலும், தள்ளாடி முகாமை அண்டிய ஏரிப்பகுதிகளிலும் மாரி காலங்களில் மட்டும் அத்தகைய நீர்ப்பறவைகளைக் காணலாம்.

பெரும்பாலான பகுதிகளில் அவற்றைக் காண முடியாது. வரண்ட பிரதேசமான மன்னாரில் பெரும்பாலான காலப் பகுதி வரட்சியாக இருப்பதனால் அக்காலப்பகுதிகளில் இத்தகைய வெளயிட நீர்ப் பறவைகளைக் காண முடியாது.

உள்ளூருக்குரிய கொக்குகள், கோட்டான்கள் எனப்படும் பறவையினங்கள், ஆட்காட்டிகள் இவைகளுடன் கழுதைகள், காட்டெரு மைகள் போன்றவற்றையுமே அவதானிக்கலாம்.

இந்தப் பிரதேசத்தில் பறவைகள் சரணாலயத்திற்குரிய சிறப்பம்சங்கள் சிறிய நிலப் பரப்பிலேயே காணப்படுவதனால் அந்தக் குறித்த பகுதியை மட்டும் அதற்காக ஒதுக்கி ஏனைய பகுதிகளை அயற் கிராமங்களின் எதிர் கால விருத்தி கருதி விடுவிப்பது அவசியம். மேலும் கட்டுமானப் பணிகள் பறவைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எனக் கருதி இராணுவ முகாம்கள் விரிவாக்கப் படுவது தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் பறவைகளுக்கு அச்சுறுத்தல் இல்லாமல் முகாம்களை மூடிவிடுதல் அவசியமாகும்.

> எதிர்காலத்தில் பறவைகளுக்கு அச்சுறுத்தல் இல்லாமல் முகாம்களை மூடிவிடுதல் அவசியமாகும்



எட்வேர்ட் ஸ்னோடன் என்பவரால் கசியவிடப்பட்ட இரகசியங்களைவெளியிட்டமையை ஒரு விசாரணை மன்றத்தின் முன் பிரிட்டனின் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் அலன்ரஸ் பிரிஜா தற்காத்து கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் உள் விவகார தெரிவுக் குழுவின் விசாரணையின் போது சாட்சியமளித்த கார்டியன் பத்திரிகையின் ஆசிரியர் அந்தச் செய்தியை வெளியிட்டதால் எந்த ஒரு நபரின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கவில்லையென்பதைச் சுட்டிக் காட்டினார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினர் கேட்ட கடுமையான கேள்விக்குப் பதிலளித்தார் கார்டியன் ஆசிரியர் ரஸ்பிகா. உங்கள் நாட்டை நீங்கள் நேசிக்கிறீர்களா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர் தாம் ஒரு நாட்டுப் பற்றாளர் என்பதை வலியுறுத்தினார்.

கடந்த மாதம் இவ்வாறான விசாரணையொன்றின்போது சாட்சியமளித்த பிரிட்டிஷ் புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தர்கள் அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவர் அமைப்பின் ஒப்பந்த பணியாளர் ஸ்னோடனின் கசிவுகளை வெளியிட்டதன் மூலம் கார்டியன் பத்திரிகை பிரிட்டனின் எதிரிகளுக்கு உதவி புரிந்துள்ளது என்று தெரிவித்திருந்தார்கள். ஆசிரியர் அலன் ரஸ்பிரிகா தம் சாட்சியத்தில் மேலும் தெரிவிக்கையில் இந்த சமாச்சாரம் அரசியல் மட்டத்தில் வேண்டுமானால் சங்கடத்தை ஏற்படுத்துவதாய் இருக்கலாம். ஆனால் தேசத்தின் பாதுகாப்புவிடயத்தில் அதில் ஒன்றும் ஆபத்தாக இல்லை என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த ஆஸ்திரேலியா

ஆஷஸ் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இங்கிலாந்து அணியே வெல்லும் என்று பலரும் ஆரூடம் கூறினார்கள். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. முந்தைய ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி காட்டிய அபரிமிதமான போராட்டமே அவ்வாறு எல்லோரையும் நம்ப வைத்தது.

ஆனால் அனைவரின் ஆரூடங்களை உடைத்து தமது திறமையை மீண்டும் வெளிக்காட்டியுள்ளனர் ஆஸ்திரேலிய அணியினர்.

ஆஸ்திரேலிய அணி வீரர்களுக்கு இங்கிலாந்தில் நடைபெற்ற கடந்த ஆஷஸ் தொடரில் கிடைத்த தொடர் தோல்விகளே அவர்களிடம் எப்படியும் வெற்றி பெற வேண்டும் என்ற உத்வேகத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவற்றுக்கும் மேலாக அந்த அணியின் பயிற்சியாளர் லீமனின் கடும் முயற்சியும் அந்த அணியைச் சரிவில் இருந்து மீட்க உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

"இங்கிலாந்தில் எமது வீரர்கள் தொடர் தோல்விகளைச் சந்தித்திருந்தனர். அவ்வாறான தொடர் தோல்விகள் எமக்குப் பழக்கமானவை அல்ல. ஆனால் அணியை மீட்டெடுத்து, மனதளவில் துவண்டிருக்கும் அவர்களை அடுத்த தொடருக்குத் தயார்படுத்துவதே எனது கடமை" என்று இங்கிலாந்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடருக்குப் பின்னர் தெரிவித்திருந்த லீமன், அதனைச் செயல்வடிவம் கொடுத்து அணியை மீட்டிருக்கின்றார்.

ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துவதற்கு அந்த அணியின் வேகப் பந்து வீச்சாளர்கள் முதற் காரணம் என்றால் மிகையாகாது. அவர்களின் துல்லியமான பந்துவீச்சும், அவர்கள் தகுந்த நேரத்தில் எதிரணியின் இலக்குகளைக் கைப்பற்றியமையும் ஆட்டங்கள் கைமாறக் காரணமாக இருந்தது. அதேவேளை கிளார்க், ஹெடின், ஸ்மித் ஆகியோரும் தமது பொறுப்புணர்ந்து துடுப்பாட்டத்தில் பிரகாசித்துள்ளனர்.

கடந்த ஆஷஸ் தொடரில் காணப்பட்ட வேகம் இங்கிலாந்து அணியில் தற்போது அறவே காணப்படவில்லை. பிரோட், அண்டர்ஸன், ஸ்மித் ஆகியோர் அவ்வப்போது பந்துவீச்சில் பிரகாசிக்கின்றனர்.

ஆனால் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டம் ஏமாற்றமே அளிக்கின்றது. மூன்றாவது டெஸ்ட்டில் ஸ்டோக்ஸ் அடித்த சதம் தான் இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி வீரர் ஒருவர் பெற்றுக் கொள்ளும் முதலாவது சதமாகும். பரிதாபகரமான இந்த நிலையில் இருந்து மீண்டு மீதமுள்ள இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலாவது இங்கிலாந்து வெற்றி பெற்று மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே இங்கிலாந்து இரசிகர்களின் தற்போதைய அவா.



**பரிதாபகரமான இந்த நிலையில் இருந்து மீண்டு மீதமுள்ள இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலாவது இங்கிலாந்து வெற்றி பெற்று மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே இங்கிலாந்து இரசிகர்களின் தற்போதைய அவா.**

# சச்சின் இல்லாத இந்திய அணி..



சச்சின் இல்லாத இந்திய அணி என்பது நினைப்பதற்குச் சற்றுக் கடினம் தான். எனினும் நாம் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது என்று கூறுகின்றார் இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி.

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வுக்குப் பின்னர் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனியிடம் கொஞ்சம் பேச்சுக் கொடுத்தோம். இந்திய அணியின் தற்போதைய மனநிலை குறித்து மெதுவாக வாயைத் திறந்தார் அவர்.

"சச்சின் டெண்டுல்கர் எமக்காக இனிமேல் களங்களில் போராட மாட்டார் என்று எமது அணியில் உள்ள வீரர்களுக்குத் தெரியும். அவர்கள் தமது ஆட்டங்களில் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.


கடந்த டெஸ்ட் ஆட்டம் நடக்கும் போதே இனி வரும் சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் சச்சின் எங்களுடன் இருக்க மாட்டார் என்பதை 100 சதவீதம் உணர்ந்திருந்தோம். அவர் உடன் இருப்பது நன்றாகத்தான் இருக்கும். ஆனாலும் அதையே நினைக்காமல் அடுத்து நடக்கப் போகும் விடயங்களில் கவனம் கொள்ள வேண்டும்.

1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் டெண்டுல்கர், டிராவிட், லக்ஷ்மன், கங்குலி ஆகிய நான்கு முக்கிய வீரர்கள் இல்லாமல் இந்தியா களத்தில் இறங்குவது இதுவே முதல் முறை. தாய் மண்ணில் அடுத்தடுத்து 6 டெஸ்ட் வெற்றிகளை பெற்றதன் தொடர்ச்சி யாக இந்தியா தென்னாபிரிக்கா வந்துள்ளது.

ஒவ்வொரு தொடரும் எங்களுக்கு புதிதான ஒரு ஆரம்பம் தான். நடந்ததை நினைத்துக் கொண்டிருப்பது தேவையற்றது. ஆட்டம் நடக்கும் இடத்தின் சூழலுக்கேற்ப தயார் படுத்திக்கொண்டு முடிந்ததை சிறப்பாகச் செய்ய வேண்டும். இத்தகைய சவாலான சூழலில் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவது அணியிலுள்ள இளம் வீரர்களுக்கு கற்றுக் கொள்ளக் கூடிய நல்ல அனுபவமாக இருக்கும். இது எங்களுக்கு சாதகமான விடயம்தான்.

*சில நாள்களுக்கு முன்னர் இந்தியா ஆடவிருந்த பயிற்சி ஆட்டமும் மழையால் நிறுத்தப்பட்டுவிட்டதே. ஒருநாள் தொடரையும் இழந்துள்ள நிலையில் இந்திய வீரர்களின் மனநிலை எவ்வாறு இருக்கின்றது?* என்று கேட்டோம்.

"பயிற்சி ஆட்டத்தில் நாங்கள் முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்து எதிரணியினரை மழையில் நனைந்திருந்த மைதானத்தில் களத்தடுப்பு செய்ய வைத்திருக்கலாம். ஆனால் அவர்களுக்கும் முதற்தர கிரிக்கெட் தொடர் நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் அது சுயநலமாக இருந்திருக்கும். ஆட்டம் இரத்தானதே இரு அணிக்கும் நல்லதாக அமைந்தது. முடிந்த வரை அந்த களத்தில் நாங்கள் பயிற்சி பெற்றோம். எமது வீரர்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கின்றார்கள்" என்று கூறி முடித்தார் டோனி.



**1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் டெண்டுல்கர், டிராவிட், லக்ஷ் மன், கங்குலி ஆகிய நான்கு முக்கிய வீரர்கள் இல்லாமல் இந்தியா களத்தில் இறங்குவது இதுவே முதல் முறை. தாய் மண்ணில் அடுத்தடுத்து 6 டெஸ்ட் வெற்றிகளை பெற்றதன் தொடர்ச்சி யாக இந்தியா தென்னாபிரிக்கா வந்துள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக் கூந்தல் வேண்டுமா....



ஆரோக்கியமே அழகுக்கு அடிப்படை. எனவே, அழகாக இருப்பதற்கு உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். அழகு என்பதில் கூந்தல் முக்கிய பங்கு வகிக்கிறது. பெண்களில் பலருக்கு கூந்தலைப் பராமரிப்பதில் அலாதி பிரியம். ஆனால் தற்போதைய அவசர வாழ்க்கையில் சரியாகக் கூந்தலைப் பராமரிக்க முடிவதில்லை. சிலருக்கு கழுத்துக்கு கீழே கூந்தல் வளருவதில்லை என்ற ஏக்கம் கூட இருக்கிறது. மருத்துவ ரீதியான பல்வேறு காரணங்கள் தலைமுடி வளர்வதில் உள்ளது. இதை ஆரம்பத்திலேயே தெரிந்து கொண்டு அதற்கேற்ப பராமரிப்பில் கவனம் செலுத்தினால் போதும். நீங்களும் கூந்தல் அழகிகள்தான்.

பெண்களின் கூந்தலை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவை வறண்ட கூந்தல், எண்ணெய் தன்மை நிறைந்த கூந்தல், சராசரித் தன்மை கொண்ட கூந்தல். வறண்ட கூந்தலை உடை யவர்களுக்கு, எப்போதும் முடி காய்ந்து, வறண்டு போயிருக்கும். இந்த கூந்தலை சீவிமுடிப் பது சிரமமான விடயம். இவர்கள் தேங்காய் எண் ணெய் அல்லது ஒலிவ் எண்ணெயைச்சூடாக்கி, தலை யில் தடவி, விரல் நுனிகளால், 20 நிமிடம் 'மசாஜ்' செய்ய வேண்டும். எண்ணெய்த் தன்மை நிறைந்த கூந்தல் அழுக்கும், தூசும் நிறைந்தி ருக் கும். இவர்கள், தினமும் கூந்தலைக் கழுவி அலச வேண்டும். அத்துடன் தினமும் அதிகளவு தண்ணீர் குடிக்க வேண்டும். சராசரி தன்மை கொண்ட கூந்தலை உடையவர்கள், கூந்தலில் அதிக கவனம் கொள்ள வேண்டும். தின மும் தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெயை தலையில் தேய்த்து, சிறிது நேரம் மசாஜ் செய் யவும். 10 நாட்களுக்கு ஒரு முறை செம்பருத்தி இலை அல்லது பாசிப்பயறு மாவு ஆகிய வற்றையபன்படுத்திதலையை அலசவும். இவர்கள் அதிகமாக வெயிலில் நடமாடக் கூடாது. தலையில் வெயில் படுவது முடிக்கு நல்லதல்ல.

# இரத்தச் சோகையை தடுக்கும் கேழ்வரகு

கேழ்வரகில் கல்சியம், இரும்புச் சத்துக்கள் அதிகம் உள்ளன. பாலில் உள்ள கல்சியத்தை விட கேழ்வரகில் அதிக கல்சியம் உண்டு. கேழ்வரகைத் தினமும் உணவில் சேர்த்தால் உடல் வலுப்பெறும். நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. உடல் சூட்டைத் தணிக்கும். குழந்தைகளுக்கு கேழ்வரகுடன் பால், சர்க்கரை சேர்த்து கூழாகக் காய்ச்சிக் கொடுக்கலாம். இது குழந்தை வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

தினமும் கேழ்வரகுக் கூழ் சாப்பிட்டு வர குடற்புண் குணமடையும். மாதவிடாய்க் கோளாறு கொண்ட பெண்கள் இதை சாப்பிட்டு வர மாதவிடாய் பிரச்சனைகள் தீரும். அதிக எடையுடன் இருப்பவர்கள் எடையைக் குறைக்க விரும்பினால் கேழ்வரகு சாப்பிடலாம். இது உடல் எடையை குறைக்கும். கேழ்வரகில் உள்ள நார்ச் சத்துக்கள் மலச்சிக்கலைத் தடுக்கிறது. நீரிழிவு நோயாளிகள் கேழ்வரகை, பிட்டுச் செய்து சாப்பிடலாம் . கூழ் அல்லது கஞ்சியாக சாப்பிடக்கூடாது. இதை கூழாக செய்து குடித்தால் கொலஸ்ரோல் குறையும்.

இதில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. இது இரத்தச் சோகை நோய் வராமல் தடுக்கிறது. கர்ப்பிணிப் பெண்கள் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். குடலுக்கு வலிமை



அளிக்கும். உடல் உஷ்ணத்தை சமநிலையில் வைத்திருக்கும். தானியங்களில் அதிக சத்து மிக்கது கேழ்வரகு. இதில் புரதம், தாது உப்பு, சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து மற்றும் உயிர்ச் சத்துக்களும் இருக்கின்றன. கேழ்வரகு குடலுக்கு வலிமை அளிக்கும். நீரிழிவு நோயாளிகள்கூட கேழ்வரகால் செய்த பண்டங்களைச் சாப்பிடலாம். கேழ் வரகை கொண்டுதான் ராகி மோல்ட் தயாரிக்கிறார்கள்.




சூரியகாந்தி
உதயம் 22.12.2013 ஞாயிற்றுக்கிழமை

# படை நகர்த்தியோர் மாட்டினர் சிக்கலில்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை இராணுவத்தின் படைப் பிரிவுகளுக்கு தலைமை தாங்கிய படை அதிகாரிகள் பலர் இப்போது பெரும் சிக்கலை எதிர்கொண்டு வருகின்றனர். தமது படைத்துறை சார்ந்த வெளிநாடுகளில் நடைபெறவுள்ள கருத்தரங்குகள், பயிற்சி நெறிகள், கூட்டங்கள் என்பவற்றில் பங்கேற்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இறுதிப் போரின்போது வன்னி மீது படையெடுப்புக்களை மேற்கொண்ட படைப் பிரிவுகளின் அதிகாரிகளுக்கே இந்தச் சிக்கலான நிலை ஏற்பட்டிருக்கிறது. இறுதிப் போரின் போது இடம்பெற்ற தமிழர்களின் படுகொலைகளுக்கு காரணமான இலங்கை அரசு மீது சர்வதேச சமூகம் போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. இறுதிப் போரில் இடம்பெற்றவை போர்க் குற்றங்களே என சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பலர் வெளிப்படையாக கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இந்தப் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்புக் கூறுமாறும், அதற்கான நியாயமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் அதன் மூலம் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு தண்டனை வழங்குமாறும் இலங்கை அரசை சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. இதனை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதேநேரத்தில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட சர்வதேச நாடுகளின் தலைவர்களும் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்திக்கும் போது இதனை வலியுறுத்தி வருகின்றனர். ஆயினும் இவற்றுக்கெல்லாம் அரசு மசிவதாக இல்லை.

இறுதிப் போரின் போது பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் வன்னியில் கொத்துக் கொத்துக் கொல்லப்பட்டனர். இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களாலேயே பெரும் எண்ணிக்கையான உயிரிழப்புக்கள் நிகழ்ந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் இந்தத் தாக்குதல்களுக்காக படைப் பிரிவுகளை வழிநடத்திய படை அதிகாரிகளுக்கு போர் வெற்றியின் பின்னர் பதவி உயர்வுகளையும் கௌரவங்களையும் வழங்கி அவர்களை உச்சத்துக்குக் கொண்டு சென்றது அரசு. இவர்களில் இராணுவத் தளபதியாக இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களுக்கு இலங்கை அரசினால் பல்வேறு கௌரவங்கள் வழங்கப்பட்டன. போர்க் வெற்றிக்கு இவர்களின் சிறந்த படை நகர்த்தலே காரணம் என்று கூறி அரசினால் இவர்களுக்குக் கௌரவங்கள் பல வழங்கப்பட்டன.

இவர்களில் சிலருக்கு வெளிநாடுகளில் இராஜ தந்திரப் பதவிகளையும் வழங்கியது அரசு. மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அத்துடன் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டார். அத்துடன் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராக இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி றியர் அட்மிரல் திசர சமசிங்க நியமிக்கப்பட்டார். இந்த நியமனங்கள் அனைத்தும் போர் வெற்றிக்குப் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டன. இராஜ தந்திரப் பதவிகள் கிடைத்த மகிழ்ச்சியில் படை அதிகாரிகள் பலரும் தமது குடும்பங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்று உல்லாசமாக தமது வாழ்க்கையை தொடர்ந்தனர். ஆயினும் அவர்களின் அந்த உல்லாசம் நீண்ட காலம் நீடிக்கவில்லை.

அவர்களது இந்த ராஜதந்திரப் பதவிகளுக்கு இப்போது பெரும் சிக்கலான நிலை தோன்றியிருக்கிறது.

இறுதிப் போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு படை அதிகாரிகளும் பொறுப்புடையவர்கள் என்பதால் அவர்கள் போர்க் குற்றவாளி களாகவே பார்க்கப்பட வேண்டும் என்ற கருத்து சர்வதேச ரீதியில் வலுப்பெற்று வருகிறது. போர்க் குற்றங்கள் நடைபெறுவதற்கு இந்தப் படை அதிகாரிகளே காரணமானவர்கள் என்பதால் அவர்களைத் தமது நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு பல நாடுகள் விசா மறுத்து வருகின்றன. இதனால் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வெளிநாடுகளில் பயிற்சிகளை மேற்கொள்ளவோ கருத்தமர்வுகளில் பங்குகொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது இலங்கை இராணுவத்துக்கு பெரும் சிக்கலான நிலையைத் தோற்றுவித்துள்ளது. இலங்கை இராணுவத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால் தமது நாடுகளில் நடைபெறும் படைத்துறை சார்ந்த நிகழ்வுகளுக்கு இலங்கை இராணுவ அதிகாரிகளை அழைப்பதை பல நாடுகள் தவிர்த்து வருகின்றன. மேலும் சில நாடுகள் அவர்களுக்கான விசா அனுமதியை வழங்க மறுத்துள்ளன.

போர்க் குற்றங்கள் புரிந்ததாகக் கூறப்படும் இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு விசா வழங்க மறுத்துள்ளது கனடா. இறுதிக் கட்டப் போரில் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களை சுட்டுக் கொன்றதாக இவரது படைப் பிரிவின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையிலும் அவர் ஐ.நாவுக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அமெரிக்காவில் போர்ப் பயிற்சிக் கல்லூரிக்காக சவேந்திர சில்வாவை இலங்கை அரசு அனுப்பிய போதும் அமெரிக்கா அதனை ஏற்க மறுத்திருந்தது.

அதேபோன்று அவரை தென்னாபிரிக்காவுக்கான பிரதித் தூதுவராக நியமிக்கும் முயற்சியும் கைகூடவில்லை.

அதேபோன்று இறுதிக்கட்டப்போரில் 57 ஆவது படைப்பிரிவுக்கு தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸுக்கு விசா வழங்க ஆஸ்திரேலியாவும் மறுத்திருந்தது. இந்த விடயம் இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியில் பெரும் ராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. படை அதிகாரிகள் வெளிநாடுகளில் நடைபெறும் பயிற்சிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையால் இலங்கை இராணுவத்தை வினைத்திறன் உள்ளதாக மாற்றியமைப்பதில் சிக்கல் தோன்றியுள்ளது. இலங்கை இராணுவத்தின் முக்கிய அதிகாரிகள் பலர் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உட்பட்டுள்ளமையால் அவர்கள் வெளிநாடுகளுக்குள் நுழைய முடியாத இக்கட்டு ஏற்பட்டுள்ளமை படை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை தோற்றுவித்துள்ளது.

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுமாறு இலங்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நாடுகள், இலங்கை அவ்வாறான எந்த முயற்சியையும் எடுக்காமையால் பொறுமை இழந்துள்ளன. இதனால் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பான படை அதிகாரிகள் நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என்ற முடிவுக்கு அந்த நாடுகள் இப்போது வந்துள்ளன.

இலங்கையுடன் தொடர்ந்து பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்த சர்வதேசம் இப்போது தனது நடவடிக்கையை செயலில் காட்டத் தொடங்கிவிட்டது என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு விசா மறுக்கப்படுவதால் படை அதிகாரிகள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறிப்பாக படை அதிகாரிகளுக்கு விசா மறுக்கும் விடயத்தில் மேற்கு நாடுகளே முன்னிலையில் உள்ளன. இதனால் படை அதிகாரிகளாக உள்ளவர்கள் இனிமேல் மேற்கு நாடுகளில் இராஜ தந்திரப் பதவிகள் எதனையும் பெற முடியாத சூழல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை இலங்கை அரசுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத் துள்ளது.

தற்போது படை அதிகாரிகளுக்கு விசா வழங்க மறுக்கும் நாடுகள் இனிவரும் காலங்களில் போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசின் முக்கியஸ்தர்களுக்கும் விசா வழங்க மறுக்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

படை அதிகாரிகளுக்கு இவ்வாறு விசா வழங்க மறுத்ததன் மூலம் போர்க் குற்றங்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும் என்பதையே அந்த நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை இலங்கை அரசு அதனைச் செய்யாதவரை நிலைமை சிக்கலானதாகவே இருக்கும்.



**போர்க் குற்றங்களுக்குப் பொறுப் புக் கூறுமாறு இலங்கையைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த நாடுகள், இலங்கை அவ் வாறான எந்த முயற்சியையும் எடுக் காமை யால் பொறுமை இழந்துள் ளன. இதனால் போர்க் குற்றங் களுக்குப் பொறுப் பான படை அதிகாரிகள் நாட்டுக் குள் அனுமதிப் பதில்லை என்ற முடிவுக்கு அந்த நாடுகள் இப்போது வந்துள்ளன.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வளமாக வாழ

# வாஸ்து சாத்திரம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வாஸ்து ஆலோசகர்
எண்கணித நிபுணர் கலாநிதி
ஜே.என்.எஸ்.செல்வன்


1, 10, 19, 28 திகதிகளில் பிறந்தவர்களும் தனது பெயர் எண்ணை முதலாம் எண்ணில் அமைத்துக்கொண்டவர்களும் நேர்மை தவறாமல் நடப்பவர்கள். இவர்களின் நேர்மைக்கு எந்த ஒரு பங்கமும் வராமலும், மேலும்மேலும் நல்லவைகள் நடப்பதற்கும் இவர்களின் வீட்டு அமைப்பு முறை மிக முக்கியமானது. இவர்கள் ஒரு வீடு கட்டும்பொழுது, அவசியம் கீழ் காணும் முறையில் தமது வீட்டை அமைத்துக்கொள்வது மிகஅவசியம். இதோ! நீங்கள் கட்டிக்கொள்ள வேண்டியவீட்டின்வாஸ்துஅமைப்பு.

**கிழக்கு திசை முகப்பு வீடு**


இந்த கிழக்கு திசை நோக்கி முதலாம் எண்காரர்கள் வீட்டின் முகப்பை அமைத்துக்கொள்ளும் போது அவர்களின் குடும்பம்தழைத் தோங்கும். குழந்தைப்பேற்றை வெகுநாள்கள் பார்த்திராத வர்களுக்குக்கூட அந்த வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்துக் காத்திருந்த அரச வேலை கிடைக்கும். பெரிய அளவில் அரசு கடன்கள் சாத்தியமாகும். வெளியில் செல்லும்போது வணக்கம் போடாதவர்கள், யார் என்று தெரியாதவர்கள்கூட மரியாதை தருவார்கள். நகைகள் சேர்க்கை அதிகரிக்கும். தடையாய் இருந்த கல்வியில் திடீர் மாற்றம் ஏற்படும். முடக்கமாக இருந்த தொழில்கள் புதிய நட்புக்கள் மூலம் வெற்றியாக அமையும்.

எதையும் சாதித்துக்காட்டுவோம் என்ற துணிச்சல் மனதில் ஏற்படும். நாட்டமில்லாமல் இருந்த குடும்ப உறவுகளில் அதிக ஈடுபாடு ஏற்படும். கார், நிலம் வாங்கி குவிப்பார்கள். விற்க முடியாமல் கிடந்த பூர்வீகச் சொத்துக்கள் மூலம் பெரிய அளவில் பணம் சேரும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். சமூக மதிப்பு உயரும். அரசியலில் உள்ளவர்கள் தலைமையின் பிரத்தியோக அன்பிற்கு பாத்திரமாகி பெரிய பதவிகளை எளிதில் கிடைக்கும்.

பேசுவதில் தடையற்ற வல்லமை கிடைக்கும். எதிலோ ஆரம்பித்து எதிலோ முடித்தாலும் சுவாரஸ்யமாக முடிப்பர். ஆடை ஆபரணங்களில் நாட்டமும், எதிலும் தனித்துவமும் ஏற்படும். காமத்தில் அதிக கரிசனம் உண்டு என்றாலும் மிகவும் அவதானமாக தங்கள் மதிப்பைக் காத்துக்கொண்டு அதில் ஈடுபடுவர். இவ்வளவு சிறப்புக்கள் அமைந்த இந்த திசைமுகப்பை அமைத்துக்கொண்டவர்கள் நாடு முழுக்க புகழ் பெறும் வாய்ப்பை நிச்சயம் அடைவார்கள்.




கிழக்கு திசை நோக்கி முத லாம் எண்காரர்கள் வீட்டின் முகப்பை அமைத்துக்கொள்ளும் போது அவர்களின் குடும்பம் தழைத் தோங்கும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு.சாரங்கி

# மாற்றம் என்பது சுயத்தை இழப்பதல்ல

ஒரு பெண் என்பவள் யார்?அன்பும்,அரவணைப்பும்,சகிப்புத் தன்மையும் கொண்டவள் தானே.அவள் பெண்ணியம் என்ற பெயரில் தனது சுயத்தை இழக்கலாமா?

பெண்ணியம் என்பது சுயத்தை இழக்காமல், அதாவது பெண்களுக்குரிய தனித்தன்மைகளை இழக்காமல் சகல உரிமைகளும் பெற்று ஆண்களோடு சரி நிகர் சமானமாக வாழ்வதே ஆகும். இதில் அவனை விட உயர்ந்து என்று நான் குறிப்பிடவில்லை.யாரும் யாரையும் விட உயர்த்தி இல்லை.எல்லோரும் சமம். பெண்ணியம் என்ற பெயரில் திருமணம் செய்யாமல் வாழும் பெண்களும், குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளாத பெண்களும் இந்தச் சமூகத்துக்கு அநீதி இழைக்கின்றனர். ஓர் ஆணுடன் இணைந்து பெண் வாழ்வது தான் இயற்கையின் நியதி.தாய்மை என்பது ஒரு பெண்ணுக்கே உரிய ஓர் உன்னதமான சிறப்பு.அவைகளை விட்டு விலகி ஒரு பெண் தனித்து வாழ்வது இயற்கைக்கு முரணானதாகும்.

சிமோன் தி பூவா' என்ற பிரெஞ்சு பெண் சிந்தனையாளர், தி செகண்ட் செக்ஸ்' என்ற நூலில் முதல் தடவையாகப் பெண்ணியம் பற்றிக் கூறியதென்ன தெரியுமா?ஒரு பெண் பிறப்பதில்லை உருவாக்கப் படுகிறாளென்று. அவளை இந்த சமூகம் தான் மாற்றுகின்றது. அதனால் முதலில் சமூகத்தில் தான் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.அதனைப் பெண் ஓர் ஆணுடன் இணைந்து தான் கொண்டு வர முடியும்.


என்னைப் பொறுத்த வரை ஆண்களோடு உடல் வலுவில் பெண்கள் போட்டியிட முடியாது, ஏனெனில் அவளது உடல் மென்மையானது.மாறாக அவ்விதம் முயற்சித்தால் அவளது பெண் மையே மாறி கொஞ்சம் கரடு முரடாகி விடுகின்றது. அது போலவே பெண்ணுக்கென்று இருக்கும் சகிப்புத் தன்மை,பொறுமை,அன்பு, அனுசரிப்பு போன்ற நற்குணங்களுடன் ஆண்களும் போட்டி யிடவே முடியாது.அதுதான் இயற்கையின் கோட்பாடு.

எனவே மாற்றம் வேண்டும்,ஆனால் அது எது வரை என்ற ஒரு விதி முறை வேண்டும்.மேலும் தற்காலத்தில் பெண்ணியம் பற்றிப் பேசுவோரெல்லாம் மதத்தையும் அதனுடன் ஒன்று படுத்தி ஏதோ அவரவர் மதக் கோட்பாடுகளால் தான் காலங்காலமாய் பெண்கள் அடிமைப்படுத்தப் பட்டுள்ளதாக கூட சொல்லுவர். அவர்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள். ஒரு பெண் உடலை மூடி புர்கா அணிவதனாலோ, புடவையோ, மடிசாரோ உடுத்துவதனாலோ அவளை சுதந்திரமற்றவளாகக் கருதுவதனைத் தயவு செய்து நிறுத்துங்கள்.பெண்ணியம் என்பது உடையில் அல்ல,கருத்தில் தான்.

ஒரு பெண் ஆணுக்கு நிகராக உடுத்தி விட்டால், அவள் சிறந்த பெண்ணியவாதியாக முடி யாது. எப்பொழுது ஒரு பெண் சுயமாக முடிவெடுக்கிறாளோ,தான் முழுமையாக ஒரு பெண் என்பதனை உணர்ந்து செயல்படுகின்றாளோ அது தான் உண்மையான பெண்ணியம்.

# நியாயப் படுத்த முடியாதவளாக...

சுபியா



இழந்து விட்டவைகள் அனைத்தும்
தவிர்க்க முடியாதவை
பறிக்கப்பட்டவைகளாகவும்
நீண்டகாலமாய்
திணிக்கப்பட்டவைகளாகவும்
என்னுடைய தருணங்களில்
இழந்து இழந்து
நிறையவே நம்பியிருக்கிறேன்
ஆயினும் நான்
துன்பங்களை ஏற்றுக்கொள்ள
முடியாதவளாகவும்
சந்தோசங்களை அனுபவிக்க
முடியாதவளாகவும்
உண்மைகளை நினைந்தழுகிறேன்
நியாயப்படுத்த முடியாதவளாக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு வரை ஒரு திகிலோட்டம்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குருமன்காட்டிலிருந்து வவுனியா நகருக்குச் செல்ல வேண்டிய அந்த வான் இடையில் திரும்பி ஏ-9 வீதியில் ஏறி யாழ்ப்பாணப் பக்கமாகப் பயணிக்க ஆரம்பித்தது. அது ஏன் என்று சிறீஸ்கந்தராசா கேட்டதற்கு, களஞ்சியசாலைக்குச் சென்று பொருள்களை எடுத்து வரப்போகிறார்கள் என்று அவருக்குப் பதில் கிடைத்திருக்கிறது.

தாண்டிக்குளத்தில் இருக்கும் இராணுவத்தின் உணவகத்தில் வானை நிறுத்தி உணவருந்தியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் தனது உறவுப் பையனுக்கு அழைப்பெடுத்த சிறீஸ்கந்தராசா தான் எங்கு இருக்கிறேன் என்றும் தன்னை அவர்கள் அழைத்துச் செல்லும் பாதை குறித்தும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்.

தாண்டிக்குளத்தை விட்டுப் புறப்பட்ட வான், ஓமந்தையைத் தாண்டி புளியங்குளத்தால் நெடுங்கேணி நோக்கிப் பயணித்தது. அங்கிருந்து ஒட்டுசுட்டான் ஊடாகப் புதுக்குடியிருப்புக்குச் சென்று விசுவமடுவை அடைந்தபோது மாலை 4 மணியாகி இருந்தது. நிறுவனத்தின் பணிப்பாளர் கிளிநொச்சிக்குச் சென்றுவிட்டார் என்றும் அங்கே வருமாறு தங்களை அழைத்திருக்கிறார் என்றும் சிறீஸ்கந்தராசாவுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

மாலை 5 மணியளவில் விசுவமடுவில் இருந்து புறப்பட்ட வான் பரந்தன் ஊடாக கிளிநொச்சியை அடைந்தது. அங்கிருக்கும் களஞ்சிய சாலையில் இருந்து பொருள்களை எடுக்கலாம் என்று அவருக்குச் சொல்லப்பட்டது. களஞ்சிய அறைப் பொறுப்பாளர் திறப்புடன் வரவேண்டும் என்று கூறி, கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு அருகே உள்ள ஓர் இடத்தில் வானை நிறுத்தி வைத்துக் காத்திருந்தார்கள். நீண்ட நேரமாகியும் களஞ்சியப் பொறுப்பாளர் வரக் காணோம்.

இவர்கள் தன்னைக் கடத்திச் செல்கிறார்கள் என்ற அச்சம் சிறீஸ்கந்தராசாவுக்கு இருந்தபோதும் அவர்கள் தன்னைத் துன்புறுத்தவோ எதையும் கேட்டு வற்புறுத்தவோ செய்யாத காரணத்தால் இது கடத்தல் தானா என்ற சந்தேகமும் அவரிடம் இல்லாமல் இல்லை. அதேவேளை தன்னை அவர்கள் கடத்துவதாக இருந்தால் அது தனது மகனிடம் இருந்து பணத்தைப் பெறுவதற்கானதாகத்தான் இருக்கும் என்பது தெரிந்திருந்ததால் மகனுக்கோ குடும்பத்தின் ஏனையவர்களுக்கோ ஆபத்து ஏதும் வந்துவிடக்கூடாது என்பதற்காக அவர்களுடன் முடிந்த வரைக்கும் ஒத்துழைப்பது என்று முடிவு செய்துகொண்டார். எனினும் எல்லாவற்றையும் கைப்பேசி மூலம் உறவுக்காரப் பையனுக்குச் சொல்லிக் கொண்டே இருந்தார்.

பல மணி நேரம் காத்திருந்த பின்னர் வான் மீண்டும் இரவு புறப்பட்டது. களஞ்சியப் பொறுப்பாளர் வரவேயில்லை. ஆனால் கிளிநொச்சியில் மற்றொருவர் இணைந்து கொண்டார். நள்ளிரவுக்குச் சற்று முன்பதாக அங்கிருந்து கிளம்பிய வான் இரவிரவாகப் பயணித்துக் கொண்டே இருந்தது. இருட்டாக இருந்ததாலும் காட்டுப் பாதைகளாக இருந்ததாலும் அது எங்கே போகிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றார் சிறீஸ்கந்தராசா.

இதற்கிடையில் தங்களுடைய கைப்பேசிகளில் பற்றரி சார்ஜ் இழந்துவிட்டதால் சிறீஸ்கந்தராசாவின் கைப்பேசியைத் தருமாறு கேட்டு அவர்கள் அதனை வாங்கிக் கொண்டார்கள்.

காலையில் பார்த்தபோது மூங்கிலாறு என்ற இடத்துக்கு வந்து சேர்ந்திருப்பதைக் கண்டார். காலையில் வானை அங்கிருந்து அனுப்பிவிட்டார்கள். அது பற்றி விசாரித்ததற்கு, டயரில் பிரச்சினை இருந்ததால் அதனைச் சரிப்படுத்திவர வான் சென்றுவிட்டதாகச் சொல்லி இருக்கிறார்கள். தான் மன்னாருக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அவசரமாகப் புறப்படுவதாகக் கூறி, கிளிநொச்சியில் இணைந்துகொண்ட நபரும் அங்கிருந்து நழுவிவிட்டார். நீண்ட நேரமாகியும் வான் வரவில்லை. வான் டயர் காற்றுப் போய்விட்டதாகவும் அதனை மாற்றி வருவதற்காகக் காத்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மாலை ஆகியும் வான் வரவில்லை. டயர் வெடித்துப் போனதால் அதனை மாற்றித்தான் இனி வான் வரமுடியும் என்று சொல்லி அன்றிரவு தெரிந்த வீடு ஒன்றிருப்பதாகக்கூறி வயதான நபர் ஒருவர் வசிக்கும் வீட்டிற்குச் சென்று தங்கியிருக்கிறார்கள்.

இதற்கிடையில் தனது கைப்பேசியை சிறீஸ்கந்தராசா கேட்டதற்கு அதனை மறந்துபோய் வானில் வைத்துவிட்டதாகச் சொல்லி இருக்கிறார். வான் வந்ததும் அதனைத் தந்து விடலாம் என்றும் கூறியிருக்கிறார்.

### நெடுந்தீவு நோக்கிப் பயணம்

ஞாயிற்றுக்கிழமை இரவும் மூங்கிலாற்றில் தங்கியிருந்த பின்னர் திங்கட்கிழமை காலையில் யாழ்ப்பாணம் நோக்கி பயணப்பட வேண்டியிருப்பதாக சசி கூறியிருக்கிறார். தமது நிறுவனப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார் என்றும் அங்கு சென்று அவரைச் சந்தித்து அங்கிருக்கும் களஞ்சியசாலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறார்.

இவர்கள் ஏதோ செய்கிறார்கள் என்பது சிறீஸ்கந்தராசாவுக்குப் புரிந்தாலும் அவர்களிடம் இருந்து தப்பிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும்வரை அவர்களுடன் முரண்டு பிடிக்காமல் ஒத்துழைப்பது என்று அவர் முடிவு செய்துகொண்டார்.

மூங்கிலாறில் இருந்து பஸ் எடுத்து அவர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள். யாழ். பஸ் நிலையத்தில் இறங்கியதும் ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்கள். அது தீவுப் பகுதியை நோக்கிச் சென்றது. யாழ்ப்பாணத்தில் நின்ற பணிப்பாளர் அவசர அலுவல் நிமித்தம் தீவகத்துக்குச் சென்றுவிட்டார் என்பதால் அங்கு செல்ல வேண்டியிருப்பதாக சிறீஸ்கந்தராசாவுக்குச் சொல்லப்பட்டது.

குறிகாட்டுவானை அடைந்து அங்கிருந்து படகில் நெடுந்தீவுக்குச் சென்று சேர்ந்தபோது திங்கட்கிழமை மாலை 5.30 மணியாகி இருந்தது. அங்கிருந்த குச்சொழுங்கைகள் ஊடாகப் பயணித்து ஒரு வீட்டைச் சென்றடைந்தார்கள். அந்த வீட்டுக்காரருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவருக்கு மற்றொரு வீடு இருப்பதாகவும் அங்கு இரவு தங்கலாம் என்றும் கூறி அழைத்துச் சென்றார் சசி.

"இரவு அவர்கள் தந்த சாப்பாட்டை உண்ணவில்லை. ஐயப்பன் விரதம் என்றுகூறித் தவிர்த்துவிட்டேன். அதில் ஏதாவது கலந்திருப்பார்களோ என்ற அச்சமே அதற்குக் காரணம். என்னைத் தனியே நடமாட அனுமதிக்கவில்லை. எப்போதும் கூடவே இருந்தார். இருந்தாலும் விடிந்ததும் கடற்கரை பார்க்கப் போவதாகச் சொல்லி அங்கிருந்த கடற்படை மற்றும் பொலிஸ் நிலைகளைப் பார்த்து வைத்துக் கொண்டேன்" என்கிறார் சிறீஸ்கந்தராசா.

### சாதுரியமாகத் தப்பித்தல்

பணிப்பாளரும் மற்றும் 10 உறுப்பினர்களும் காலையில் நெடுந்தீவுக்கு வருகிறார்கள் என்றும் அவர்களை அழைத்துவரத் தான் செல்கிறார் என்றும் திரும்பிவரும் வரை எங்கும் செல்ல வேண்டாம் என்றும் கூறிவிட்டு சசி அங்கிருந்து புறப்பட்டிருக்கிறார். அதற்கு முன்பதாக, மேற்படி நிறுவனத்தில் இருந்து போக்குவரத்துப்படியாக 3,500 ரூபா பெற்றுக்கொண்டேன் என்று எழுதிக் கையொப்பம் இட்ட கடிதம் ஒன்றை வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்திருக்கிறார்.

அவர் புறப்பட்டதும் சிறீஸ்கந்தராசா துரிதமாகச் செயற்பட்டார். முதல் நாள் இரவே பேசி வைத்துக் கொண்ட படகோட்டியை அணுகி நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டார்.

"இரவு அந்த வீட்டில் தங்கியிருந்போது அங்கிருந்த படகோட்டியுடன் பேச்சுக் கொடுத்தேன். சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதையும் தான் தொழிலாகச் செய்து வருகிறார் என்றார். காசு கொடுத்தால் என்னையும் யாழ்ப்பாணம் கொண்டு சென்று விடுவர்யா என்று கேட்டேன். யாருக்கும் சொல்லாதீர்கள் செய்கிறேன் என்றார். அதன்படி செவ்வாய்க்கிழமை காலையில் அவரை அழைத்துப் பணத்தைக் கொடுத்து அங்கிருந்து புறப்பட்டேன்" என்கிறார் சிறீஸ்கந்தராசா.

குறிகாட்டுவான் நோக்கிப் படகு பயணித்தபோது ஒரு சந்தேகம் துளிர்த்தது. நெடுந்தீவில் காணவில்லை என்றதும் தப்பி குறிகாட்டுவான் ஊடாகத்தானே வரவேண்டும் என்று காத்திருந்து மடக்கி விட்டால் என்ன செய்வது? எனவே படகோட்டியிடம் குறிகாட்டுவான் தவிர வேறு எங்காவது தீவுக்குச் செல்ல முடியுமா என்று சிறீஸ்கந்தராசா வினவியிருக்கிறார்.


> இந்தக் கடத்தல் நாடகத்தைக் கேட்டு ஆடிப்போயிருக்கிறது வவுனியாப் பொலிஸ். பிரான்ஸில் இருந்தபடி இலங்கையில் ஒருவரைக் கடத்தி பணம் பெற எடுக்கப் பட்டிக்கும் இந்த முயற்சி அவர்களை ஆச் சரியப் படுத்தி இருக்கிறது.

எழுவை தீவுக்குச் செல்ல முடியும் என்ற படகோட்டி கூற, அப்படியானால் அந்தத் தீவையும் பார்த்துவிட்டுப் போவோம் என்று கூறி அங்கு விடுமாறு கேட்டிருக்கிறார். அதன்படி அவர் எழுவை தீவுக்குச் சென்று அங்கிருந்து வழமையாக யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் படகில் ஏறி யாழ்ப்பாணத்தை வந்தடைந்து வவுனியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டார் சிறீஸ்கந்தராசா.

"இதற்கிடையில் திங்கட்கிழமை எனது மனைவிக்கு கைப்பேசியில் பேசியவர்கள், தமக்கு 80 ஆயிரம் யூரோ உடனடியாகத் தரவேண்டும் என்றும் இல்லையேல் கணவனைக் கொன்றுவிடுவோம் என்று மிரட்டியிருக்கிறார்கள். உடனடியாக அவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். அதுபோன்றே பிரான்ஸில் எனது மகனிடமும் பணம் கேட்டு மிரட்டியிருக்கிறார்கள். பணம் கிடைக்கவில்லை என்றால் அப்பா உயிருடன் திரும்ப மாட்டார் என்று அங்கும் மிரட்டியிருக்கிறார்கள். செவ்வாய்க்கிழமை நான் வவுனியாவுக்கு வந்து சேர்ந்ததும் பொலிஸ் நிலையம் சென்று நடந்தவைகளைச் சொல்லிவிட்டேன்" என்கிறார் சிறீஸ்கந்தராசா.

கனடாவில் இருக்கும் தனது மச்சானே இந்தக் கடத்தல் நாடகத்தின் பின்னால் உள்ள சூத்திரதாரி என்று அவர் உறுதியாக நம்புகிறார்.

இந்தக் கடத்தல் நாடகத்தைக் கேட்டு ஆடிப்போயிருக்கிறது வவுனியாப் பொலிஸ். பிரான்ஸில் இருந்தபடி இலங்கையில் ஒருவரைக் கடத்தி பணம் பெற எடுக்கப்பட்டிக்கும் இந்த முயற்சி அவர்களை ஆச்சரியப் படுத்தி இருக்கிறது. சம்பவம் பற்றி பிரெஞ்ச் பொலிஸாரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். சிறீஸ்கந்தராசாவைக் கடத்தப் பயன்படுத்தப்பட்ட வானைக் கைப்பற்றி உள்ள பொலிஸார் அதன் உரிமையாளரையும் சாரதியையும் கைது செய்துள்ளனர். ஏனையவர்களைத் தேடி வலைவிரித்துள்ளனர்.



# ரெக்சியன் கொலையின்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

போங்கோவன் என்று நான் சொன்னதுக்கு, அப்படிப் போகேலாது என்று சொன்னவர். ஆனால் அப்படிப் போனால் கொன்று போடுவாங்கள் என்றும் போகாட்டியும் கொன்று போடுவாங்கள் என்றும்கூடச் சொல்லியிருக்கிறார்" என்கிறார் மகள்.

ரெக்சியன் கொல்லப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னராகவே நெடுந்தீவு பிரதேச சபையில் உப தவிசாளர் தெரிவு இடம்பெற்றுள்ளது. இது திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டதென்றும் தன்னைப் பதவியில் இருந்து தூக்குவதற்காகத் திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்றும் ரெக்சியன் நம்பினார் என அவரது பிள்ளைகள் கூறுகிறார்கள்.

"சாகிறதுக்கு 20 நாள்களுக்கு முதல்லயும் வீட்டில அப்பா அழுதவர். என்னை கட்சியை விட்டு விலத்தச் சொல்லி கமல் சொல்லுறான் என்று அழுதவர். சாகிறதுக்கு ஒரு கிழமைக்கு முதல் கூட்டத்துக்கு வரச் சொல்லி கமல் கூப்பிட்டவர். அந்தக் கூட்டத்திலையும் கட்சியை விட்டு விலத்தச் சொல்லி அவர் சொல்லியிருக்கிறார். வீட்டுக்கு வந்து இவர் யார் என்னை கட்சியை விட்டு விலத்தச் சொல்லுறத்துக்கு என்று அப்பா சத்தம் போட்டவர்.

சபைத் தவிசாளர் பதவியிலயிருந்து திட்டமிட்டு விலத்தச் செய்யிறதுக்காக, அப்பாவை மீற்றிங்க்கு போக விடாமல் தடுத்தவை. மூன்று கூட்டத்துக்கு போகேல்லை என்றா தானாக விலகின மாதிரியாகிடும்தானே! அதுக்குதான் நான் அப்பாட்டச் சொல்லி மருத்துவ விடுமுறை கொடுக்கச் சொன்னான். அப்பா மெடிக்கல் அனுப்பினவர். கடிதம் சபைக்கு அனுப்பின 2 நாள்ல, அப்பா இஞ்ச வந்து அழுதவர். தன்னை யாரோ கொல்லப் போகினம் மாதிரி இருக்கு என்று சொல்லி அழுதவர். அந்த நாளில, கமலின்ர போனில இருந்து அடிக்கடி அழைப்பு வரும். செல்போனிலயே அப்பா எங்களுக்கு முன்னால அவரோட சண்டை பிடிப்பார்."

இடையில் திடீரெனக் குறுக்கிடும் கடைசி மகன், அப்பா மத்தியானம்தான் செத்தவர், காலமை கமல் போன் எடுத்துக் கதைச்சவர்" என்றான்.

"26 ஆம் திகதி விடிய போன் கோல் கதைச்சதுக்குப் பிறகு அவர் ஒரே ரென்ஷனில இருந்தவர். அதுக்குப் பிறகு அப்பா என்னைக் கட்டிப் பிடிச்சு நான் சாகப்போறன் போல கிடக்கு என்று சொல்லி அழுதவர் " என்று தனக்கு தெரிந்த உண்மைகளைச் சொல்லி முடித்தார் மகள்.

பொலிஸ் விசாரணை உண்மையை வெளிக் கொண்டு வரவேண்டும் என்று அவர்கள் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். தங்கள் தாயார் எந்தத் தவறும் செய்யாதவர் என்று பிள்ளைகள் மூவரும் அறுதியாக நம்புகிறார்கள். அவர்களின் பாசப் போராட்டம் தொடர்கிறது...

அனித்தா உட்பட சந்தேகநபர்கள் மூவருக்கும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை காவல் நீடிக்கப் பட்டிருக்கிறது.

"அப்பாவோ கல்லறையில் அம்மாவோ சிறையிலோ நானோ பரீட்சையறையில்"

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிய ரெக்சியனின் மகள் விடைத்தாளில் எழுதிய கவிதை இது. ஒரு கொலை ஒரு எதிர்கால சந்ததியையே ஆட்டிப் போட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Best Print**

உங்கள் அன்புக்குரியவர்கள், பிள்ளைகளின் பிறந்தநாட்கள், திருமணநாள், நினைவு நாட்கள், போன்றவற்றை உங்கள் விருப்பத்திற்கு அமைவாக வருட, மாத நாட்காட்டியாக பெற்றுக்கொள்ளுங்கள்.





#357, Kasthuriyar Rd
Jaffna.
021 567 6722

---

TVS KING

TVS

# மன்னனை போல சொகுசாக பயணிக்க ரூ.45,666/- செலுத்தி TVS KING முச்சக்கர வண்டி ஒன்றை வாங்குங்கள்





LED TV ஒன்று இலவசம்

காப்புறுதி இலவசம்

குறைந்த தவணைக் கொடுப்பனவு
மேலதிகக் கட்டணம் இல்லை

சென்ட்ரல் ஃபினான்ஸ் லீசிங் திட்டத்தின் கீழ் வாங்கும் ஒவ்வொரு TVS KING முச்சக்கர வண்டியுடனும் ஒரு LED TV இலவசம்

(வரி உள்ளிட்ட விலை ரூ. 477,920/-)
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**சென்ட்ரல் ஃபினான்ஸ் கம்பனி பி.எல்.சி.**
www.cf.lk www.cfautomart.com
0112 038 038
0772 228 111

**TVS லங்கா (தனியார்) நிறுவனம்**
இல.38, பழைய நீர்கொழும்பு வீதி,
வத்தளை.
0777 779 500

---

TOYOTA

# ஓவியம் வரையுங்கள் ஜப்பான் செல்லுங்கள்...

## கனவு கார் ஓவியப்போட்டி

15 வயதிற்கு கீழ்ப்பட்ட அனைத்து சிறுவர்களும் பெற்றோருடன் ஜப்பான் சென்றுவரும் வாய்ப்பு. செய்யவேண்டியது உங்கள் கனவு காரினை வரைந்து அனுப்புவது மட்டுமே.

- ஓவியங்களை A3 (270மி.மீ. x 420மி.மீ.) அளவு பேப்பரில் சமர்ப்பிக்கவேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் மற்றும் போட்டி விபரங்களை உங்கள் பாடசாலைகளில் அல்லது இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஓவியங்களை தபால் மூலம் அனுப்பலாம் அல்லது எந்தவொரு டொயோட்டா லங்கா கிளையிலும் ஒப்படைக்கலாம்.

வயது எல்லை: • 8 வயதிற்கு கீழ்ப்பட்டோர் • 8 - 11 வயதிற்கு இடைப்பட்டோர் • 12 - 15 வயதிற்கு இடைப்பட்டோர்

போட்டி முடிவுத் திகதி - 2014 ஜனவரி 31

**டொயோட்டா லங்கா (பிரைவட்) லிமிட்டட்** 337, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
கிளைகள்: இரத்மலானை, மஹரகம, பஞ்சிகாவத்த, நுகேகொட, நீர்கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, அநுராதபுரம், அம்பாறை, குருநாகல்.

**Dreamline : 0777 939 000, 0112 939 000**
மின்னஞ்சல் : dreamcar@toyota.lk
www.toyota.lk/dreamcar

TOYOTA DREAM CAR ART CONTEST

---

www.hnb.lk

# உங்கள் தே.அ.அ. இலக்கத்தை SMS செய்து LED TVகளை வெல்லுங்கள்

நீங்கள் HNB கணக்கு வைத்திருப்பவரெனின், இன்றே உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை எமக்கு அறியத்தந்து பெறுமதிமிக்க 32" LED TV ஒன்றை வெல்லும் வாய்ப்பைப் பெறுங்கள்.



உங்கள் இலக்கத்தைப் பின்வரும் ஒரு வழியில் அறிவிக்கலாம்:

- HNB, இடைவெளி, உங்கள் தே.அ.அ. இலக்கம் என்பவற்றை டைப் செய்து, 2343க்கு SMS செய்யுங்கள்
- 0112 462 462 என்ற இலக்கத்தில் HNB அழைப்பு நிலையத்திற்கு அறிவியுங்கள்
- அருகிலுள்ள HNB வாடிக்கையாளர் நிலையத்திற்குச் சென்று உங்கள் மொபைல் இலக்கத்தைப் பதிவு செய்யுங்கள்

விரையுங்கள்.... அதிக காலம் இல்லை. இப் பண்டிகைக் காலத்தில் பெறுமதிமிக்க TV ஒன்றை வெல்லுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0112 462 462**



பிச் ரேட்டிங் AA-(lka)
மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி. Hatton National Bank PLC - PQ 82

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org